TAMIL NADU LEGISLATURE LIBRARY
22 JUN 1979
MADRAS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1978 மார்ச் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினுக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

தூனேரியில் மருத்துவமனைக் கட்டடம்.

* 481. வினு—திரு. கே. உச்சி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுக்கா, தூனேரியில் உள்ள அரசு மருத்துவமனைக்கான புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டதா ?

(ஆ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : (அ) 1977-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலூகா தூனேரியில் உள்ள ஆதார நல நிலையத்தில் மருந்தகக் கட்டிடமும் பணியாளர் குடியிருப்பும் ரூபாய் 4.90 இலட்சம் செலவில் கட்ட அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கட்டிட வேலை பொதுப்பணித் துறை கட்டிட தலைமைப் பொறியாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வேலை நடந்து வருகிறது. கட்டிடம் 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. கே. உச்சி : அந்தப் பகுதியில் ஏராளமான கிராம மக்கள் படுக்கை வசதி கொண்டஆஸ்பத்திரி இல்லாமல் கஷ்டப் படுகிருர்கள். ஆகவே, அதில் சற்று விரைவாக வேலைகளை முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இக்கட்டடத்தின் பல பகுதிகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. இக்கட்டடங்களுக்கு கட்டும் பணிக்கு 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வரையிலும் ரூபாய் 2,12,542 செலவழிக்கப்பட்டுள்ளது. விரைவில் முடிவுறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறையார் மருத்துவ மனை.

* 482. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறையார் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

இல்லை.

திரு. எஸ். கணேசன் : என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரே பெரிய அரசு மருத்துவமனை அது. அங்கே மிகப் பெரிய இடத்தில் அது அமைந்திருக்கிறது. கட்டடங்கள், துணைக் கட்டடங்கள் நிரம்ப இருக்கின்றன. போதிய மருந்தும் திறன் வாய்ந்த மருத்துவர்களும் இல்லாத காரணத்தால் அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள காரைக்கால் மருத்துவமனைக்கு அந்தப் பகுதியில் இருக்கும் பெருவாரியான மக்கள் சென்று வைத்தியம் செய்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறையைப் போக்க அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பொறையார் அரசு மருத்துவமனையில் தற்போது 30 படுக்கைகள் உள்ளன. இப்போதைக்கு படுக்கை வசதிகள் போதுமானதாகக் கருதப்படுகிறது. ஆகவே, மேற்படி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் இப்போதைக்கு இல்லை. அவசியம் ஏற்படும்போது மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

1978 மார்ச் 9]

திரு. எஸ். கணேசன் : என்னுடைய கேள்வி, தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்படவில்லை என்று சொன்னேன். அங்குள்ள பெண் டாக்டரைப் பற்றி அரசுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : எந்தப் புகாரும் இது வரை வரவில்லை.

சென்னை நகரில் வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள்.

*483. வினு—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 1976-77 ஆம் ஆண்டில் வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள் எத்தனை நடைபெற்றன ?

(ஆ) இது தொடர்பாக எத்தனை பேர் கைது செய்யப் பட்டனர் ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் :

(அ) 4,162.

(ஆ) 1,814.

திரு. எம். ஏ. ஜெயவேலு : சமீபத்தில் குற்றங்கள் அதி கரித்திருப்பதாகத் தெரிகிறது. மயிலே மயிலே என்றால் இறகு போடாது, இந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அதிகமான சுதந்திரம் காவல் துறையினருக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : என்னிடம் புள்ளிவிவ ரங்களே இருக்கின்றன. காவல் துறையினர் அதிக தீவிரமாகப் பணியை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதிலே, வழக்குகள் போடுவதிலே முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஆக ஒழுங்கான முறையில் காவல் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : வீடு புகுந்து திருடிய நிகழ்ச்சிகளில் கொலைகள் நடந்துள்ளனவா ? ஆம் எனில், அதுபற்றிய தகவலை அவைக்குத் தர இயலுமா ?

[1978 மார்ச் 9

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திருட்டு வழக்குகளுக்காக கைது செய்யப்பட்டவர்களுடைய விவரங்கள்தான் என்னிடத்திலே இருக்கின்றன. திருட்டு வழக்கிலே ஈடுபட்ட காரணத்தாலே கொலையுண்டவர்கள் பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே ஹவுஸ் பிரேக்கிங் செய்தவர்கள் 1,814 பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அதிலே அரசியல் கட்சி சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் குற்றங்களைச் செய்திருக்கிறார்களா ? அவர்களிலே எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இப்படி நடக்கின்ற திருட்டுகள் குறிப்பாக அண்ணா நகரிலே, அசோக் நகரிலே, பெசன்ட் நகரிலே இப்படிப்பட்ட எக்ஸ்டன்ஷன் ஏரியாக்களிலே தான் அதிகமாக நடக்கின்றன. பகலிலே வேலைக்கு வந்து விடுவதால் அந்த நேரத்திலே புகுந்து எப்படியோ திருடி விடுகிறார்கள். இவைகளைத் தடுப்பதற்காக தனிக் கவனம் செலுத்தி பகலிலே அந்தப் பகுதிகளிலே எல்லாம் போலீஸ் ரோந்து போடுவதற்கு அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த நல்ல யோசனையை அரசு ஏற்றுக்கொள்ளும்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னையில் சென்னை நகரம் இப்போது விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது, வியாசர்பாடி போன்ற பகுதிகளிலே எல்லாம் இப்படிப்பட்ட திருட்டுகள் அடிக்கடி நடக்கின்றன; காரணம் அந்தப் பகுதிகளிலே எல்லாம் போலீஸ் நிலையங்கள் அமைக்கவில்லை. இதுபோன்றுதான் இந்திரா நகரிலே நடந்த கொலை கூட. ஆகவே இப்படி விரிவுபடுத்தப்படுகிற இடங்களிலே போலீஸ் நிலையங்களை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த யோசனைபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சென்னை நகரத்தில் மட்டுமல்ல, இதுபோன்று வேறு மாவட்டங்களிலேயும் பல பகுதிகளிலே இப்படிப் பரவலாக நடந்து கொண்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இப்படி கொள்ளை அடிப்பது மட்டுமல்ல, பூட்டை உடைத்து வீட்டில் நுழைந்து

1978 மார்ச் 9]

திருடுவது எல்லாம் இருக்கிறது. மயக்க மருந்து கொடுத்து உள்ளே இருக்கிறவர்களுடைய கை கால்களைக் கட்டிப் போடக் கூடிய அளவுக்கு இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே இப்படிப்பட்ட முறைகள் நடக்காமல் இருக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கி. மனேகரன்: திரு. கோதண்டராமன் அவர்கள் சிலர் எப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்கிறார்கள் என்று கற்றுத் தந்தமைக்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி அளிக்கிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, இரவிலேயும் பகலிலேயும் சென்னையிலே அண்ணா நகர் போன்ற பகுதிகளிலே கொள்ளை அடிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு போதுமான ஜவான்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. உதாரணத்திற்கு, நான் கேள்வி நேரம் என்றாலும் சொல்லிக்கொள்கிறேன், அண்ணா நகரின் விஸ்திரணம் ஏறக்குறைய 3, 4 மைல் இருக்கும், இவ்வளவு பரந்த இடத்திலே திருட்டுப் போய்விட்டால் ஜவான்கள் ஒருவர் அல்லது இருவர்தான் இருப்பதால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள், ஆகவே அந்தக்குறையைப் போக்குவதற்கு அதிகமான ஜவான்களைப் போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கி. மனேகரன்: நிச்சயம் இதுபற்றி ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி: தலைவர் அவர்களே, 1976—77 ஆம் ஆண்டிலே நடைபெற்ற வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள் முந்தைய ஆண்டைவிட அதிகமா, குறைவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன்: முன்னைவிட இந்தக் குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## சாத்தனூர் மேல்மட்டக் கால்வாய்.

*461. வினு—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

சாத்தனூர் அணையின் இடதுபுற மேல்மட்டக் கால்வாய் வேலை என்ன நிலைமையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்திட்டம் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும், எத்தனை கிராமங்களுக்கு இதன் மூலம் பயன் கிடைக்கும் ? எவ்வளவு நிலங்கள் பயன் பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்படி 5 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் சாத்தனூர் அணையின் மேல் மட்டத்திலிருந்து கிளம்பி புதிதாகத் தோண்டவிருக்கும் 3 ஏரிகளின் மூலம் சுமார் 3,182 ஏக்கருக்கு பாசன உறுதி வசதியும், 2,610 ஏக்கருக்கு இரு போகமும் பயிர் செய்ய முழு மறுவசதியும், 1,531 ஏக்கர் புது புன்செய் நிலத்திற்கு முழுப் பாசன வசதியும் அளிக்கும். சுமார் 445 லட்ச ரூபாய் செலவில் இத்திட்டம் அமல்படுத்தப்படும். ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். ஆய்வு முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர் குடியிருப்புகள்.

*462. வின—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கீழ் மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர்களுடைய குடியிருப்புகள் கட்டி 20 வருடங்களுக்கு மேல் ஆகியும் பராமரிப்பு செய்யாததால் கட்டடம் ஆபத்தான நிலையில் இருப்பதாக அரசுக்கு புகார்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 25—7—77 அன்று பொதுப்பணித் துறை ஊழியர்கள் சங்கத்தினரிடமிருந்து ஒரு கோரிக்கை நிர்வாகப் பொறியாளருக்கு வந்தது.

(ஆ) சில கட்டிடங்கள் 1969-ம் ஆண்டு மராமத்து செய்யப்பட்டன. மற்றக் கட்டிடங்களும் தேவைக்கேற்றபடியும், நிதி வசதியைப்பொருத்தும் அவ்வப்போது மராமத்து செய்யப்படுகின்றன.

1978 மார்ச் 9]

[முற்பகல் 9-10].

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, அந்தக் கட்டடங்களில் பல கீழே இடிந்து விழும் நிலையில் இருப்பதால் அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பழுதுபார்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மொத்தம் 156 கட்டடங்களில் 81 குடியிருப்புகள் ஏற்கனவே செப்பனிடப்பட்டிருக்கின்றன. 75 குடியிருப்புகள் செப்பனிடப் படாமல் இருக்கின்றன. போதிய நிதிவசதி இல்லாததால் செப்பனிடப்பட முடியவில்லை.

மின் வாரியத்தில் உள்ள தற்காலிகப் பணியாளர்கள்.

* 463. வினு—திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பரா—

மின் வாரியத்தின் கீழ் நிரந்தரமாக்கப்படாத டி.சி. எல். தொழிலாளர்கள் எவ்வளவு பேர்கள் தற்போதுள்ளனர் ? இவர் கள் எப்போது நிரந்தரமாக்கப்படுவர் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 32 பேர் உள்ளனர். மூன்று ஆண்டுகள் பணி முடித்தபின் மேற்கண்ட தினக்கூலி ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படுவது குறித்து கவனிக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, என். எம். ஆர். ஊழி யர்களாக எஸ்.எஸ். எல். சி. படித்தவர்கள், பி.யூ.சி. படித்த வர்கள், பி.ஏ. படித்தவர்கள் உள்பட டைப்பிஸ்டுகளாகவும், கிளார்க்குகளாகவும் பலர் மின் வாரியத்தில் பணியாற்றுவது உண்மையா? அவர்கள் செய்யும் வேலைக்கான பெயரைக் கொடுத்து அந்தப் பெயருக்கும் வேலைக்கும் தகுந்த ஊதியம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது டெம்பரரி கேஷுவல் லேபரர்ஸைப் பொறுத்த கேள்வி. 380 தினக் கூலித் தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறுர்கள் என்று குறிப்பிட்டேன். மூன்ருண்டுப் பணிக்காலம் முடிந்ததும் அவர்கள் ரெகுலர் ஹெல்ப்பர் அல்லது கிளீனராக அப்சார்ப் செய்யப்படுவார்கள்.

திரு. ரா. உமாநாத் : சார், டெம்பரரி கேஷுவல் லேப ரர்ஸ் பற்றி அமைச்சரவர்கள் சொன்ஞர்கள். அவர்கள் செய்யக் கூடிய வேலையின் தன்மை— as per the general Standing Order

கேஷுவல் என்றால் 'work of a casual nature,' டெம்பரரி என்றால் 'work of a temporary nature,'—ஆனால் அங்கே டெம்பரரி கேஷுவல் லேபரர்ஸ் 'work of a permanent nature' செய்கிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அப்படியானால் அந்த ஓர்க்கில் பர்மனென்ட் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த அடிப்படையில்தான் படிப்படியாக அவர்களை நிரந்தரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 32 பேர்தான் பாக்கியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்த தற்காலிக ஊழியர்களுக்கு பல்வேறு வசதிகள் தரப்படுவதில்லை. அவர்களுடைய சம்பள உயர்வுகூட நீண்ட நாட்களாக உயர்த்தப்படவில்லை என்ற குறை இருக்கிறது. அந்தச் சம்பளத்தை உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிரந்தரமாக ஆக்கப்பட்டால் எல்லா வசதிகளும் கிடைக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில் தகராறு சட்டத்தில் கூட 240 நாட்கள் வேலை பார்த்தால் அந்தத் துறையிலே நிரந்தரமாக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அரசுத் துறையின் பகுதியாக இயங்கும் மின் வாரியம், கூட்டுறவுத் துறை, போக்குவரத்துக் கழகம் இப்படிப்பட்ட இடங்களில் 240 நாட்கள் கடந்த பின்னாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. மின் வாரியத்தில் வேலை பார்க்கும் பதிலி, அத்துக்கூலி போன்றவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதை பெரிய பிரச்னையாகக் கருத வேண்டியதில்லை. நான் ஏற்கனவே சொன்னபடி 32 பேர்தான் பாக்கியுள்ளனர். 94,000 பேர் பணியாற்றும் இடத்தில் இதுவொன்றும் பெரிய பிரச்னை அல்ல.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்விக்கு அமைச்சரவர்கள் 32 பேர்தான் கேஷுவல் லேபரர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். படித்தவர்கள் செய்யக்கூடிய வேலைக்கு, வேலைக்குத் தகுந்த பெயர், 'work according to designation' அந்த வேலைக்கான சம்பளம் கொடுக்கப்படுமா என்று கேட்டேன். அவர்களை தினக்கூலிகளாக வைத்து வேலைவாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

1978 மார்ச் 9]

அவர்கள் பர்மனென்ட் செய்யப்படுவார்களா என்ற கேள்வி தான் முன் வைக்கப்பட்டது. அப்படி இருப்பது உண்மையா? படித்தவர்களாக இருப்பவர்களையும் தினக்கூலிகளாக வேலை வாங்கும் நிலைமை இன்றைக்கும் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதை மாற்ற முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தினக்கூலியாக வேலை செய்வது என்பது பாவ காரியம் அல்ல. அது படித்தவர்களானாலும் சரி, படிக்காதவர்களானாலும் சரி, முதலிலே தற்காலிகமாக எடுக்கப்படுகிறார்கள். அந்த வேலை நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கின்ற பொழுது அந்தக் குறிப்பிட்ட பணிக்காலம் முடிந்ததும் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் வேலைக்காரன் தேவையில்லாதிருந்தும்கூட சூப்பர்நியூமரரி போஸ்டுகளில் பலபேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படியாவது வேலை கொடுக்க வேண்டிய கட்டாயம் மின்சார வாரியத்தில் இருக்கிறது.

## நெல் கொள்முதல் விலை.

*464. வினா—திரு. மா. மணிமாறன்:

திரு. துரை கலியமூர்த்தி :

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல் விலை அதிகம் கிடைக்க போனஸ், வண்டிச் சத்தம் போன்றவை சேர்த்துக் கொடுத்து வந்ததை குடியரசுத் தலைவர் ஆட்சியில் நிறுத்தியதை மாற்றி மீண்டும் விவசாயிகள் அதனைப் பெறவும், அதிகப்படுத்தவும் அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இப்பொழுது சட்டபூர்வமான கொள்முதல் பெரிய அரைவை ஆலைகளில் மொத்த வணிகர்கள் கணக்கில் உற்பத்தியாகும் அரிசியின் மீது 20 சதவீதம் லெவி விதித்தும் தஞ்சை, தென்னாற்காடு, வடாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்டு வெளியே எடுத்துப் போகப்படும் நெல்/அரிசி மீதும் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசி மீதும் முறையே 20 சதவீதம் 10 சதவீதம் வீதம் செய்யப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து

நேரடி கொள்முதல் இல்லை, எனவே விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை வெளிச்சந்தையில் லாபகரமான விலைகளுக்கு விற்றுக் கொள்ள முழு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வெளிச்சந்தையில் நெல்/அரிசி வாங்கும் ஏற்பாட்டில் 1-2-1978 முதல் விவசாயிகளிடமிருந்து நேரடியாக மோட்டா ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 90-க்கும் நடுத்தர ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 95-க்கும் வாங்கப் படுகிறது.

இதனால் விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை லாபகரமான விலைக்கு விற்க வாய்ப்பு அதிகரித்துள்ளது.

*465. வினா—திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல் கொள்முதல் விலையை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் வகையில் நிர்ணயம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. உ ரொ. எட்மண்ட்: கொள்முதல் பற்றிய விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. அதனை மாற்றியமைக்கும் உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. மேலும் தற்பொழுது விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல் இல்லை. கொள்முதல் ஆலை அதிபர்களிடமும் மொத்த வர்த்தகர்களிடமும் லெவி மூலம் செய்யப் படுகிறது. எனவே விவசாயிகள் உபரி நெல்லை வெளிச்சந்தைகளில் லாபகரமான விலைகளுக்கு விற்றுக்கொள்ள முழு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தவிர, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் வெளிச்சந்தை வர்த்தகத்தின் ஒருபாகமாக, விவசாயிகளிடம் பொது விநியோகத்திற்கு பெரிதும் தேவைப்படும் மோட்டா ரக நடுத்தர நெல் வகைகளை முறையே குவிண்டால் ரூ. 90, ரூ. 95-க்கு வாங்க 1-2-1978 முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவு தானியங்கள் இருப்பு.

*466. வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரிசி, கோதுமை, போன்ற உணவுப் பொருள் இப்போது எவ்வளவு இருப்பு உள்ளது?

*1978 மார்ச் 9]*

(ஆ) அதில் சாப்பிடுவதற்கு உதவாத நிலையில் கெட்டுப் போயிருக்கும் உணவுப் பொருட்கள் ஏதேனும் உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) பொதுவிநியோகத்திற்குத் தேவையான கையிருப்பு உள்ளது.

(ஆ) எல்லா உணவுப் பொருள்களும் தரமாக உள்ளன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, தி.மு.க. அரசு இருந்தபொழுது நெல்லை முதல் ரகம், இரண்டாவது ரகம், மூன்றுவது ரகம், சன்ன ரகம் என்று நான்கு வகையாகப் பிரித்து, விலை நிர்ணயம் செய்ததற்கு மாறாக இந்த அரசு முதல் ரகத்தையும் இரண்டாவது ரகத்தையும் ஒரே ரகமாக ஆக்கி விலை நிர்ணயம் செய்திருப்பது விவசாயிகளுக்கு பாதகம் என்று அரசு அறியுமா? தஞ்சை மாவட்டத்தில் ஒரு மூட்டைக்கு 60 கிலோ என்று விலை நிர்ணயம் செய்துவிட்டு, ஈரப்பசை காரணமாக விவசாயிகள் நெல் கொடுக்கும்போது ஒரு கிலோவைப் பிடித்துக்கொண்டு விலை கொடுப்பதை அரசு அறியுமா? அதோடு.........

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு சப்ளிமெண்ட்டரி கேள்வி கேட்டால் பதில் சொல்லமுடியும். 6 கேள்வி கேட்டால் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

திரு. மா. மணிமாறன் : இது தொடர்பாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தபொழுது அமைச்சரவர்கள் பதில் சொல்வார்கள் என்று பேரவைத் தலைவரவர்கள் சொன்ஞர்கள். ஆகவேதான் இப்பொழுது அது தொடர்பான கேள்விகளைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனித்தனியாகக் கேள்வி கேட்டால், அமைச்சர் பதில் சொல்ல முடியும். எல்லாவற்றையும் ஒன்ருகக் கேட்டால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டாமா?

திரு. துரை முருகன் : அதேமாதிரி, மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது தனித்தனிக் கேள்விக்குச் சொன்ஞல் எங்களுக்கு உதவியாக இருக்கும். இல்லாவிட்டால், எந்தக்

கேள்விக்கு என்ன பதில் சொன்னார் என்று ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டாமா? அதேபோல், தனித்தனியாக எடுத்தால் நேரம் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைத் தலைவருக்கு அந்த எண்ணம் உண்டு. 3 கேள்விக்கும் சேர்ந்து எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டுமென்பதையும் பார்த்துத்தான் ஒதுக்கு கிறேன். ஒவ்வொன்றாகக் கேள்வி கேட்டால், மறுபடியும் அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். நேரம்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் நினைக்கிறார்ப்போல இல்லை, அவருக்கு சந்தர்ப்பம் தருவேன்.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு நெல்லை முதல் ரகம், இரண்டாவது ரகம், மூன்றாவது ரகம், சன்ன ரகம் என்று நான்கு வகையாகப் பிரித்து விலை நிர்ணயம் செய்தது. இந்த அரசால் மிக சன்ன ரகம் நீக்கப்பட்டிருக்கிறது. முதல் ரகம், இரண்டாவது ரகம் இரண்டும் ஒன்றாக்கப்பட்டு விட்டதால், விவசாயிகளுக்குப் பாதகமாக இருக்கிறது.

அடுத்தது, ஈரப்பசையைப் பொறுத்த அளவில், முந்தைய அரசு தனிக் கட்டணம் வசூலிக்கவில்லை. ஆனால், இந்த அரசு வசூலிக்கிறது. அதேபோல், 100 மூட்டை கொண்டு வந்தால், அந்த 100-க்கும் சேர்த்து தனிக் கட்டணம் வசூலிக்கிறார்கள். முன்பு அதைத் தனித்தனியாகப் பிரித்ததற்குப் பதிலாக இப்பொழுது மொத்தமாகப் பார்க்கிறார்கள். இதுவும் விவசாயிகளுக்குப் பாதமாக இருக்கிறது.

(முற்பகல் 9—20)

(மணியடிக்கப்பட்டு அமைச்சர் அழைக்கப்பட்டார்.)

மாண்புமிகு திரு. க. ஹோரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 4 ரகமாக நெல், அரிசி பிரிக்கப்பட்டிருந்ததாகவும், இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நெல்லும் அரிசியும் 2 தரமாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள்,. அந்த 4 வகை நெல்லும் அரிசியும் இப்போதும் இருக்கின்றன. எப்போதும் விளைச்சல் ஆகிற நெல்லின் தரம் இருந்து கொண்டேதான் இருக்கும். ஆனால் இந்த அரசைப் பொறுத்தமட்டில் மோட்டா ரக நெல்லுக்கும் நடுத்தர நெல்லுக்கும் விலை நிர்ணயம் செய்து பொது மக்கள் விநியோகத்திற்கு மோட்டா ரக நெல்லையும், நடுத்தர ரக நெல்லையும் கொடுக்கிற காரணத்தாலே, அந்த இரண்டு

1978 மார்ச் 9]

ரக நெல்லைத்தான் வாங்குவது என்று முடிவெடுத்திருக்கிற காரணத்தாலே மத்திய அரசு ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்திருக்கிற காரணத்தாலே, விவசாயிகளுக்கு வெளிமார்க்கெட்டில் கூடுதலான விலைக்கு விற்பதற்கு வசதியை உருவாக்கிக் கொடுப்பதற்கான நல்ல எண்ணத்தோடு, மத்திய அரசு நிர்ணயம் செய்த விலையைவிட கூடுதலாக இந்த மோட்டா ரக நெல்லுக்கும், நடுத்தர ரக நெல்லுக்கும் இந்த அரசு கூடுதலாக நிர்ணயம் செய்து, அரசுத் துறை மூலமாக வாங்காமல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக வாங்குகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, இப்போது அரசாங்கக் கொள்முதலிலே அரசாங்கக் கடன் பெற்றுள்ள விவசாயிகள் அந்த நெல்லை விற்க முடியாமல், அந்தக் கடனைத் தீர்க்க முடியாமல் இருக்கிறது. அப்படி உள்ள விவசாயிகளிடம் இருக்கிற அந்த நெல்லை கொள்முதல் செய்துகொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, நெல்லை விற்றுத்தான் கடனை அடைக்கவேண்டும் என்ற நிலை விவசாயிகளுக்கு இப்போது இல்லை. நெல்லை உடனடியாக விற்க முடியாமல் போனால் விவசாயிகள் ஆங்காங்குள்ள கூட்டுறவுத்துறை கிடங்குகளிலே அடமானத்திற்கு வைத்து, அதன்பேரில் நெல்லுக்குத் தேவையான பணத்தை வாங்கி கடனை அடைக்கிற ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது அரசாங்கம் தேவையான நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குகின்ற வாங்கும் நிலையங்களையும் பல்வேறு மாவட்டங்களில் உணவு வழங்குத் துறை மூலமாக இந்த அரசு ஆரம்பித்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, தரமான அரிசி போதுமான அளவு இருப்பு இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் நீண்ட நாட்கள் இருப்பு வைத்து, மக்கிப் போனதற்குப் பிறகு, குப்பை கட்டியதற்குப் பிறகு, அந்த மக்கிப்போன அரிசியை எல்லாம் சிவில் சப்ளைஸ் கடைகளில் கொண்டு வந்து, இந்த அரிசியை வாங்கினால்தான் பருப்பு கொடுப்போம், இந்த அரிசியை வாங்கினால்தான் எண்ணெய் கொடுப்போம் என்கிற அளவுக்கு இன்றைக்கு மக்கிப்போன அரிசியை விற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா. எனவே, அரிசியை நீண்ட நாட்களுக்கு இருப்பு வைக்காமல் நல்லபடியாக இருக்கக்கூடிய நேரத்திலேயே அவைகளை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

[1978 மார்ச் 9

மாண்புமிகு திரு. க. உராா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, மக்கிப்போன அரிசி எதுவும் அரசாங்கத்தினுடைய கையிருப்பில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தவறான கருத்தைச் சொல்லவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். தரமுள்ள அரிசியைத்தான் இந்த அரசு எல்லா விநியோக நிலையங்களிலும் விநியோகம் செய்கிறது. எங்கெங்கே தவறுகள் இருக்கின்றன என்பதை குறிப்பிட்டுக்காட்டி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நெல்லை விற்றுத்தான் கடனை அடைக்கவேண்டும் என்ற நிலைமையில் இல்லை என்றும், கூட்டுறவு வங்கிகளில் வைத்து கடன் பெறலாம் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை முன்பிருந்தது, இடையிலே நிறுத்தப்பட்டது. எனவே மீண்டும் இது புதுப்பிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. உராா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட நிலை இடையிலே நிறுத்தப்பட்டது என்று சொல்வது சரியான தகவல் இல்லை. அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

திரு. எஸ். முனிரத்தினம் : தலைவர் அவர்களே, அரசு விவசாயிகளிடம் இருந்து வாங்குகின்ற அந்த நிலையம் மாவட்டம் முழுவதற்கும் ஒரே இடத்தில்தான் இருக்கிறது. அந்த விற்பனை நிலையங்கள் ஒவ்வொரு தாலூகாவிலும் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உராா. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, கொள்முதலுக்கு அதிக வாய்ப்பு இருக்கிற இடங்களில் தேவையான அளவில் கொள்முதல் நிலையங்களைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் வியாபாரம் செய்கிற நெல் வியாபாரிகளிடமிருந்து லெவி அதிகமாக நம்முடைய அரசு கேட்கிறது. நம்முடைய மாநிலத்தில் லெவி அதிகமாக இருப்பதால், அண்டை மாநிலங்களில் இருந்து அதிகமாக நெல் கொண்டு வரும் நிலை இருக்கிறது. இங்கே இருந்து அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அதனால் முடியவில்லை. ஆகவே, அண்டை மாநிலங்களோடு கலந்து, பேசி அங்கே எந்த அளவிற்கு நெல் லெவி இருக்கிறதோ அதை வைப்பதற்கு அரசு முன்வருமா?

1978 மார்ச் 9]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, வியாபாரிகளுக்கு அதிகமாக லெவி விதிக்கப்பட்டு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் வாதாடுவது சரியல்ல என்று நான் கருதுகிறேன். இதற்கு முன்னால் இருந்த அரசால் விதிக்கப்பட்டு இருந்த லெவியை விட இப்போது விதிக்கப்பட்டு இருக்கும் லெவி மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மட்ட ரகத்திற்கு ரூ. 90 என்றும், நடுத்தர ரகத்திற்கு ரூ. 95 என்றும் விலை நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் பல இடங்களில் விவசாயிகள் நெல்லைக்கொண்டு வந்தால் அதை வாங்க அரசாங்கம் தயாராக இல்லை. இப்போது கூட ரூ. 60 ஒரு மூட்டை, ஒரு குவிண்டால் என்று தனியாக வியாபாரிகள் வாங்குவதால், நெல் போடக் கூடிய விவசாயிகள் நெல்லுக்கு தகுந்த விலை கிடைக்காது என்ற ஐயத்தால் வேறு பயிர் போடுவதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். ஆகவே, அந்த குறைந்தபட்சம் ரூ. 90-95 அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய அரசாங்கம் உத்தரவாதம் கொடுக்கும் வகையில், நெல் போடுவதற்குத் தயாராக உள்ள விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அரசாங்கம் நெல்லை உணவு வழங்குத் துறை மூலமாக கொள்முதல் செய்கிற நேரத்தில், அந்த நெல்லில் உள்ள (மாய்ஸ்சர்) ஈரத்தன்மையை பரிசீலித்து அதற்குண்டான கழிவை கழித்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே தான் அந்த ஈரத் தன்மையைச் சரிக்கட்ட அதிகமான நெல்லைக் கேட்கவேண்டியிருக்கிறது. அப்படிச் செய்தால் விவசாயிகளுக்கு விலை அந்த அளவிற்குக் கொடுக்கப்படும். விவசாயிகள் நல்ல தரமான நெல்லை கொடுத்தால் அரசு நிர்ணயித்த விலை கொடுக்கவேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே நான் இந்த அவையின் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கு நல்ல தரமான நெல்லை விவசாயிகள் அளிக்கவேண்டும், அப்படிச் செய்தால் அதை அரசு வாங்கி வைத்து பொது வினியோகத்திற்குக் கொடுக்க வசதியாக இருக்கும். ஈரமான நெல்லை கொள்முதல் செய்து தேக்கி வைத்தால் அவை முளை கட்டிவிடும். பொதுவினியோகத்திற்குப் பயன்பெறாது. தனியார் அவ்வப்போது வாங்கி அரைத்து விற்பனைக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள். ஆகவே, இந்த பொது நல நோக்கத்தை அவர்களுக்கு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 466-வது கேள்வியின் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்த போது Stock of food grains like rice and wheat. என்று கேட்ட கேள்விக்கு, ''அரசாங்கத்திடம் பொதுமக்களுக்குத் தேவையான அளவு இருக்கிறது'' என்று சொன்னார்கள். கேள்விப்படி ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது என்று கேட்டால் அந்த அளவைச் சொல்ல வேண்டுமே தவிர, அமைச்சரின் பொதுவான கருத்தை பதிலாகச் சொல்லக் கூடாது. எனவே, கோதுமை எவ்வளவு இருக்கிறது, அரிசி எவ்வளவு இருக்கிறது, கையிருப்பில் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு எதிர் கட்சித் துணைத் தலைவர் முன்னாலே இந்த அவையில் அமைச்சராக இருந்தவர். வியாபார நோக்கத்தில் சில விஷயங்களை அரசாங்கம் வெளியிலே சொல்வது நல்லது அல்ல என்று உணவு அமைச்சராக இருந்த ப. உ. சண்முகம் அவர்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஒரு அரசாங்கம் பதில் சொல்லக்கூடிய நேரத்தில், இந்த அவைக்கு பொறுப்புள்ள பதிலாகத்தான் சொல்ல வேண்டும். ஒரு மாதத்திற்கு இந்த தமிழக மக்களுக்கு பொது விநியோகத் துறையின் மூலம் 50,000 டன் அரசி தேவைப்படுகிறது என்றால், அதைக் கணக்கிட்டு, அடுத்த அறுவடை வரும் வரைக்கும் நமக்கு எந்த அளவுக்கு தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு கையிருப்பு இருக்கிறது என்பதைத் தான் சொல்வது ஒரு அரசாங்கத்தின் நல்ல குறிக்கோளாக இருக்கும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சொல்லித் தானே ஆக வேண்டும் என்றால், சொல்வதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, ஆளுநர் ஆட்சி காலத்தில் கொடுக்கப்பட்ட கொள்முதல் விலையை விட இந்த ஆட்சி காலத்தில் அதிகமாகக் கொடுத்ததற்கு நன்றி. ஆனால் இந்த ஆண்டு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக கொள்முதல் செய்யப்படுகிறபோது ரூ. 90-95 என்று கொடுப்பதில் ரூ. 2 குறைத்துக் கொடுக்க வேண்டும் என்கிற அளவிற்கு ஆணை எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. அது, கார்ப்பரேஷன் லாபக் கணக்குக் காட்ட வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுகிறதா ? அப்படி இருந்தால், அதைப் பரிசீலித்து, அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட புகார்கள் நான் இரண்டு நாட்களுக்கு முன்பு நெல்லைக்குச் சென்று இருந்தபோது கூட என்னிடத்தில் சொன்னார்கள். ஆனால் புகார் கொண்டு வந்தவர்களோ

1978 மார்ச் 9]

அந்த நெல்லில் எவ்வளவு ஈரம் இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டார்கள். நான் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்வேன், தனியார் வாங்குகிற நெல் கொள்முதலுக்கு அரசாங்கம் செய்யும் கொள்முதலுக்கும் காத தூர வித்தியாசம் இருக்கிறது. தனியார் வாங்கிய உடனே அந்த நெல்லை அவித்து, அரைத்து, வியாபாரத்திற்குக் கொண்டு வந்து விடுகிறார்கள். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அந்த நெல்லை வாங்கி 3 மாதம், சில நேரங்களில் 6 மாதம் கூட ஆகி விடுகிறது. கழித்துத்தான் அரைத்து, பொது வினியோகத்திற்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆகவே, விவசாயிகள் சுத்த தரமான நெல்லைக் கொண்டு வந்து கொடுத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலை கொடுத்து வாங்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30.]

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, உணவுக் கொள் முதலில் குறுவை அறுவடையின்போதுதான் அதிகமாக ஈரப் பசை இருக்குமென்று சொல்லி, அதிகம் ‘‘ கட் போடுவது’’ உணவு இலாகாவின் பழக்கம். ஆனால் சம்பா பருவத்தில் 15 சதவீதம்தான் ஈரப்பசைக்காக ‘‘ கட் ’’ செய்ய வேண்டுமென்று — வெயில் காலமாக இருப்பதால்— ஏற்கனவே விதி இருப்பதாக அறிகிறேன். ஏற்கனவே இருந்த அரசும் அப்படித்தான் செய்து வந்ததாக அறிகிறேன் ; சரியாக நினைவில்லை. ஆனால் இப்போது இந்த சம்பா பருவத்திலும் அதிகமாக ஈரப்பசை என்று சொல்லி ‘‘ கட் ’’ செய்வதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அறுவடை செய்த நெல்லை கொள்முதல் செய்யும்போது ஈரப்பசை எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்க்கும் வேலையை அதிகாரிகள் செய்யவில்லை. நெல்லிலே இருக்கிற ஈரப்பசையைக் கண்டுபிடிக்க கருவி இருக்கிறது. அந்தக் கருவியை வைத்துத்தான் ஈரப்பசையைக் கணக்கிட்டு, கருவி எந்த அளவுக்குக் காட்டுகிறதோ அதை வைத்துத்தான் ‘‘ கட் ’’ செய்கிறார்கள். முந்தைய அரசிலும் அப்படித்தான் செய்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ப.உ.ச. அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இன்றைக்கும் அந்த கருவிகளை வைத்து ஈரப்பசையைக் கணக்கிடும் முறை தான் இருக்கிறது. அதை வைத்து விலை நிர்ணயம் செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினா 467.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, நான் வெகு நேரமாக ஒரு கேள்விக்கு கை உயர்த்திக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு 8 நிமிடம் தந்திருக்கிறேன். ஒவ்வொரு கட்சிக்கும் நான் கேள்வி கேட்கும் நேரத்தை பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறேன். மேற்கொண்டும் இந்த கேள்விக்கு நேரம் ஒதுக்க இயலாது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, இது விவசாயிகள் பிரச்சனை ; அதனால் இன்னும் சில கேள்விகளுக்கு அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். நீங்கள் கேட்பது நியாயமில்லை. நமக்கு கேள்வி நேரத்திற்கு என்று ஒரு மணி நேரம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து கேள்வி நேரத்தை இரண்டு மணி நேரம் என்று ஒதுக்கி விட்டால் பிரச்னையே இல்லை ; தாராளமாக கேள்விகள் கேட்கலாம்.

(திரு. இராசமாணிக்கம் எழுந்தார்).

திரு. கோ. இளங்கோவன் : இப்போது 3 கேள்விகள் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த 3 கேள்விகளுக்கும் தான் 8 நிமிடம் ஆகியிருக்கிறது. இது விவசாயிகள் பிரச்னையாக இருப்பதால்தான் நாங்கள் மேலும் துணைக் கேள்விகள் கேட்க அனுமதி கோருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே எவ்வளவு தகவல்கள் சேகரிக்க வேண்டுமோ அவ்வளவும் சேகரித்தாகிவிட்டது. திரு. இளங்கோவனுக்கு என்று தனியாகப் பார்க்க முடியாது. ஒன்றில் கொடுக்காவிட்டாலும் இன்னொரு கேள்வியில் கொடுக்கிறேன். எல்லோருக்கும் எல்லா கேள்விகளிலும் துணைக் கேள்வி கேட்கும் வாய்ப்புகொடுக்க இயலாது. இதிலே பாரபட்சமாகவோ அல்லது யாரையும் பாகுபடுத்தியோ நான் நடத்தவில்லை. கேள்வி நேரத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு மணி நேரம்தான். அதைக் கவனத்தில் வைத்துத்தான் துணைக் கேள்விகளுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : நான் எல்லாக் கேள்விகளிலும் துணைக் கேள்வி கேட்பதில்லை. இது விவசாயிகள் பிரச்னையாக இருப்பதால் வெகுநேரமாக ஒரு துணைக் கேள்விக்கு கையை உயர்த்திக் கொண்டிருந்தேன். அப்படியிருந்தும் எனக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்றால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராசமாணிக்கத்திற்குக் கொடுக்கவில்லை என்றால் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். கேள்வி நேரத்தில் கேட்கின்ற கேள்விகளின் எண்ணிக்கையைப் பாருங்கள் ; ஆட்களைப் பார்க்காதீர்கள். உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கக்கூடாது என்ற எண்ணம்

1978 மார்ச் 9]

எனக்கில்லை ; இருக்கின்ற நேரத்திற்குள் கேள்விகளை முடித்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன் ; அவ்வளவுதான். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. கோ. இளங்கோவன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்தில் துணைக் கேள்விகள் கேட்க சரியான வாய்ப்புக் கொடுக்காதது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''நோ பாயின்ட் ஆப் ஆர்டர்''. நீங்கள் மூலக் கேள்வி கொடுக்கவில்லை; உட்காருங்கள். அடுத்து வினா எண். 467.

மீனவர்களிடையே தகராறு.

* 467. வினா— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 25— 11— 1977 அன்று விசைப் படகு சொந்தக்காரர்கள் நாட்டுப் படகில் மீன் பிடிப்பவர்களைத் தாக்கியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) 25— 11—1977 அன்று சென்னையில் விசைப்படகுச் சொந்தக்காரர்கள் நாட்டுப்படகில் மீன் பிடிப்பவர்களை தாக்கியதாக அரசுக்கு எந்தவித தகவலும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சென்னையில் விசைப் படகுக்காரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர்களுக்கும் தகராறு நடந்ததாக பத்திரிகையில் செய்தி வந்தது. தூத்துக்குடியிலும் அப்படி ஒரு தகராறு நடந்திருப்பதாக இன்று காலை தந்தி வந்திருக்கிறது. அதைப்போல தமிழ்நாட்டு கடற்கரையோரங்களில், குறிப்பாக சென்னை, நாகப்பட்டினம், கோட்டபட்டினம், மல்லிப்பட்டினம், உவரி, நம்புதாளை போன்ற பகுதிகளில் அடிக்கடி தொடர்ந்து விசைப்படகுக்காரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர்களுக்கும் தகராறு நடக்கிறது. தகராறு வராமல் இருப்பதற்கு விசைப்படகுக்காரர்களை பகலில் மட்டும்தான் மீன் பிடிக்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுமா? அதோடு பாக் ஜலசந்தியில் அவர்கள் அறவே புகக்கூடாது என்று உப விதிகள் பிறப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். யார் யார் எந்தெந்த நேரத்திலே எப்படி எப்படி தொழில் செய்வது என்பதில் யாரையும் கட்டுப்படுத்த இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே விசைப் படகுக்காரர்களை இரவிலே மீன் பிடிக்கக்கூடாதென்றும், கட்டுமரப் படகுக்காரர்களை பகலிலே மீன் பிடிக்கக்கூடாதென்றும் உத்தரவு பிறப்பிப்பதன் மூலம் செய்ய இயலாது என்பதை உணர்ந்து பேச்சுவார்த்தை மூலம் இருசாராரும் ஒத்துக்கொள்கிற வகையிலே சுமுகமாகப் பேசி முடித்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, விசைப் படகுக்காரர்கள் ஆழ்கடலில்தான் மீன் பிடிக்கவேண்டும் என்று இப்போதிருக்கிறது. கடற்கரை ஓரமாக வந்து மீன்களை எல்லாம் பிடித்துவிடுவதால் கட்டுமரக்காரர்களுக்கு பிழைப்பு இல்லாமல் போய்விடுகிறது. இந்த அபாயகரமான சூழ்நிலையை போக்குவதற்காக விசைப் படகுக்காரர்களை கடற்கரையிலிருந்து மூன்று மைலுக்கு குறைவாக உள்ள பகுதிகளில் மீன் பிடிக்கக்கூடாதென்று உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு முன்னால் ஒரு சமயம் இந்த அவையில் மிக விளக்கமாக பதில் சொல்லி இருக்கிறேன். ஆழ்கடல் என்பது தமிழ்நாட்டில் உள்ள 600 கிலோ மீட்டர் கடற்கரைப் பகுதிகளில் ஆழ்கடல் எப்படி எங்கே இருக்கிறது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. சில இடங்களில் கடற்கரைக்கு மிக அருகாமையிலேயே ஆழமான பகுதிகளில் இருக்கலாம். சில பகுதிகளில் வெகுதூரம் சென்றாலும் ஆழ்கடல் அமைவது இல்லை. ஆகவே இடத்திற்கு தகுந்த அளவில், இந்த மாதிரி மோதல் ஏற்படுகிற சமயத்தில் இருசாராரையும் அழைத்துப் பேசி சுமுகமான முடிவு ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே விசைப்படகு உரிமையாளர்கள் 2 ஆயிரத்து சொச்சம் பேர் தான் இருக்கிறார்கள் என்பதாகத் தகவல். மீன் தொழிலை நம்பி வாழும் கட்டுமரத்தை வைத்து பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பவர்கள் 3 லட்சத்து 80 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களைச் சேர்ந்த இருபது லட்சம் மக்கள் இருக்கிறார்கள். சுத்தமாக விசைப்படகுக்காரர்களை மீன் பிடிக்காதவாது கூறி இந்தக் கட்டுமரக்காரர்களைக் காப்பாற்ற இந்த அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 9]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர அவர்களே, நாட்டுப் படகிலே சென்று மீன் பிடிப்பவர்களைக் காப்பாற்றுவதிலும், விசைப்படகுக்காரர்களைக் காப்பாற்றுவதிலும் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன் நம்முடைய தமிழ்நாட்டில் கடல் செல்வங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் நாட்டுப் படகிலேயே கொண்டு வரமுடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. ஆகவே இந்த அரசாங்கம் கொஞ்சம் கொஞ்சமாக மீன்பிடித்தொழிலை விசைப் படகின் மூலமாகவும் வளர்த்துக்கொண்டு வருகின்றது. அந்த அடிப்படையிலேதான் இரண்டும் இந்த நாட்டுக்குத் தேவை என்பதை இந்த அரசு உணருகிறது. என்றாலும் இப்பேர்ப்பட்ட சச்சரவுகள், சிக்கல்கள் ஆகியவை வருகின்ற நேரத்தில் அவைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்து தேவையான சட்டதிட்டங்கள் ஏற்படுத்துவதற்கு இன்றைக்கு இந்தப் பிரச்சினை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்த சட்டதிட்டங்கள் தீட்டி இந்த அவையிலே வைக்கப்படுகின்ற நேரத்தில் இப்பேர்ப்பட்ட சச்சரவுகள் நிச்சயமாக அறவே தீர்ந்து விடும் என்கிற நம்பிக்கையும் இந்த அரசுக்கு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நாட்டுப்படகுக் காரர்களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்படுகின்ற காரணத்தினால் இருசாரருக்கும் பெரிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசுக்கும் கூட அதனால் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறியவிரும்புகிறேன். ஆகவே இந்தப் பிரச்சினையை மேலும் நீடிக்கவிடாமல் உடனடியாகத் தீர்ப்பதற்கு, அதாவது சட்டதிட்டங்கள் ஒருபக்கம் ஏற்படுத்த இருப்பது சரியாக இருந்தாலும் இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு அவர்களுக்குள் மோதல் ஏற்படாதவாறு தடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, உடனடியாக இப்பேர்ப்பட்ட சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது என்பது பேச்சு வார்த்தையின் மூலமாகத்தான் முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் நன்றாகவே அறிவார்கள். ஆகவே தமிழ்நாட்டில் இப்பேர்ப்பட்ட பிரச்சினைகள் எந்தெந்த கடற்கரைப்பகுதிகளில் விசைப் படகுக்காரர்களுக்கும், கட்டுமரக்காரர்களுக்கும் தகராறு ஏற்படுகின்றதோ அப்போதைக்கப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிலே தலையிட்டு இப்பேர்ப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமாக ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். அப்படி உரு

வாக்கித் தருவதன்மூலம் இப்போது இப்பேர்ப்பட்ட பிரச்சினைகள், சச்சரவுகள் எல்லாம் கொஞ்சம் குறைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

ஆனால் நிரந்தரமான பரிகாரத்தைக் காணவேண்டுமென்றால் அது சட்டதிட்டத்தின் மூலமாகத்தான் முடியும் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9—40)

திரு. யா. சை. மு. யூசுப்: தற்போது கடல்உள் பகுதியில் குதிப்பு போன்ற மீன்கள் கிடைக்கின்றன. கடலோரத்தில் இரால் மீன் கிடைக்கிறது. இரால் மீன் அன்னியச் செலவாணி கிடைப்பதற்கு அதிகமாகப் பயன்படுவதால் அதற்கு முக்கியத்துவம் ஏற்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. நாட்டுப் படகுக்காரர்களுக்கும் விசைப்படகுக்காரர்களுக்கும் சேர்த்து அந்த அளவிற்கு இரால் மீன் கிடைக்காத காரணத்தால் இரால் மீன் பிடிக்க நாட்டுப்படகுக்காரர்கள் மட்டுமே படகுகளைப்பயன் படுத்திக் கொள்கிற அளவிற்கு—கைத்தறிக்கு ஊக்கம் தருவது போல்—அனுமதி அளித்து விசைப்படகுக்காரர்கள் குறிப்பிட்ட ஐந்து மைல் தள்ளிச் சென்று படகுகளை பயன்படுத்துகிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த இந்த அரசு அதற்காக ஒரு சட்டம் கொண்டுவருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: நான் ஏற்கனவே இந்தக் கேள்விக்கு பதில் அளித்திருக்கிறேன். இன்னார் இன்னார் இன்னின்ன நேரத்தில் இன்னின்ன இடங்களில்தான் மீன் பிடிக்க வேண்டும் என்று எந்தக் கட்டுப்பாட்டையும் இந்த அரசு அவர்கள் மீது திணிக்கமுடியாது.

திரு. செ. சிவசாமி: நாட்டுப்படகுக்காரர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் இடையே ஏற்படுகிற தகராறுகளைத் தீர்த்து வைப்பதுதான் அரசின் கொள்கை என்று சொல்லப்படுகிறது. பெரியபட்டனம், திருப்பாலைக்குடி இவ்விடங்களில் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது என்று தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றைத் தீர்த்துவைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தகராறு ஏற் படுகிற நேரங்களில் அவர்களைக் கட்டிவைத்து பேசுகிற முயற்சியில் அரசு ஈடுபாடு கொண்டிருக்கிறது. அண்மையில்கூட நாகப் பட்டினம், பூம்புகார், மல்லிபட்டினம் போன்ற பகுதிகளில் சில மாதங்களுக்கு முன்னால் இப்பேர்ப்பட்ட தகராறுகள் மீனவர்களுக் குள்ளாக ஏற்பட்ட காரணத்தால் அவற்றைப் பற்றிப் பேசி அவர் களுக்குள்ளே ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்

1978 மார்ச் 9]

என்று இந்த அரசு அதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கான பேச்சுவார்த்தைகள் நாளையதினம் என் முன்னிலையில் நடைபெறவிருக்கிறது. இப்பேர்ப்பட்ட முயற்சிகளில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன் : இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் விசைப்படகுகளை ஒழித்துவிடலாமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். விஞ்ஞான ரீதியில், தீவிரமான முன்னேற்றத்தை காண வேண்டும் என்ற கட்சியைச் சார்ந்தவர் இப்படிக் கேட்கிறார். அதுமட்டுமல்ல, உலகத்தில் எல்லா நாடுகளும் விஞ்ஞான ரீதியிலேயே முயற்சிக்கும்போது பழைய கால கட்டுமரங்களை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : கட்டுமரக்காரர் எல்லோருக்கும் விசைப்படகுகள் படிப்படியாக வழங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்வதோடு ஏதோ பாவம் செய்ததைப்போல், விஞ்ஞான ரீதியில் முன்னேற்றம் காணவேண்டிய நேரத்தில் விசைப்படகுகளை அறவே ஒழிக்க வேண்டுமென்று சொல்வது எந்த வகையில் நியாயம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். கட்டுமரங்களுக்குப் பதிலாக விசைப்படகுகள் அளிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : படிப்படியாக கட்டுமரத் தொழிலாளர்களுக்கெல்லாம், எல்லோருக்கும் விசைப்படகுகள் கொடுப்பது என்பது, இப்போது அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். காரணம் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கட்டுமர மீனவர்கள் இன்றையதினம் இருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு விசைப்படகுகளை இந்த அரசு தயாரிக்க முடியும் என்பதையும் உறுப்பினர் அவர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள். விசைப்படகுகளையெல்லாம் அறவே ஒழிக்க வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கமல்ல. ஆனால் விசைப்படகுகள் எப்பேர்ப்பட்டவர்களிடம் இருக்கவேண்டும், யாரிடம் இருக்கவேண்டும் என்பதில் இந்த அரசு ஒரு முடிவு எடுப்பதில் பொறுப்போடும், கடமை உணர்வோடும் காரியங்களைச் செய்து வருகிறது.

[1978 மார்ச் 9

## ஏலகிரிமலையை கோடைவாசத்தலமாக்குதல்.

*468 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலையை மேம்படுத்தி, அதனை ஏழைகளின் கோடைவாசத் தங்கும் இடமாக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தற்போது, ஏலகிரி மலையைச் காணவரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குப் போதுமான இடவசதி அளிக்கும் வகையில் படுக்கைகள், குடிதண்ணீர், நீராடிக் கழிப்பிட வசதிகளுடன் கூடிய நான்கு பிரிவுகள் கொண்ட பெரிய கூடம் ஒன்றை கட்டுவதற்கான செயற்குறிப்பினை அரசு பரிசிலித்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா: வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலையை ஏழைகளின் உதகமண்டலம் என்று சொல்கிறார்கள். அதை மேம்படுத்த திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கு முன்னாலேயே, ஒரே ஒரு சுற்றுலா மாளிகை அங்கிருப்பதாகவும் அதில் பெரும்பாலும் அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர்கள் மட்டும் அங்கே தங்கிவருவதாகவும் வெளிப் பயணிகள் அங்கே வந்து தங்குவதற்கு இப்போது வசதி இல்லாமல் இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, அந் நிலையைத் தவிர்க்க விரைந்து இந்தக் கட்டடங்களை விரிவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற நிதி ஆண்டிலேயே, இதற்கு ஒரு லட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைகள் துவக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## Tourist Home in Nagappattinam

* 469—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(a) whether there is any proposal to build a tourist home in Nagappattinam; and

(b) if so, the details thereof?

1978 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) : ஆம்.

நாகப்பட்டினத்தில் பேருந்து நிலையத்திற்கும் இரயில்வே நிலையத்திற்கும் அருகில் சுமார் 9.10 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகள் விடுதி கட்ட தேவையான இரயில்வே நிலத்தை ரூ. 62,000 செலவில் தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கையகப் படுத்தியுள்ளது. இந்த விடுதி கட்டும் பணியினை வரும் நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கருதியுள்ளது.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் கண்ணிக்கும் நாகூருக்கும் லட்சக்கணக்கான யாத்திரீகர்கள் பண்டிகை காலங்களில் வருவதுண்டு. என்னுடைய கேள்வி என்னவென்றால், இவ்விதம் இரண்டு காலங்களிலும் வருகின்ற யாத்திரீகர்களுக்கு தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பதாக அரசாங்கம் யோசித்திருக்கிறது என்பது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஒவ்வொரு ஆண்டும் திருவிழா காலங்களில் மட்டும் பெருங் கூட்டம் வருகிறது. அதை கணக்கில் வைத்துக்கொண்டு சுற்றுலாக் கழகம் விடுதிகளை கட்ட இயலாது. ஆண்டு முழுவதும் இந்த விடுதிகளின் மூலமாக வருமானம் வரும் என்று கருதினால்தான் இதில் முதலீடு செய்து விடுதிகளை கட்ட இயலும். இருந்தாலும் இந்த இடத்தில் ஆண்டு தோறும் பக்தர்கள் இரண்டு கோயில்களுக்கும் வருகிறார்கள் என்கின்ற அடிப்படையில் விடுதி கட்டுவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இதற்கான முடிவு எடுக்கப் படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கக் கூடிய சுற்றுலா விடுதி எத்தனை பேர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் இருக் கிறது? இது எப்போது கட்டி முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுற்றுலா வாரியத்தின் மூலமாக இந்த வேலைகள் நடைபெறுகின்றன. அரசு நேரடியாக இதில் முடிவு எடுக்க இயலாது என்றாலும், அடுத்த ஆண்டில் இந்த வேலை எடுத்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டி ருக்கிறது. அதற்கான திட்டங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டு வருகிறது. சமயம் வரும்போது இதற்கான விரிவான பதிலை அறிவிக்கலாம்.

பணி நிரந்தரப்படுத்தப்படாத பட்டதாரி ஆசிரியர்கள்.

*470, வினா— திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் நியமனம் செய்யப்பட்டு, இன்னும் நிரந்தரம் ஆக்கப்படாத பட்டதாரி ஆசிரியர்களின் தொகை என்ன ?

(ஆ) அவர்களுக்குப் பிரத்யேகமாக T.N.P.S.C. மூலம் தேர்வு வைத்து பணியில் நிரந்தரமாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3 ஆம் தேதிவரை அரசினர் 'பி' பிரிவு பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 702 பேர்கள், ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 250 பேர்கள். மொத்தம் 952 பட்டதாரி ஆசிரியர்கள்.

(ஆ) ஆம். இவர்களது பணியினை வரன்முறைப்படுத்த தேர்வாணைக்குழு தனியாக ஒரு நியமனத் தேர்வு நடத்த அரசு தனது ஆணை (நிலை) எண். 2683 கல்வி நாள், 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் நாளில் ஆணை வெளியிட்டுள்ளது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்கள் எல்லாம் எத்தனை ஆண்டுகளில் நிரந்தரமாக்கப் படுவார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தேர்வு ஆணைக்குழுவின் முடிவு தெரிந்தவுடன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : இப்படிப்பட்ட ஆசிரியர்கள் பள்ளிகளில் 5 ஆண்டுகள், 7 ஆண்டுகள் காலமாகவும், கல்லூரி களில் ஐந்து ஆண்டு, ஏழு ஆண்டுகள் காலமாகவும் இப்படி தற்காலிகமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை நிரந்தரமாக்குவதற்கு தேர்வு ஆணைக் குழுவின் முடிவை எதிர்பார்க்காமல், இவர்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படுவதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு பணிகளில் உள்ளவர்களை நிரந்தரமான ஊழியர்களாக நியமிப்பது தேர்வு ஆணைக் குழுவின் முடிவுபடிதான். அது சட்டம், விதி. அதற்கு முரணாக இந்த அரசு நடக்க முடியாது.

1978 மார்ச் 9]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதிலுள்ள மானேஜ்மென்டார் நினைத்தால் எந்த நேரத்திலும் இவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடக்கூடிய வசதி இருக்கிறது. ஆகவே இவர்களை நிரந்தரமாக்குவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களால் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எப்போது நிரந்தரமாக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. இருந்தாலும் எல்லா பட்டதாரிகளும் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் தான் நான் பதில் தந்திருக்கின்றேன். எல்லோரையும் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

**Polytechnic in Dharmapuri district.**

*471 Q. Dr. K. SAMARASAM, Thiru M. ANNAMALAI ; Will the Hon. the Minister for Education be pleased to state whether the feasibility of starting a new Polytechnic in Dharmapuri district has been examined ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; ஆம். தர்மபுரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஒன்றினைத் துவக்குவதற்கான ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9.50.]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் பல்தொழில் பயிற்சிக் கல்லூரி தொடங்க வேண்டுமென்பது நீண்ட நாட்களாக கோரிக்கை. இதுபற்றி அண்மையில் பரிசீலிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. அது எப்போது நிறைவேற்றப்படும்? அதற்கான முயற்சியில் அரசு எந்த அளவிற்கு ஈடுபட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பரிசீலனை முடிந்தவுடன், அதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. எம். அண்ணுமலை</u> : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒரு வறட்சி மாவட்டம், மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இங்கு ஒரு தொழிற் கல்லூரி அமைப்பது சம்பந்தமாக ஆலோசனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எங்கு, எப்போது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்</u> : தலைவர் அவர்களே, அதற்கு என அமைக்கப்பட்ட ஒரு ஆலோசனைக் குழு இந்த பாலிடெக்னிக்கை அமைப்பதற்கான இடங்களாக ஒசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய இடங்களைக் குறிப்பிட்டிருக்கிருர்கள். அதிலே ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் புரோமோஷன் கார்ப்பரேஷன், தமிழ்நாடு அவர்கள் ஒசூரில் நிறுவுவது நலமென்று பரிந்துரை செய்திருக்கிருர்கள்.

<u>தமிழக நூலகங்களிலிருந்து அகற்றப்பட்ட புத்தகம்</u>

* <u>472 வினு—திரு. ப. பொன்னுரங்கம்</u> : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தமிழகத்தின் முன்னுள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' என்ற நூல் அவசரநிலை அமுலில் இருந்த காலத்தில் நூலகங்களிலிருந்து அகற்றப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அதனை நூலகங்களில் இடம் பெறச் செய்ய இந்த அரசு ஆவன செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்</u> : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

<u>திரு. ப. பொன்னுரங்கம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய நூலகங்களாக இருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் லைப்ரரி பிரான்சுகளிலும், மாநகராட்சி நூலகங்களிலும் இந்த நூல் கிடைக்கப் பெறுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த இடங்களில் எல்லாம் இந்த நூல் கிடைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை.

1978 மார்ச் 9]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நெருக்கடி நிலைமைகாலத்தில் இம்மாதிரியான நூல்கள் எந்தெந்த நூல்கள் அரசு நூலகங்களிலிருந்து அகற்றப்பட்டன? அப்படி அகற்றப் பட்ட நூல்களில் எவை எவை மீண்டும் அனுமதிக்கப்பட்டிருக் கிறது என்று அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் அது இயலும்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

*473 வினு— திரு. எஸ். ஜே. இராமசாமி, திரு. என். கிட்டப்பா, திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் பெரிய ஒன்றியங்களிலுள்ள ஊராட்சிகளை சிறிய ஒன்றியங்களுடன் இணைக்கும் திட்டம் எத்தனை ஒன்றியங் களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதுபோன்ற செயற் குறிப்புகள் எதுவும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டில் சில ஒன்றியங்கள் பல ஊராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய ஒன்றி யங்களாக அதாவது 60க்கு மேற்பட்ட ஊராட்சிகளை உள்ளடக்கிய தாகவும், சில ஒன்றியங்கள் 25, 30 ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கியதாகவும் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த நிலையை மாற்றி கிட்டத்தட்ட, பொதுவாக சிறிய அளவில் வித்தியாசம் இருக்கக்கூடிய நிலையிலுள்ள ஊராட்சி ஒன்றியங்க ளாக இனியேனும் மாற்றியமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவ்வாறு திருத்தி அமைக்க வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. திருவரங்கம், மோகனூர், அறந்தாங்கி போன்ற பஞ்சாயத்து ஒன்றியங்கள் திருத்தியமைக்கப்படுகின்ற கருத்து அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நாகை பஞ்சாயத்து யூனியன் 54 பஞ்சாயத்துக்கள் கொண்டதாக இருப்பதாலும், அது ஒரு கடைமடைப் பகுதியாக உள்ள பஞ்சாயத்து யூனியனுக இருக்கின்ற காரணத்திலுைம், அட்மினிஸ்ட்ரே ஷன் முறைப்படி நடத்தப்பட முடியவில்லை. ஆகவே, இருக்கிற

பஞ்சாயத்து யூனியனை டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சில் இதை இரண்டாகப் பிரிப்பது என்று ஒரு ரெகமண்டேஷனை, சிபார்சை செய்திருக்கிறது. இந்த சிபார்சு பற்றி கனம் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தப் பரிந்துரை அரசுக்கு வருமானால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் நிறைய இருக்கிற ஜபுனுமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து, பேரணும்பட்டு, மாதூர், ஆலங்காயம், நாட்டராம்பள்ளி ஆகிய பஞ்சாயத்துக்களை அதிலே இருந்து பிரித்தெடுத்து, வாணியம்பாடி ஒன்றியமாக ஆக்குவதற்கான பல நடைமுறைத் திட்டங்கள் நடத்தப்பட்டு, அரசின் பார்வைக்கு வந்திருக்கிறது. அது ஏதோ சில காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். எனவே, அந்த முயற்சி எந்த அளவில் இருக்கின்றது ? அவ்வாறு உடனடியாக மாற்றும் திட்டம் இந்த அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : புதுக்கோட்டை ஜில்லாவில் திருவரங்கம் பஞ்சாயத்து யூனியனை மூன்றாகப் பிரிப்பதாக ப்ரொபோசல் அனுப்பியிருக்கிறார்கள். அதை எப்போது பிரிக்கப்போகிறார்கள் ? அந்தப் பஞ்சாயத்து யூனியனில் 110 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, அதை நான்காகப் பிரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதை மூன்று ஒன்றியங்களாகப் பிரிக்கிற கருத்துருதான் அரசின் ஆய்வில் இருக்கிறது. தேர்தலுக்கு முன்னால் பிரிக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

திரு. சோ. அழகர்சாமி : நெல்லை மாவட்டத்தில் விளாத்திகுளம், ஒட்டைப்பிடாரம், கயத்தாறு ஆகிய யூனியன்கள் 50, 60 ஊராட்சிகள் கொண்ட யூனியனாக இருக்கின்றன. அவற்றைப் பிரிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது போன்ற பரிந்துரை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கப்படுமானால் பரிசீலிக்கப்படும்.

1978 மார்ச் 9]

திரு. க. இரா. சின்னராசு: தர்மபுரி மாவட்டத்தில் ஊற்றங்கரை பஞ்சாயத்து யூனியனை இரண்டாகப் பிரித்து சாம்பல்பட்டி யூனியனை ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிப்பதாகக் கூறப்படுகிறது. அது எப்போது பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்தக் கருத்துரை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரிடத்திலிருந்து அரசுக்கு வந்த பிறகு யோசிக்கப்படும்.

*474 Q.—THIRU K. KANDASAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state

(a) whether a resoultion was passed by the Panchayat Union, Andipatti, Madurai district and sent to the Government for the bifurcation of this Union into two viz., Andipatti Union and Kadamalaikkundu Panchayat Union as early as in 1968; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு தி. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்கும் கருத்து மதுரை மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

*475 வினு—திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஊராட்சிகளின் வளர்ச்சியைக் கருதி இரண்டாகப் பிரிக்கப்படுகின்ற கருத்து அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த ஆணைகள் எப்போது பிறப்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*476 வினு—திரு. கா. வே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், இவ்விரண்டையும் இணைத்து மூன்ருகப் பிரிக்கத் தீர்மானம் ஏதும் வந்துள்ளதா?

[1978 மார்ச் 9

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி: தமிழகத்திலேயே மிகப் பெரிய தொகுதி என்று சொல்லக்கூடிய ஆண்டிப்பட்டி தொகுதி மலையும், மரங்களும் காடுகளும், நிறைந்த பகுதியாக இருக்கிறது. ஒன்றேமுக்கால் லட்சம் ஜனத்தொகை கொண்ட ஒரே யூனியனாக அது இருக்கிறது. 1968-ம் ஆண்டு பஞ்சாயத்து யூனியன் தீர்மானத்தின்மேல் கலெக்டர் அவர்களால் அதைப் பிரிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து அனுப்பியும் இன்னும் காலதாமதமாகிக்கொண்டிருக்கிறது. நான் வந்த பின்னால் மாண்புமிகு அமைச்சர் மூலமாக மனுக் கொடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மாநில அளவில் உள்ள அந்த அதிகாரிக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி: அப்படி இருந்தும் இன்னும் செயல்படுத்தப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 60 மைல் தூரம் போக வேண்டும். அதிகாரிகள் பெட்ரோல் போட்டு கொண்டு அவ்வாறு செல்வதில்லை. பொதுமக்களுக்கு நன்மை செய்கிற அளவுக்கு அதை உடனடியாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி வைத்திருப்பதாக அறிகிறேன். அது அரசுக்கு வந்த பிறகு யோசிக்கப்படும்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: செங்கை மாவட்டத்திலுள்ள மிகப் பெரிய ஒன்றியம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம். அது இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையோடு அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டால் அதைப் பிரிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

1978 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அனுப்பி வைத்தால் பரிசீலனை செய்யலாம். இதிலே இருக்கிற சிக்கல் புதிதாக ஒன்றியம் தொடங்குகிற நேரத்தில் முதலில் அங்கே ஊழியர்கள் செலவுக்கு 7 லட்சம் ரூபாய், கட்டிடங்களுக்கு 10 லட்சம் ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது. இதிலே உள்ளாட்சித் துறை மாத்திரமல்லாமல் நிதித் துறையும் தொடர்பு கொண்டிருப்பதால் படிப்படியாக நிறைவேற்ற முடியும்.

திரு. கா. வே. கந்தசாமி : 1972-ல் பொள்ளாச்சி வடக்கு பஞ்சாயத்து யூனியன், கிணத்துக் கடவு பஞ்சாயத்து யூனியன்களை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று அந்த இரு ஒன்றியங்களிலிருந்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு மாவட்ட கலெக்டர் அவர்களால் அனுப்பப்பட்டிருக்கிறது. அன்றைய காலத்திலிருந்து இன்று வரை இந்தப் பஞ்சாயத்து யூனியன்களைப் பிரிக்க வேண்டுமென்ற குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா ? இந்தப் புதிய அரசில் துடிப்புள்ள இளைஞர் அமைச்சராகப் போடப்பட்டிருப்பதால் உடனடியாக நடக்குமென்று நினைக்கிறேன். ஆகவே, இது பற்றி ஆவன செய்ய அரசு முன்வருமா ?

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஒன்றியத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஒன்றியத்தில் உள்ள எல்லா ஊராட்சிகளிடமிருந்தும் ஒப்புதல் பெற்றதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கலாம் என்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அவைகள் எல்லாம் அரசுக்கு முறைப்படி அனுப்பப்பட்டால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. டி. இராமசாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக மாற்ற வேண்டும் என்று அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே, அவ்வாறு செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூலக் கேள்வி ஒன்றியங்களைப் பிரிப்பது பற்றியது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியத் தொகை வழங்கும்போது ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலே வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, இந்த நிலையில் இப்போதுள்ள கோரிக்கைகளை எல்லாம் அரசு ஏற்று ஒன்றியங்களைப் பிரிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. ஆனல் பெரிய ஊராட்சி ஒன்றியங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிப்பதுதான் நல்லது என்று அரசு கருதுகிறது. அந்த வகையிலேதான் முறையாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள ஒன்றியங்கள் அனைத்தும் ஒரே சீராக இருக்கக்கூடிய முறையிலே—இப்போது சில ஒன்றியங்கள் பெரியவையாகவும் சில ஒன்றியங்கள் சிறியவையாயும் இருக்கின்றன—ஒரே சீராக அவைகளைப் பிரிப்பதற்கு குறிப்பிட்ட ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களாக அவைகளைப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த அடிப்படையிலே இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த ஒன்றியங்களை, பேரூராட்சிகளைப் பிரிப்பது சம்பந்தமாக கேள்விகளும் பதில்களும் அதிகமாக இருக்கின்றன, அந்தக் காரணத்தால் தேர்தலும் பின்னுக்குத் தள்ளப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதனாலே அது பாதிக்காது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்திலே இளையாங்குடி பஞ்சாயத்து யூனியனிலே 55 பஞ்சாயத்துக்களும், போகளூரிலே 64 பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன, இரண்டையும் சேர்த்து 3 ஒன்றியங்களாக பிரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : போகளூர் ஒன்றியம் பற்றிய கருத்துரு இருக்கிறது, மற்றவைப்பற்றி குறிப்பு இல்லை.

திரு. கா.வே. கந்தசாமி : தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம் இவ்விரண்டையும் இணைத்து மூன்றாகப் பிரிக்கத் தீர்மானம் ஒன்றியத்திலிருந்து அனுப்பப்பட்டு விட்டது. அது மட்டுமல்ல, ஊராட்சிகளிலிருந்து தீர்மானம் வராததால் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனல் ஊராட்சிகளிலிருந்து அப்படிப்பட்ட தீர்மானம் நிறைவேற்றி பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக சுறுசுறுப்பாக வரவழைத்து அவைகளை மூன்றாகப் பிரிப்பதற்கு ஏற்படுசெய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய சொந்த ஊரான நெகமம் என்ற பெயரிலே ஒன்றியம் அமைக்கவேண்டுமென்ற முறையில் அவர்கள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவைகள் எல்லாம் முறையாக அரசுக்கு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

## கலப்புத் திருமணங்கள்.

* 414 வினா—திரு. தாழை மு. கருணாநிதி: மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-க்கு முன் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களிடமிருந்து சலுகைகள் கோரி விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனின், அவைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) இல்லை.
(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டுக்கு முன்னாலே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு சலுகைகள் கோரி விண்ணப்பங்கள் எதுவும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அப்படி கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் பலமுறைகள் விண்ணப்பங்கள் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறதே, தந்தை பெரியார் அவர்களின் அடிச்சுவற்றில் அறிஞர் அண்ணா அவர்கள் ஜாதி சமயமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற முறையில் கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற முறையிலே தன்னுடைய ஆட்சிக் காலத்திலே சிறப்பான திட்டத்தை உருவாக்கினார், ஆகவே, 1967-ம் ஆண்டுக்கு முன்னாலேயே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இந்தத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற முறையிலே அந்தச் சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மூல வினாவிற்கு அப்படிப்பட்ட கோரிக்கைகள் எதுவும் வரவில்லை என்று சொல்லி இருக்கிறேன். அப்படி வருமானால் பரிசீலிக்கப்படும்.

[1978 மார்ச் 9

திரு. மி. வின்சென்ட் ; தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் என்ன என்ன? கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய குழந்தைகளுக்கு, மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் அனைத்தையும் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு முதலிலே 1½ சவரன் தங்கப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

பின், படிப்படியாக ரூபாய் 200 ரொக்கப் பரிசு, சென்னை நகர் தவிர பிற மாவட்டங்களில் அரிசனங்களுக்கென்று கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மூன்று சென்ட் பரப்புள்ள வீட்டுமனை, சிறு கடன் உதவித் தொகை முதலிய சலுகைகள் அளிக்கப்படுகிறது. சென்னை நகரில் மாதம் ரூபாய் 250-க்குக் குறைந்த வருமானமுள்ள கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தவணைக் கொள் முதல் திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் 10 குடியிருப்புக்களை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒதுக்கித் தரும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தாழ்த்தப்பட்டவர்க்குள்ள 10 சதவீத ஒதுக்கீட்டில் வீட்டு மனைகள்/வீடுகள், கலப்பு மணத் தம்பதிகளுக்கும் ஒதுக்கித் தரும். இதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கும் கொடுக்க வேண்டிய தொகையில் ரூபாய் 1,200-க்கு மேற்படாமல் அரசு மான்யமாக வழங்கும்

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் எந்த ஆண்டு துவக்கப்பட்டது. அதன் உள் நோக்கம் என்ன? கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இதுவரையில் உதவி செய்யப்பட்டிருக்கிறதா? எத்தனை பேர்களுக்குத் தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஜாதிமத வேற்றுமையை ஒழிக்க வேண்டுமென்பதற்காகவும், ஒரு சமதர்ம புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகவும், ஜாதிக் கொடுமையை ஒழிப்பதற்கு இதுவொரு வழியாக இருக்கும் என்று கருதியும் பேரறிஞர் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், 1967-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் தேதியில் இந்தத் திட்டம் துவக்கப்பட்டது. இதுவரையில்; 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 573 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினு எண். 415.

1978 மார்ச் 9]

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் மானியக் கோரிக்கையில் வரப்போகிறது. அப்பொழுது நிம்மதியாகப் பேசலாம்.

மாவுத்தம்பதி மலைச்சாதி மக்களுக்கு வீடுகள்.

*415 வினா— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மாவுத் தம்பதியிலுள்ள மலைசாதி மக்களுக்கு வீடு கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு எவ்வளவு வீடுகள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, அங்கு மலைசாதி மக்கள் ஏராளமாக வசிக்கின்ற காரணத்தால் அவர்கள் வீடேயில்லாமல் சிறு சிறு குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள். மேற்கொண்டாவது அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மலைசாதி மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அந்தப் பகுதியில் குடிசைகளில் வாழ்கிறார்கள் என்பது உண்மை. அரசு இதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, குடியரசுத் தலைவரின் ஆட்சிக் காலத்தில் ஆதிவாசி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன காரணம் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஆதிவாசிகளுக்கு வீடு கட்டித் தருகிற திட்டம் கொஞ்சம் நிறுத்தப்பட்டது. வீடுகளின் வடிவமைப்பை மாற்றியமைக்கலாமா என்று அறிய வேண்டுமென்பதற்காக திரு. செல்வம் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கையை எதிர் பார்த்த காரணத்தால் அந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியத்திலுள்ள அந்த மாவுத்தம்பதி என்ற இடத்தில் வாலையாற்றுப் பக்கத்தில் மலையடிவாரத்தில் இருளர் என்ற மலை சாதியினருக்கு ஃபாரஸ்ட் நிலத்தில் கட்டிய வீடுகளை ஃபாரஸ்ட் அதிகாரிகள் கொளுத்தி அவர்களுக்கு வீடு இல்லாமல் செய்திருக்கிறார்கள். அந்த இடத்தில் வீடு கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? வீடு கட்டும் திட்டமே இல்லையென்று சொன்னால் அவர்கள் இருக்க முடியாமற் போய்விடும். எனவே இதுபற்றி மறு பரிசீலனை செய்யப்படுமா? அவர்கள் ஊருக்குச் செல்ல ரோடு போடப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, காட்டிலாக்கா நிலத்தை ஒதுக்கித் தருவது என்பது மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் செய்ய வேண்டியது. வேறு பகுதியில் நிலம் இருந்தால் அதை இந்தத் துறை பொறுப்பேற்று அவர்களுக்கு வீட்டு மனை வழங்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதை வசதி தேவைப்பட்டால் அதையும் பரிசீலிக்கிறேன்.

## தனியார் போக்குவரத்து நிறுவனத்தின் தொழிலாளர்கள்.

*477 வின—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு, தனியார் பேருந்துகளை ஏற்றுக் கொண்டாலும் அல்லது அவர்கள் வழித் தடங்களை சரண்டர் செய்தாலும், பாதிக்கப்படும் தொழிலாளர்களை அரசு நிறுவனங்களில் பணி புரிய ஏற்றுக் கொள்ளும் திட்டம் உண்டா?

(ஆ) திருநெல்வேலி ஸ்ரீராம் பாப்புலர் பஸ் நிறுவனத்தில் பணியாற்றிய 104 தொழிலாளர்கள் அரசு நிறுவனங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தனியார் தாங்களாகவே போக்குவரத்து உரிமங்களை ஒப்படைக்க முன் வந்து அதைப் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக் கொண்டால் பாதிக்கப்படும் தொழிலாளர்களை மேற்படி கழகங்கள் பணியில் அமர்த்திக் கொள்ள முன் வரும்.

ஆனால் தனியார் பொருளாதார அடிப்படையில் பேருந்துகளை நிறுத்தி அவற்றின் உரிமங்களை மாவட்டப் போக்குவரத்து ஆணையரிடம் ஒப்படைத்துவிட்டால், அப் பேருந்துகளில் பணியாற்றிய தொழிலாளர்களை நேரடியாக எடுத்துக் கொள்ள இயலாது.

(ஆ) இல்லை.

1978 மார்ச் 9]

(முற்பகல் 10–10)

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஸ்ரீராம் பாப்புலர் பஸ் கம்பெனியில் பணி புரிந்த 104 தொழிலாளர்கள், அந்த பஸ் கம்பெனி 11 வழித் தடங்களை சரண்டர் செய்த காரணத்தினால், இன்றைக்குத் தெருவில் நிற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பற்றி அமைச்சருக்குப் பலமுறை முறையீடுகள் செய்த பொழுது பரிசீலிக்கப்படும் என்ற விடையைச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது வேறு மாதிரி பதில் சொல்கிறார்கள். ஆகவே, இந்த வழித் தடங்களை அரசு எடுக்கும்போது, அந்தத் தனியார் பஸ்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களை எடுத்துக் கொள்வதில் அரசினுடைய கொள்கைதான் என்ன என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன சட்டம், சாப்டர் 4, மற்றும் 4-ஏ-வின் கீழ் தனியார் பேருந்துகளை நாட்டுடைமையாக்குகிற பொழுது, அதனால் வேலை இழக்கின்ற பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற விதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து வருகிறோம்—நடைமுறைப் படுத்தி வருகிறோம். ஆனால் ஸ்ரீராம் கம்பெனியைப் பொறுத்த வரையில், 10 உரிமங்களுக்கு மேல் வைத்திருக்கிற தனியார் பேருந்துகளை அவர்கள் ஒப்படைத்து விட வேண்டுமென்ற நடைமுறையை எதிர்த்து, உயர் நீதி மன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிற காரணத்தால், அந்த வழக்கு முற்றுப் பெறாத காரணத்தால், அந்தப் பணியாளர்களுக்கு வேலை கிடைக்க வழியில்லாமலிருக்கிறது. 35 உரிமங்களில், 11 உரிமங்களை அவர்கள் தாங்களாகவே நிறுத்தி விட்டார்கள். அந்த உரிமங்களின் பேருந்துகளை அவர்கள், அரசிடம் ஒப்படைக்கவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடுவன்குடி அருகிலுள்ள மதகினை சீர் செய்தல்.

*478 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், பட்டவர்த்தி பஞ்சாயத்தில், கடுவங்குடி பகுதி அரசினர் நெடுஞ்சாலையிலுள்ள மதகினை சீர் செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லை. இப்பாலத்தின் அணுகு சாலை ரூ. 10,500 செலவில் அண்மையில் மேம்பாடு செய்யப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியம், பட்டவர்த்தி பஞ்சாயத்திலுள்ள அரசினர் நெடுஞ்சாலை, நெடுஞ்சாலைத் துறைக்கு மாறறப்பட்டு, ஏறத்தாழ 5, 6 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரையில் எந்தவிதமான மேம்பாடும் செய்யப்படவில்லை. அந்தப் பாலத்திற்கு, மதகுக்கு மட்டுமல்லாமல், அந்தச் சாலை கூட சீர் செய்யப்பட வில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் எந்த மதகினை அல்லது பாலத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இன்னும் அந்தப் பாலததைச் சீர்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட பாலம், பட்டவர்த்தி-குறிச்சி சாலையில் கி.மீ. 4/6-ல் அமைந்துள்ளது. இது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில்தான் உள்ளது. இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லையென்று தலைமைப் பொறியாளர் கருத்து தெரிவித்துள்ளார். 15 செ.மீ. கனத்திற்குச் சரளையிட்டும், சாலையோரத்தை அகலப் படுத்தி, மண் வேலை செய்யவும், ரூ. 10,500 செலவில் மதிப்பிடப்பட்டு, அண்மையில் வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. இன்னும் வேறு குறைபாடுகள் இருக்குமானால் உறுப்பினர் அந்தக் குறிப்புகளைக் கொடுப்பார்களானால், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

சிதம்பரம் வட்டத்தில் தானே இயங்கும் நீர் ஊற்றுகள்.

*479 வினு—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில், தானே இயங்கும் நீர் ஊற்றுகள் (ஆர்டிஷன்) எத்தனை போடப்பட்டன ?

(ஆ) அவற்றுள் தற்போது எத்தனை இயங்கி வருகின்றன?

(இ) மேற்கொண்டும் போட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 133.

(ஆ) 91.

(இ) ஆம்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இன்று இந்த ஆர்ட்டீசன் பைப், தீவிர சாகுபடி திட்டத்தின் கீழே ஆரம்பிக்கப்பட்டது. சிதம்பரம் வட்டத்திலே 25 ஊர்களுக்கு மேலாக 50 நீரூற்றுகள் வேலை செய்து வந்தன. ஆனல் இன்று அத்தனையும்

1978 மார்ச்சு 9]

இயங்காமல், தண்ணீரில்லாமல் நிலம் காய்கிறது. ஆகவே, அவற்றை மீண்டும் புதுப்பிக்க அரசிடம் திட்டமுள்ளதா? அது எப்பொழுது செயல்படும் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம வட்டத்தில் தற்பொழுது 91 நீர் ஊற்றுகள் இயங்கி வருகின்றன. இயங்காதவைகளை உடனடியாகத் திருத்தி அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சுமார் ரூ. 4 இலட்சம் இதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவர் அவர்களே, வலசக்காடு, பேரூர், சோழதரம், புடையூர், முடிகொண்ட நல்லூர், மழவராய நல்லூர், பாளையங்கோட்டை போன்ற 20 ஊர்களில் ஏறத்தாழ 50 நீரூற்றுகள் இருக்கின்றன. ஆனால் அதிலே இயங்கிக் கொண்டிருப்பது 6 தான். எனவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனம் செலுத்தி தீவிர நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இயங்காத நீர் ஊற்றுக கிணறுகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நிலக்கடலை ஆய்வு நிலையம், பொள்ளாச்சி.

*480 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் 20 வருடங்களாக இயங்கி வரும் நிலக்கடலை ஆய்வு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற முடிவு செய்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விவர அறிக்கை* அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இது பொள்ளாச்சி தாலுகா பகுதி. அந்தப் பகுதியில் இந்த ஆய்வுக் கூடம் மிக அவசியமாக இருக்கிறது. அதைத் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

---

* 771ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கடலை ஆராய்ச்சி நிலையத்தை பொள்ளாச்சி பகுதியிலே வைக்க வேண்டும் என்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

கவன ஈர்ப்பு அறிவிப்பு எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

திரு. துரை முத்துசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர் நான் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 2-ம் நாள் அன்று 41-வது விதியின் கீழ். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். அறையிலே வந்து பேசுங்கள்.

திரு. துரை முத்துசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர், நான் கொடுத்த வது 41 அறிவிக்கையிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே எழுப்புவது முறையாக இருக்காது. அறையில்லே வந்து பேசுங்கள்.

நீங்கள் படிக்கும்பொழுதே நான் புரிந்து கொண்டேன். இதையே நீங்கள் கடைபிடித்தால் அவையில் மரபு இருக்காது. இந்த அவையிலே வேண்டாம். அறையிலே வந்து சொல்லுங்கள். 41-வது விதியின் கீழ் வரவில்லை என்று தானே கேட்கப் போகிறீர்கள்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற கருத்தைக் கொஞ்சம் கேளுங்கள். நான் கேட்டபோது மானியக் கோரிக்கையிலே பேசலாம் என்று சொன்னீர்கள். 7-ம் தேதி கால்நடை மானியம் முடிந்து விட்டது ஆனால் எனக்கு அந்தக் கடிதம் 8-ந் தேதி தான் வருகிறது. ஆனால் கல்வி மானியத்தன்று, இப்படிப்பட்ட 41-வது விதி எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது, இது சரிதானா என்று கேட்கிறேன்.

1978 மார்ச்சு 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய முடிவுதான் இறுதியானது. அது சரிதானு, தவறு என்று தாங்கள் கேட்க முடியாது. அனுமதித்திருக்கலாம் அல்லது மற்றதையும் பார்த்து நான் செய்திருக்கலாம்.

திரு. துரை முத்துசாமி : 41-வது விதியின் கீழ் நீங்கள் கொடுத்த தீர்பபு சரிதானு என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரிதான் நான் சொல்வது தான் தீர்ப்பு இதற்கு மேலே ஒன்றும் இல்லை.

திரு. துரை முத்துசாமி : 7-ந் தேதி மானியம் முடிந்து விட்டது. 8-ம் தேதி எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்வது, இலாகாவின் கவனக் குறைவால் இருக்கலாம். 7-ம் தேதியே மானியம் முடிந்து விட்டது.

திரு. நா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அத்தனைக்கும் பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதுப்பதால்தான இந்தப் பிரச்னை வருகிறது. நீங்கள் உட்காருங்கள் என்னுடைய பிசினசை முடித்து விடுகிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : பாயின்ட் ஆப் ஆர்டர்... 41-வது விதியின் கீழ்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

## (3) கவன ஈர்ப்பு.

### ஏற்றுமதி செய்யும் பருத்தித் துணியின் அளவினை நிர்ணயித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, 1978-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14-ம தேதியிடப் பெற்ற வர்த்தகக் கட்டுப்பாட்டு ஆணையின்படி பருத்தித் துணிகள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுமதி செய்யும் அளவினை நிர்ணயம் செய்துள்ளதன்

விளைவாக கைத்தறி ஏற்றுமதியாளரின் முன்னேற்ற வாய்ப்புகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதும், அதனால் ஆயிரக்கணக்கான நெசவாளர்கள், தையல்காரர்கள் வேலையிழந்துள்ள நிலை குறித்து, மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, 1976-ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து கைத்தறி உடைகள் ஏற்றுமதி 870 இலட்சம் உருப்படிகள் என்ற ஓர் உயர் நிலையை அடைந்தது. இது இந்தியாவில் மொத்த ஆயத்த உடைகள் ஏற்றுமதியில் 71 விழுக்காடாகும். இதனால் தமிழ்நாட்டில் அதிக அளவு வேலை வாய்ப்பு கிடைத்தது. ஆனால் 1977-ல் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒருதலையாக விதித்த அளவு கட்டுப்பாட்டினால், கைத்தறி ஆடைகள் ஏற்றுமதியில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டது. மீண்டும் 1978-ல் கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் பங்கு ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த பங்கு ஒதுக்கீட்டில் கைத்தறி, விசைத்தறி, ஆலைத்துணி ஆகியவற்றிற்குள் தயாரிக்கப்பட்ட ஆடைகளை பாகுபாடு செய்யவில்லை. இம்மாதிரியான ஆடைகளை தயாரிக்கும் பல்வேறு துறையினருக்கு இந்த ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவிடம் (Texprocil) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி ஒதுக்கீட்டை பங்கிட்டளிப்பதைப்பற்றி அதிக அளவில் கைத்தறி உற்பத்தி செய்யும் மாநிலங்களை கலந்தாலோசிக்கப்படவில்லை. கைத்தறியா, விசைத்தறியா அல்லது ஆலைத் துணியா என்ற வேறுபாட்டைக் கருதாமல் ரூபாய் 40-க்கும் அதற்கு அதிகமாகவும் விலையை கோருபவர்களுக்கு பங்கு (Texprocil) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. விரவிதமான ரகங்களும், நியாயமான விலையுமே கைத்தறியின் முக்கிய அம்சங்களாகும். ஒருதலைப்பட்சமாக ரூபாய் 40-ம் அதற்கு அதிகமாகவும் விலையுள்ள உடைகள் என அறிவிக்கப்பட்டது கைத்தறி துறைக்கு ஒரவஞ்சனை புரிந்ததாகும். ஏனெனில் கைத்தறி ஆடைகளின் சராசரி விலையே ரூபாய் 15-லிருந்து ரூபாய் 20-தான். கைத்தறி தொழிலை பாதுகாக்கவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஒதுக்கீட்டில் கைத்தறி துறைக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பங்கை பெறவும் இந்த அரசு மத்திய அரசுக்கு கீழ்க்கண்ட முறையீடுகளை அனுப்பியுள்ளது.

(அ) கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லா ரக ஆடைகளையும் ஒன்றாக சேர்த்தாலும், கைத்தறித் துறையில் கடந்த கால செயல்பாட்டின் அடிப்படையில் இத்துறைக்கு மொத்த பங்கீட்டில் 70 விழுக்காடு ஒதுக்கப்படவேண்டும்.

(ஆ) கைத்தறி மேம்பாட்டு ஆணையர், கைத்தறி தொழில் நிறுவனங்கள், கைத்தறி நெசவாளர்களை மிகுதியாக கொண்ட மாநிலங்கள் ஆகியோருடன் கலந்து ஆலோ

சித்து, கைத்தறித்துறையின் ஒதுக்கீட்டுக்குள் கைத்தறி ஆடைகளின் 'அடிப்படை விலை', 'வரம்பு விலை' ஆகியவற்றை நிர்ணயிக்கவேண்டும்.

(இ) உறுதியான ஏற்றுமதி ஒப்பந்தங்களை பெற்றுள்ள உண்மையான ஏற்றுமதியாளருக்கு பங்கீட்டில் முன்னுரிமை அளிக்கவேண்டும.

என்று தக்க நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, மத்திய அரசு இதை ஒரு தலைப்பட்ச முடிவாக எடுத்து இருக்கிற காரணத்தால் இந்த நிலைமை உருவாகியிருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் இருந்து தெரிகிறது. இந்த முடிவுகளையும், பரிந்துரைகளையும் மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்த பிறகு, தொடர் நடவடிக்கையாக என்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு இருக்கிறது? மத்திய அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு இந்த அரசு ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறதா? அப்படி என்றால், அதனுடைய விளைவுகள் என்ன, இதுவரையில் இல்லாவிட்டால், எப்போது நடத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி வளர்ச்சிக் குழுவின் ஆணையர் திரு. மணி நாராயணசாமி அவர்கள் சென்னைக்கு வந்து இருக்கிறார்கள். இன்று 11 மணிக்கு மத்திய அரசின் அந்த அலுவலரிடமும், மற்ற மாநில அரசு அதிகாரிகளிடமும் கலந்து ஒரு கூட்டத்தை இன்று நடத்த இருக்கிறோம். அந்தக் கூட்டத்திலே இந்தப் பிரச்சனைகள் பற்றி மீண்டும் விவாதித்து, மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, கைத்தறி ஏற்றுமதித் துறையில் இன்று ஏற்பட்டு இருக்கும் இந்த நெருக்கடி தவிர்க்கப்படும். அந்த முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## (4) அரசினர் தீர்மானம்.

## தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, 1959-ம் ஆண்டு, தமிழ் நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியின் கீழ், வேளாண்மைத் துறையில் 1975-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம்

நாளிட்ட அரசாணை எண். 305-ன்படி திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு—

1. திரு. ஜி. ராமசாமி
2. திரு. ந. சோமசுந்தரம்
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.

ஆகிய உறுப்பினர்களை மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களாக இப்பேரவை தேர்ந்தெடுத்தபடியாலும்;

மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (எப்) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் மேற்கண்ட பிரிவின் உட்பிரிவைச் சேர்ந்த 5 (பி) பகுதியின்படி 31— 1— 1966-ம் நாளன்று முடிவடைந்துவிட்டபடியாலும்;

1959 ஆம் ஆண்டு, தமிழ் நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்ட மன்றப் பேரவையின் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இப்பேரவை முற்படவேண்டும் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (5). அறிவிப்பு.

## தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 11— 3— 1978, சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 13— 3— 1978, திங்கள் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துககொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 14— 3— 1978, செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 18—3—1978, சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## (6) 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

### (அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,41,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இராணிப்பேட்டையில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டத் தவறியது குறித்து விவாதிக்க—''மானியக் கோரிக்கை எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,41,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் ; தலைவரவர்களே, தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் அளிக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க— ''மானியக் கோரிக்கை எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,41,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி.கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, லேபர் கமிஷனர், லேபர் ஆபீசர்கள், இதர அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க— '' மானியக் கோரிக்கை எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,41,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. ARUMUGAM : Sir, to discuss the need to include agricultural labour under the labour laws.

I move—

"that the allotment of Rs. 4, 41, 76,000 under Demand No. 29,— Labour including Factories, be reduced by Rs. 100/—."

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மன்னார்குடியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம்பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,41,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M.A. LATHEEF: Sir, to discuss about need to give labour benefits under the factories and industries law to beedi workers also—

I move—

"that the allotment of Rs.4,41,76,000 under Demand No.29, Labour including Factories, be reduced by Rs.100"

(ஆ) கோரிக்கை எண். 33—வீட்டு வசதி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகின்றேன்.

"மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 8,79,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. க. அரங்கசாமி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் குன்னூர் தொகுதி—வண்ணாரப்பேட்டையில் வீடுகள் கட்ட நிதி ஒதுக்குவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 8,79,28,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1978 மார்ச் 9]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கும் வீட்டு வசதித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 8,79,28,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை நகரம் கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டுள்ள வீட்டு வசதி வாரிய வீடுகளில் பலவற்றை வீடற்ற அரிசனத் தொழிலாளிக்குத் கொடுக்கப்படாமல் வீடுள்ளவர்களுக்குக் கொடுக்கபபட்டு வேறு வேறு ஆட்களுக்கு உள் வாடகைக்கு விடப்பட்டுள்ள ஊழலைப் பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 8,79,28,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, to discuss the necessity te provide all the palmyrah toppers housing loans free of interest.

I move—

" that the allotment of Rs. 8,79,28,000 under Demand No.33, Housing, be reduced dy Rs.100"

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இளையான்குடியில் தனியாக ஒரு கிராமாந்திர கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஒன்று அமைப்பது சம்பந்தமாக விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 8,79,28,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு தரும் உதவிகளைப்பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 8,79,28,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்,

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to ensure judicious and proportionate allocation of houses to the muslims and other minorities.

I move—

"that the allotment of Rs. 8,79,28,000 under Demand No.33, housing, be reduced by Rs.100"

[முற்பகல் 10-30]

(இ) கோரிக்கை எண். 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண். 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல், குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 21,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

திரு. கூ. ச. முருகேசன் : தலைவரவர்களே, திருச்சி பொன் மலை, ஆலத்தூர், அரியமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு காவிரி யாற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 49 பொதுச்சுகாதாரம், துப்புரவு குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 21,19,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மூன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, தூத்துக்குடிக்கும் அதன் சுற்றிலும் உள்ள தொழிற்சாலை பகுதிக்கும் குடி நீர் வழங்கும் திட்டம் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 49—பொதுச் சுகாதாரம் துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 21,19,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1978 மார்ச் 9]

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, பழனி வட்டத்திலுள்ள ஆயக்குடி, நெய்காரபட்டி முதலிய பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வசதியில்லாததால் அவ்வூர் மக்கள், குறிப்பாக தாய்க்குலம் பெரும் சிரமப்படுவது குறித்து விவாதிக்க :—

'' மானியக் கோரிக்கை எண் 49 பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 21,19,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க —

'' மானியக் கோரிக்கை எண். 49 பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 21,19,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூன்று மானியக் கோரிக்கைகள் பற்றிய விவர அறிக்கைகள்* மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக ஏற்றுப் பதிவேட்டில் பதிவு செய்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்க வேண்டுகின்றேன்.

*திரு. துரை முருகன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் இம்மன்றத்திலே வைக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விழைகிறேன்.

முதலில் தொழிலாளர் நலத்துறைப் பற்றி என்னுயை கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன். இங்கே தொழிலாளர் நலத் துறையைப் பற்றி ஒரு மானியக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் அமைச்சரவர்கள் வைத்திருக்கிறார்கள். இதிலே விவரத்தைப் பார்க்கின்றபோது 1976ஆம் ஆண்டுக்கும் 1977ஆம் ஆண்டுக்கும் ஒரு ஒப்புவமை காட்டி இருக்கிறார்கள். 1976-இல் நடந்த Number of strikes and lockouts, Number of workers involved, Number of mandays lost என்று முறையே ஒப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள். அதிலே 1976ஆம் ஆண்டு Number of strikes and lockouts 207, 1977 ஆம் ஆண்டு 298 Number of workers involved

*772—887ம் பக்கங்களில் இணைப்புகள் ii, iii, iv ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

in 1976 : 80,759 : in 1977 : 1,81,366 ; Number of Mandays lost in 1976 : 10,00,507; in 1977 26,16,963.

என்று இப்படி ஸ்டிரைக்குகளும், லாக் அவுட்டுகளும் அதிகமாக 1976ஆம் ஆண்டை விட 1977 ஆம் ஆண்டு அதிகரித்திருக்கிறது.

ஆனல் அமைச்சரவர்கள் தற்காப்பாக ஒரு வாதத்தை எடுத்து வைக்கலாம். 1976ஆம் ஆண்டு கூட எமர்ஜன்சி இருந்தது, ஆகையால் ஸ்டிரைக் செய்வதற்கு தொழிலாளிகள் பயந்தார்கள், காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்ற உணர்வு இருந்தது—என்று சொல்லலாம். ஆனல், 1977ஆம் ஆண்டு அதற்காக இவ்வளவு அதிகமாக அவைகளுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏன் உயர்ந்தது என்று கருதுகிறேன் என்று சொன்னல் இந்த சர்க்கார் தொழிலாளர் பிரச்சினையை அணுகுகிற முறை சரியல்ல என்பதற்கு இது ஓர் முதற்கண் எடுத்துக் காட்டாகும்.

எந்த தொழிலாளர்கள் பிரச்சினை ஆனலும் சரி, அது எலக்ட்ரிசிட்டி போர்டு பிரச்சினையாக இருந்தாலும் சரி, பல்லவன் போக்குவரத்துப் பிரச்சினையானலும் சரி, பாடியிலே தொழிலாளர்கள் பிரச்சினை ஆனலும் சரி, ஆவடித் தொழிலாளர் பிரச்சினையானலும் சரி, இந்த அரசு உடனடியாக பரிகாரத்தைக் காண வேண்டும் என்பதிலே அதிகசிரத்தை எடுத்துக்கொள்ளாமல் கொஞ்சம் மெத்தனமாக இருந்து அவற்றை டாட்ஜ் செய்து காலத்தை விரயம் ஆக்குகிறது.

ஆகையால் இந்த நேரத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த ஒரு தொழிற்சாலையிலும் எந்த ஒரு பிரச்சினை ஏற்பட்டாலும் நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் தகராறு ஏற்பட்டு அரசினுடைய தலையீடு வருமானல் அப்பொழுது மிக அதிகமான அளவில் காலதாமதம் ஆகின்றது.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஒரு தொழிற்சாலையில் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு கமிஷனர் முன்னல் தீர்வுக்குப்போகிருர்கள் என்று வைத்துக்கொள்வோம். முதலாளிகள் என்ன செய்வார்கள். 12-ம் தேதி என்று போட்டிருந்தால், 12 ஆம் தேதி வர முடியாது, அன்று டெல்லியில் டைரக்டர்ஸ் மீட்டிங் இருக்கிறது, போஸ்ட்போன் செய்யவேண்டும் என்று சொல்வார்கள், ஒத்தி வைக்கப்படுகிறது. 24-ம் தேதி என்று சொல்வார். 24-ம் தேதி போனல் அடுத்த மாதம் 6ஆம் தேதி. 6ஆம் தேதி போனல் அடுத்த மாதம் 30ஆம் தேதி. ஆக இப்படி போய்க்கொண்டே இருக்கும். கடைசியில் இரண்டு நாட்களில் கமிஷனர் வர மாட்டார்கள். ஆக, கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்தில்

முடிக்கவேண்டிய பிரச்னைக்கு ஆறு மாதங்கள் விரயமாக்கப் படுகிறது. ஆகவே தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் அப்படியே தொடர்ந்திருக்கிறார்கள் என்ற நிலைதான் இருக்கிறது.

ஆகவே நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒரு தொழிலாளர் பிரச்னை அரசாங்கப் பரிசீலனைக்கு வருமானால், தீர்வுக்கு வருமானால், இவ்வளவு நாட்களுக்குள்ளாக அந்தப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்று ஒரு வரையறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தொழிலாளர்கள் பிரச்னைகள் வேகமாகத் தீரும்.

இன்னொன்றையும் நான் இதோடு இணைத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு தொழிற்சங்கப் பிரச்னை கடைசியில் கமிஷனருக்கு முன்னால் இருந்து அரசுக்கு வருகிறது என்று வைத்துக்கொள்வோம். தொழிற்சங்க வாதிகள் கோர்ட்டுக்கு போகவேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் லேபர் செகரட்டரி அல்லது அரசாங்கம் முடியாது என்று சொல்லிவிட்டால் அதன் தலைவிதி முடிந்துபோய்விடுகிறது. அரசு நினைத்தால் தான் கோர்ட்டுக்குப் போகலாம் என்றிருக்கிறது. அதை மாற்றி தொழிற்சங்கம் நினைக்குமானால் அல்லது தொழிற்சங்கம் விரும்பினால் கோர்ட்டுக்குப் போகலாம் என்ற முறையில் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தொழிலாளர் பிரச்னையைப் பொறுத்தவரையில், குறிப்பாக இன்று ராணிப்பேட்டை தொகுதி ஒரு தொழில் நகரமாக மாறிக்கொண்டு வருகிறது. அதோடு ஒட்டிய சில பிரச்னைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஈ.எஸ்.ஐ. திட்டத்தில் சேர்ந்திருக்கிற ஒரு தொழிலாளி, சென்னையில் இருக்கிற தொழிலாளி, ஈ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் அந்த மருத்துவ மனைக்குச் சென்று தங்கி சிகிச்சை பெறுகிறான். அவரது மனைவிக்கு உடல் நலம் சரியில்லையென்றால் அவர்களும் அந்த மருத்துவமனைக்குச் சென்று தங்கி சிகிச்சை பெறுகிறார். ஆனால் அவர்கள் காசு கட்டத் தேவை இல்லை.

ஆனால் அதேமாதிரி ஒரு தொழிலாளி, ஈ.எஸ்.ஐ. திட்டத்தில் சேர்ந்திருக்கிற ஒரு தொழிலாளி, வேலூர், காட்பாடி, ராணிப்பேட்டை பகுதிகளில் உள்ள தொழிலாளிகள்— அல்லது ஈ.ஐ.டி. பாரியில் வேலை செய்கிற ஒரு தொழிலாளி அங்குள்ள ஸ்கடர் மெமோரியல் ஆஸ்பத்திரியில் சென்று சிகிச்சை பெறுகிறான். அங்கு தங்கி சிக்கிச்சை பெற்றால் காசு இல்லை. ஆனால் அவரது மனைவி அந்த ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்றால் காசு கொடுக்கவேண்டும். ஆக, சென்னையில் உள்ள ஈ.எஸ்.ஐ. திட்டத்

தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு கணவனும் மனைவியும் அந்த மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்றால் காசு இல்லை, ஆனால் ராணிப்பேட்டையில் உள்ள ஸ்கடர் மெமோரியல் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெறும் ஒரு ஈ.எஸ்.ஐ. திட்டத்தில் சேர்ந்திருக்கும் ஒரு தொழிலாளியின் மனைவிக்கு காசு கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. சென்னையில் இருப்பதைப் போன்ற சலுகைகள் ஒருசிலயிடங்களில்தான் இருக்கிறது. ஆகவே அந்தச் சலுகைகளை தமிழ்நாட்டிலுள்ள எல்லாயிடங்களிலும் உள்ளவர்களுக்கும் அளிக்கத்தக்க வகையில், இப்போது இருக்கக் கூடிய வித்தியாசத்தைப் போக்கும் விதத்தில் சட்டதிட்டங்களை மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நான் ஒரு வெட்டுத்தீர்மானம் கொடுத்துள்ளேன் ராணிப்பேட்டை ஒரு தொழில் நகரமாகிறது. அங்கு ஈ.ஐ.டி. பாரி இருக்கிறது, டானரீஸ் இருக்கின்றன, ஸிப்காட் வந்திருக்கிறது. ஆகவே அங்கு ஒரு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி கட்ட வேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை விட்டு விட்டு அங்கு ஒரு ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்ஸரி வைப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். டிஸ்பென்ஸரி வைத்தால் என்னவது ? போய் மருந்து வாங்கிக்கொள்ளலாம். ஆனால் தங்கி சிகிச்சை பெறமுடியாது. ஸிப்காட்-க்கு என்று ஒரு தனி டிஸ்பென்ஸரி வைத்திருக்கிறார்கள்.

The Government have also extended the Employee's State Insurance Scheme to five villages in Vanapadi, Narasingapuram' Manimbattu, Muhundarayapuram and Lalapet in Ranipet area by opening an Employees' State Insurance Dispensary for the benefit of the Employees in the locality என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த டிஸ்பென்ஸரி எங்கே வருகிறது என்று விளக்கமாகப் புரியவில்லை. நான் கேட்பது தொழிலாளர்கள் சென்று தங்கி சிகிச்சை பெற ஒரு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியை ராணிப்பேட்டையில் கட்டித் தரவேண்டும். அமைச்சர் அவர்கள் ஒரு பூனையைக் கொண்டுவந்து கொடுத்து இதுதான் யானை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே டிஸ்பென்ஸரி என்பதை மாற்றி ராணிப்பேட்டையில் ஒரு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி அமைக்கப்படவேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, முன்பெல்லாம் இன்டஸ்ட்ரியல் ஹௌஸிங் ஸ்கீம் என்று இருந்தது, அதன் மூலம் வீடுகள் கட்டிக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட 25 சதவீதம் மானியம் கிடைத்து வந்தது. அந்தத் திட்டத்தையே இப்போது எடுத்

திருக்கிறீர்கள். ஆகவே மீண்டும் அந்த இன்டஸ்ட்ரியல் ஹௌஸிங் ஸ்கீமை கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, காஷ்வல் லேபரேர்ஸ். இவர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், தொழிலாளர் வர்க்கத்தினரிடையே இது ஒரு கொத்தடிமை முறை. இந்த கொத்தடிமை முறை நிச்சயமாக இருக்கக்கூடாது. இராணிப்பேட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். 15, 20 ஆண்டுகளாக அங்கு காஷ்வல் லேபரேர்ஸ்ஸாக வேலை செய்கிறார்கள், பத்து பதினைந்தாண்டு களுக்குப் பிறகுதான் அவர்கள் பெர்மெனன்ட்டாகிறார்கள்.

(முற்பகல் 10-40)

உடனே ரிட்டயராகி விடுகிறார்கள். பிராவிடன்ட் பண்டும் கொடுக்கப்பட்டு விடுகிறது. ஆனால் நிரந்தரமாக்கப்படுவதில்லை. இப்படி பத்து வருடங்கள், இருபது வருடங்கள் காஷ்வல் லேபராக இருப்பது மட்டுமல்ல, பெர்மனன்டாக வேலை செய்கின்ற தொழிலாளியைவிட அதிகமாக வேலை செய்கிறான், ஆனால் கால் பங்கு தான் ஊதியம் பெறுகிறான், மூன்று ரூபாய் நானகு ரூபாய் என்று சம்பளம் வாங்குகிறான். ஆண்டுஆண்டு காலமாக வேலை செய்யும் இந்தத் தொழிலாளிக்கு எந்தவிதமான சலுகையும் கிடையாது. வேறு எந்தவிதமான வசதிகளும் கிடையாது. சுருக்கமாகச் சொன்னால் காஷ்வல் லேபர் என்பவர்கள் கொத்தடிமை போல்தான் நடத்தப்படுகிறார்கள். இதற்கு ஒரு பரிகாரம் செய்ய வேண்டும் அமைச்சர் அவர்கள். ஒவ்வொரு தொழிற்சாலையிலும், காஷ்வல் லேபராக இத்தனை ஆண்டுகளாக வேலைசெய்திருந்தால் அவர்கள் பெர்மனன்ட் செய்ய வேண்டும் என்று சட்டத்தை கொண்டுவரவேண்டும்.

இப்போது சிப்காட்டில் என்ன நடைபெறுகிறது, காஷ்வல் லேபராக எடுத்துக் கொண்டு ஒரு மாதம் முடிவதற்குள் அவர்களை துரத்திவிடுகிறார்கள், பின்னால் மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்கிறார்கள், இப்படி மாற்றி மாற்றி மியூசிக்கல் சேர் போல் அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி இத்தனை வருடங்களாக காஷ்வல் லேபராக இருக்கின்ற வர்கள் பெர்மனன்டாக ஆக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று தொழிற்சங்க விவகாரத்தில், தொழிற் சங்கத் தைச் சேர்ந்தவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார். இப்படி வேலைநீக்கம் செய்யப்படுகின்றவருக்கு, இதைப்பற்றி பேச்சுவார்த் தை நடத்தி பரிகாரம் கிடைப்பது வரையிலும் சம்பளம் கிடை யாது. தொழிற்சங்க தகராறுகளுக்காக நிர்வாகத்தால் வேலை

நீக்கம் செய்யப்பட்டால், இதன் மீது இறுதி முடிவு ஏற்படுவது வரையிலும் முழு சம்பளமும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் ? அப்படி இல்லாவிட்டால், நமக்காக பாடுபடுகின்ற நம்முடைய தலைவர் வேலை நீக்கம் செய்யப் படுகிறான். அவனுக்கு சம்பளம் தரப்படவில்லை என்று வரும் போது, அந்த தொழிலாளிகள் எல்லாம் ஸ்டிரைக் செய்ய ஆரம் பிக்கிறார்கள், உற்பத்தி பாதிக்கப்படுகிறது. லா ஆன்ட் ஆர்டர் பிரச்னை வருகிறது. இதனால் சர்க்காருக்கு எத்தனையோ பிரச் னைகள் வருகின்றன. இப்படிப்பட்ட பிரச்னைகளை எல்லாம் தீர்க்கப் பட வேண்டுமானால் நான் முன்னால் குறிப்பிட்டது போல், வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு அதில் பரிகாரம் கிடைப்பது வரையிலும் முழு சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பாக்டரி ஆக்ட் 1948 வருவதற்கு முன்னால் 20 நாட்களுக்கு ஒரு நாள் லீவ் என்று இருந்தது. ஆனால் இப்போது 240 நாட்கள் வேலை செய் தால் தான் ஸ்ட்டாச்சுட்டரி லீவ் என்பதே வருகிறது. 239½ நாட்கள் வேலை செய்தாலும், அந்த சலுகை வராமல் போய் விடுகிறது. இவற்றை மாற்றி முன்னால் இருந்த படியே 20 நாட்களுக்கு ஒரு நாள் லீவ் வழங்குகின்ற முறையை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தொழிற்சங்கத்தை ஆரம்பிக்கின்ற விஷயத்தில் 7 பேர்கள் சேர்ந் தால் ஒரு தொழிற் சங்கத்தை ஆரம்பித்துவிடலாம். முதலாவது 7 பேர்கள் சேர்ந்து ஒரு சங்கத்தை அமைத்துக் கொண்டு தங்க ளுக்கு 2 மாதம் போனஸ் வேண்டும் என்று கேட்பது, பின்னால் 7 பேர்கள் சேர்ந்து கொண்டு தங்களுக்கு 3 மாதம் போனஸ் வேண்டும் என்று கேட்பது. இப்படி எத்தனையோ தொழிற் சங்கங்களை ஆரம்பிக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. போட்டி, பொறாமை என்ற முறையில் தொழிற் சங்கங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே புதுத் தொழிற் சங்கங் கள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்த தொழிற்சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு இருந்தால் தான் ஒரு தொழிற் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் அங்கீகாரம் வழங்கும் என்ற அடிப்படையில் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று முக்கியமானதை சொல்ல விரும்புகிறேன். ஸ்டோர் கான்டீன் இவைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர் களுடைய பிரச்னை. இவர்கள் எல்லாம் ஷாப் ஆக்ட் (Shop Act) இல் வருகிறார்கள் என்ற அளவில் இவர்களுக்கு பாக்டரி ஆக்டின் கீழ் எந்தவிதமான சலுகையும் இல்லாமல் போய்விடுகிறது.

ஈ. ஐ. டி. பாரி கம்பெனியை எடுத்துக்கொண்டால், ஸ்டோர் இருக்கிறது. இந்தக் கம்பெனியின் முதலாளி தான் பணம் போட்டு ஸ்டோர் நடத்துகிறார், அதே முதலாளி தான் தொழிற்சாலையையும் நடத்துகிறார். ஆனால் உள்ளே வேலை செய்கின்ற தொழிலாளிக்கு எல்லா சலுகைகளும் உண்டு. ஆனால் ஸ்டோரில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு எந்தவித சலுகையும் கிடையாது. உள்ளே இருக்கின்றவர்களுக்கு பாக்டரி ஆக்ட் படி எல்லா வசதிகளும் கிடைக்கிறது, ஆனால் வெளியே வேலை செய்கின்ற ஸ்டோர், கான்டீன் போன்றவைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு இதில் பாதிக்குப் பாதி கூட கிடைப்பதில்லை. எந்தவிதமான சலுகையும் இவர்களுக்கு கிடைப்பதில்லை. அதே நேரத்தில் பாக்டரியில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு எல்லா சலுகைகளும் கிடைக்கின்றன. ஒரே முதலாளி தான் தொழிற்சாலையையும் நடத்துகிறார், அதே முதலாளி தான் பணம் போட்டு கான்டீன் அமைத்து 10 தொழிலாளிகளையும் வேலைக்கு வைத்துக்கொள்கிறார். ஆனால் இவர்களுக்கு எந்த விதமான சலுகையும் கிடையாது.

ராணிப்பேட்டையில் ஈ.ஐ.டி. பாரி கம்பெனியை எடுத்துக் கொண்டால், அங்குள்ள கான்டீனுக்கு அங்குள்ள ஜி.எம். தான் தலைவர், இதில் இருந்த செக்ரடரி ராஜிநாமா செய்துவிட்டார், போர்டு ஆப் டைரக்டர்ஸ் எல்லாம் ராஜிநாமா செய்துவிட்டார்கள். ஆனால் இப்போதும் கோப்ரட்டீவ் முறையில் நடப்பதாக சொல்லிக் கொள்கிறார்கள். இப்படி செக்ரட்டரியும் இல்லாமல் போர்டும் இல்லாமல் எப்படி கூட்டுறவு முறையில் நடந்து கொண்டிருக்க முடியும்? ஆகவே, இந்த நிலைமையை மாற்றி இதை இன்டஸ்ட்ரியல் கான்டீனாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுார் ஈ.ஐ.டி. பாரியை எடுத்துக்கொண்டால் 500 பேர்கள் இருக்கிறார்கள். இரண்டரை லட்சம் ரூபாய் செலவு செய்து கான்டீனை நடத்துகிறார்கள். பத்து பைசா இட்லி ஏழு பைசாவுக்கு கொடுக்கிறார்கள்.....

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாக்டரி ஆக்ட் 46-வது பிரிவின் கீழ் 250 பேர்களுக்கு மேல் தொழிலாளர்கள் இருந்தால் அங்கே கான்டீன் வைக்க வேண்டும் என்றிருக்கிறது. எனவே, கான்டீன் தொழிலாளர்களை பாக்டரி தொழிலாளர்களாக மாற்ற வேண்டுமென்றால், அதிலே தொழில் தகராறு ஏற்பட்டு விடும். இதற்கு அரசு ஆதரவு கொடுக்கும்.

திரு துரைமுருகன் : மெத்த நன்றி. அப்படி ஒரு பிரச்னை வந்திருக்கிறது. ராணிப்பேட்டை கான்டீன் தொழிலாளர்கள் நேராக இது சம்பந்தமாக கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள், ஸ்டோர் தொழிலாளர்கள் இன்ஸ்பெக்டர் ஆப் லேபரிடம்

கொண்டுபோய், அது இப்போது லேபர் கமிஷனருக்கு வந்திருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ராணிப்பேட்டைக்கு ஒரு தனி லேபர் ஆபீசர் தேவை. முன்பு அங்கே ஈ.ஐ.டி. பாரி கம்பெனி மட்டும்தான் இருந்தது. இப்போது சிப்காட், டானிங், இன்னும் பீடித் தொழிலாளர்கள் போன்றவை எல்லாம் சேர்ந்த நகரமாக அது வளர்ந்திருக்கிறது. இப்போது லேபர் ஆபீசர் ஒரு நாளைக்கு திருவண்ணாமலை, திருப்பத்தூர் என்று போகக்கூடிய ஒரு நிலைமையிருப்பதால், ராணிப்பேட்டைக்கு மட்டும் தனி லேபர் ஆபீசர் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல், ஈ.எஸ்.ஐ. லோகல் ஆஸ்பத்திரி போதிய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று எடுத்து விட்டார்கள். அதை மீண்டும் ராணிப்பேட்டையில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த பீடித் தொழிலாளர்கள் பிரச்னை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு வாராந்தர விடுமுறைக்கும் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றிக் தர வேண்டும். அதே போல் அவர்களுக்கு சுகாதாரமான முறையில் வீடு கட்டப்படும் திட்டத்தையும் இந்த அரசு அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இந்த பீடி சுற்றும் தொழிலாளர்கள் வீடுகளிலே பீடி சுற்றுவதை அமைச்சர் அவர்கள், இந்த அரசு மறு பரிசீலனை செய்யவேண்டும். ஏனென்று கேட்டால், பாக்டரியில் சுற்றும்போது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேலை செய்து விட்டு வீடு திரும்புவான். ஆனால், இப்படி வீட்டிற்கு கொண்டு போவதால், மற்ற வேலைகளை கவனித்துவிட்டு, சும்மா இருந்து விடுகிறார்கள், இது தவிர வீட்டின் சுகாதாரமும் கெட்டு போய் விடுகிறது. எனவே, இந்தத் திட்டத்தையும் நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தோல் பதனிடும் தொழிலாளர்கள் பிரச்னை. அவர்கள் நாள் பூராவும் நாற்றத்திலேயே உழைக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) ஆகவே, அவர்களுக்கு வேண்டிய வாசனை சோப்புகள், எண்ணை, துணிமணிகள் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடைசியாக இந்த குடிநீர் வாரியத்தைப் பற்றி மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 9] [திரு. துரைமுருகன்]

தற்போது, ராணிப்பேட்டை, ஆற்காடு ஆகிய நகரங்களுக்கு ஒரே திட்டத்தின்கீழ் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரே கிணற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரில் ராணிப்பேட்டைக்கு 45 சதவீதமும், ஆற்காட்டிற்கு 55 சத வீதமும் என்று தண்ணீர் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. ஆனால், இப்போது ஆற்காட்டிற்கு என்று ஒரு தனி ஸ்கீம் போடப்பட்டுள்ளது. அது ஆமை வேகத்தில் நகருகிறது. அதை சற்று வேகமாக முடுக்கிவிட வேண்டும். இப்படி இந்தத் தண்ணீரை இரண்டு இடங்களுக்குக் கொண்டு போவதால், ராணிப்பேட்டையில் ஒரு குடம் தண்ணீர் எடுப்பதற்காக அங்குள்ள தாய்மார்கள் வடிக்கின்ற கண்ணீரே அந்தக் குடத்தை நிரப்பிவிடும் போலிருக்கிறது. ஆகவே, இந்த ஆற்காடு திட்டத்தை வேகமாகச் செய்து, ராணிப்பேட்டைக்கு இந்தத் திட்டத்தை தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது குடிநீர் வாரியத்தில் 1—4—1978-லிருந்து ஜி.எல்.ஆர். (G.L.R ) ஓ.எச்.டி., போன்றவைகளை மெயின்டேயின் பண்ணும் ஸ்கீமை எடுத்துக் கொள்ள இருப்பதாக அறிகிறேன். இது மிகவும் ஆபத்தானது. இப்போது இந்த ஜீ.எல்.ஆர்., ஓ.எச்.டீ. போன்றவைகளெல்லாம் அங்குள்ள பஞ்சாயத்துக்களே மெயின்டெயின் செய்துகொண்டு வருகிறது. அதை இவர்கள் எடுத்துக்கொண்டால், அங்கே ஒரு சின்ன ரிப்பேர் என்று சொன்னால், அதை மாற்றுவதற்கு அவர்கள் ஏ.இ., ஜே.இ. இன்னும் அதற்கு மேலுள்ள அதிகாரிகளைப் பார்ப்பதற்கு சென்னைக்கு வந்து போவதற்கு 10 நாட்கள் ஆகிவிடும். அதற்குள் இன்னொரு சாமான் கெட்டுவிடும். ஆகவே அங்கேயே மெயின்டெயின் செய்ய தயவுசெய்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த போர் வெல் போடுவது என்பதே ஒரு பெரிய போராக இருக்கிறது, இதை குடிநீர் வாரியத்திலே போடுவதாக இருந்தால் 80,000 ரூபாய் ஆகிறது. பஞ்சாயத்தாக இருந்தால் 30,000 ரூபாய் ஆகிறது. ஆகவே, இந்த ஸ்கீமை பஞ்சாயத்திற்கே தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த குடிநீர் வழங்கும் திட்டத்தை இரண்டாகப் பிரிப்பது நல்லது. இதிலே ஒன்று உப்புத் தண்ணீர், பாறைப் பகுதிகளில் தண்ணீர் எடுப்பது. மற்றொன்று நல்ல தண்ணீர் பகுதியிலே இருந்து தண்ணீர் வழங்குவது. இதிலே முதலாவது அதாவது உப்புத் தண்ணீர், பாறைத் பகுதிகளில் தண்ணீர் எடுக்கும் திட்டத்தை வேண்டுமானால் இந்த குடிநீர் வாரியமே எடுத்துக் கொள்ளட்டும் நல்லது. இதை முடித்துவிட்டு, பிறகு நல்ல தண்ணீர் திட்டத்தை துவக்குவது என்றால், ''ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்

குமா?'' என்று சொல்வதுபோல், காலதாமதமாகும். எனவே, இந்தத் திட்டத்தைப் பஞ்சாயத்துக்களே, பஞ்சாயத்து யூனியன்களே நிறைவேற்றிக் கொள்வதற்கு விட்டு விடுங்கள். உப்புத் தண்ணீர் பாறை போன்ற பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தை, இங்கே மேலும் ஆழப்படுத்தக்கூடிய விரிவான திட்டத்தை குடிநீர் வாரியம் எடுத்துக்கொள்ளட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (மீண்டும் மணியடித்து) தயவு செய்து இதோடு முடித்துக் கொள்ளுங்கள்.

(முற்பகல் 10-50)

திரு. பொ. சிகாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீது ஒருசில நல்ல கருத்துக்களைப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழாண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் அதையொட்டிய 17 மாத கால குடியரசுத் தலைவர் ஆட்சியிலும் ஏற்பட்ட தொழிலாளரின் குறைகளும், கதவடைப்புகளும் வேலை நிறுத்தங்களும் இந்த 9 மாத புரட்சித் தலைவர் ஆட்சியில் நிவர்த்தி செய்யப்பட்டன என்பது தெளிவான ஒன்றாகும். ஏனெனில் இன்று மூடிக்கிடக்கும் தொழிற்சாலை ஒன்று கூட இல்லை என்பதில் இந்த அரசு இந்த நேரத்தில் பெருமைப்படுகிறது. இந்தத் தொழில் அமைதியானது புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏற்பட்டதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரையும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 1975-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் தேதி அன்று எனது தொகுதியிலுள்ள மெட்ராஸ் ரப்பர் பாக்டரி தொழிற்சாலையை சார்ந்த தொழிலாளர்கள் கோரிக்கை வைத்தார்கள். அப்போது இருந்த தி.மு.க. அரசிலும், அதன் பிறகு இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சியிலும் அவர்கள் கோரிக்கை தீர்க்கப்படவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் பதவியேற்ற ஒரு மாத காலத்திற்குள்ளாகவே நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் முயற்சியால் பிரச்சினை தீர்க்கப்பட்டு மெட்ராஸ் ரப்பர் பாக்டரி தொழிலாளர்கள் அரியர்ஸ் பணமாக ரூ. 1,400 ஒவ்வொருவரும் பெற்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர் நலம் காணும் புரட்சித் தலைவர் ஆட்சி என்று கூறிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

1978 மார்ச் 9] [திரு. பொ. சிகாமணி]

மேலும், இதே ரப்பர் பாக்டரி தொழிலாளர்கள் 1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் தேதி அன்று நிர்வாகத்தின்மீது கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் செய்தார்கள் அந்த நேரத்தில் நம்முடைய அரசு மூன்றில் ஒரு பங்கு, தொழிலாளர்களுக்குச் சலுகை வாங்கித் தந்து ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கித் தந்திருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய பகுதியைச் சேர்ந்த ராயல் என் பீல்டு தொழிற்சாலையில் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10 ஆம் தேதி அன்று தொழிலாளர்கள் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். இந்த அரசின் பெருமுயற்சியால் ஏறத்தாழ 10,000 தொழிலாளர் குடும்பங்களை வாழ வைத்திருக்கிறது. அதற்காக எனது தொகுதி வாழ் மக்கள் சார்பாக நன்றியையும் மகிழ்ச்சியையும் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரிடம் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். ஊதிய உயர்வு சம்பந்தமாக நிர்வாகத்திற்கும் லேபர் வெல்பேர் ஆபீசருக்கும் இடையே ஒரு அண்டர்ஸ்டாண்டிங் இருப்பதாகப் புகார் இருந்து வருகிறது. இதைத்தவிர்க்க லேபர் ஆபீசரை அரசாங்க ஊழியராக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். இதனால் இந்த அரசாங்கத்திற்கு எந்த வித செலவினமும் இல்லை. நிர்வாகம் கொடுக்கும் பணத்தை அரசாங்கம் பெற்று அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்குமாறு செய்ய வேண்டும். இதை உடனே நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

வீட்டு வசதித் திட்டம் — தொழிலாளர்களுக்கான மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம் தீட்டியிருப்பதைப் பாராட்டுகிறேன். தொழிலாளர் நிரம்பி இருக்கும் எனது தொகுதியில் விரைவில் அதனை நடத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். இதேபோன்று பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டங்கள், நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம் அமைத்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

மேலும் உலக வங்கி நிதி உதவியுடன் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் பகுதிகளில் 13,467 மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன. இதற்காக 932.88 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

சிறப்பு அம்சமாக காவலர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்திற்காக 1978-79ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பெருமளவுக்கு நிதி ஒதுக்கம் செய்திருப்பதைப் பாராட்டி பெருமைப்படு

கிறேன். 1977-78-ல் இந்தத் திட்டச் செலவினம் 38 லட்சமாக இருந்தது. 1978-79-ல் நிதி ஒதுக்கீடு 90 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அதாவது 52 லட்சம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கியிருப்பது அமைதியைக் காக்கும் காவல் துறையினருக்காக புரட்சித் தலைவர் ஆட்சியின் சீரிய திட்டம் ஒரு மைல் கல்லாக அமைகிறது.

திருவொற்றியூர் தொகுதியில் மீனவ குடும்பங்கள் வீட்டு வசதி இல்லாமல் அல்லல்படுகிறார்கள். அந்தப் பகுதியில் அடிக்கடி கடலரிப்பு, புயல் இப்படிப்பட்ட தொல்லைகளால் அந்த மீனவர்கள் அதிக தொல்லைக்கு ஆளாகிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் முதலமைச்சரைக் கலந்து மீனவர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தை உடனடியாக இங்கு செயல்படுத்த வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா நகரிலே வீட்டு மனைகள் காலியாக உள்ளதாக அறிகிறேன். சென்னை நகரிலே வசிப்பவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கும் நடைமுறை இருக்கிறது. ஆனால் சென்னையிலே வீடுகள் கிடைக்காமல் பலர் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே, அரசு இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்திலே பினாமி பிளாட்டுகள் பெரும் அளவிலே கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதையும் அரசாங்கம் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி மானியத்தின்மீது விவாதம் நடைபெற்ற போது நம்முடைய அமைச்சர் அவர்கள் பாம்கோலா கொடுத்தார்கள், அதே போன்று வேளாண்மைத் துறை மானிய விவாதம் நடைபெற்ற போது நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பாலும் கொடுத்தார்கள். அதைப்போலவே நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் வெளி ஊர்களிலிருந்து வருகின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று . இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுடைய மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைக் கூறிக்கொண்டு சிலக்கருத்துக்களைச்

1978 மார்ச் 9] [திரு. சி. பழனிமுத்து]

சொல்ல விரும்புகிறேன். என்னுடைய சேலம் மாவட்டத்திலே சேலம் சௌத் இண்டியா கிளாஸ் அன்ட் எனுமல் தொழிற்சாலை கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக மூடப்பட்டுள்ளது. அதைத் திறப்பதற்கு இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் வாழ்க்கையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முதலிலே கலெக்டர் அலுவலகம் முன்பு தீக்குளிப்பதாக இருந்தது, பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு அதைத் திருப்திகரமாக முடித்தும் இன்னும் தொழிற்சாலை திறக்கப்படவில்லை. மீண்டும் அந்தத் தொழிலாளர்கள் சட்டமன்றத்தின் முன்பு வந்து மறியல் செய்வதாக உள்ளார்கள். ஆகவே, அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு இந்த அரசு தகுந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே உள்ள தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து தொழிலாளர் நல அமைச்சருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அந்தத் தொழிலாளர்கள், ஏழை எளியவர்கள், கடந்த 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் நாள் முதல் அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சம்பளமும் கிடைக்கவில்லை. ஆகவே, வாழ்வதற்கு வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள், உடனடியாக அரசாங்கம் அதிலே நடவடிக்கை எடுத்து தொழிற்சாலையை திறப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து வீட்டு வசதித் திட்டத்திலே கிராமங்களுக்கு குடிசை மாற்று வாரியம் என்ற திட்டத்தின் மூலமாக கடந்த ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டு வந்தது. இப்போது அரசு வீட்டு வசதி திட்டம் என்ற முறையிலே செயல்படத் தொடங்கியுள்ளது. கடந்த காலங்களிலே கிராம மக்களுக்கு எந்தவிதமான திட்டமும் தீட்டப்படவில்லை. அங்கே உள்ள மக்கள் எல்லாம் நலிந்தவர்களாக இருக்கிறார்கள். வீட்டு வசதிகள் இல்லாதவர்களாக இருக்கிறார்கள், விவசாயக் கூலியாக இருக்கிறார்கள், அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது அவர்களுக்கு வீடு கட்ட வசதிசெய்வதற்காக கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்திலே கூட்டுறவு சங்கத்தின் மூலமாக 5 ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்க விண்ணப்பம் எல்லாம் கொடுத்துள்ளார்கள், அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து ஏழை எளியவர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு வழிவகை செய்யவேண்டும்...

திரு. சி. ஆறுமுகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், அரசு அதிகாரிகளை சிலர் பொதுமக்கள் என்ற பெயரிலே தாக்குவதாகச் செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. உட்காருங்கள்.

திரு. சி. பழனிமுத்து : கிராம மக்கள் வீடுகட்டிக் கொள்வதற்கு வசதியாக நில ஆர்ஜிதம்செய்து ஒரே இடத்தில் வீடுகட்டிக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும். 900 சதுர அடி இருந்தால்தான் வீடு கட்டுவதற்குக் கடன் கொடுக்கிறார்கள்.

(முற்பகல் 11—00)

அதுபோல் இல்லாமல் கிராமங்களில் நில ஆர்ஜிதம் செய்து வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும்.

அடுத்து, சேலம் மாவட்டத்திலே கடந்த ஆண்டில் குடி தண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் தண்ணீர் இல்லாமல் எவ்வளவு கஷ்டப்பட்டார்களோ அதைப்போல சேலம் மாவட்டத்தில் அதிகக் கஷ்டப் பட்டார்கள். இப்பொழுது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தண்ணீர் இல்லாத ஊர்களுக்கு முதல் சலுகை என்றும், உப்புத் தண்ணீராக இருந்தால் இரண்டாவது சலுகை என்றும் சொல்கிறார்கள். உப்புத் தண்ணீராக இருந்தாலும் அதை நல்ல தண்ணீர் என்று சொல்லி பல கிராமங்களில் தண்ணீர் கொடுக்க வசதியில்லாமல் செய்யப்படுகிறது. இதையும் கவனிக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டும். கிராமத் தொழிலாளர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும், தச்சுத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக வீடு கட்டிக்கொடுக்க உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக வீடு கட்டிக்கொடுக்க வேண்டும்.

இப்பொழுது பஞ்சாயத்துக்களிலே கேட்கின்ற ஜி.எல்.ஆர்., ஓ.எச்.டி., அதாவது தரை மட்ட நீர், ஓவர் ஹெட் டாங்க் ஆகியவைகளைச் செயல்படுத்த வகை செய்ய வேண்டும்.

விவசாயக் கூலிகளுக்கு கூலி மிகவும் குறைவாக இருப்பதால் அவர்களுக்கு நல்ல மருத்துவ வசதி செய்து தர வேண்டும்.

அதுமட்டுமல்ல, பேரூராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் இதுபோன்ற நிறைய வீடுகளைக் கட்டிக்கொடுத்தால் ஊராட்சிகளுக்கு நிறைய வருமானம் கிடைக்கும். அதனால் பேரூராட்சிகளின் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும், அதனால்

முன்னேற்றம் செய்யப்படும். ஆகவே, விவசாயக் கூலிகளுக்குக் கிராமங்களில் அதிக வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த அரசு நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பை அளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். துணைத் தலைவரவர்களே, என்னுடைய பூங்கா நகர் தொகுதியிலுள்ள ஜி.எச். என்று சொல்லப்படும் மருத்துவமனையில் ஒரு பதட்டமான சூழ்நிலை இருப்பதாகவும், வெளியாட்கள்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் அசெம்பிளியில் ஏதாவது விதிமுறைக்கு மாறாக நடந்தால் அதைப்பற்றி இருக்க வேண்டும். இதுபற்றிச் சொல்வது என்றால் அட்ஜர்ன்மெண்ட்மோஷன் அல்லது கால் அட்டென்ஷன் எழுதிக் கொடுங்கள்.

திரு. இரா. காளியப்பன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கொண்டு வந்திருப்பதை மனப்பூர்வமாக ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்காக இந்த மன்றத்திற்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்காக, நமது மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தனியாக டெப்டி கமிஷனரை நியமித்து அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றனவோ அவைகளை எல்லாம் சேலம் ஏர்க்காட்டிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும் கொடுப்பதற்கு இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்குள்ள ஆதிவாசிகளும், பழங்குடியினரும் தோட்ட முதலாளிகளால் மிகவும் நசுக்கப்படுகிறார்கள். பலமுறை அவர்கள் எனக்கும், இந்தச் சட்டமன்றத்திற்கும் அவர்களுடைய குறைகளை அனுப்பியிருக்கிறார்கள். அவைகளை உடனடியாக எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், காட்டிலாக்காவில் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்ற மலைவாசி மக்கள் சந்தன மரங்களையும், அதில் அடர்ந்துள்ள முட்செடிகளையும் வெட்டி பாடுபடுகின்றனர். அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியத்தைக் கொடுக்க காட்டிலாக்கா அதிகாரிகள் ஏற்கனவே மறுத்திருக்கிறார்கள். அவை

களை நல்ல முறையில் கவனித்து அவர்கள் செய்கின்ற வேலைக்குத் தக்கவாறு ஊதியம் கொடுக்க இந்த அரசு மிகவும் நல்ல முறையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், சுகாதாரத்தைப் பற்றிப் பேசுகின்றபொழுது ஆதிவாசிகள் வசிக்கின்ற பிரதேசம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கு அவர்களுக்கு நல்ல சுகாதார வசதிகளோ மற்ற வசதிகளோ கிடைக்கவில்லை. ஒவ்வொரு கிராமத்திற்கும் சவரத் தொழிலாளி அல்லது சலவைத் தொழிலாளி குடியேறுவது இல்லை. ஆகவே, அரசாங்கம் அந்தத் தொழிலாளர்களுக்குத் தக்க மானியம் கொடுத்து அரசாங்கமே அவர்களுக்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களைப் போல ஊதியம் கொடுத்து, 300, 400 ஜனத் தொகை கொண்ட கிராமங்களுக்கு ஒரு சலவைத் தொழிலாளியையும், ஒரு சவரத் தொழிலாளியையும் அமர்த்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், 5,000 பேர்கள், 4,000 பேர்கள் வசிக்கின்ற, ஆதிவாசிகள், பழங்குடிகள் வசிக்கின்ற இடத்தில் ஒரு ஹாஸ்பிடல் கூடக் கிடையாது. ஆகவே, அவர்கள் உடல் நலம் இல்லாமல் இருக்கும்பொழுது கட்டிலில் தூக்கிக் கொண்டு, பிணத்தைத் தூக்கிக் கொண்டு வருவதைப் போல நகர்ப்புறங்களுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையைப் போக்க மலைப்புறங்களின் சுகாதார வசதிக்காக மருத்துவ வசதி செய்து கொண்டு அவர்கள் பயன் பெறும் வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காட்டிலாக்காவில் ஏலம் விடப்படும் இடங்களைக் காண்ட்ராக்டர்கள் எடுத்துக் கொண்டு பல தொழிலாளர்களை வைத்துக் கொண்டு, பக்கத்திலுள்ள பாரஸ்டுகளுக்கு அழைத்து வருகிறார்கள். ஆகவே, தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் என்று நிறுவிக் கொண்டால் ஏலம் விடும்பொழுது அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், சேர்வராயன் மலைப் பகுதியில் வசிக்கக் கூடிய தொழிலாளர்கள் நிலப் பிரபுக்களுக்காக மூட்டைகளைச் சுமந்து கூலிகளாக வாழ்கிறார்கள். ஆனால், நிர்ணயிக்கப்பட்ட படி அவர்களுக்குக் கூலி கொடுக்கவில்லை. ஆகவே, நிர்ணயிக்கப்பட்டபடி கூலி கொடுக்கிறார்களா, இல்லையா என்பதைத்தனி அதிகாரி நியமித்து கவனிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஏர்க்காட்டிலே, வாழப்பாடி, பாலூர் என்ற நகராட்சி மன்றம் இருக்கிறது. அங்கு குடிதண்ணீருக்காகப் பல இலட்சம் ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டு

பணம் கொடுக்கப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்படாததால், குடி நீர் பிரச்னை தீரவில்லை. ஆகவே, அந்தத் திட்டத்தை உட னடியாக நிறைவேற்றி, அங்கு குடிநீர் பிரச்னையைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், மலைவாழ் தொழிலாளர்களுக்கு மருத்துவ வச தியே கிடையாது, நல்ல வீடு கிடையாது. அவர்களுக்கு மருத்துவ வசதியையும் நல்ல வீட்டு வசதியையும், புரட்சித் தலைவர் ஆட்சி மிகவும் நல்ல முறையில், கவனித்து அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தாற்போல், அருவத்து மலையில், 3 கிராமங்கள் தீ பிடித்து, 10 ஆண்டுகளாகியும் இன்னும் அக்கிராம மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஏர்க்காட்டில், தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள், முதலாளிகள் ஓங்கியிருக்கிறார்கள், தொழிலாளர் களுக்கு நியாயமான கூலி கிடைக்கவில்லை. அதாவது, ஒரு தொழிலாளிக்கு ரூ. 5 கூலி என்றால், மாதக் கடைசியில் ரூ. 5-க்குக் கையெழுத்து வாங்கிக் கொண்டு, அந்தப் பாமர மகனிடம் ரூ. 2 ரூ. 2½ தான் கொடுக்கிறார்கள். தொழிலாளர்கள் யாராவது, ஏதாவது, கேட்க வந்தால், அவர்களுக்கு நல்ல ஆதரவு கிடைக்கவில்லை. இனிமேலாவது, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் தொழிலாளர் வர்க்கத்திற்கு நல்ல ஆதரவு கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. சி. கோவிந்தராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3 மானியக் கோரிக்கைளின்மீது பேச வேண்டியிருப் பதால் கொஞ்சம் அவகாசம் வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு வந்தவுடனே ஒரு முக்கியமான கொள்கையை அறிவித்தது. எந்தத் தொழில் தகராறிலும் போலீஸ் தலை யிடாது என்ற கொள்கையை அறிவித்தது, அதை அத்தனை பேரும் வரவேற்றோம். ஆனால், இப்பொழுது நடைமுறையில் நடப்பது என்னவென்று சொன்னால், பல்வேறு பிரச்சினைகளில், அது லாக் அவுட்டாக இருந்தாலும் சரி, குளோஷராக இருந் தாலும் சரி, முதலாளிகள் போலிஸைப் பயன்படுத்துகிறார்கள். வேர் எர்த் மூவிங் கம்பெனியை லாக் அவுட் செய்து குளோஷர்

பண்ணி, புதிய தொழிலாகக் கொண்டு வரும்போது, போலிஸ் உதவியுடன் கொண்டு வருகிறார்கள். தொழிலாளர்கள் மறியல் செய்யும்போது, கடுமையான வழக்குகளைப் போட்டு ஜாமீனில் செல்வதையும் போலீஸ் ஆட்சேபிப்பதால் ஹைகோர்ட் வரை சென்று; ஜாமீனில் வந்த நிலைமையில் பல தொழிலாளர்கள் வீட்டுக்கே செல்லமுடியாத நிபந்தனை நிலைமையிருக்கிறது. அந்த வேர் எர்த் மூவிங் கம்பெனியில் 28·2-ல் கன்சிலியேஷன் நடந்தது, 22 தொழிலாளர்களை வேலையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தொழிலாளர் நல அதிகாரி சொல்லியும் நிர்வாகம் எடுத்துக் கொள்ள மறுத்திருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் அந்த இடத்திற்கோ அவர்கள் வீட்டுக்கோ போகமுடியாத நிலைமை இருக்கிறது.

அதேமாதிரி, எல்.எம். டபிள்யூ. அங்கு வேலைநிறுத்தம் முடிந்தது. ஆனால், 900 பேர்களுக்கு மேலிருக்கிற வழக்குகள் இன்னும் வாபஸ் செய்யப்படவில்லை.

அதே மாதிரி, ஆரோ புட் தொழிற்சாலையில் வழக்குகளை வாபஸ் பெறவில்லை.

டி.சி.சி. இராணிப்பேட்டை தொழிற்சாலையில் வழக்குகளை வாபஸ் பெறவில்லை.

அதே மாதிரி, அருப்புக்கோட்டை, சங்கரன்கோவில் கை நெசவுத் தொழிலாளர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை.

டி.வி.எஸ். தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளும் வாபஸ் பெறப்படவில்லை.

அதற்கு அடிப்படையான காரணம், தொழில் தகராறுகளில், போலிஸ் முதலாளிகளுக்குச் சாதமாகச் செல்வதுதான். இதனால், வாய்தாக்களுக்குச் செல்லும்போது, அவர்களுக்குப் பணம் செலவாகிறது, லீவுகள் போகின்றன. தப்பித் தவறி, கோர்ட்டுகளில், தண்டனை இல்லையென்று தீர்ப்பு வந்தாலும் கூட, முதலாளிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். இதெல்லாம் போலீஸ் தலையீட்டால்தான். சமரசம் ஏற்பட்டும் தொழிலாளர்கள் இவ்வாறு அலைக்கழிக்கப்பட வேண்டுமா?

எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி, தொழில் தகராறு தீர்ந்துவிட்டாலும் வழக்கை வாபஸ் பெறக்கூடாது என்று அரசு உத்தரவு அனுப்பியிருப்பதாக அறிகிறேன். அப்படி உத்தர விட்டிருந்தால் அது தவறு. அவ்வாறு உத்தரவிட்டிருந்தால் அது போலிசுக்கு மேன்மேலும் அதிகாரம் கொடுப்பதாக, அவர்களைத் தலையிட வைப்பதாக அமையும். போலீஸ் தலையீடு இருக்காது என்று சொல்லும்போது, அரசுத் துறையான மின்சார வாரியத்தில் ஒரு சர்க்குலர் அனுப்பப்பட்டிருக்கிறது.

1978 மார்ச் 9]

[முற்பகல் 11-10]

SUB.—Minutes of the 28th Staff Meeting held on 5th November 1977.

REF.—C.E.G's Secret Memo. No. 1887/L2/1/77-2, dated 24th October 1977.

During the 28th staff meeting held on 5th November 1977 it has been ordered to take action to identify militant section of the employees in each system/circle.

In this connection reference is invited to item 4 of the minutes of discuss on communicated with this office memo. cited above, where in instructions have already been issued during the agitation demanding Festival Advance for Deepavali, that the Superintending Engineers should keep a close watch on suspect officers and staff and intimate Police in advance.

Even though the agitation referred to above is now over, it may however be ensured that a close watch is continued to be kept on the miltant section and troublesome employees so that they are identified and a confidential list in respect of such employees is kept for taking appropriate action as deemed necessary".

அங்கேயுள்ள அதிகாரிகள் தொழிலாளர்களையும் இன்ஜினியர்களையும் கண்காணித்து போலிசுக்கு இன்பர்மேஷன் சொல்லக்கூடிய அளவுக்கு இப்படிப்பட்ட ஒரு சர்க்குலர் சொல்கிறது. இது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய இலாகாவாக இல்லாவிட்டாலும் தொழிலாளர் என்று வரும் போது அரசினுடைய ஒட்டு மொத்தமான கொள்கையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை பிரிட்டிஷ் ஆட்சியின் பொழுது கூட இருந்ததா என்பது தெரியவில்லை. இது அரசுக்கும் தெரியுமா என்றும் தெரியவில்லை. தொழிலாளர் பிரச்சினைகளில் போலீஸ் தலையீடு இல்லை என்று சொல்லிவிட்டு, போலிசாருக்கு நீங்கள் தகவல் கொடுக்கிற அளவுக்குப் பொதுத்துறை நிறுவனம் சுற்றறிக்கை அனுப்புவது எப்படி நியாயம் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல தொழில் தகராறுகள் விரைவில் தீர்க்கப்படு படுவதில்லை. காலம் கடத்தப்படுகிறது. முதலாளிகள் சம்பந்தப்பட்ட வரை இந்தக் காலம் கடத்துவதைப் பயன்படுத்திக் கொண்டு தொழிலாளர்களை சோர்வுறச் செய்யக்கூடிய நிலையிருக்கிறது.

இன்னொரு விஷயம். மைனாரிட்டி சங்கங்களோடு அரசு அதிகாரிகள், 12 (3) செட்டில்மென்ட் செய்யப்படுகிற நிலைமை இருக்கிறது. அறிக்கையிலேயே அமைச்சர் அவர்கள் குறிப்

பிட்டிருக்கிறார்கள். லட்சுமி மிஷின் டூல்ஸ் ஓர்க்ஷாப்பில் 10 சங்கங்களில் 7 சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந் தார்கள். மீதியுள்ள வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாத 3 சங்கங்களோடு செக்ஷன் 12 (3)-ல் ஒப்பந்தம் முடிக்கப்பட்டது. அதனுடைய விளைவு அந்த 7 சங்கங்களைப் கட்டுப்படுத்தாத காரணத்தால், மறுபடியும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அதே போல வடலூரில் உள்ள சேஷசாயி பேப்பர் மில்லிலும், விக்கிரம சிங்கபுரம் இன்ஜினிரிங் தொழிற்சாலை ஆகியவைகளிலே இப்படிப் பட்ட நிலைமை ஏற்படுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் அந்த முதலாளிகள் தாங்கள் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும் பும் சங்கங்கள் பெருவாரியான தொழிலாளர்களைப் பிரதிநித்துவப் படுத்தும் சங்கங்கள் என்று கருதினால் அவர்கள் செக்ஷன் 18 (1)-ல் செட்டில்மென்ட் செய்து கொள்ளட்டுமே. அதற்காக அரசு லேபர் இலாகா தலையிட்டு எல்லா தொழிலாளர்களையும் இதிலே கட்டுப்படுத்தக் கூடிய ஒரு சூழ்ச்சியை முதலாளிகள் செய்யும்போது, அதற்கு அரசு உடந்தையாக ஏன் இருக்க வேண்டும்?

இன்னொன்று டிஸ்மிசல் வருகிறது என்று சொன்னால் தனிப் பட்ட தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்யும்போது தொழில் கோர்ட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட் களாக இருக்கின்றது. இன்டஸ்டிரியல் டிஸ்பூட் ஆக்ட் செக் ஷன் 11 (எ) தொழிலாளர்களுக்குப் பயன்படுவதில்லை. ஐ.எல்.ஓ. கோட்பாடு பிரகாரம் தொழிலாளர்கள் மீது கடும் தண்டனை வரும்போது அப்பீலுக்கு அவர்களுக்கு உரிமை வேண்டும் என்று சொல்லித்தான் இந்த 11 (எ) திருத்தம் வந்தது. அதைக் கோர்ட்டுக்கு அனுப்பாமல் போனால் இந்தக் குற்றத்திற்கு ஏற்ற தண்டனை என்ன, இந்தக் குற்றத்திற்கு இந்த தண்டனை உண்டா இல்லையா என்பதை கோர்ட்டு நிர்ணயிப்பதற்குப் பதிலாக, அரசே முடிவு சொல்வது போலிருப்பது சரியல்ல. அப்படிப்பட்ட டிஸ் மிசல் கேஸ்கள் அனைத்தும் கோர்ட்டுக்குப்போக ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொதுத்துறை நிறுவனங்கள், அவை மின்சார வாரியமாக இருந்தாலும், டிரான்ஸ்போர்ட் கழகமாக இருந்தாலும், கோவா பரேடிவ் செக்டாராக இருந்தாலும், தொழிலாளர்கள் விவ காரமாக இருந்தால்—குறிப்பாக மின்சார வாரிய—தொழில் தகராறுகளாக இருந்தால் லேபர் இலாகாவினர் எடுத்துக் கொள் வதில்லை, எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள், தயங்குகிறார்கள். அது சரியல்ல. அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் என்பதைப் பொறுத்த வரையில், இந்த அங்கீகாரம் சரியான முறையில் பெருவாரியான சங்கங்களுக்கு வழங்கப்படுவது இல்லை. அதன் காரணமாகத்தான்

டிரேட் யூனியன் ரைவல்ரி வருகிறது என்று எல்லோராலும் கருதப்படுகிறது. அதற்கு ஒரு விதியை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டு கொண்டிருக்கிறார்கள். நாங்களும் கூறிக்கொண்டு வருகிறோம்.

சீக்ரட் பேலட் மூலமாக மெஜாரிட்டி சங்கங்கள் எது என்று நிர்ணயிக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை நமது மாநிலத்திலே பொதுத்துறையிலே பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் நிறுவனம், திருச்சி, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், ஊட்டி, ஆகிய இடங்களில் ஏற்பட்டு விட்ட பிறகு நம்முடைய மாநில அரசு இப்படிப்பட்ட கொள்கையை ஏன் கொண்டுவரக்கூடாது?

" காம்பிரஹென்ச்வ் இன்டஸ்ரியல் ரிலேஷன் பில் "

மத்தியில் வரப்போகிறது என்பதால் அதை ஒட்டிச் செய்வது என்பது சரியல்ல. நேற்று வந்து இருக்கிற செய்தியைப் பார்த்தால், இந்த கூட்டத்தில் அப்படிப்பட்ட பில் இந்தப் பாராளுமன்ற செஷனில் வரப்போவது இல்லை. வின்டர் செஷனில் வருமா என்பதும் சந்தேகமாக இருக்கிறது என்கிற அளவில் மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், அரசாங்கம் உத்தரவு போட்டாவது இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற் சங்க அங்கீகாரத்தை ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றொன்று பல முதலாளிகள் கன்சிலேஷன் என்று சொன்னாலே வருவது கிடையாது. வந்தாலும் ஒத்துப்போவது கிடையாது. வேர் எர்த் மூவிங் கம்பெனி அதற்கு ஒரு உதாரணம். ஆகவே, கமிஷனராக இருந்தாலும் சரி, டிபுடி லேபர் கமிஷனராக இருந்தாலும் சரி, லேபர் ஆபீசராக இருந்தாலும் சரி, அவர்கள் நோட்டீஸ் அனுப்பினால் கட்டாயம் முதலாலிகள் வரவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு ' சம்மனிங் பவர்ஸ் ' கொடுக்க வேண்டும். இன்டஸ்ரியல் டிஸ்பியூட் ஆக்டில் அது எப்படி இருந்தாலும், அரசாங்க உத்தரவு மூலம் இதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டி. வி. எஸ். தொழில் தகராறுகள் சம்பந்தப்பட்ட வரையில், அங்கே அமைதி நிலவுகிறது என்று அமைச்சர் அவர்கள் நேற்று சொன்னார்கள். அமைதி நிலவுவது எந்த அடிப்படையில்? சுடு காட்டு அமைதியா என்று நேற்றே கேட்டேன். அவர்கள் எடுத்துக் கொண்ட பிரச்சனைகள் திர்க்கப்பட்டு விட்டனவா? அந்தத் தொழிற்சாலையில் 15 பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். மீதி பேரையும் வீட்டுக்கு அனுப்பும் முறையில் ஆங்கே விசாரணை நடைபெற்று வருகிறது. ஏற்கனவே ஒரு ஒப்பந்தம், ஒரு அக்கார்ட் ஏற்பட்டு இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் மீதான குற்றச்

சாட்டுகளை விசாரித்த பின்னர் மாநில முதலமைச்சரிடம் அந்தப் பிரச்சனையை விட்டு விடுவது என்றும், உடனடியாகத் தேர்தல் நடத்துவது என்றும், அத்துடன் உற்பத்தி ஆவதற்கான இன் சென்டிவ் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குகாக ஒரு குழு போடுவது என்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது. அது என்ன ஆயிற்று ? அந்த முடிவுகள் நிறைவேற்றப்பட்டு விட்டனவா ? அங்கே எப்படி அமைதி நிலவுகிறது என்பதற்கான காரணங்களை மாநில முதலமைச்சர் அவர்களே. டெல்லியில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் கூட்டத்தில் கூறியிருக்கிறார்கள். 'இப்படி ஒரு முதலாளி லாக்-அவுட் செய்து விட்டு, குண்டர்களை வைத்துக் கொண்டு அமைதியைக் கெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். மாநில அரசு தலையிடக்கூடாது, மத்திய அரசின் உதவியைக் கொண்டு சமாளித்துக் கொள்கிறோம்'' என்று அந்த முதலாளி கூறுகிறார் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே சென்னையில் சர்க்கரை தொழில் நிபுணர்கள் கூட்டத்தில் பேசுகிறபோது, '' இப்படி ஒரு முதலாளி எவ்வளவு நாளைக்கு ரௌடிகளை வைத்துக் கொண்டு நடத்துவது ? அதற்காக போலீஸ் பாதுகாப்பு லட்சக்கணக்கில் செலவு செய்து எவ்வளவு நாளைக்குக் கொடுப்பது ,'' என்றெல்லாம் கூட மாநில முதலமைச்சர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள்.

'' நாங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்கு வருகிறோம் என்று சொல்லும் தொழிலாளர்களிடம் உறுதிமொழிப் பத்திரம்—அடிமைச் சாசனம் போல்—வாங்கிக்கொண்டது மட்டுமல்ல, அந்த பத்திரத்தை முதலமைச்சர் எதிரில் கையெழுத்திடுகிறோம் என்று சொன்னால் அதை ஒப்புக் கொள்ள முடியாது, எங்கள் எதிரில் தான் போட வேண்டும் என்று சொல்லும் ஒரு முதலாளியை இன்று தான் என்னுடைய வாழ்நாளில் நான் பார்க்கிறேன் என்றும் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்தில் சொன்னார்அது எல்லாம் என்ன ஆயிற்று? மாநில முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உறுதி மொழி என்ன ஆயிற்று ?

போலீசை வைத்துக் கொண்டு, ரௌடிகளை வைத்துக் கொண்டு கொலை மிரட்டலை செய்து கொண்டு இருக்கிற நேரத்தில் அமைதி நிலவுகிறது என்று சொன்னால், அது எப்படிப்பட்ட அமைதி? ' சுடுகாட்டு அமைதி ' என்று நான் தெரிவிக்கறேன். இந்தப் பிரச்சனையில் அரசு மீண்டும் தலையிட்டு , டி. வி. எஸ். நிர்வாகம் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்று தொழிலாளர்கள் தோற்றதாக நான் கருதவில்லை. ஒரு டி. வி. எஸ். முதலாளியிடத்தில் மாநில அரசே தோற்றதாகத்தான் நான் கருதுகிறேன். ஆகவே, மீண்டும் தலையிட்டு அதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தொழில்களிலுள்ள அன் ஆர்கனேஸ்டு ஒர்க்கர்ஸ் சம்பந்தப் பட்ட மட்டில், மினிமம் வேஜஸ் ஆக்டை இம்பிளிமென்ட் செய்கிறபோது அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அது தொழிலாளர் நல அதிகாரியாக இருந்தாலும், சரி, பாக்டரி அதிகாரியாக இருந்தாலும் சரி, மினிமம் வேஜஸ் ஆக்டை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். ஜின்னிங் பாக்டரி யில் இந்த நிலைமை கிடையாது. முந்திரித் தொழிலில் ஈடு பட்டு உழைக்கும் தொழிலாளர்களுக்கும் மினிமம் வேஜஸ் ஆக்ட் கிடையாது. கேரளாவில் இருந்து வந்த முதலாளிகள் இந்தத் தொழிலை வைத்து இருக்கிறார்கள், அவர்களை அதிகமாகக் கொடுங் கள் ஏன்று கேட்டால், நாங்கள் கேரளாவிற்கு கொண்டு போய் விடுவோம் என்று சொல்கிறார்கள். இங்கேயிருக்கிற மரங்களை யெல்லாம் பெயர்த்து எடுத்துக் கொண்டு கேரளாவிற்குப் போய் விடமுடியாது. ஆகவே, கேரளாவில் இருக்கும் குறைந்த பட்ச கூலியை இங்கே இருப்பவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

[முற்பகல் 11–20]

அதே மாதிரி வீரவநல்லூர் கோமதி மில்ஸ், விழுப்புரம் ராஜா இன்டஸ்ட்ரீஸ் இருக்கின்றன. அங்கே மஸ்டர் ரோல் சரியாக வைப் தில்லை. 300, 400 பேர்கள் வேலை செய்கிறார்கள். அதிகாரிகள் போனால் அவர்களுக்கு சரியான கணக்கைக் காட்டுவதில்லை. கூலி சரியாகக் கொடுப்பதில்லை. இந்தக் காரணத்தினால் விழுப் புரத்தில் ' லா அண்டு ஆர்டர் பிராபிளம் ' ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அதிகாரிகள் சம்பந்தப்பட்டவரையில் அங்கே சரியான கண்காணிப்பும் கிடையாது. இதையெல்லாம் சரி யாகக் கவனிக்க வேண்டும்.

கடலூரில் ஒரு லேபர் ஆபீசர் இருக்கிறார். அவர் அங்கே விழுப்புரத்தில் இருக்கிற கம்பெனி முதலாளிகளின் காரில் உல்லா சப் பிரயாணம் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படி பாக் டரி சொந்தக்காரர்களின் காரை லேபர் ஆபீசர் பயன்படுத்தினால் அவரால் எப்படி தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய முடியும் ? எப்படி பாக்டரி சொந்தக்காரர்களைக் கட்டுப்படுத்த முடியும்.

விவசாயத் தொழிலாளர்களும் தொழிலாளர் துறையின் கீழ் வருகிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்சம் கூலி தஞ்சை மாவட்டத்தைச் தவிர வேறு எந்த மாவட்டத்திலும் நிர்ணயம் செய்யப்படவில்லை. திருநெல்வேலியிலும், அம்பா சமுத்திரத்திலும் ஒரு அரசு பண்ணை இருக்கிறது. அங்கே இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு கூட குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட வில்லை.

குற்றாலத்தில் ஒரு பழங்கள் உற்பத்தி செய்யும் அரசுப் பண்ணை இருக்கிறது. அங்கே வேலை செய்கின்றவர்களுக்கும் குறைந்த பட்ச சம்பளம் கிடையாது ; அவர்களுடைய வேலைக்கும் உத்தர வாதம் கிடையாது. ஆகவே, அரசுத்துறையில் முதலில் இதைக் கறாராக அமுல்படுத்த வேண்டும். மற்ற மாவட்டங்களில் ரெவின்யூ அதிகாரிகள் மூலம் அல்லது போலீஸ் அதிகாரிகள் மூலமாக குறைந்த பட்ச கூலிச் சட்டத்தை அமுல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூட்டைத் தூக்கும் தொழிலாளர்களுக்கு அண்ணா பிறந்த நாளிலே ஒரு அறிவிப்புத் தந்தார்கள். அது இன்னும் செயல் படுத்தப்படவில்லை. ஏனென்றால் அதற்கு ஆட்சேபனை வந்தது என்கிறார்கள். பீடித் தொழிலாளர்களுக்கான சட்டம் இன்னும் சரியாக அமுல்படுத்தப்படவில்லை. 'சன்டே' விடுமுறை கேட்டார்கள் ; அது இன்னும் வழங்கப்படவில்லை. பீடித் தொழிலாளர்களுக்கு பிஎஃப் கொடுக்க மறுத்து முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் சீக்கிரமாக முடிவு செய்ய வேண்டும்.

தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி இன்னும் நிர்ணயம் செய்யவில்லை. திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலையில் மூன்றாண்டுகள் ஆகியும் குறைந்த பட்ச கூலி கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்கள் தான் இங்கு அதிகமாக இருக்கிறார்கள். இது அந்நியச் செலாவணி ஈட்டக்கூடிய தொழில் அதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்தப்படியாக பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்கும் பல்வேறு இடங்களில் இன்னும் குறைந்தபட்ச கூலி கிடையாது. தமிழ்நாட்டில் இந்த சட்டத்தை சரியாக அமுல்படுத்தவில்லை. இந்தத் தொழிலில் நிறைய கஷ்டம் இருக்கிறது. பீடித் தொழிலாளர்கள் காசநோய் போன்ற நோய்களுக்கு ஆளாகிறார் கள். அவர்கள் நலனை அக்கறையோடு கவனிக்க வேண்டும்.

நவமணி பத்திரிகை மூடப்பட்டிருக்கிறது. மூடப்பட்ட பிறகு ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் அரசுக்கு வந்திருக்கிறது. மூடப் பட்ட அந்த நிறுவனத்திலிருந்து வரக்கூடிய வருவாயை எப்படி பங்கிடுவதுஎன்பதற்கு வழிமுறைகளை வகுத்துக் கொண்டு பிரையா ரிட்டி அடிப்படையில் கொடுக்க வேண்டும். முதலில் அரசாங்க லோன், அதன்பிறகு பி.எஃப் இப்படி வருகிறது. 10 மாதங்களுக்கு மேலாகியும் தொழிலாளர்களுக்கு சம்பளம் கிடைக்கவில்லை. அவர் களுக்கு பிரையாரிட்டி கொடுத்து அவர்களுக்குச் சேர வேண்டிய சம்பளத்தைக் கொடுக்க முதலில் ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

காதி போர்டில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்சம் சம்பளம் கொடுப்பதுபற்றி சிந்திக்க வேண்டும்.

1978 மார்ச் 9] [திரு. சி. கோவிந்தராஜன்]

அடுத்தபடியாக, 'கான்ட்ராக்ட் லேபர் அட்வைசரி போர்டு' இருக்கிறது. அதற்கு தனியாக சட்டதிட்டங்கள் இருக்கின்றன அந்த போர்டு சட்டத்தை ரெகுலேட் செய்வதற்குத்தான் இருக்கிறதே தவிர தொழிலாளர் நலனில் அக்கறை காட்டுவதாக இல்லை. அதில் சி.ஐ.டி.யூ. பிரதிநிதி கிடையாது.

அடுத்ததாக 'வெய்ட்ஸ் அண்டு மெஷர்ஸ்' டிப்பார்ட்மென்ட் இருக்கிறது. அரசாங்கம் தயார் செய்யும் அரசாங்க முத்திரைப் போட்ட எடை கற்களை பயன்படுத்துவது கிடையாது. கடைகளில் சோதனைக்காக அதிரிகள் போகும்போது மட்டும் அதைப் பயன்படுத்துகிறார்கள். மற்ற நேரங்களில் அதை மறைத்து வைத்து விடுகிறார்கள். அதையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரியாக கண்காணிக்க வேண்டும்.

இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் இருக்கின்றன. அங்கே மருந்து கிடையாது. லேடி டாக்டர்கள் கிடையாது. கட்டட வசதி கிடையாது. வீரவநல்லூர் கோமதி மில் தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அங்கும் இ.எஸ்.ஐ. திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஈயத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்களுக்கு சிலிகாஸிஸ் என்ற வியாதி வருவதாகவும் இந்த வியாதி குறித்து மருத்துவ நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து அதைத் தடுக்கும் முறைகளைக் கண்டு பிடிக்க முயற்சிக்கிறார்கள் என்றும் அமைச்சரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதேபோல் குளோரின் போன்றவைகளை பயன்படுத்துகின்ற தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இருதயம், சுவாசக்குழல் பாதிக்கப்பட்டு விரைவிலே நோய் வாய்க்கு ஆளாகிறார்கள். இது குறித்தும் மருத்துவர்கள் ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிப்பட்டத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு தனி அலவன்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பல்லாவரம் நகரசபைக்கு—தாம்பரம் என்று நினைக்கிறேன். குடிதண்ணீர் பிரச்சனையைத் தீர்க்க பாலாறு தண்ணீர் கொண்டு வரப்படும் என்று சொல்லி, தெருக்களில் பைப் எல்லாம் போட்டார்கள். டாப்களும் தெருக்களில் போடப்பட்டுள்ளன. டாங்க் கூட கட்டி விட்டார்கள். ஆனால் பாலாற்றிலிருந்து மெயின் பைப் போடாமல் 5 ஆண்டு காலமாக இருக்கிறது. இந்தக் குறையை விரைவிலே போக்க வேண்டும்.

அடுத்தப்படியாக வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. ரூ. 4,200-க்கு குறைவாகவும் 4,200 முதல் 8,000 ரூபாய் வருமானமுள்ளவர்களுக்கு என்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு என்றும் இரண்டு மூன்று குருப்களாக வருமான அடிப்படையில் பிரித்திருக்கிறார்கள். முதலிலே குறைந்த வருமானக்காரர்களுக்காவது உடனடியாக இந்த ஸ்கீமை செயல்படுத்த வேண்டும்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு இன்னும் வீடு கட்டிக் கொடுக்கவில்லை. பல்வேறு இடங்களில் வீடு கட்டப்படாமல் இருக்கிறது. குறிப்பாக நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு இன்னும் வீடு கட்டிக் கொடுக்கவில்லை. ஏற்கனவே மூங்கில் துறைப்பட்டு சர்க்கரை ஆலைத் தொழிலாளர் களின் வீடுகள் வெள்ளத்தினல் அடித்துச் செல்லப்பட்டன. அவர் களுக்கு உடனடியாக வீடுகளைக் கட்டித் தரவேண்டும்.

திருவான்மியூரில் வீடு கட்டியிருக்கிறார்கள். வீடு கட்டி இரண்டு மாதம் தான் ஆகிறது. அதற்குள்ளாகவே 'கிராக்' ஏற்பட்டிருக்கிறது. அங்கு குடிதண்ணீர் வசதி கிடையாது.

அடுத்ததாக ஸ்லம் அபிவிருத்தி என்று சொல்லப்படுகிறது. முதலில் அங்கே குடிசை கட்டி, அக்குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு அவர்கள் அந்த குடிசைகளைக் கட்டியிருக்கும் இடங்களை சொந்தமாக வாங்கி கொள்வதற்கு அரசு முதல் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு விஷயம். தொழிற்சங்கத்தில் அரசியல் தலை யீடு பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. சென்னையில் ஹோட்டல் நிர்வாகங்களில் ஆளும் கட்சியைச் சார்ந்திருக்கிற முக்கிய நபர் ஒருவர் எங்களுடைய சங்கம்தான் இருக்கவேண்டுமென்று பல விதமான வன்முறைக் காரியங்களிலே ஈடுபட்டுக்கொண்டு வரு வதாகச் சொல்லப்படுகிறது. காஞ்சி ஹோட்டலைத் திறக்கும் போதுகூட அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு தொழிற்சங்கம் தான் ஹோட்டல் தொழிலில் இருக்கவேண்டும் என்று பேசி இருக்கிறார். அவர்தான் இன்று பல்வேறு பிரச்சினைகளில் தலையிட்டுக்கொண்டு வருகிறார்.

அடுத்து என்.ஜி.ஜி.ஓ. பற்றிக் கூற விரும்புகிறேன். அத்து மீறிய செயல்களை ஆளும் கட்சி ஏவி விட்டிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். ''காஞ்சி'' ஹோட் டல் திறக்கும்போது பேசியவரின் தலையீடுதான் இன்றைக்குக் கூட இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அலுவலகத்திற்கு வராத சிப்பந்திகளை பலவந்தமாக பயமுறுத்தி இழுத்து வருகின்ற நிலை இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. என்.ஜி.ஜி.ஓ. பிரச்சினையை தொழிற்சங்கப் பிரச்சினையாகக் கருதி கௌரவம் பார்க்காமல் சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு வழி காணவேண்டுமென்று கேட்டு, இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 9]

திரு. ர.ச. தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு தொழிலாளர் நல மானியத்தில் பேச வாய்ப் பளித்ததற்கு நன்றி கூறி தொடருகிறேன்.

வால்பாறை தொகுதியைச் சேர்ந்தவன் நான். 1977-ம் ஆண்டு முதல் 1978 ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட ஒரு ஆண்டுகாலமாக 12 மில்கள் மூடிக் கிடந்ததை திறந்து 17 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டது. கோவை மாவட்டம் வால்பாறையில் காடம்பாறை மத்திய அரசின் உதவியால் மின் உற்பத்தி நிலையம் சுமார் 5 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து பயனற்றது என்று கைவிடப்பட்ட மின் உற்பத்தியை மீண்டும் புரட்சித் தலைவரின் முயற்சியால் சுமார் 73 கோடி ரூபாய் செலவில் தொடங்க இருக்கிறது. சுமார் பத்தாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் வகையிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைக்கு கடனுகவும் மானியமாகவும் கொடுத்துள்ளது.

இதுவரை அங்கு பெண்கள் பிரசவ லீவு நாட்களில் ஊதியம் பெற சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டது புரட்சித் தலைவரின் ஆட்சியில் தான். ரூபாய் 13 லட்சம் செலவில் குடி தண்ணீர் திட்டமொன்றை வால்பாறைக்கு ஏற்படுத்தி உதவி புரிந்ததோடு மட்டுமல்லாமல் பலவகைகளிலும் இந்த அரசு உதவி புரிந்து வருகிறது.

வால்பாறை முழுவதும் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் பகுதி. இவர்களால் ஆண்டுதோறும் நமது அரசுக்கு கோடிக் கணக்கான பணம் சம்பாதித்துத் தரப்படுகிறது. இதுவரையிலும் எந்த அரசும் இத்தோட்டத் தொழிலாளர்கள் மீது கருணை காட்டவில்லை. எங்களது புரட்சித் தலைவரது ஆட்சியிலாவது அவர்களது வாழ்க்கைத்தரம் உயர பின்வரும் சலுகைகளைச் செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.]

விமானம் மூலமாக மருந்து,தேயிலை தோட்டங்களுக்குத்தெளிப்பதை உடனடியாக நிறுத்தி தொழிலாளர்களை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையில் சுமார் 60 ஆயிரத்துக்கு மேல் ஜனத்தொகை. படித்தவர்களும் படிக்க முடியாமல் வேலையில்லாதவர்களும் நிறைய பேர் எவ்வித வேலையும் இன்றி சும்மா இருந்து கஷ்டப் படுகிறார்கள். தேயிலைத் தோட்டத்தைத் தவிர எந்த வேலைக்கும் போக முடியாத நிலைமை இருக்கிறது. ஒரு குடும்பத்தில் ஒருவர் அல்லது இருவர் சம்பாதித்து 5 அல்லது 6 பேர்களைக்

காப்பாற்றி அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களைப் படிக்க வைக்கிறார்கள். எனவே அரசு தரப்பில் தொழிற்சாலைகளை நிறுவவேண்டும்.

இங்கு மூங்கில், முருங்கை, தண்ணீர் போன்ற மூலப்பொருள்கள் கிடைப்பதாலும் மற்ற வசதிகள் இருப்பதாலும் அங்கு காகிதத் தொழிற்சாலை கட்டித் தரவேண்டும்.

எஸ்டேட்டுகளில் ஆபீஸ் வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே எடுக்கவேண்டும். சம்பந்தம் இல்லாதவர்களை எடுக்கிறார்கள். இதைத் தவிர்க்கவேண்டும். ஒரு ஏக்கருக்கு 1-3/4 ஆட்கள் வீதம் எடுக்க வேண்டும் என்று அரசு ஆணையுள்ளது. அப்படிச் செய்யாமல் முதலாளிகள் தங்களுடைய இஷ்டத்திற்கு எடுக்கிறார்கள். இதையும் அரசு கண்டித்து 1 ஏக்கருக்கு 2 ஆட்களாக எடுக்க உத்திரவு இடவேண்டும்.

ஆண்டுதோறும் தேவையான அளவுக்கு தோட்டத் தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே தோட்டங்களுக்குப் பதிவு செய்ய வேண்டும். கடிகாரத் தொழிற்சாலையையும், இங்கு பல பாகங்களிலிருந்து கம்பளி கொண்டு வரப்படுவதால் கம்பளி தொழிற்சாலையும் அமைக்க வேண்டும். பலதர பயனுள்ள தொழிற் கூடங்கள் அமைத்து 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30).

அங்குள்ள குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு செய்து தர வேண்டுமென்று அரசு ஆணை உள்ளது. கடன் 50 சதவிகிதம், 25 சதவிகிதம் மானியம், 25 சதவிகிதம் முதலாளிகள் கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை உள்ளது. ஆனால் இதுவரை அது செய்து தரப்படவில்லை. எனவே அங்குள்ள குடியிருப்புகளுக்கு உடனடியாக மின் இணைப்பு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சாமர்த்தியம் உள்ளவர்கள். கிடு கிடு என்று பேசுங்கள். நிதானமாகப் பேசுவதற்கு டைம் கிடையாது.

திரு. மு. அம்பிகாபதி : நான் சில முக்கியமான விஷயங்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்களின் அறிக்கை விவரமாக இருக்கிறது. போதி மரத்தடியில் இருக்கக்

கூடிய அமைதி இருப்பதாக அதில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் தொழில் துறையில் மட்டுமல்ல, என்.ஜீ.ஓ. க்கள் போராட்டம், கால்நடை ஆய்வாளர்கள் போராட்டம் இப்படி சில போராட்டங்கள் நடக்கின்றன. போராட்டங்களைப் பற்றி அதிர்ச்சியுடையவும், ஆத்திரப்படவும் தேவை இல்லை. ஏனென்றால் தமிழகத்தில் இது இருக்கும், இருக்கவேண்டும். இது இந்தியாவிலுள்ள கண்டிஷன். இது வளர்முக நாடுகளில் உண்டாகியுள்ள எக்கனாமிக்கல் க்ரைஸிஸ்.

அடிக்கடி போராட்டங்கள் இங்கே உருவாகின்றன. எனவே போராட்டத்தைக் கண்டு அதிர்ச்சியடையவோ அல்லது ஆத்திரப்படவோ அல்லது அவற்றை ஒடுக்குவதற்கு தொண்டர் படையைப் போகச் சொல்லவோ அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன். பொதுவாகச் சொல்கிறேன்.

இன்றைக்கு, குறிப்பாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கக்கூடிய அறிக்கையில் எல்லா ஆலைகளும் திறக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அந்த அறிக்கையில் ஒரு ஆலை சுத்தம் செய்யப்படுகிறது, இன்னொரு ஆலை நவீனப்படுத்தப் படுகிறது என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

தோழர் கார்ல் மார்க்ஸ் அவர்கள் 1848-ல் குறிப்பிட்டுள்ளபடி, வொர்க்கிங் க்ளாஸ் இரண்டு வகைப்படும். ஒன்று, கருத்தால் உழைக்கிறவர்கள், மற்றொன்று, கரத்தால் உழைக்கிறவர்கள். கருத்தால் உழைக்கிறவர்களின் போராட்டம் இன்று வெளியே நடந்து கொண்டிருக்கிறது. என். ஜீ. ஓ.க்கள் போராட்டம். கரத்தால் உழைக்கிறவர்கள் போராட்டங்கள் இன்று பலயிடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இது இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்டின் கீழ் வராது என்றாலும் என். ஜீ. ஓ.க்கள் தொழிலாளர்கள் தான் என்பது எங்கள் நிலை.

எனவே, இன்று பல்வேறு இடங்களில் தொழில் அமைதியின்மை நிலவுகிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சென்னை அருகாமையில் இருக்கக்கூடிய டி.ஐ. சைக்கிள்ஸ், அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமை என்ன ? பேசி தீர்க்கப்படவில்லை. அங்கே தொழிலாளர்களை நிர்வாகத்தினரின் ஆட்கள் தாக்கி காயப்படுத்தியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் நிர்வாகத்தால் தாக்கப்பட்டு முதல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தேவநாதன் என்ற நிர்வாகத்தின் ஆள் தொழிலாளியைத் தாக்கியிருக்கிறார். சைதாப்பேட்டை கோர்ட்டில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் பல உதாரணங்களைச் சொல்ல முடியும்.

இப்போது பாடியில் அமைதி நிலவுவதாகச் சொல்லப்படுகிறது, அங்கே பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பலர் அங்கே கஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். டி.வி.எஸ்.

குரூப்பைச் சேர்ந்த சுந்தரம்-கிளேட்டன், ப்ரேக்ஸ் இந்தியா, லூக்காஸ்—டி. வி. எஸ். போன்ற நிறுவனங்களில் தொழிலாளர்கள் மீது பழிவாங்குகிற போக்கு மேலோங்கி நிற்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் சொன்னது போல், இந்த முதலாளிகள் அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் என்கிற நிலையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக அண்மைக் காலத்தில் ராயல் என்பீல்ட்-ல் ஆறு மாத காலம் வேலை நிறுத்தம். அதே போல் யூனியன் கார்பைட்-ல் 100 நாட்கள் வேலை நிறுத்தம். எம். ஆர். எப்.-ல் 55 நாட்கள் வேலை நிறுத்தம். டி. ஐ. சைக்கிள்ஸ்-ல் அது ஜனவரி 11-ம் தேதி மூடப்பட்டு இன்று வரை திறக்கப்படவில்லை. மூடிக்கிடக்கிறதா, திறந்திருக்கிறதா ? அவர்கள் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அரசாங்கம் மிகச் சாதுரியமாக அவர்களுக்கு அனுமதி மறுத்தாலும், மூடுவோம் என்று கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள்.

எங்கள் தலைவர் மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி, எம்.ஏ., பார்-அட்-லா, அவர்கள் அதில் ஒரு பகுதியாக தொழிற்சங்கத்தை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு அபிடவிட் தாக்கல் செய்திருக்கிறார்கள். நிர்வாகிகள் சுப்ரீம் கோர்ட் வரை போவார்கள். அவர்களுக்கு அது முடியும். எந்தக் கோர்ட்டுக்குப் போனாலும், உடனடியாக தொழிற்சாலைகளை மூடியவர்கள் திறக்கவில்லை என்றால் ஆறு மாதத்திற்குப் பிறகு அதை நாங்களே எடுத்து நடத்துவோம் என்று அரசாங்கம் முன்வராத வரை, மூடுவது தவறு என்று அந்த நிர்வாகத்தினரை கைது செய்து உள்ளே தள்ளாதவரையில் தொழிலாளர்கள் பிரச்சினைக்கு எந்த விதமான தீர்வும் காணமுடியாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு தொழிற்சாலைகளில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் 6 மாதம், 3 மாதம், 100 நாட்கள் என்று கால தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி காலதாமதப்படுத்துவதின் காரணமாக, தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளை பின்னுக்குத் தள்ளி, அவர்களை முடமாக்கி ஒடுக்குவதற்கு புதிய தந்திரமாக பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இந்த அரசாங்கத்திற்கு வேண்டுமென்றால் தொழிலாளி மீது கருணை இருக்கலாம். ஆனால் அவற்றை நடைமுறையில் கொண்டு வந்து செயல்படுத்த முன் வரவேண்டும். இதில் காலதாமதம் கூடாது. இப்படி கால தாமதம் நீண்டு கொண்டே போனால்........

"Justice delayed is justice denied"

தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்காமல் போய்விடும். மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்களுக்கு ஆங்கிலம் பிடிக்கும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

சத்யமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 9] [திரு. மு. அம்பிகாபதி]

குறிப்பாக டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால் சாத்தப்பட்டுள்ளது. அதிலுள்ள பிரச்சினைகள் பேசி தீர்க்கப்படவில்லை. அதுபோல் பல பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளும் பேசித் தீர்க்கப்படவில்லை.

சர்க்கரை தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டால், கோத்தாரி, காட்டூரா, ஆம்பூரா எந்த இடத்தை எடுத்துக் கொண்டாலும் போராட்டம் வெடிக்கிறது. கால்நடை ஊழியர்களின் பிரச்சினையா போராட்டம் வெடிக்கிறது. மாதவரம் பால்பண்ணை சுக ஊழியர்கள் அவர்கள் நேற்றையதினம் தங்களுடைய— போனஸ் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்று பெரிய ஊர்வலம் போயிருக்கிறார்கள். போனஸ் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், வேலை நிரந்தரமாக்கப்பட வேண்டும். வேறு பல உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று சென்னைக்கு அருகிலுள்ள மாதவரம் பால் பண்ணை தொழிலாளர்கள் ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

ட்யூப் ப்ராடக்ட்ஸ், டி. ஐ. மில்லர்ஸ் இவைகளில் பணி புரிகின்ற 4,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வ்.டி.எஸ் பணம் திருப்பிக் கொடுப்பதற்கு பத்திரங்கள் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், டி. ஐ. சைக்கிள்ஸ்-ல் உள்ளவர்களுக்கு இந்த சி. டி. எஸ். பணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. முடக்கம் செய்யப்பட்ட மூன்று மாத ஊதியம் உடனடியாக திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தும் இன்னும் கொடுக்கவில்லை. இதன் காரணமாக கடந்த மூன்று மாத காலமாக 2,000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பட்டினியில் கிடந்து வருகின்றன. இவற்றையெல்லாம் இந்த அறிக்கையில் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தால் மிகச் சிறந்ததாக இருந்திருக்கும்.

இன்றைக்கு, தாரங்கதாரா கெமிக்கல்ஸ் தொழிற்சாலையில் போனஸ் விஷயத்தில் இன்னும் முறையாக ஒப்பந்தம் செய்யப்பட்டு, நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. அதேபோன்று தான் மதுரை கோட்ஸ் மில்லிலும் போனஸ் பிரச்சினைக்கு முறையாக ஒப்பந்தம் செய்யப்பட்டு செயல்படுத்தவில்லை.

எல். ஐ. சி. ஊழியர்கள் பெற்று வந்த 16 சதவீதம் போனஸ் கொடுப்பது சரியல்ல என்று அவசர காலத்தில் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பின்னால் அது செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்தது. அதன் பிரகாரம் எல். ஐ. சி. ஊழியர்கள் போனஸ் பெற்றார்கள். அதே தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தில் நீண்டகாலமாக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்ற மதுரை கோட்ஸ், தாரங்கதாரா போன்ற ஆலை

களில் உள்ள தொழிலாளர்களுக்கும் கட்டாயமாக போனஸ் கொடுக்க வேண்டும். அரசு உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அதைவிட்டு விட்டு அவர்கள் எந்தக் கோர்ட்டுக்குப் போனாலும் விட மாட்டோம், அதை விரட்டி பிடிப்போம் என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் பிரச்சினையில் ஸ்கீரினிங் கமிட்டி என்று போட்டிருப்பது—அது ஒரு டேஞ்சரான கமிட்டி என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நல்லது தான். இந்தக் குழுவில் தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடையாது. தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாது இப்படி அநீதையாக விடப்பட்டிருக்கின்ற இந்த ஸ்க்ரீனிங் கமிட்டி உடனடியாக ஒழிக்கப்படும் என்று இதே மன்றத்தில் தொழிலாளர் நல அமைச்சர் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், போக்குவரத்து சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், பப்ளிக் வொர்க்ஸ் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் இவர்கள் அரசாங்கத்தின் கீழ் வேலை செய்கின்றவர்கள் என்ற காரணத்திற்காக, இப்படிப்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால் அது இந்த ஸ்க்ரீனிங் கமிட்டிக்கு அனுப்பப்படும் என்ற பெயரில்—அங்கு சலிக்கப்படுகிறது..... அது போக்கப்பட வேண்டும் (மணி அடிக்கப்பட்டது).

மேலும், வீட்டு வசதி வாரியத்தில்—ஸ்பிக் என்ற நிறுவனத்தில் சேர்மென் பதவியில் இருப்பவர், அதே நேரத்தில் சூப்பிரடன்டிங் என்சினியராக இருப்பவரும் அவரே. சேர்மெனாக இருக்கக்கூடியவரே சூப்பிரன்டிங் என்ஜினியராக இருப்பதாக—கேள்வி. ஏதாவது கட்டிடங்கள் கட்டியிருந்தால் அது சரியாக இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டியவரும் அதே சூப்பிரன்டன்டிங் என்ஜினியரே என்பது தகவல். இப்படி சேர்மெனாக இருக்கக்கூடியவரை ஒன்றை பரீசீலிக்க வேண்டும் என்று சூப்பிரன்டிங் என்ஜினியரை கேட்டுக் கொள்கின்ற கடிதமும் ஒரே லெட்டர் பேடில் தான் அனுப்புவதாக தகவல் வருகிறது.

(முற்பகல் 11-40)

எனவே, இரண்டும் இதுபோல் பல இடங்களில் இருக்கிற மாதிரி இங்கும் இருக்கிறது.

திருவான்மியூரில் எல். ஐ. ஜி. எம். ஐ. ஜி. எகனமிக் தரப்பு அதாவது பொருளாதார ரீதியான பகுதி என்று 3 பகுதிகளாக 36,000 ரூபாய் 52, 000 ரூபாய் என்ற முறைகளிலே வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வீடுகளுக்கு ரோடுகள் இல்லை; ஒளி விளக்குகள் இல்லை; பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வசதியில்லை. அங்கே கட்டப்பட்டிருக்கிற வீடுகள்

"மடார், மடார்" என்று வெடிக்கிறது என்ற தகவல் இருக்கிறது. எனவே, இந்த நிலைமைகளையெல்லாம் பரிசீலித்து, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அங்கே கட்டப்பட்டிருக்கிற வீடுகள் சிலவற்றைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே சகலமும் அமைதியாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. போதி மரத்தடியில் இருக்கின்ற அமைதியைப் பார்க்க வேண்டும். 'ஆப்ஜக்டிவ் கன்டிஷன்' மாறும்போது, "சப்ஜக்டிவ் பேக்டர்" மாற்றம் வரும். அதுதான் இன்று இந்த என். ஜி. ஓ. போராட்டம், தொழிலாளர் போராட்டம் என்று பலவிதமான போராட்டங்களாக வெடித்து, அது இன்றைக்கு இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய ஒரு நிலைமையிலே, தமிழகத்திற்கும் வந்திருக்கிறது. இந்த என். ஜி. ஓ.-க்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டும். பக்கத்திலே இருக்கிற டி. எம். எஸ். ஆபிஸிலே பெரிய கலவரம் ஏற்பட்டு, சோடா பாட்டில் வீச்சு நடந்தது போன்ற பல்வேறு தகவல்கள் வருகின்றன; இந்தமாதிரியான பதட்ட நிலை இருக்கிறது. எனவே, அவர்களை அழைத்துப் பேசி, முறையாக இது தீர்க்கப்பட வேண்டும். அவர்களும் தொழிலாளர்கள் என்பதை உணர்ந்து, இதைச் செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுத்து முடிக்கிறேன்.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் துறை அமைச்சர் அவர்கள் மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பு பெறுகிறபோது, ஒருதடவை நான் இந்த அமைச்சர் அவர்களைப் பார்க்கிறேன். நான் மாணவனாக இருந்த காலத்தில், 1953—ல் அண்ணா அவர்கள் சிறைக்குச் சென்ற காலத்தில், பொறுப்பாளராக திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களை நியமித்தார். அப்போது பெரம்பூரில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்திற்கு திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் வந்திருந்தார். அவரோடு நம்முடைய அமைச்சர் அவர்கள் விவாதித்தார்கள். அந்த நாளிலிருந்து, இந்த நாள்வரை நான் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இடையிலே அவர் ஒரு தலைவரை பின்பற்றினர். எந்த அளவுக்குப் பின்பற்றினர் என்று சொன்னால், அந்தத் தலைவருடைய பிறந்த நாள் விழாவிற்கு நான் போயிருந்தேன். பழைய மேயரும், இன்றைய அமைச்சரும் அங்கே வாக்குவாதம் செய்துகொண்டார்கள். அதிகாலையிலே மாலை கொண்டு வந்தது யார், நீயா, நானா என்று சண்டைப் போட்டுக் கொண்டு, நீ நாலே முக்கால் மணிக்கு வந்தாய், நான் 5 மணிக்கு வந்தேன் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவ்வளவு பிடிப்போடு அந்தத் தலைவரிடத்தில் பற்று வைத்திருந்தார். ஆனால், நம்பிக்கை மோசம் செய்யப்பட்டு, இரவோடு இரவாக முன் அறிவிப்பில்லாமல் அவர் இருந்த வீட்டை விட்டு வெளியே அனுப்பிய காட்சியை

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன். இன்றையதினம் அவரை புரட்சித் தலைவர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர் புரட்சித் தலைவர் அவர்களை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கைக்கு வீண் போகாமல் அவர் எப்படி பம்பரமாகப் பணியாற்றுகிறார் என்பதை என்னுடைய சார்பிலும், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அறிந்திருப்பார்கள். நம்முடைய சகோதரர்கள் காளிமுத்து, குழந்தைவேலு போன்றவர்கள் இளை ஞர்கள். எனவே, ஓடி ஆடி பணியாற்றுகிறார்கள். ஆனால் அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் எப்படி பணியாற்றுகிறார் கள் என்பதைப் பார்த்தால், அவர்கள் தொகுதிக்குப் போகும் போதும் சரி, அதிகாரிகள் மத்தியிலேயும் சரி மிக ஆர்வத்தோடு அவர் ஏற்றுக்கொண்டிருக்கிற பணியினைத் தன்னை நம்பியிருக்கிற புரட்சித் தலைவர், அவர் நம்பிக்கை வைத்துள்ள புரட்சித் தலைவர் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையிலே இன்றையத் தினம் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

குடிசை மாற்று வாரியத்தைப் பற்றியும், வீட்டு வசதி வாரி யத்தைப் பற்றியும் சில பிரச்னைகளைச் சொல்லிவிட்டு, விடை பெறலாம் என்று நம்புகிறேன். குடிசை மாற்று வாரியம் என்பது, எந்த அளவிற்கு குடிசைகளிலே வசிப்பவர்களுக்கு வீடுகள் ஒதுக்கி யிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அந்தக் குடிசையிலே இருப்பவர்களை புகைப்படம் எடுத்து, அவர்களுக்கு 50 ரூபாய் தொகையும் தரப்பட்டு, பின்னாலே அந்த வீடுகள் கட்டப்பட்ட பின்னர் அவர்கள் அங்கே வசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆனால் கடந்த காலத்தில் அப்படி இல்லாதவர்களும் அந்தக் கட்டிடங்களிலே, அந்த வீடுகளிலே வசிப்பதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; 1972-ல் குடிசையில் வசித்துக் கொண்டிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வர்களைப் புகைப்படம் எடுக்க அனுமதிக்காமல் வெளியே பிடித்துத் தள்ளியிருக்கிறார்கள். அப்படி யார் யார் வெளியே பிடித்துத் தள்ளப்பட்டார்கள் என்று பரிசீலித்து, அப்படிப்பட்டவர்கள் அங்கே வசிக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்.

மாதம் 250 ரூபாயக்குக் குறைவாக உள்ளவர்கள்தான் குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களில் வசிக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. மாதம் 600 ரூபாய்க்கும் அதிகமான வருமானம் உள்ளவர்கள் கூட அங்கே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லாது யார் யாருக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று பரிசீலித்துப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 9]

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

அதுமட்டுமல்ல ; இந்தக் குடிசைமாற்று வாரியம் சென்னை நகரில் மட்டுமல்லாது, மாவட்டத் தலைநகரில் மட்டுமல்லாது வட்டத் தலைநகரிலும் அதாவது தாலுகா தலைநகரங்களிலும் பல் வேறு இடங்களில் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல ; குடிசையில் கூட வசிக்க முடியாமல் இன்றையதினம் இருந்து கொண்டிருப்பவர்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம். காலம் கடந்து வண்டிக்காரனைப் பற்றியும், வண்டிக்காரன் மகனைப் பற்றியும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வேன். அமைச்சர் இராகவானந்தம் அவர்களையும், புரட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக் கொள்வேன்—வண்டிக்காரன், மகன்—அவர்கள் குடிசைகளில் கூட இன்று இல்லை ; அவர்கள் பிளாட்பாரங்களில் வசிக்கிறார்கள் ; சுண்டல் விற்கிறவர்கள், கொளத்து வேலை செய்கிறவர்கள் சென்னை நகரில் பிளாட்பாரங்களில் வாழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு குடியிருப்பு மனை ஏற்படுத்தித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை என்ற அளவில் வீடு கட்டும் திட்டம் இன்றைய தினம் அண்ணா நகரிலும், கே.கே. நகரிலும் பெரிய அளவில் மனைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் என்ன நடக்கிறது என்றால் வருஷத்திற்கு வருஷம் ஒதுக்கப்பட்ட மனைகளுக்காக அதிகமான தொகை தரவேண்டுமென்று அறிக்கைகள் அனுப்பப் படுகின்றன. அதுபோன்ற முறைகள் தவிர்க்கப்பட வேண்டும். நான் இரண்டு மூன்று இடங்களில் வேறு மாநிலங்களில் இருக்கும் சிடி இம்ப்ருவ்மெண்ட் அமைப்புகளையும், ஹவுசிங் போர்டு அமைப்புகளையும் பார்க்க வாய்ப்பு இருந்தது. ஒரு தடவை ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் அவர்கள் என்ன தொகை தர வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அப்படிச் சொல்லி, டெம்பரரி பொசஷன் சர்டிபிகேட் தருகிறார்கள். அதன் பிறகு மீண்டும் அந்தத் தொகையைப் பற்றியோ மற்றப் பிரச்சினைகளைப் பற்றியோ வீட்டு வசதி வாரியம் அணுகுவதில்லை. அது போன்ற முறைகளை இங்கும் ஏற்படுத்தித் தரவேண்டும்.

குடிசையில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், கீழ்த் தட்டில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், நடுத்தர தட்டில் இருப்பவர்களுக்கும் மாவட்டந்தோறும் தலைநகரிலும் மட்டுமல்லாது, தொகுதி தலைநகரிலும் குறைந்த வாடகையில் வீடுகளைக் கட்டித் தரவேண்டும். அவ்வாறு அந்தத் தொகுதி தலைநகரில் கட்டப் படும் வீடுகளில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் தங்க, அலுவலகம் வைத்துக்கொள்ள ஒரு இடத்தை அந்தந்தத் தொகுதியில் வீட்டு வசதி வாரியம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

சென்னை நகரில் ஜர்னலிஸ்ட்ஸ்—பத்திரிகைத் துறையைச், சார்ந்தவர்கள் பல்வேறு இடங்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கியிருந்தாலும் ஸ்கார்டர்டாக ஒதுக்கியிருக்கிறார்கள். பெங்களூரிலும், டில்லியிலும், ஹரியானாவிலும் தனியாக ஜர்னலிஸ்ட்ஸ் காலனி என்று ஒதுக்கியிருக்கிறார்கள். பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்களைப் பார்க்கவேண்டுமென்று சொன்னால் ஜர்னலிஸ்ட்ஸ் காலனிக்குப் போனால் பார்க்கலாம். சென்னை நகரில், மையமாக, இருதயம் போன்ற இடத்தில் ஜர்னலிஸ்ட்ஸ் காலனியை ஏற்படுத்தி பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களுக்கு தனியாக இடத்தை ஒதுக்கி குறைந்த வாடகையில் வீடுகளைத் தரவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்னையில் அறை இருக்கிறது. நீங்கள் பார்க்கலாம்—என்னைப் போன்று வெளியூரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைப் பார்க்க வருகிறார்கள். குடும்பத்தில் இருந்து யாராவது வந்து பார்க்க வேண்டுமென்றால் கூட ஏதோ ஸ்பெஷல் தரிசனம் பார்ப்பது போல் பார்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் தனியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று வீடுகளை ஒதுக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வீடுகளை ஒதுக்க வேண்டும். நாங்கள் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டால் அதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு ஒதுக்கலாம். அந்த வகையில் வீட்டு வசதி வாரியம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு கால கட்டங்களில் இந்தப் பிரச்சினையில் ஏழை மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று அவர்களோடு தன்னை இணைத்துக் கொண்டவர்கள். அதேபோன்று காவல் துறை கான்ஸ்டபிள் மகனாகப் பிறந்தவர் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 11-50)

அவரை நான் கேட்டுக்கொள்வேன். காவல் துறையினர் வீடு கட்டுவதற்காக 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது இப்போது 90 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. காவல் துறையினரின் வீடுகளைப் புதுப்பிக்கவோ அல்லது அவர்களுக்காக புது வீடுகள் கட்டிக் கொடுப்பதிலோ காலதாமதம் ஏற்படுகிறது, ஆகவே இன்னும் அதிகமான தொகையை ஒதுக்கி கட்டப்படுகிற வீடுகளை நேரடியாக வீட்டு வசதி வாரியமே கட்டிக் கொடுக்கக்கூடிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

1978 மார்ச் 9]

திரு. ஜே. ஜேம்ஸ். தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் வைத்திருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையிலே பல்வேறு சாதனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் மகிழ்ச்சி தரக்கூடிய காரியங்கள்தான், நான் அவைகளை வரவேற்கிறேன். அதோடு கூட தொழிலாளர்களுக்காக மத்திய அரசு எந்த அளவிற்கு சட்டங்களைத் திருத்தியமைத்திருக்கிறது என்பதையும் தொழிலாளர்கள் ஏற்கெனவே பெற்றுவந்த போனஸை இழந்து இருந்தார்கள். நெருக்கடி காலத்திலே, மத்திய அரசு அதற்காக சட்டத்தைத் திருத்தியமைத்ததன் வாயிலாக இப்போது முன்பு அவர்கள் பெற்று வந்த குறைந்த பட்ச போனஸ் 8 1/33 சதவீதம் பெறவேண்டுமென்ற முறையிலே கொண்டுவந்திருக்கிறது, அப்படிச் செய்த மத்திய அரசாங்கத்தைப்பற்றி இதிலே அவர்கள் ஒரு வார்த்தை கூறியிருந்தால் இன்னும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். அதோடு கூட கட்டாய சேமிப்புப் பணத்தை, நெருக்கடி கால நிலையில் வைத்திருந்த பணத்தை, திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஆணையிட்டு இருப்பதையும் இதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும். இந்த அரசாங்கம் அப்படி அந்தச் சுட்டிக்காட்டத் தவறிவிட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் இப்படிச் சட்டத்தைத் திருத்தியமைத்தும் கூட பல்வேறு தொழில் நிறுவனங்களில் கட்டாய சேமிப்புப் பணம் இன்னும் தொழிலாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. அதன்மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மீது இது வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றாலும் இனி மேலாவது எத்தனை தொழில் நிறுவனங்கள் கட்டாய சேமிப்புப் பணத்தைக் கொடுக்காமல் இருக்கிறது என்பதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கைகளை, குறிப்புகளைப் பார்க்கிறபோது 1976 ஆம் ஆண்டிற்கும் 1977ஆம் ஆண்டிற்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஏற்பட்ட லாக்அவுட்கள், இழக்கப்பட்ட மேன்டேஸ் லாஸ் எவ்வளவு என்று பார்த்தால் 1976ஆம் ஆண்டிலே 207 லாக்அவுட்டுகளும், 1977 ஆம் ஆண்டு 208 லாக் அவுட்டுகளும் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னால் லாக்அவுட்கள் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அண்மையிலே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை அவர்கள் விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

இதற்கு பல்வேறு செட்டில்மெண்ட்களை அவர்களே முன் நின்று நடத்தியிருக்கிறார்கள், மகிழ்ச்சி தான், இருந்தாலும் கடந்த ஆண்டு ஏன் லாக் அவுட்டுகள் அதிகமாக ஏற்பட்டன என்பதை விளக்கும் கடமை அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977 ஆம் ஆண்டிலே கூட இந்த ஆட்சி 6 மாதம் நடை பெற்றிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்து மேன்டேஸ் லாஸ் என்பதைப் பொறுத்தவரையில் 1976 ஆம் ஆண்டு 10 லட்சமாக இருந்தது, 1977ஆம் ஆண்டு 26 லட்சமாக உயர்ந்திருக்கிறது. ஒருவேளை பல்வேறு செட்டில்மெண்ட்களை இந்த அரசு முன்னின்று ஏற்படுத்தி யிருந்தாலும்கூட, ஏன் கடந்த ஆண்டு மேன்டேஸ் லாஸ் அதிகமாக இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, அதை விளக்க அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள், இதன் மூலம் தொழிலாளர் நலன் அதிகமாக பாதுகாக்கப்படவில்லை என்ற கவலையை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பல்வேறு கமிட்டிகள் போடப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்களுடைய அறிக்கையில் காணப்படு கிறது. அந்தக் கமிட்டிகளில் தொழிலாளர் பிரதிநிதிகள் பொதுவாக இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அதிலும் குறிப்பாக தமிழ்நாடு தேசிய தொழிலாளர் சங்கம் பலம் வாய்ந்த சங்கமாக இந்த மாநிலத்தில் செயல்படுகிறது.

குறிப்பாக டெக்ஸ்டைல் ஒர்க்கர்ஸ், பிளான்டேஷன் ஒர்க்கர்ஸ் போன்ற துறைகளில் உள்ளவர்கள் அதிகமாக அந்தச் சங்கங் களில் இருக்கிறார்கள். இருந்தாலும் கூட அந்தச் சங்கங் களுக்குப் போதுமான ரெப்ரசென்டேஷன் இந்தக் கமிட்டிகளில் இல்லை, கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆக, அந்தக் குறையை நீக்குவதற்கு அரசு முன் வரவேண்டுமென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, பிளான்டேஷன் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் பல்வேறு தொழில் சட்டங்கள் சரிவர நிறைவேற்றப் படவில்லை. குறிப்பாக நாகர்கோயிலில் இருக்கின்ற அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னும் போதுமான வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அதை தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். தொழிலாளர்களுக்கு நிர்வாகம் முதல் கட்டமாக வீடுகள் கட்டிக் கொடுப்பது கடமை என்பதை அரசு உணர வேண்டுமென்று இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தனியார் தோட்டங்கள் பலவற்றில் இன்னும் போனஸ் சம்பந்தமாக செட்டில்மெண்ட் ஆகாமல் இருக்கிறது.

ஆக, இந்த இலாகா அதில் கவனம் செலுத்தி ஒவ்வொரு ஆண்டும் போனஸ் செட்டில்மெண்ட் செய்து கொண்டு, தொழிலாளர்களுக்குக் குறித்த காலத்தில் போனஸ் கிடைக்க தேவையாயான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, காண்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் அண்ட் அபாலிஷன் ஆக்ட் என்று இருக்கிறது. உண்மையில் அரசு நிறுவனங்களில் இந்தச் சட்டம் மீறப்படுகிறது என்பதைக் கூற விரும்புகிறேன். காண்ட்ராக்ட் என்பது ''ஃபிஃப்த் வீல்'' அதாவது தேவையற்றது என்பது என்னுடைய கருத்து. எனவே, அரசு நிறுவனங்களில் காண்ட்ராக்ட் லேபர் முறையை ஒழிக்கவேண்டும். அதற்கும் இந்த இலாக்கா தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, பிரிண்டிங் பிரஸ் வேஜ் ரிவிஷன் கமிட்டி அமைத்திருப்பதாக அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது தொழிலாளர்கள் வாங்குகின்ற வேஜைப் பார்க்கின்றபொழுது நிச்சயமாக அது மிகக் குறைவான வேஜஸ் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள முடியும். (மணியடிக்கப் பட்டது). எனக்கு இன்னும் கொஞ்சம் நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்து நிமிடங்கள் ஆகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: எங்கள் கட்சியிலேயிருந்து நான் ஒருவன் தான் பேசுகிறேன், எனக்கு 20 நிமிஷம் தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, பத்து நிமிடங்கள் தான். இருக்கக்கூடிய நிலைமைக்கேற்றவாறுதான் நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் விரைவில் முடித்துக்கொள்கிறேன். ஷாப் ஆக்ட் சரிவர என்ஃபோர்ஸ் செய்யப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏறக்குறைய 150 காஷுநட் பேக்டரிகள் இருக்கின்றன. அங்கேயுள்ள தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று பலமுறை சொல்லியிருக்கிறோம். அதோடு பல்வேறு சலுகைகளும் உரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மின்வாரியத் தொழிலாளர்கள் எற்கனவே போராட்டத்தில் இறங்கி பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தார்கள். பிறகு ஒப்பந்தம் ஏற்பட்டு அது முடிவுற்றது. பழி வாங்கமாட்டோம் என்று அரசு உறுதி அளித்திருந்தது. ஆனால் தொழிலாளர்கள்

பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். பல தொழிலாளர்கள் ஆங்காங்கு இடம் மாற்றப்பட்டு, அவர்கள் படும் அவஸ்தைகளைப் பார்க்கும் பொழுது நிச்சயமாக உடனடியாக இந்த அரசு பல்வேறு இடங்களுக்கும் இப்படி மாற்றப்பட்டிருக்கின்ற தொழிலாளர்களை ஏற்கனவே அவர்கள் இருந்த இடங்களுக்கு மாற்றிக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகராட்சி மின்சார வாரிய தொழிலாளர்கள் கூடப் பல்வேறு கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் மேற்கொள்கிறார்கள் அதையும் அரசு உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

மாநில பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களது நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பீடித் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் நமது மாநிலத்தில் அதிகம் பேர் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் போனஸ் வழங்குதல், ஆறுநாட்கள் வேலை, ஏழாவதுநாள் ஊதியத்தோடு விடுமுறை, சம்பள உயர்வு போன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப்போராட்டத்தைத் தவிர்க்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சேலத்திலுள்ள ஒரேயொரு க்ளாஸ் பேக்டரி கடந்த இரண்டாண்டு காலமாக மூடியிருக்கிறது. அதனால் 500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு அதற்கு அக்கறையெடுத்து அந்தத் தொழில் நிறுவனத்தைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன.

அடுத்து, டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் எரிமலையாக எப்பொழுது வெடிக்கப்போகிறதோ என்ற சந்தேக நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். ஏற்கனவே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்தம்கூட இப்பொழுது சரிவர செயல்படுத்தப்படவில்லை என்ற குறை இருக்கிறது.

[நண்பகல் 12-00]

பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். உடனடியாக. அவர்களோடு பேசி, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும.

அதோடு கன்னியாகுமரி ஜில்லாவில், எமர்ஜென்சி காலத்தில், ஏறத்தாழ 800 தொழிலாளர்கள் எந்தக் காரணமுமின்றி வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களை

1978 மார்ச் 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

சேரன், சோழன் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணியாளர் விதிகளில் முரண்பாடுகள் different types of rules இருக்கின்றன. அதை ஒரே மாதிரியாக, எல்லாக் கழகங்களுக்கும் பொருந்தக்கூடிய முறையில் மாற்றி அமைக்க வேண்டும்.

நாகர்கோவிலிலுள்ள பகவதி தொழிற்சாலை ஊழியர்களுக்கு நியாயமான சம்பளம் இல்லை—சம்பளத்தை உயர்த்தித்தர வேண்டுமென்று அவர்களும் போராட்டத்தில் குதிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசு உடனடியாக அந்தப் பிரச்சினையைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுகளைப் பொறுத்தவரையில், எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச்கள் எதற்காகத்தானிருக்கின்றன என்று தெரியவில்லை. அத்துறையிலுள்ள ஒரு ஆபீசர் கூறினார், இது ஒரு ஷாக் அப்சார்பராக இருக்கிறது. அரசாங்கத்திற்கும் வேலையில்லாத இளைஞர்களுக்கும் போராட்டம் நடந்துவிடக்கூடாது என்பதற்காக இது இருக்கிறதே தவிர, பல்வேறு சூழ்நிலைகளில், போலீஸை அழைத்துத்தான் இந்தக் குழப்பங்கள் ஏற்படாமல் நாங்கள் தடுக்கிறோம், என்று. ஆகவே, இந்த நிறுவனங்கள் இருப்பதால், நிச்சயமாக யாருக்கும் அரசின் கீழ் வேலை கிடைக்கவில்லையென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஊனமுற்றவர்களுக்கு வேலை கொடுக்கும் நிலையங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு ஏதோ ஓரளவுக்கு வேலை கொடுக்கிறோம். கிராமங்களில் படிப்பு இல்லாது, கல்வித் தகுதியில்லாத எத்தனையோ இளைஞர்கள், ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஒன்றும் செய்யவில்லை. அவர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்க ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாகர்கோவிலில் ஐ. டி. ஐ. ஒன்று இருக்கிறது. அங்கே உள்ள இட நெருக்கடியைப் பார்க்கும்போது, இன்னும் 10 ஐ. டி. ஐ. வந்தாலும் போதாது. 10 ஐ. டி. ஐ. கொண்டுவர முடியாது என்று சொன்னாலும், விளவங்கோடு தாலூகா அல்லது மார்த்தாண்டத்தில் இன்னும் ஒரு ஐ. டி. ஐ. அமைக்க அரசு தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்னும் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், டிஸ்டிரிக்ட் டு டிஸ்டிரிக்ட் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்று வைத்திருக்கிற விதியைத் தளர்த்தி ½ கிலோமீட்டராக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். அதைப் பரிசீலனை செய்ய வேண்டும்

அங்கு குடிதண்ணீர் 'அயர்ன்' கன்டெட்டாக இருக்கிறது. அரசு குழாய்களில்கூட, 'அயர்ன்' கன்டெட்டாக இருப்பதால், அந்தத் தண்ணீரை குடிக்க வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே, நல்ல குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கடைசியாக, வீட்டுவசதி வாரியத்தில், கிராமப் பகுதிகளுக்கு அதிக அக்கறை எடுக்க வேண்டும். கோவாபரேட்டிவ் ஹவுசிங் சொசைட்டிகளிருக்கின்றன. ஆனால், அரசு நிதி வசதி குறைவாகத்தான் கிடைக்கிறது. ஆகவே, அந்தத் திட்டம் கிராமப் பகுதிகளுக்குப் பயன்படவில்லையென்று தெரிவித்துக் கொண்டு அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக திருவான்மியூரில் ஸ்டேட் ஹவுசிங் போர்ட் வீடுகள் இருக்கின்றன. அவற்றைக் கட்டி, 2, 3 மாதங்கள்தான் ஆகின்றன. இதற்குள்ளாகவே தண்ணீர் கசிவுகள் இருக்கின்றன. அவ்வளவு கவனக்குறைவாகக் கட்டப்பட்டிருக்கிறது. மற்ற வசதிகளும் செய்யப்படவில்லை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, எக்கனமிக்கலி வீக்கர் செக்ஷன்களுக்காகத் திட்டம் வைத்திருக்கிறோம். அத் திட்டத்தின் அடிப்படையில், அரிசனங்களுக்கு வட்டியில்லாக் கடன் கொடுக்கிறோம். அந்தத் திட்டத்தை, பொதுவாக, ஜாதி, மத பேதமில்லாமல், பொருளாதார நிலைமையில் பின்தங்கிய அனைவருக்கும் கொடுக்கவேண்டுமென்று அரசைக் கேட்டு, இந்த வாய்ப்பினை அளித்த தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

திரு. நா. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் மற்றும் வீட்டுவசதி, பொது சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் நடைபெறும் மானியக் கோரிக்கைகளில் கலந்து கொண்டு பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்காகப் பெருமைப்படுகிறேன்.

தமிழக அரசு அறிவித்துள்ள நிதிநிலை அறிக்கை தொழிலாளர்களுக்கு, பசித்த வயிறுக்கு பால் வார்த்தது போல் அமைந்துள்ளது. நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டுள்ள அரசை வரகூர் தொகுதி மக்களின் சார்பில் பாராட்டுகின்றேன். பெரம்பலூருக்கு அருகில் உள்ள எறையூரில் சர்க்கரை ஆலை தொடங்கப்பட்டுள்ளது. அதன்மூலமாக பெரம்பலூர் பகுதியில் படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அத்துடன் சர்க்கரை ஆலையின் கழிவுப் பொருள்களைக் கொண்டு ஒரு காகித தொழிற்சாலை ஆரம்பித்தால் சிறப்பான முறையில் இயங்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*1978 மார்ச் 9]* *[திரு. நா. பெருமாள்]*

என்னுடைய தொகுதியில், வரகு வைக்கோல், அதிகமாகக் கிடைப்பதால், காட்போர்டு அட்டை தயாரிக்கும் தொழிற் சாலையை போதிய இடவசதியுள்ள கிழப்புலியூரில் தொடங்கலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரகூர் தொகுதி பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய தொகுதி, அத்தோடு பொருளாதாரத்தில் மிகவும் பின் தள்ளப்பட்டு வறுமையின் கோட்டுக்குக் கீழே தள்ளப்பட்டு வாழ்பவர்களே அதிகம். வருடத்தில் பாதி நாட்கள், புன்செய் சாகுபடி செய்பவர்கள் வேலையின்றி உள்ளார்கள். தீப்பெட்டி, பிளாஸ்டிக், எவர்சில்வர், குங்குமம் போன்றவைகளைத் தயாரிக்கும் சிறு குடிசைத் தொழில்களை எனது தொகுதியின் பல பாகங்களில் ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1935 முதல் ஏறத்தாழ 40 ஆண்டுகளாக ஜிப்ஸம் வெட்டி எடுக்கும் தொழில் எனது தொகுதியில் புறம்போக்கு, பட்டா நிலங்களில், சுமார் 900 ஏக்கர் பரப்பில் ஒதியம், காரை, தெரணி, பாளையம், நம்பக்குறிச்சி, ஊட்டத்தூர், அழந்தலைப்பூர், சிறுகளப்பூர், கருடமங்களம் போன்ற இடங்களில் தனியார் கம்பெனிகள் எடுத்து நடத்தி வந்தன. குறிப்பாக அரியலூரில் 6/2 இராஜாஜி நகர் என்னும் விலாசத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி மைனிங் ஒர்க்ஸ் என்னும் தனியார் கம்பெனி, காரை, ஒதியத்தை மையமாகக் கொண்டு கடந்த 30 ஆண்டுகளுக்குமேல் சுமார் 10,000 தொழிலாளர்களைக் கொண்டு நடந்து வந்த ஜிப்ஸம் வெட்டி எடுக்கும் சுரங்கத் தொழிலை கடந்த 14-11-76 முதல் நிர்வாகம் நிறுத்திவிட்டதாகத் தெரிகின்றது.

மேற்படி நிர்வாகம் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான முன் அறிவிப்பு இல்லாமலும் நோட்டீஸ் கொடுக்காமலும், தொழிலை நிறுத்தியுள்ளார்கள். இதனால் 5,000 குடும்பங்கள் வரை பாதிப்பு அடைந்துள்ளது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் புகார் மனுக்கள் அனுப்பியிருப்பதாகவும் தெரிகின்றது. கல்லக்குடியில் அமைந்துள்ள டால்மியா சிமெண்டு தொழில் ஆலைக்குத் தேவையான மூலப் பொருளாகிய ஜிப்ஸம் எனது பகுதியில் இருந்துதான் கிடைத்து வந்துள்ளது. தற்போது அரியலூரில் அமைந்துகொண்டு இருக்கின்ற அரசு சிமெண்ட் ஆலைக்கும் இப் பகுதியின் ஜிப்ஸம் பெரும் அளவிற்கு தேவைப்படுகின்றது. தொழிலை மூடியுள்ள திருச்சிராப்பள்ளி மைனிங் ஒர்க்ஸ் கம்பெனிக்கு சுரங்கம் வெட்டி எடுக்கும் லீஸ் 1986 வரை உள்ள தாகத் தெரிகின்றது. 1986 வரை லீஸ் இருந்தும் தொழிலை மூடியுள்ள நிர்வாகம் இதுநாள் வரை மீண்டும் திறந்து தொழிலை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. எனவே, நமது அரசு மேற்படி நிர்வாகத்தினர் மீண்டும் தொழிலைத் தொடர்ந்து நடத்தி பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பினைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி நகரமே இல்லாத கிராமங்கள் அமைந்த ஒன்றுதான். இங்குள்ள மக்கள் சுகாதார கேடான நிலையில் சிறு, சிறு குடிசைகளில் வாழ்ந்து வருகின்றார்கள். சமீபத்தில் இளந்தங்குழி, மருதடி, பெண்ணகோணம் போன்ற கிராமங்களில் சுமார் 200-க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சேதமாகி மக்கள் வீடிழந்து குடியிருக்க வசதியின்றித் தவிக்கின்றார்கள். எனவே, நமது அரசு தீயினால் வீடுகளை இழந்து தவிக்கின்றவர்களுக்கும், குறிப்பாக ஏழை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வீடுகள் கட்டுவதற்கு கடனுதவி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

லப்பைக் குடிக்காடு, காரை ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை வெளி நோயாளிகளும் வந்து தங்கி மருத்துவ சிகிச்சை பெறத் தக்க வகையில் பொது மருத்துவ மனையாகவும், செட்டிக் குளத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையையும் பொது அரசு மருத்துவ மனையாக ஆக்க வேண்டுமென்றும், மேலும் புதிதாக குன்னம், வேப்பூர், பிலிமிசை, துக்களத்தூர் ஆகிய இடங்களில் சிறு மருத்துவ நிலையங்களையும் ஆரம்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன். நமது நாடு சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் பாதிக்கு மேற்பட்டவர்கள் குடிநீர் வசதியின்றி அவதிப்படுகின்றார்கள், என்றால் இதைவிட வேறு என்ன கொடுமை இருக்க முடியும்?

கிராமங்களை உயிர்நாடியாகக் கொண்டு கிராம மக்களின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து குடிநீர் வசதி இல்லாத கிராமங்களே தமிழகத்தில் இருக்கக் கூடாது என்று நமது அரசு செயல்படுகிறது. இதுவெல்லாம் புரட்சிகரமான திட்டமில்லையா?

எனது வரகூர் தொகுதியில் ஒருபகுதி தவிர மற்றப் பகுதிகள் இதுவரை குடிநீர் வசதி இல்லாமல்தான் இருந்து வருகின்றன. பல கிராமங்களில் கிணறுகளே இல்லாமலும் உள்ளது. பல கிராமங்களில் கிணறுகள் இருந்தும் குடிநீருக்குப் பயன்படாமல் உள்ளது. பாதுகாக்கப்பட்ட நீர்த் தொட்டிகள் உள்ள கிராமங்கள் மிகவும் குறைவே. எனது தொகுதியில் பல இடங்களில் எங்கு தோண்டினாலும் உப்பு நீர்தான் கிடைக்கின்றது. உதாரணத்திற்கு ஆலத்தூர் ஒன்றியத்தில் கொட்டரையையும், அதனைச் சுற்றியுள்ள ஆதனூர், பிலிமிசை, குரும்பாபாளையம் போன்ற பல கிராமங்களைச் சொல்லலாம். இதைப்போன்று வேப்பூர் ஒன்றியத்தில், அந்தூர், கிளியூர், புதுவேட்டைகுடி, பெரிய வெண்மணி, ஒதியம், கொளப்பாடி, சிறுகன்பூர் போன்ற கிராமங்களையும் சொல்லலாம்.

ஆலத்தூர் ஒன்றியத்தில் உள்ள அனேத்து பல கிராம மக்கள் 2, 3 மைல் நடந்து சென்று மருதையாற்றில் தான் தண்ணீர் எடுக்க வேண்டும். வேப்பூர் ஒன்றியத்தில் மேலே கூறப்பட்ட

1978 மார்ச் 9] [திரு. நா. பெருமாள்]

கிராமங்களில் உள்ள மக்கள் மழைக்காலத்தில் தண்ணீரை குட்டைகளில் தேக்கி வைத்து அதைத்தான் குடி தண்ணீராகப் பயன்படுத்துகின்றார்கள். இப்பகுதி மக்கள் இன்றுவரை நல்ல குடி தண்ணீர் இல்லாமல்தான் கஷ்டத்தோடு வாழ்கின்றார்கள். இவர்களது குறையைப் போக்க அரசு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஒரு பெரிய திட்டத்தை உருவாக்கி குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் எங்கள் தொகுதியில் எங்களுக்கு வீட்டு வசதி கிடையாது. அதனால் வீட்டு வசதி வாரியம் அமைக்கும் வீடுகளில் ஒரு பகுதி ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு வீடு ஒதுக்கி எம்.எல்.ஏ.க்கள் அலுவலகம் நடத்த வசதி செய்து தர கேட்டுக் கொள்கிறேன். இந்த மான்யகோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன்.

[பிற்பகல் 12.10]

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்று அவை முன்பு தமிழக அரசின் சார்பாக தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, வீட்டு வசதித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் சார்பில் அளிக்கப்பட்டு இருக்கும் மானிய கோரிக்கைகளை, இந்திய தேசிய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்று, என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த டிபார்ட்மெண்டைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மிகப் பொருத்தமாக உள்ள ஒருவரிடத்திலே அந்த அமைச்சர் பொறுப்பை ஒப்படைத்து இருக்கிறார்கள். அவர்கள் மிகச் சீரிய முறையில் நாட்டை வாட்டி வதைத்துக்கொண்டு இருந்த குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, அரசாங்கத்தின் துணையோடு, அந்தப் பிரச்னைகளை தீர்த்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் நேரடியாகக் கண்டவன் என்ற முறையில் நான் அந்த மக்களின் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, அதே வேகத்துடனும், உற்சாகத்துடனும், விறுவிறுப்போடும் அவர்கள் மேலும் பணியாற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வயதை மறந்து—அவருக்கு வயது 62 என்று சொன்னார்—அவர் இளைஞர் போல் ஓடியாடி வேலை செய்கிறார்கள் என்பதைக் காணுகிற போது நான் மிகமிக மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காகப் பாராட்டுகிறேன். அவர் ஒரு முன் மாதிரியாக செயல்படுகிறார். சென்ற இடங்களில் எல்லாம் எந்தப் பிரச்னையாக இருந்தாலும், அத்தனை அதிகாரிகளையும் அழைத்துப்பேசி, கலந்தாலோசித்து, அங்கேயே தீர்வு காண முடியும் என்றால் சொல்கிறார்கள், இல்லை என்றால் இது நடைமுறைக்கு ஒத்து

வராது என்று சொல்லிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நல்ல முடிவுகளை அவ்வப்போது எடுப்பதன் வாயிலாக மக்கள் மத்தியில் ஒரு நல்ல எண்ணத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் பிரச்னையைப் பொறுத்த வரையில், பொறுப்பேற்றுக்கொண்ட மிகக் குறுகிய காலத்திலேயே, அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு, அங்கே அமைதி நிலவும் அளவிற்கு நேர்த்தியான முறையில் அவர்கள் செயல்பட்டு வந்து இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பிரச்னைகளிலும் நேரடியாகத் தலையிட்டு, தன்னுடைய நீண்ட கால அனுபவத்தின் காரணமாக அவற்றை சுமுகமாகத் தீர்த்து வைத்து இருக்கிறார்கள். அந்த வகையில் அவர் அறிவாற்றலோடு செயலாற்றி, தமிழகத்தில் 'இன்டஸ்டிரியல் பீஸ்' ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லக் கூடிய அளவிற்கு நிலைமைகளை உருவாக்கி இருப்பதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அவர்களுக்குக் கோபம் வரும் என்று சொல்வார்கள், ஆனால் அவர்கள் பெற்றுள்ள நீண்டகால அனுபவத்தின் காரணமாக பொறுமையோடு அவற்றை அடக்கிக்கொண்டு, தொழிலாளர் நலனுக்காக உழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நான் சொல்லிக்கொள்வேன், எப்படி மது விலக்குப் பிரசாரம் செய்வதற்காக, படம் எடுத்து மக்களிடையே காட்டவேண்டும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு ஒன்றை அறிவித்தார்களோ அதே போல் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் உள்ள நல்லுறவை, மானேஜ்மென்டிற்கும், ஓர்க்கர்சுக்கும் உள்ள ஒற்றுமை உணர்வை, அவர்களிடம் ஏற்படும் பிணக்குகளை தவிர்க்க, ஒரு தொழில் நிறுவனத்தில் அமைதி நிலவிடச் செய்யும் வகையில், திரைப்படங்கள் எடுத்து, அதைத் தொழிலாளர்கள் மத்தியில் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வாரியத்தைப் பொறுத்தவரையில், எங்கே பார்த்தாலும் அந்தப் பிரச்னை இருந்தாலும், அந்தத் துறை அதிகாரிகள் மிக நல்ல முறையில் செயல்படுகிறார்கள் என்ற விவரத்தை மிகவும் மகிழ்ச்சியாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் எந்த அளவிற்கு விரைவாகச் செயல்படுகிறார்களோ அந்த அளவிற்கு அந்தத் திட்டத்திற்கு இந்த நிதி போதும் போதாது என்று சொல்லி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து செயல்படுகிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் 'பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் மற்றத் துறை அதிகாரிகளும் செயல்பட்டால் அரசுக்கும், மக்களுக்கும் இடையே நல்ல உறவுமுறை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 9] [திரு. கே. கந்தசாமி]

குறிப்பாக, என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதி மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதி ஒரு மலைப்பகுதி. அந்தப் பகுதியில் அவர்கள் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்து, ஆங்காங்கே செய்ய வேண்டிய திட்டங்களுக்காக உத்தரவு போட்டார்கள். அங்கே காலரா போன்ற கொடிய நோய்கள் பரவுவதால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க உத்தரவு போட்டார்கள். அதற்காக ஆண்டிப்பட்டி மக்கள் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). பேச ஆரம்பித்த உடனே மணி அடித்தால் எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்டது 5 நிமிடம் தான். அதை நினைவு படுத்துகிறேன். இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு கே. கந்தசாமி: நல்ல காரியங்களைச் சொல்ல வேண்டும். அதே நேரத்தில் சில குறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

இ.எஸ்.ஐ. மருத்துவமனை செயல்படுகிறது. ஆனால் அங்கே சரியாக மருந்து கொடுக்கவில்லை; நானே சில தொழிலாளர்களை அட்மிட் செய்திருக்கிறேன்.; அவர்களுக்கு சரியான ட்ரீட்மென்ட் கிடையாது; டாக்டர்கள் ''நெக்லட்டாக'' இருக்கிறார்கள்; அவர்களும் இந்த நாட்டு மக்கள்தான்; அவர்களை மாற்றான்தாய் மனப்பான்மையில் நடத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் பசுமலையில் மகாலட்சுமி மில்ஸ் இருக்கிறது. ஆறு மாதமாக அந்த நிறுவனத்தில் பிடித்தம் செய்த பணத்தை கட்டாததினால் அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு இந்த இ.எஸ்.ஐ. மருத்துவ மனைத் திட்டத்தின் பயன் கிடைக்காமல் போகிறது. அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்குளம் வட்டத்தை ..... (மணியடிக்கப்பட்டது) செகண்ட்கிரேடாக வைத்திருப்பதால் அங்கிருக்கிற மக்களுக்கு திட்டத்தின் நன்மைகள் சரிவர கிடைக்க வழியில்லாமல் இருக்கிறது.

அடுத்தபடியாக ''செட்டில்மென்ட் ஆஃப் பைனல் அக்கவுண்ட்ஸ்', இருக்கிறது. வேலையிலிருந்து நின்று விட்ட பிறகு அவர்களுடைய கணக்குகளை உடனடியாகத் தீர்த்துவிட வேண்டும். பிராவிடன்ட் பண்ட் கணக்கு முடிப்பதற்கு ரொம்ப காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் டிலே ஏற்படுகிறது. ''டிஸ்பியூட்ஸ்'' வரும்போது அவைகளை உடனடியாக ''செட்டில்'' செய்துவிட வேண்டும்: டிலே ஆகக்கூடாது.

அடுத்தபடியாக, அரசு ஊழியர்களுக்கு அவர்கள் பணியிலிருக்கும்போது இறந்துவிட்டால் 10,000 ரூபாய் குடும்ப பாதுகாப்பு நிதி வழங்கப்படுகிறது. அதைப்போல தொழிலாளர்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். பணிக்காலத்தில் தொழிலாளர்கள் ஒரு பங்கு, முதலாளிகள் ஒரு பங்கு செலுத்தி, அந்தப் பணத்திலிருந்து தொழிலாளர் ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்கு பாதுகாப்பு நிதியாக 10,000 ரூபாய் வழங்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். புரட்சித் தலைவரின் ஆட்சியில் இந்தப் புரட்சிகரமான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

ஜக்கம்பட்டியில் ஒரு காலனி கட்டித்தர வேண்டும். அங்கே ஏழை கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு, நேரமில்லாததால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு சு. பழனிச்சாமி : தலைவரவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு அவை முன் வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீதுஎன்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம் நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர் வர்க்கம்தான் என்று சொல்வது தவறாகாது. அவ்வாறு கருதப்படுகின்ற தொழிலாளிகளுக்கு, தொழில் முடக்கம் ஏற்படாமல், பணிகளைச் செவ்வனே செய்வதற்கு சட்டங்களை அழுத்தம் திருத்தமாக ஓட்டைகளை அடைத்து முற்றுப்புள்ளி வைக்கின்ற அளவில் உருவாக்கினால் தான் நாட்டில் அனுதினம் போராட்டங்களும் கிளர்ச்சிகளும் நடப்பதை தவிர்க்கவும், தொழிலாளர்கள் நிம்மதியாக பணிபுரியவும், உற்பத்தியைப் பெருக்கி நாடு முன்னேறவும், பொருளாதாரம் சீர் பெறவும் வழி செய்வதாக அமையும் என்று நமது அரசையும் மத்திய அரசையும் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவரின் ஆட்சிக்காலத்தில் சுமார் 30 தொழில் நிறுவனங்களில் வேலை நிறுத்தமும், வேலை நிறுத்தம் செய்யப்போவதாகவும் இருந்த தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வையும் தொழில் தகராறு பிரச்சினைகளையும் தீர்த்து வைத்திருப்பதைப் பாராட்டியே தீரவேண்டும்.

மேலும் மூடப்பட்டிருந்த நிறுவனங்களில் 15 நிறுவனங்கள் திறக்கப்பட்டிருப்பது புரட்சித் தலைவரின் ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் விவசாய தொழிலாளர்கள், கைத்தறித் தொழிலாளர்கள், கடைகளில் வேலை செய்பவர்கள், பாரம் தூக்கும் தொழிலாளர்கள் இன்னும் அனைத்துத் தொழிலாளர் வர்க்கங்களுக்கும் ஊதிய நிர்ணயம் செய்வது தலையாய கடமையாகும்.

அதே நேரத்தில் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் வயது வரம்பு வைத்திருப்பதை அதிகப்படுத்த வேண்டும். இல்லையேல் அதற்குள்ளாக இண்டர்வியூ அனுப்பி வேலைக்கு எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் காப்புறுதி மருந்தகங்கள் கட்டவும், பணியாளர்கள் இல்லங்கள் கட்டவும் அரசு உரிய நிலங்களைக் கையகப்படுத்தக் கருதப்பட்டுள்ளதில் மேட்டுப்பாளையமும் ஒன்று என்று குறிப்பிட்டதை தொகுதி மக்கள் சார்பாக வரவேற்கிறேன்.

தொழிலில்லாமல் அல்லலுறும் ஏழை மக்களுக்கு வாழ்வளிக்க என் தொகுதியில் சர்க்கரை ஆலை ஒன்றையும் சிறு தொழில்களை அமைக்கவும் இந்த அரசு முயற்சி செய்யவேண்டுமென்றும், கைத்தறித் தொழில் நசுங்கிப்போகும் நிலையில் உள்ளதால் அந்த தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் அரசு முன்வர வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பளிக்க இந்த அரசு முயற்சி எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர்களுக்குக் குறைந்த வாடகையில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் வரவேற்கத்தக்கது. மேட்டுப்பாளையம் தொகுதியில் வீடு கட்டுவதற்காக 10 ஏக்கராவை ஹவுசிங் போர்டு தேர்ந்தெடுத்து ஹையர் பர்சேஸ் முறையில் ஏற்பாடு செய்துள்ளதை அமைச்சருடன் நானும் நேரில் சென்று பார்த்தேன். இத்திட்டத்தை உடனடியாக முடித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வீட்டு வசதி செய்வதற்காக 3 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருப்பதை வரவேற்கிறேன். ஊரக வீட்டு வசதித் திட்டத்தில் 25 சதவிகிதம் அரிசனங்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது முக்கியமானதாகும். காவலர்களுக்கு வீடுகட்டுவதற்கு ரூ. 90 லட்சம் ஒதுக்கி இருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அரசாங்க அலுவலகங்களைத் தனியார் இடங்களில் அதிகமான வாடகை கொடுத்து வைத்திருப்பதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

பல இடங்களில், நல்ல வருவாய் உள்ள இடங்களில் தனியார் கட்டிலாபம் சம்பாதிப்பதை அரசே கட்டிவாடகைக்கு விடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குடிநீருக்கு 5 லட்சம் ரூபாய் செலவு செய்துள்ளது. இன்னும் குடி நீர் இல்லாத இடத்திற்கு வசதி செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். குடி நீர் திட்டத்தைச் சிறப்புடன் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அது தவிர ஷாப்பிங் சென்டர் ஒன்று கட்டினுல் அரசுக்கு நல்ல வருமானம் வரும். ஆகவே, அரசு அதை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சு. பாலன்: அவைத் தலைவரவர்களே, இன்று வீட்டு வசதி வாரியத்தின்மீது பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பு பெற்றமைக்காக நான் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன். முதலில் நான் சொல்லிக் கொள்கிறேன். வீட்டு வசதித்துறை அமைச்சரவர்கள் எனக்கு நீண்ட நெடுங்காலமாகத் தெரிந்தவர்கள். என்னுடன் பழகியவர்.

பெரம்பூர் பகுதி ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள், ஹரிஜனங்கள், குடிசை வாழ் மக்கள் ஆகியோர் வாழ்கிற பகுதியாகும் என்பது அமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும். என்னுடைய தொகுதி 7 வட்டங்கள் கொண்டது. அந்த 7 வட்டங்களிலே 6 வட்டங்கள் குடிசை மாற்றுப் பகுதியும் வீட்டு வசதி வாரியமும் உள்ளடங்கிய பகுதி என்பதால் எனக்குப் பேச பொதுவாக ஒரு நல்ல வாய்ப்பு கொடுத்ததற்கு தாங்கள் ஒதுக்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நான் சொல்கிற காரணத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்று நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1945-ம் ஆண்டு தொழிலாளருக்கான வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள். அப்படி திரு. வி. க. நகர், சர்மா நகர் போன்ற இடங்களில் தொழிலாளர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் இப்போது மிக மோசமான நிலையிலே அவைகள் விரிசல் விட்டு இடிந்து விழக்கூடிய தன்மையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள் எந்த நேரத்திலே அந்த வீடு இடிந்து விழுமோ என்ற பயத்தில் இருந்துகொண்டிருக்கிறுர்கள். அவைகளை இடித்துத் தள்ளிவிட்டு புதிய வீடுகள் கட்டி அந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கித்தரவேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக கோரிக்கை விடுத்திருக்கிறுர்கள். அந்தக் கோரிக்கையை

நிறைவேற்றுகிற வகையில் அவர்களது அந்த மாதிரியான வீடுகளை புதுப்பித்துத் தரவேண்டுமென்றும் அந்த வீடுகளை அவர்களுக்குச் சொந்தமாக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் பல இடங்களில் வீட்டு வசதி வாரியத்தால் ஆங்காங்கே குடிசைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் நீண்ட நெடுங்காலமாக முன்னேற்றம் அடையாமல் அவர்கள் குடிசைகளிலேயே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அங்கெல்லாம் துப்புரவுப் பணி, பாதை வசதி, சாக்கடை வசதி, குடி தண்ணீர் வசதி ஆகிய வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வசதிகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று வீட்டுவசதி வாரியத்தை அவர்கள் கேட்டால் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் 'நாம் ஏன் இந்த வீட்டு வசதி வாரியத்தில் சேர்ந்தோம்' என்பதே. இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே வீட்டு வசதி வாரியம் இதுபோன்ற வசதிகளைச் செய்து தர முடியாவிட்டால் அவைகளை சென்னைக் கார்ப்பரேஷனிடம் சேர்த்துவிட்டால், அவர்கள் இப்படிப்பட்ட வசதிகளைத் தரத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளை கார்ப்பரேஷனுடன் சேர்த்துவிடுமாறு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1967-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் பொறுப்பேற்றது. அப்போது தீய சக்திகள் சென்னையில் ஆங்காங்குள்ள குடிசைகளுக்கு தீ வைத்தனர். அதைக் கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் மனம் கலங்கி குடிசைப் பகுதிகளைப் பார்வையிட்டு உடனடியாக வீட்டுவசதி வாரியம் மூலம் தீப்பிடிக்காத ஓட்டு வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். அதன்மூலம் தீய சக்திகளின் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டன. இதனால் ஏழை மக்கள் வீடுகள் எரியாது காக்கப்பட்டது.

பல பகுதிகளிலும் என் தொகுதியில் அப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டு அங்கே எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளை எல்லாம் உடனடியாக சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்து எல்லா வசதிகளையும் பெற வாய்ப்பளிக்கவேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்குப் பிறகு முதல்வர் பொறுப்பை ஏற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் 1970-ம் ஆண்டு குடிசைமாற்று வாரியத்தை ஏற்படுத்தினார்கள். அதன் மூலம் சென்னையில் பலபகுதிகள், பல குடிசைப்பகுதிகள் கோபுரங்களாக மாற்றப்பட்டு அவ்வப்போது வெள்ளத்தாலும் தீயினாலும் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றினார்கள். 1975-ம் ஆண்

டிலும், 1976-ம் ஆண்டிலும் சென்னையில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் அந்தக் கட்டடங்களில் குடியேறியதினுல் அவர்கள் எல்லாம் காப்பாற்றப் பட்டார்கள். இல்லையேல் சென்னையிலும் பலபேர்கள் வெள்ளத் தால் அடித்துச் செல்லப்பட்டிருப்பார்கள். அந்த மக்கள் தற் போது டாக்டர் கலைஞர் அவர்களை மனமார போற்றுகிறுர் கள், புகழ்கிறுர்கள்.

தற்போது பொறுப்பேற்றுள்ள அ.இ.அ.தி.மு.க. அரசு ஒன் பது மாத காலமாக இந்தப் பகுதிகளுக்கு என்ன செய்தது என் பதை நினைத்துப்பார்க்கும்போது ஒன்றுமே செய்யவில்லை என்பது தெரிகிறது. இதற்காக 1977-78-ல் 100 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் எவ்வளவு செலவிடப்பட்டது என்பது தெரியவில்லை. இந்த ஆண்டும் 100 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை 125 குடிசைப் பகுதி களுக்குப் போதுமா என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும், 50 குடிசைப் பகுதிகளுக்குத்தான் அது போதுமானதாகயிருக்கும். ஆகவே, குறிப்பிட்ட சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து குடிசை மாற்றுவாரியம் மூலம் அடிப்படை வசதிகளைச்செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றவைகளைப் பொறுத்து அவற்றிற்கு மாநகராட்சிக்கு நிதி உதவி செய்து அப்படிப்பட்ட அடிப்படை வசதிகளைச் செய்து தர இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். 1976-ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக் கள் தங்கள் குடிசைகளையும் சொத்துக்களையும் இழந்து அவதிப் பட்ட நேரத்தில் அப்போது ஜனுதிபதி ஆட்சியில் பொறுப்பேற்ற குடிசைமாற்று வாரியத் தலைவர், அவர்களை மாடி வீடுகளில் குடி யேற அனுமதித்தார். இன்றைய அரசு அவர்களை வெளியேற்ற இருக்கிறுர்கள். அப்படிப்பட்டவர்களை வெளியேற்றுமல் இருக்க வேண்டும். போட்டோ எடுத்தவர்கள்தான் குடியேறியிருக்கிறுர் கள். ஆகவே அவர்களை வெளியேற்றக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்தபடியாக, வியாசர்பாடியில் பர்மா தமிழர்களுக்கு வீடு கள் கட்டித்தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக் கிறுர்கள் என்று கேள்விப்படுகிறேன். வீடு கட்டித் தருவதாக பர்மாவிலிருந்து வந்திருப்பவர்களுக்கு வாக்குறுதி தந்திருக்கிறுர் கள். ஆனுல் அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்குத் தனி வீடுகள் கட்டித்தரப்படவேண்டும்.

கூடை முடையும் குடும்பங்கள் அங்கு ஏராளமாக இருக் கின்றன. அவர்களுக்கும் வீடுகள் கட்டித் தர வேண்டும். (மணி யடிக்கப்பட்டது.)

கன்னிகாபுரத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் தனி வீடுகள் ஹரிஜனங்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. முதலில் ரூ.10 வாடகை என்று சொன்னார்கள், இப்போது ரூ.40 வாடகை வாங்குகிறார்கள். இப்படி பல ஆண்டுகளாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கித் தரவேண்டும்.

வியாசர்பாடியில் உள்ள அசோக்தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் கட்டப்பட்டுள்ள வீடுகள் இரண்டாயிரம் உள்ளன. அவர்களுக்கு அலுவலகம் செல்ல போக்குவரத்து வசதியில்லை. எனவே அங்கு போக்குவரத்து வசதி, பஸ் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு திரு மாரிமுத்து பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.)

(பிற்பகல் 12-30)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் சம்பந்தமான இந்த கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல நான் முன்வந்திருக்கிறேன்.

பொதுவாக தொழில் துறை வளர்ச்சி ஏற்படுகின்ற பொழுது, தொழிலாளர்களுடைய நலன்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தொழிலாளர்களிடையே தொழிற்சங்கங்கள் அமைத்து போராடுகின்ற பொழுது, அவர்களுடைய உரிமைகள் பறிபோகாமல் காப்பாற்ற வேண்டி, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்கின்ற ஒரு கொள்கையை அமுலுக்கு கொண்டுவர வேண்டும். இது பல வருடங்களாக வற்புறுத்தப்பட்டு வந்தாலும் கூட இந்தக் கொள்கையை அமல் நடத்துவதில் ஏன் காலதாமதம் ஆகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசு இதில் கவனம் செலுத்தி-இதற்கு முன்னால் இருந்த அரசும் இதை சிந்தித்து இருக்கிறது, அதைத் தொடர்ந்து ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்கின்ற கொள்கையை அமல் நடத்தினால், தொழிலாளர்களிடையே பிளவு ஏற்படாமல் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்திப் பெறுவதற்கும், நிர்வாகத்தினிடம் இருந்து வற்புறுத்தி பெறுவதற்கும் வாய்ப்பு அதிகரிக்கும் என்ற காரணத்தால் இந்தக் கொள்கையை அமலாக்குவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இந்தப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள் எதிலும் எந்த வேலையும் நடைபெறவில்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்

கள். அரசிடம் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது, இந்தப் பிரச்னையை மிக விரைவில் ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும். அவர்கள் பேரில் பழி வாங்கும் எண்ணமோ அல்லது வேறு ஏதாவது கோப தாபமோ கொள்வது சரியான பலனை தராது எப்படி இருந்தாலும் அவர்களைக் கொண்டு அரசு அலுவலகங்களை அரசாங்க அலுவல்களை நடத்தியாக வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு காண அரசு முன் வர வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, நாட்டில் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் சம்பந்தமாக பல தொழிலாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இருந் தாலும் இன்னும் எந்தெந்த தொழிலில் உள்ளவர்கள் இந்த குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்படவில்லையோ அவர் களுக்கு இந்த குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்ய அரசு முன் வரவேண்டும். நகரங்களில் இப்போது பல பொருட்களை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்கின்றோம். அப்படி உற் பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்ய வேண்டியதும் அவசியம் என்கின்ற நிலைமை வருகின்ற நேரத்தில் அதிகமான கடைகள் ஏற்படுகின்றன. இவைகளில் இப்படிப்பட்ட கடை களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் ஏதாவது குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்கின்ற சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். நாட்டில் பல்வேறு இடங்களில், உற்பத்தியா கின்ற பொருட்களை விற்பனை செய்யக்கூடிய இடங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களும், இப்படிப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் கடைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர் களுக்கு, அது போன்று ரைஸ் மில் போன்றவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும், அதற்கான சட்டத்தை அமல் படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்கள் மிக அதிகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை மிக வும் மோசமாக இருந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோ ருக்கும் தெரிந்த உண்மை. அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், இன்றைக்கு இருக்கின்ற சமூக தேவைகளைக் கருத்திற் கொண்டு பார்த்தால் அவர்கள் பெறும் கூலி போதாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பல்வேறு இடங்களில் இவர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர் ணயம் செய்யப்படவில்லை.

தாசில்தார் போன்ற அதிகாரிகளுக்கு இதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் இதற்கென்று தனியாக அதிகாரிகளை நியமித்திருந்தாலும் கூட, கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு என்று ஸ்தாபன அமைப்பு அதிகமாக இல்லாத நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. பெரும்பான்மையான இடங்களில்

எந்தவிதமான அமைப்பும் கிடையாது. நகர்ப்புறத்தை எடுத்துக் கொண்டால் எப்படியாவது இதைப் பெற்று விடுவார்கள். ஆனால் பெரும்பான்மையான இடங்களில் விவசாயிகளுக்கு ஸ்தாபன அமைப்பு கிடையாது. பல இடங்களில் விவசாய சங்கம் அமைக்கவில்லை. இப்படிப்பட்ட இடங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி கிடைக்கக் கூடிய நிலைமையில்லை. கிராம மட்டத்தில் இது அதிகமாக இல்லை. இதற்கென்று அரசு அதிகாரிகள் ஏதாவது ஒன்றும் செய்யவில்லை என்றாலும் தனிப்பட்டவர்கள் ஆனரரியாக—நடுநிலையாளராக இருந்து இதற்கென்று முன்வருகின்றவர்களை போட்டு, குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அவ்வப்போது மில்களிலேயும், தொழிற்சாலைகளிலேயும் தொழிற் தகராறுகள் ஏற்பட்டு அவைகள் மூடப்படுகின்ற, மூட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

இப்போது டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலை மூடப்பட்டு இருக்கின்ற நிலைமையைப் பற்றி எனக்கு முன்னாலே பேசப்பட்டிருக்கிறது. ஆகவே, இம்மாதிரி தொழிற்சாலைகள் மூடப்படுகின்ற போது, இந்தத் தொழிற்சாலைகளிலே இருக்கின்ற தொழிலாளர்கள் பணி இழந்து சிரமப்படக் கூடிய ஒரு நிலைமை இருப்பதால், இந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த முன்வருவது மிக முக்கியமானது. அது கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாலே இந்தக் கொள்கை அமலாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இப்போது அந்த நிலைமை கைவிடப்பட்டு இருக்கிறது. அப்படி கைவிடுவது சரியல்ல. எனவே, பழைய முறைப்படி இப்படி மூடப்படுகின்ற தொழிற்சாலைகளை, தொழிலாளர்களுக்கு நல்ல விளைவிக்கக்கூடிய வகையிலே அரசே ஏற்று நடத்த முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த டெம்பரரியாக வேலை செய்யக்கூடிய தற்காலிக ஊழியர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் 10, 15 ஆண்டுகளாக அது அரசுத் தரப்பாக இருந்தாலும் சரி, தனியார் நிறுவனமாக இருந்தாலும் சரி, அப்படிப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறவர்களுக்கு எந்தவிதமான உத்திரவாதமும் கிடையாது. எந்த நாளிலும் அவர்கள் அனுப்பப்படக் கூடிய ஒரு நிலைமையிலே இயங்கிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான உத்திரவாதமும் இல்லை. எனவே, அவர்களுக்கு உத்திரவாதம் கொடுக்கக்கூடிய அளவிற்கு, அவர்களுடைய பணிகள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அவர்கள் எல்லாம் எத்தனை காலத்திற்கு நிரந்தரமில்லாமல் வேலை செய்து கொண்டு இருக்க முடியும் என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, நிரந்தரமல்லாத, பல ஆண்டுகளாகத் தற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டு வரும் ஊழியர்கள், அவர்கள் அரசு நிர்வாகத்திலே இருந்தாலும், தனியார் நிறுவனத்திலே

இருந்தாலும் அவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்பதை, அதற்கான உத்தரவை இந்த அரசு பிறப்பித்து, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்குப் பல்வேறுன சலுகைகள், தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னாலும்கூட, அவர்களுக்கு இன்னும் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. அவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கப்பட வேண்டும். முன்னால், உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 சக்கர வண்டிகள் கொடுக்கப்பட்டன. அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, உடல் ஊனமுற்றவர்களுக்கு இம்மாதிரியான வண்டிகள் அளிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களிடையே அதிகப்படியான வேலைவாய்ப்புக்களைப் பெருக்குவதற்காக இன்றைய தினம் '' அப்பிரன்டிஸ்ஷிப் '' என்ற பயிற்சி கொடுக்கப்படுகிறது. அப்படி அதிகப்படியான பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைக்கான உத்திரவாதம் கிடையாது. அவர்கள் இன்றைக்குப்பயிற்சி பெற்றும் வேலையில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு வேலை செய்யக்கூடிய திறன் இருக்கிறது ; அதற்கான பயிற்சியும் இருக்கிறது. ஆகவே, இம்மாதிரிப்பயிற்சி பெற்றவர்களுக்கும் அதிகப்படியான வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அவுசிங்கைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள். திருவான்மியூரிலே வீடுகள் கட்டப்பட்டுள்ளதைப் பற்றி மாண்பமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். திருவான்மியூரிலே அவுசிங் காலனி கட்டப்பட்டு 3 மாதங்கள் ஆகின்றன. அங்கே பெரும் வெடிப்பு ஏற்பட்டு, வெடித்திருக்கிறது, தெரிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் கூறினார்கள். இதைப்பற்றி இந்த அரசு பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரிலே, இந்திரா நகர் என்ற பகுதியில், மூன்றாவது தெருவில் அதி ஆந்திரர்கள் என்று சொல்லக்கூடிய அரிசன—தோட்டித் தொழிலாளர்சள் வசிக்கிறார்சள். அங்கே 100 குடும்பங்சள், சுமார் 20 ஆண்டுகளாக வசித்துக் கொண்டு வருகிறார்கள். அவர்சள் அந்த இடத்திலே வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். இதைக் கட்டிக் கொடுப்பதாக இந்த அரசும் பல ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. அதுமாதிரி வீட்டு வசதி வாரியமும் எழுதியிருக்கிறார்கள். எனவே, அந்த இடத்திலுள்ள நிலத்தை விரைவிலே ஆர்ஜிதம் செய்து, அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர

1978 மார்ச் 9] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வேண்டும். பல ஆண்டுகளாக இது செய்யப்படாமல் இருக்கிறது. மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்த அரிசன தோட்டித் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை கவனித்து, அவர்களுக்கு அங்கே வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை]

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைப் பற்றி சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு ஏதோ ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதுமா என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டும். கிராமப்புறங்களிலே வீட்டு வசதி கிடையாது. இந்த ஆண்டு இதற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் கடன் உதவி செய்வதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். இதற்கு உயர்ந்த பட்சக் கடன் தொகை ரூபாய் 5,000 என்று சொல்லப்படுகிறது. இந்த 3 கோடி ரூபாயைக் கொண்டு கிராமப்புறங்களிலே எந்த அளவுக்கு அதிகமாக வீடுகள் கட்ட முடியும் என்பதை இந்த அரசு யோசனை செய்து பார்க்க வேண்டும். இப்போது கடன் வழங்க இருக்கும் 2,000, 3,000, 5,000 ரூபாயைக் கொண்டு வீடுகள் கட்ட முடியுமா? ஒரு சதுர அடி வீடு கட்ட ரூபாய் 40 ஆகிறது. சதுர அடி ரூபாய் 40 என்று சொன்னால், 125 சதுர அடிதான் வீடு கட்ட முடியும். இது முடியுமா என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12·40]

குறைந்தபட்சம் 10,000 ரூபாயாவது கொடுத்தால்தான் 400 சதுர அடியிலாவது வீடு கட்ட முடியும். இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மூன்று கோடி ரூபாய் போதாது. அதை ஆறு கோடி ரூபாயாக அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பட்டுக்கோட்டை முனிசிபல் நகரம் ஹவுசிங் போர்டால் அங்கு வீடுகள் கட்டப்படவில்லை. பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடப்பட்டு வருகிறது. என். ஜி. ஓ-வினர் வீடு கட்டும் இடத்தை ஆர்ஜிதம் செய்து மனைக்கட்டுகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஹவுசிங் லோன் கூட வழங்கப்படவில்லை. அந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு உடனடியாகக் கடன் வழங்க வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதோடு அரசுத் தரப்பில் ஹவுசிங் போர்டு மூலமாகக் காலனி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடி தண்ணீர் வசதி மிக அவசியமான ஒன்று. சர்க்கார் ஒரு திட்டம் போட்டு கிராமப் புறங்களில் டைப் 1 டைப் 2 என்று பிரித்து குடி தண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல பகுதிகளில் இந்தத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை சேர்த்துத் கொள்ளப்

படாமல் இருக்கின்றன, விடப்பட்டிருக்கின்றன என்று கிராமப் புறங்களில் இருந்து பலரும் கூறுகிறார்கள். இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து அதிகப்படியான கிராமங்களை எடுத்து குடி தண்ணீர் வசதிசெய்து தரப்படவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியில் அதிராம்பட்டிணம் என்ற பேரு ராட்சி இருக்கிறது, கடற்கரை ஓரம். உப்புத் தண்ணீர்தான். குடி தண்ணீர் வசதி கிடையாது. ரொம்ப தூரம் வரை சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டியிருக்கிறது. இங்கு குடி தண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பல்லாண்டுக்கால மாக வற்புறுத்தி வருகிறோம். வெகு சீக்கிரம் அமலாக்கும் வகை யில் இந்த ஆண்டே திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை தாலுகாவில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி யைக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள— கோபாலசமுத்திரம் கிராமத்தில் மிராசுதாருக்கு, நிலச் சொந்தக் காரருக்கு கோர்ட்டில் சாதகமாகத் தீர்ப்பாகி இருக்கும் காரணத் தால் போலீஸ் உதவியுடன் 45 விவசாயத் தொழிலாளர்களின் வீடுகளை உடைத்து அவர்களை வெளியேற்றி இருக்கிறார்கள். கோர்ட் தீர்ப்பு வழங்கி இருந்தாலும், குடியிருப்பு மனை சட்டப் படி அவர்கள் வெளியேற்றப்படக்கூடாது. அவர்கள் குடியிருக்க உரிமையுண்டு. நான் நேரில் அங்கு சென்று பார்த்தேன்.

நாற்பத்தி ஐந்து குடும்பங்களைச்சேர்ந்த 300 பேர்கள் வீடிழந்து நிராதரவாகத் தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள் அவர்களைப் பார்த்தபோது அழுகைதான் வந்தது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. கோர்ட் தீர்ப்பு எப்படி இருந்தாலும் குடியிருப்புச் சட்டப்படி அவர்களை வெளியேற்றக் கூடாது. அவர்களை நிர்க்கதியாக விட்டு விடக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த 45 குடும்பங்களுக்குக் காலதாமதம் செய்யாது உடனடியாக அந்த இடத்தில் மனைக்கட்டுகள் கொடுத்து வீடுகள் கட்டிக் கொள்ள உதவி செய்தால் அந்த ஏழைகள் மகிழ்ச்சியோடு வாழ முடியும். இதிலே உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம், வீட்டு வசதி, குடிநீர் ஆகிய மூன்று மானியங்களுக்கும் சேர்த்து 13,42,23,900 ரூபாயை மானியமாகத் தருமாறு மாமன் றத்தைக் கோரி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற பிரேரணையை எதிர்த்துக் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில கருத்துக்களைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1978 மார்ச் 9] [திரு. ப.உ. சண்முகம்]

இந்த மாமன்றத்தில் கருத்துக்களை எடுத்து விவாதிக்கும் போது கருத்துக்களைச் சொல்லும்போது தாட்சண்யம் காட்டத் தேவை இல்லை என்பது மரபாக வந்திருக்கிறது. ஆனால், அப்படிச் சொல்லுகிற நேரத்தில் வார்த்தைகளிலே தீட்சண்யத்தை ஏற்படுத்தித் தாக்கிக் கொள்ள அவசியம் ஏற்படக்கூடாது, ஏற்பட்டிருக்கத் தேவையில்லை என்ற கருத்தின் அடிப்படையில்தான் நாங்கள் எல்லாம் உரையாற்றிக் கொண்டிருக்கிறோம்.

கேள்வி நேரங்களிலே பதில் சொல்லும்போதுகூட அமைச்சர்கள் கொஞ்சம் பொறுமையோடு, நான் பொறுப்போடு என்று சொல்ல, அந்த வார்த்தையைப் போட விரும்பவில்லை, பொறுமையோடு பதில் சொல்வார்களானால் இந்த அவையிலே அப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமல்போய் இருக்கக்கூடும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 2, 3 நாட்களுக்கு முன்புகூட ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல முன் வந்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் என்னுடைய பெயரைச் சொல்லி நான் ஏதோ சிபாரிசு செய்ததாகச் சொன்னார்கள். ஏதோ முறைகேடாக சிபாரிசு செய்து வீடு வாங்கிக் கொடுத்துவிட்டார் என்று சொன்னார்கள். எனக்குக் கூட தூக்கிவாரிப் போட்டது. நாம் யாருக்கும் சிபாரிசு செய்யவில்லையே என்று. ஏதோ கோயம்புத்தூரிலே ஒரு நகர சுத்தித் தொழிலாளருக்கு வீடு கொடுக்க வேண்டுமென்று நான் சிபாரிசு செய்ததாகத் தெரிவித்தார். ஒரு நகரசுத்தித் தொழிலாளிக்கு நான் வீடு வாங்கிக் கொடுத்திருந்தால் அதற்காக நான் பெருமைப்படுவேன்.

ஆனால் நான் சிபாரிசுக் கடிதமோ அல்லது உத்திரவோ போடவில்லையே, இந்த நிலையில் எப்படி ப.உ. சண்முகம் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார், முறைகேடாக நடந்து இருக்கிறார் என்று சொல்கிறாரே என்று நினைத்தேன். இந்த அவையிலே கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது என்பது ஒரு மரபு. அதை அப்போதே நீக்கியிருக்க வேண்டும். ஆனால், நீக்கவில்லை, நான் அதற்காக வருத்தப்படவில்லை என்றாலும்கூட, இப்படிப் பதில் சொல்கிறார்களே என்றுதான் வருத்தப்பட்டேன். ஆகவே பொறுமையோடு அவர்கள் பதில் சொல்வார்களானால் இந்த அவையிலே தீட்சண்யங்கள் குறைவதற்கு வழியிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு இராகவானந்தம் அவர்களை நன்கு அறிந்த பல நண்பர்களிலே நானும் ஒருவன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களைப் பற்றி நான் குறை சொல்லமாட்டேன். ஏனென்றால் அவர்கள் எங்களிடத்திலே வந்து பேசுகின்றபோது, இங்கே வந்து என்னிடத்திலே பேசும்போதும் எங்கள் கட்சித் தலைவரிடத்திலே— பேராசிரியரிடத்திலே பேசும்போதும்கூட ரொம்பவும் பொறுமை

யோடு அன்போடு பேசுகிறார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு— நான் தற்பெருமைக்காகச் சொல்வதாக, குறிப்பிடுவதாகக் கருதக்கூடாது— ப. உ. சண்முகம் என்பதற்கு பண்பு உள்ள சண்முகம் என்று சொன்னார்கள். இங்கே இவ்வளவு அன்போடு பேசிவிட்டு அங்கே சென்று பிறகு அமர்ந்தவுடனே, முறைகேடாக சிபாரிசு செய்தார்கள் என்று சொன்னார்கள், அவர் மீது குறையில்லை. ஆனால், அவர்கள் உட்கார்ந்து இருக்கிற இடம் அந்தக் குறையை ஏற்படுத்துகிறது.

நான் முதலமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர் உட்கார்ந்திருக்கின்ற இடத்தை மாற்றி விடுங்கள். தொழிலாளர் நல அமைச்சர் இராகவானந்தம் அவர்களை நான் நீண்ட நாட்களாக அறிவேன். அவருடைய அழகான தமிழ்ப் பேச்சையும் ஆங்கிலப் பேச்சையும் நான் கேட்டவன். திருவண்ணாமலைத் தொகுதியிலே 1963-ம் ஆண்டு இடைத்தேர்தல் நடந்தபோது அந்தத் தேர்தல் பிரச்சாரத்திற்காக என்னோடு அவர் தங்கி என்வீட்டிலேயே இருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் தெருத் தெருவாகச் சென்று ஒலிபெருக்கியை வைத்துக் கொண்டு பேசினார்கள். அவருடைய ஆங்கிலப் புலமை— அவை முன்னவர் அவர்கள் என்னை மன்னித்துக் கொள்ளவேண்டும்— இந்த அவையிலே அவருக்குச் சரியாக ஆங்கிலப் புலமை யாருக்கும் இருக்க முடியாது. அவருக்குத் தனிக் குரல். இனிமையான குரல் உடையவர் அவர். அதையும் யாரும் மறுக்க முடியாது. இனிமைக் குரல் மட்டுமல்ல. நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. அவர் சட்ட நுணுக்கங்களைப்பற்றி நன்கு அறிந்தவர். அதுவும் தொழிலாளர் சட்டங்களைப் பொறுத்த வரையில் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. இந்தியாவில் உள்ள சட்டங்கள் மட்டுமல்ல, இன்டர்நேஷனல் லாஸ் அவர்களுக்கு நல்ல முறையிலே தெரியும். மன்னிக்க வேண்டும். அந்த அளவிற்கு அவைகளைப்பற்றி தெரிந்த ஒரு ஆள் இந்தியாவிலே இருக்கிறார் என்றால் அது அவர் தான் என்று தைரியமாகச் சொல்லலாம்.

நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்டவரை அந்த சிறிய இடத்தில் அமர்த்தி பூட்டி வைக்காமல் ஐ. எல். ஓ.-க்கு அனுப்புங்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இந்த சிறிய இடத்தில் இருக்கிறார். இன்று அவர் அமைச்சராக இருப்பதிலே நமக்கு வருத்தம் எதுவும் கிடையாது.

நேற்றைய தினம் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப்பற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அடிக்கடி பேசப்படுகின்ற ஒன்று, வீராணம். அதுபற்றிய புகார்— தி. மு. க. ஆட்சி 1976ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதி கலைக்கப்பட்டது— அதற்கு முன்பு தி. மு. க. ஆட்சி இருந்தபோது நாங்கள் ஒரு முடிவு எடுத்தோம்.

1978 மார்ச் 9] [திரு. ப. உ. சண்முகம்]

[பிற்பகல் 12·50]

அமைச்சரவையிலே முடிவு செய்யப்பட்டது என்ன வென்றால், வீராணம் பைப்புகளைச் செய்வதற்காக இருக்கின்ற நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியுமா அல்லது முழுவதையுமே தேசியமயமாக்க முடியுமா என்று விவாதிப்பதற்காக டெக்னிக்கல் கமிட்டி போடப்பட்டது. அந்தக் குழுவிலே அரசாங்கத்தின் தரப்பிலே சொல்லப்பட்ட ஆலோசனை என்ன வென்றால், நாமே எடுத்துக் கொள்வதைவிட நிர்வாகத்தையே எடுத்துக் கொள்ளலாம் என்ற ஆலோசனை தரப்பட்டது. நிர்வாகத்தை எடுப்பதற்குச் சட்டம் கொண்டுவர மத்திய அரசாங்கத்தை அணுகி, நிர்வாகத்தை அரசாங்கமே ஏற்கவேண்டும், இல்லாவிட்டால் வேலை நடக்காது என்று, சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினோம். அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதா என்றால் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. ஒப்புதல் அளிக்கப்படாமல் அது அப்படியே நின்று விட்டது.

1976-ஆம் ஆண்டு ஜனவரி 31-ம் தேதிக்குப் பிறகு நடைபெற்ற எந்தச் சம்பவத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது குற்றம் சாட்ட யாரும் அவ்வளவு இரக்கமற்றவர்களாக இருப்பார்கள் என்று நான் நினைக்க மாட்டேன். அதற்குப் பிறகு இன்றைய தேதி வரையில் இடையிலே ஒன்றரை ஆண்டுக்காலம் நடைபெற்ற குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது— கவர்னரின் நேரடி ஆட்சியில்— அந்த ஆட்சியின் பொழுதும் சரி, இப்பொழுது நடக்கின்ற இந்த ஆட்சியின்பொழுதும் சரி, இந்தத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் இதிலே கவனம் செலுத்தியிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இதுவரையில், இரண்டாண்டுக் காலமாக, என்ன செலவு ஆகியிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். வீராணம் திட்டம் நிறுத்தப்பட்டதா, ஏன் நிறுத்தப்பட்டது, என்ன விவகாரம் என்று அதைப்பற்றிப் பேச நேரமில்லை. அதற்கு மாதக் கணக்கில் வேண்டுமென்று அமைச்சர் சொல்லிவிட்டார். இப்பொழுது நான் அதைப்பற்றிய விவாதத்திற்குள் நுழைய விரும்பவில்லை. அது நிறுத்தப்பட்ட பிறகு நாள் ஒன்றுக்குச் சம்பளமாக வீராணத்தில் பணி செய்கின்றவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகின்ற பணம், எனக்குக் கிடைத்த தகவலின்படி ஏறக்குறைய 70,000 ரூபாய். இந்த இரண்டாண்டுக் காலத்திற்கு மட்டும் சம்பளமாக, வாய்க்காலை வெட்டாமல், ஒரு பைப் செய்யாமல், செய்த பைப்புகளைப் புதைக்காமல், அது பலனுள்ளதாக இருக்கிறதா என்று சோதனை செய்யாமல், சம்பளத்திற்காக மட்டும் இரண்டு ஆண்டுக் காலத்தில் கொடுக்கப்பட்டது 5 கோடி ரூபாய்க்கு மேல்.

இப்படி ஐந்து கோடி ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அட்வைசர் ஆட்சியில் நடைபெற்ற குறையைப்பற்றிச் சொல்லவில்லை, ஏனென்றால் அட்வைசர் இப்பொழுது இங்கு இல்லை, அவர் மேல் குறை சொன்னால் இல்லாதவர்கள் மீது குறை சொல்லக்கூடாது என்ற நிலை வரும். ஆனால், இந்தத் துறையைப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற அமைச்சர் இதில் கவனம் செலுத்தியிருக்க வேண்டாமா? அதைப்பற்றி முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கோ, நிதியமைச்சரின் கவனத்திற்கோ கொண்டு வந்திருக்க வேண்டாமா?

ஒரு நாளைக்கு 70,000 ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்கள் சும்மா இருக்கிறார்கள், வேலை நடக்கவில்லை. இவ்விதமாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஐந்து கோடி ரூபாய்க்குமேல் சம்பளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வேலை நடக்கவில்லை.

இன்றைக்கு அதை எடுத்துக் கொண்டு தொடர்ந்து முடிப்பதா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று ஒரு கேள்விக்குப் பதில் சொல்லப்பட்டது. நான் இப்பொழுது தெரிந்து கொள்ள விரும்புவது, 20 கோடி 22 கோடி ரூபாய் செலவு செய்த பிறகு அதை எடுத்துக் கொள்வதா இல்லையா என்ற பிரச்சினையில்—நேற்றைய தினம் எங்கள் கட்சித் தலைவர் கலைஞர் ஒரு கேள்வியைக் கேட்டார்கள், கவர்னர் ஆட்சியின் பொழுது ஃபீசிபில் ரிப்போர்ட்'டுக்காக ஒரு கமிட்டி போடப்பட்டது நடைமுறைச் சாத்தியமா என்று ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அறிக்கை கொடுத்திருக்கிறதா, அதைப் பரிசீலித்தார்களா என்று கேட்கப்பட்டது. நான் இப்பொழுதும் கேட்கிறேன். அந்தக் குழுவின் பரிசீலனை என்னவாயிற்று?

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 31-ம் தேதி கலைக்கப்படுவதற்கு முன்பு நடந்த சம்பவங்கள் அது வேறு விவகாரம். அதை விட்டு விடுங்கள். அதற்குப் பிறகு நடக்கும் விவகாரத்திற்கு வாருங்கள். அந்தக் குழுவின் சிபாரிசின் பேரில் அதை முடிப்பதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது என்று பத்திரிகைகளில் அன்றைய தினம் வந்தது. அப்படிச் சொல்லியிருந்தால் ஏன் அந்த வேலையைத் துரிதப்படுத்தக் கூடாது? 20 கோடி, 22 கோடி ரூபாய் செலவு செய்த பிறகு இப்படி இரண்டாண்டுக் காலமாக அதிகாரிகளைச் சும்மா வைத்துக்கொண்டு சம்பளம் கொடுத்த பிறகும்கூட, அதில் கவனம் செலுத்தவில்லை என்று சொன்னால் எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை ஆதரிக்காமல் அமைச்சர் கொண்டுவந்த மானியக் கோரிக்கையையா ஆதரிக்க முடியும்?

அமைச்சர் இதிலே கவனம் செலுத்த வில்லை. அவர் கவனம் செலுத்தாததற்கு வேறு காரணம் இருக்கலாம். அவருடைய கவனம் வேறு கவனத்தில் சென்றிருக்கக் கூடும். இதுவொரு முக்கியமான பிரச்சினை. இதில் முடிவு செய்திருக்க வேண்டும். அதில் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சுமத்த விரும்பு கிறேன்.

அடுத்து நான் செல்ல விரும்புவது, அவருடைய அறிவுத் திறனைப் பற்றிச் சொன்னேன். அவருடைய சட்ட நிபுணத்து வத்தைப்பற்றிச் சொன்னேன். இந்த அவையிலேயும் கூட கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களோ, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களோ, மார்க்சிஸ்ட் கட்சியைச் சார்ந்த வர்களோ சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்தவர்களோ இப்படி எந்தக் கட்சிக்காரர்கள் கேள்வி கேட்டாலும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொழில் சட்டத்திலே உள்ளதை அப்படியே ஆங்கிலத்திலே கடகடவென்று ஒப்பிப்பார்கள். அவ்வளவு திறமைசாலி, அது எனக்குத் தெரிகிறது.

ஆனால் எனக்கு ஒரு சின்ன சந்தேகம். முதலமைச்சரவர்கள் என்ன காரணத்திற்காகவோ தெரியவில்லை. எத்தனையோ பெரிய தொழில் தகராறுகள் ஏற்படும்போது தொழிலாளர் துறை அமைச்சரைப் பயன்படுத்துவதே இல்லை. ஒருவேளை இந்த அரிய செல்வத்தை விலைக்கலாமா என்ற எண்ணமோ என்னவோ, இது தேசியச் சொத்து, குறைந்து விடும் என்று கருதுகிறாரோ என்னவோ, தெரியவில்லை. நான் படித்தேன் பல்லவன் டிரான்ஸ்போர்ட் தொழில் தகராறு பற்றிப் படித்தேன். அதிலே அவர் கலந்து கொண்டதாகவே இல்லை. ஆனால் ஒன்றை நான் கேள்விப்பட்டேன். கேள்விப்பட்டதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தொழில் தகராறைப் பற்றிப் பேசவருகிற முதலாளியிடம் கேட்கப்படுகிற முதல் கேள்வி—நான் கேள்விப்படுகிறேன், சொல்கிறேன். 'உங்களுக்குச்சிலம்பு ஆடத் தெரியுமா', என்பது. ஒரு முதலாளியைப் பார்த்து, உங்களுக்குச் சிலம்பு ஆடத் தெரியுமா என்றால் என்ன அர்த்தம்? தொழிலாளி உன்னை அடிக்க வந்தால், திருப்பி அடிக்கச் சிலம்பு ஆடத் தெரியுமா என்பதுதானே. அதே போல், தொழிலாளி யைப் பார்த்து உனக்குச்சிலம்பு ஆடத் தெரியுமா என்று கேட்டால் முதலாளி உன்னை அடிக்க வருகிற போது. தொழிலாளி திருப்பி அடிக்கச் சிலம்பு ஆடக் கற்றுக் கொண்டாயா என்று பொருள். எங்கள் மந்திரிசபையிலே இரண்டு பேருக்குத்தான் சிலம்பு ஆடத் தெரியும், ஒன்று முதல்வருக்கு, அடுத்தது எனக்குத் தெரியும், என்று இந்த அமைச்சர் சொல்கிறார். அந்த உரிமையை அவர் வைத்துக் கொள்ளட்டும்; வேண்டாம் என்று நான் சொல்ல மாட்டேன். தயவு செய்து நான் சொல்லுகிறேன். அது எல் லோருமே கற்றுக் கொள்ள வேண்டிய கலை. நான் கூடக்

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 9

கற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன், விரும்புகிறேன்—இந்த வயதில் கூட. ஆனால் தொழில் தகராறை தீர்க்கவருகிற நேரத்தில் சிலம்பு ஆடத் தேவையில்லை. அதைச் செய்யக் கூடாது என்று நான் மிக்க பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு விவகாரம். பல்லவன் போக்குவரத்துக் கழக விவகாரம். எந்த பஸ் போக்குவரத்து விவகாரமானாலும்—அவையினுடைய கவனத்திற்கும், முதலமைச்சரவர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புவது; கவனத்திற்காகக் கொண்டுவருகிறேனே தவிர, யாரையோ தூண்டிவிட்டுச் சொல்கிறேன் என்று நினைக்கவேண்டியதில்லை—பல்லவன் போக்குவரத்திலே ஒரு பெரிய தகராறு ஏற்பட்டு, ஒப்பந்தம் ஏற்பட்டது. சுமுகமான நிலையில் ஒப்பந்தம் ஏற்பட்டது. சுமுகமாக ஒப்பந்தம் ஏற்படுத்தியதற்காகப் பாராட்டுகிறேன். நன்றி தெரிவிக்கிறேன். சுமுகமாக ஒப்பந்தம் ஏற்பட்ட நேரத்தில், என்ன முடிவு செய்யப்பட்டது என்பது பற்றிய குறிப்புகளை என்னிடத்தில் தொழிலாளர்கள் வந்து கொடுத்தார்கள்.

அந்தக் குறிப்புகளிலே சொல்லியிருப்பது, 31–3–1978-ம் தேதிக்குள்ளாக, அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிற அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து எதை, எதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்பது பற்றி, அரசாங்கம் முடிவெடுத்து, அது 31–3–1978-க்குள் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும் என்பதாகும். அப்படி முடிவு செய்கின்ற பொழுது, 1-9-1977-லேயிருந்து அமலுக்கு வரும் என்று ஒப்பந்தம் செய்யப்படுகிறது. 31–3–1978-க்குள் விவாதிக்கப்பட்டு, முடிவெடுக்கப்படும் என்று செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் குறிப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது. நான் தங்கள் மூலம் தொழிலாளர் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, இப்படி ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று, தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட சுமுகமான ஒப்பந்தம். 31–3–1978-க்குள் முடிவெடுக்கப்பட வேண்டிய ஒப்பந்தம். அந்த சுமுகமான ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி, தொழிற்சங்கத் தலைவர்களைக் கூப்பிட்டு, எதை, எதைப்பற்றிக் கவனிக்கலாம் என்ற முயற்சியிலே ஏன் தொழிலாளர் துறை அமைச்சர் இறங்கவில்லை? இதைவிட அவருக்கு வேறு என்ன வேலை.

அந்தச் சமயத்திலே பெரிய போராட்டம் ஏற்பட்டது. அப்பொழுது முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, அமைதியை ஏற்படுத்தினார்கள். ரூ. 27 இடைக்கால நிவாரணம் கொடுத்து, அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தியதற்குப் பிறகு, நாம் 31–3–1978-க்குள் ஒப்பந்தம் செய்ய வேண்டும். ஏன் செய்யவில்லை என்று அவர்களைக் கேட்டிருக்கலாம். ஆனால் நான் **கேள்விப்படுகிறேன், 6-ம் தேதி போக்குவரத்துத் துறை அமைச்சர்**

1978 மார்ச் 9] [திரு. ப. உ. சண்முகம்]

தான் சில தொழிற்சங்கத் தலைவர்களைப் பேசுவதற்கு அழைத்திருக்கிறார்கள். இது தொழிலாளர் நலனைப் பற்றியது. தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் அக்கறை செலுத்தவில்லை. கவனம் செலுத்த வில்லை. இந்தத் துறையில் அவர் தலையிட்டிருக்க வேண்டும்; ஆனால் கவனம் செலுத்த வில்லை. ஒரு வேளை இது என்ன சின்ன விவகாரம், நாம் இண்டர்நேஷனல் லா படித்திருக்கிறோம். ஐ. எல். ஓ. வுக்குப் போகவேண்டியது, இங்கே வந்து சிக்கிக் கொண்டோம் என்றோ என்னவோ தெரியவில்லை, தொழிலாளர் நலனைப் பாதுகாக்கத்தானிருக்கிறோம் என்று சொல்கிற அரசாங்கம் அதைச் செய்திருக்க வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் குறிப்பிட்டார்கள், மூடப்பட்டிருக்கிற டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையைப் பற்றி. டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பது உண்மை, கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அரசாங்கம் மூடக்கூடாது என்று சொன்னால், மூடுவதற்காக நீதிமன்றத்துக்குப் போயிருக்கிறார்கள். அந்த விவகாரத்திற்குள் நான் நுழையவில்லை. ஆனால் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் உண்மையை. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தாரோ என்னவோ தெரியவில்லை. என்னப் பிரச்சினைக்காக மூடுவதற்கு அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள்?

(பிற்பகல் 1—00)

உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது. உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்ட காரணத்தினாலே, பஞ்சாப், அரியானா ஆகிய இடங்களிலே செய்கிற சைக்கிள்களோடு போட்டி போட முடியவில்லை. பஞ்சாப், அரியானாவில் செய்யப்படும் சைக்கிள்களுக்கும், தமிழ்நாட்டிலே செய்யப்படுகிற டி.ஐ. சைக்கிள்களுக்கும் விலை ஏறத்தாழ 200 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது.

எப்படி இந்த வித்தியாசம் வந்தது? எப்படி இந்த விலை அதிகமாக ஏற்பட்டது? விலை ஏன் கூடுதலாக இருக்கிறது? தமிழ்நாட்டிலே இருக்கிற பெரிய தொழிற்சாலை பாதிக்கப்படுமானால், உள்ளபடியே தமிழ்நாட்டுக்கு மிகப் பெரிய இழப்பு. அரசாங்கத்திற்கு ஒரு பெரிய அவக்கேடு ஏற்படக்கூடும். ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதைப் பற்றி இந்தத் துறை கவனம் செலுத்தவேண்டும். தொழிலாளர் நலத்துறை இதிலே அக்கறை செலுத்தவேண்டும். தொழிலாளர் நலத்துறை அக்கறை எடுத்துக்கொண்டு, காஸ்ட் ஆப் புரொடக்ஷன் ஏன் ஏறியது, ஏறியதற்கு என்ன காரணம், இன்னொரு மாநிலத்தோடு போட்டிபோட முடியாமல் அந்த சைக்கிள்களோடு இந்த சைக்கிள்களுக்கு ஏன் வித்தியாசம் வந்தது, அதை எப்படிக் குறைக்க வேண்டும் என்பதை எல்லாம் பேசி தீர்த்துக் கொள்வதிலே

கவனம் செலுத்தப்படவில்லை, அக்கறை செலுத்தவில்லை. இந்தத் துறையிலே நீங்கள் அக்கறை செலுத்தாத காரணத்தினலே, நான் முதலிலேயே சொன்னேன், வெட்டுத் தீர்மானங்களை ஆதரிக்கிறேன் என்று.

தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தந்த குறிப்புகளிலே தேடித் தேடிப் பார்த்தேன். ஏற்கெனவே பேசிய வீராணம் பற்றிய முழு விவரம் இருக்குமோ என்று தேடித் தேடிப் பார்த்தேன். ஆனல், நான் படித்ததிலே வீராணம் பற்றிய முழு விவரமும் இல்லை. வீராணம் எந்த நிலையிலே இருக்கிறது, எவ்வளவு பைப்புகள் தயாரிக்கவேண்டும் எவ்வளவு பைப்புகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு வாய்க்கால்கள் வெட்டினர்கள் இப்படிப்பட்ட எந்த விவரமும் இல்லை.

கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்போவதாகச் சொல்கிறார்கள். உண்மையைச் சொல்லப்போனல் அந்தக் கடிதத்தையே நான்தான் எழுதினேன். நான் பழைய விவகாரத்திற்குள் போகவில்லை. ஆந்திர அரசாங்கம் தண்ணீர் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள் என்று சொன்னர்கள். நான் ஆந்திர அரசாங்கத்திற்கும் கர்நாடக அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பேச்சு வார்த்தைகள் ஒப்பந்தம் அந்த வாதத்திற்குள் நான் நுழையவில்லை.

நான் தெரிந்து கொள்ள விரும்புவது இந்த 15 டி.எம்.சி. தண்ணீர் தந்தால் அதை எங்கே தேக்கி வைக்கப்போகிறீர்கள்? கடலிலா? அதற்கு ஒரு இடம் வேண்டாமா? அதைப்பற்றிய சிந்தனையே செய்யவில்லை. ஏன் செய்யவில்லை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பொதுப்பணித்துறை மானியத்தின்கீழ் வருகிறது.

திரு. ப. உ. சண்முகம் : நான் வாட்டர் போர்டு என்று கருதிக்கொண்டு பேசுகிறேன். நீங்கள் விளக்கம் தருவதற்காகக் குறிப்புகள் தந்திருக்கிறேன். நான் கேள்வி கேட்பதிலே தவறு இல்லை என்று கருதுகிறேன். அதே நேரத்தில் வீராணத்தைப் பற்றிய முடிவினை சீக்கிரத்தில் எடுக்கவேண்டும். காரணம், தொழிலாளர்களுக்கும் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். வேலை கொடுக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அதையும் பார்த்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொழில்துறை அமைச்சர் ஒரு அறிக்கை ஒன்றை விட்டார், பதவிஏற்ற உடனேயே. காண்ட்ராக்ட் முறை எனது இலாகாவிலே இருக்காது, கட்டடங்கள் அத்தனையும்

அரசாங்கமே கட்டப்போகிறோம் என்று சொன்னார்கள். அதைப் பற்றிய குறிப்புகளும் கொடுக்கப்படவில்லை. எப்படிக் கட்டப் போகிறீர்கள், காண்ட்ராக்ட் முறையிலே ஒன்றும் எனக்கு ஆசை யில்லை. ஆனால் இவைகளை எப்படிச் செய்யபோகிறீர்கள் என்று குறிப்பெல்லாம் இந்தக் குறிப்பிலே அடங்கியிருக்கவேண்டும் அது வும் இல்லை.

மற்ற அமைச்சர்களுக்கும் நான் தொழிலாளர் நல அமைச்சர் சார்பாகத் தெரிவித்து க்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர் இலாகாவினுடைய கூட்டம், ஹவுசிங்போர்டு சார்பில் ஒரு கூட் டம் நடைபெற்றது. இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது என்று நினைக்கிறேன். சமீபத்தில் நடைபெற்றிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் அவர் தெரிவித்திருக்கிறார். நான் கால்கோள் விழா விற்கு— இந்த சுறுசுறுப்பு மற்ற அமைச்சர்களுக்கும் இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன் —கால்கோள் விழாவிற்கு வருகிறேன். நான் சொல்கிறேன். கால்கோள் விழா போடும் படி அமைச்சர் இராகவானந்தத்தை அழைத்தால், அந்தக் கட்ட டத்தை இந்தத் தேதியிலே திறக்கப்படும் என்று அந்தக் கல்லிலே போடவேண்டும். அப்போதுதான் வருவேன்.........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வர் அவர்களே, நான் கட்சிக்காரர்களுடைய எதிரிலேயே என்னை எங்கே அழைத்தாலும், பாராட்டு விழா, கால்கோள் விழா, திறப்பு விழா என்ற எதுவும் வைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இதுவரை 52 தொகுதிகளுக்குச் சென்றிருக்கிறேன். இவைகளை நான் தவிர்த்திருக்கிறேன். மாண்புமிகு ப.உ. சண்முகம் அவர் களை இன்னமும் பண்புள்ள சண்முகம் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் சொன்னதுபோல, வீட்டுவசதி வாரியத்தின் கூட்டம் இராஜாஜி ஹாலில் நடைபெறவில்லை என்று பணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப.உ. சண்முகம் : மன்னிக்கவும். ராஜாஜி ஹாலில் நடக்காமல் இருந்து இருக்கலாம். தொழிலாளர் நலக்கமிட்டி யில் நடந்ததாக இருக்கலாம். தவறாகச் சொல்லவில்லை. அவருக்கு இருக்கும் சுறுசுறுப்பு மற்ற அமைச்சர்களுக்கும் இருக்கவேண்டும் என்பதற்காகச் சொன்னேன். நிதியமைச்சர் கூட அவரை சுறு சுறுப்புள்ளவர் என்று பாராட்டியிருக்கிறார். ஒவ்வொரு கால் கோள் விழா நடக்கிற போதும், இப்படி இன்று கால்கோள் விழா நடந்தது, இன்றைக்கு இந்தக் கட்டடம் கட்டிமுடிக்கப்படும் என்று அதிலேயே போட்டால் தான் அதிகாரிகளும், அந்தத் தேதியில் முடித்து விடவேண்டும் என்று சுறுசுறுப்பாகப் பணி யாற்றுவார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சிறந்த முறையில் நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை நான் ரொம்ப நாளாக அறிவேன். அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன். அவர் இங்கே வந்தால் சகோதர பாசத்தோடு பேசுகிறார், அங்கே போனால் விக்ரமாதித்தன் சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டு இருப்பது போல் பேசுகிறார், அவர் நல்லவர், அந்த இடம் நல்லது இல்லை என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இதைப் பேசக்கூடாது என்று இருந்தேன். நான் பிரச்னையில் போக விரும்பவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ப. உ. சண்முகனார் அவர்கள் கூறியதற்குப் பிறகு நான் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டு இருக்கிறேன். ஒன்றை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். எங்கேயோ வெளிநாடுகளில் இருக்க வேண்டியவரை இங்கே உட்கார வைத்து இருக்கிறேன் என்று மிகவும் மனம் நொந்து பேசினார்கள். அப்படிப்பட்ட வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லையே என்று சொன்னார்கள். நான் அவர்களை இங்கே உட்காரவைத்து இருப்பது ப.உ. சண்முகனார் இருக்கிறாரே என்பதால்தான். இப்படிப்பட்டவர் இருக்கும்போது, அப்படிப்பட்டவரைத் தவிர வேறு யாரையும் உட்கார வைக்க முடியாது. ஆகவே தான் வைக்கப்பட்டு இருக்கிறார் என்று சொல்லி, இன்னொன்றையும் சொல்கிறேன். இங்கே வரும்போது நல்லபடியாகப் பேசி, பிறகு அங்கே போன பின்னாலே ஏதோ மாதிரிப் பேசுகிறார் என்று சொன்னார்கள். அவர் மட்டும் அப்படி அல்ல, பல பேர் அப்படி இருக்கிறார்கள் என்பது ப.உ. சண்முகனாருக்குத் தெரியும் என்பதைச் சொல்லி, அது தவிர்க்கப்படமுடியாத நிலையில் ஏற்படுகிறது, இயற்கைக்கோளாறு என்பதைச் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுவரையில் பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும், இறுதியாகப் பேசிய என் மதிப்பிற்குரிய சகோதரர்—அவர் காலில் முள் பட்டால் என் கண்ணில் படும் என்ற உறவுப்படி இருக்கக்கூடிய அவர்கள்—என்னைப் பற்றி இதுவரையில் பேசியது ஏதோ என் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது பேசுவதுபோல் இருந்தாலும், அவர் எனக்குக் கொடுத்த என்கோமியம்ஸ், அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் என்னையும், நான் பெருமதிப்பு வைத்து இருக்கும் எங்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் நிதியமைச்சரையும் பிரித்து விடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய ஆங்கிலம் மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறது. நான் 10-வது வரையில் படித்தவன். இங்கே இடத்தைப் பற்றிச் சொன்னார்கள்,

1978 மார்ச் 9] [திரு. எஸ். இராகவானந்தம்]

1962-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது, ஒரு நாள் மாலை * * * * * *

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, சம்பந்தமற்ற விஷயங்களை இங்கே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு ஆமாம் என்று சொல்லு கின்றவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்று தெரியாது. ஆகவே, அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * * என்று ஆரம்பத்திலிருந்து, மாண்புமிகு முதலமைச்சர் குறுக்கிட்டது வரையிலுள்ள பகுதிகளை சபைக்குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

[பிற்பகல் 1—10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முசிறிப்புத்தன் அவர் கள் பேசும்போது ஜர்னலிஸ்டுகளுக்குத் தனியாக காலனி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அவர் களுக்கு பீட்டர்ஸ் ரோடு காலனியில் 29 வீடுகளும், நந்தனம் காலனியில் 2 வீடுகளும் ஆக 31 வீடுகள் இருக்கின்றன. 1972-ஆம் ஆண்டிலிருந்து வீடு கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய பல ஓர்க்கிங் ஜர்னலிஸ்டுகள், என்னுடைய அருமைத் தோழர்கள் நிரம்பப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கிறார் கள்; என்னால் கொடுக்க முடியவில்லை. ரூ. 200-லிருந்து 424 ரூபாய் அளவில் 6 வீடுகள் கே.கே. நகரிலும் இருக்கின்றன.

அந்த நண்பர்களுக்கு முதன் முதலாக ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனு மதி கொடுத்திருக்கிறார்கள்; அந்த நல்ல செய்தியை அறிவிக் கிறேன். அந்த எண்ணிக்கை 31-ஆக இருப்பது 50 ஆக உயர்த்தப் படும். அதனால் ஏற்படும் வாடகை நஷ்டத்தை அரசு 'சப்சிடியாக' ஏற்றுக்கொள்ளும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

வீடு கட்ட அவர்களுக்குக் கடன் வழங்கவேண்டுமென்று சொன் னார்கள். சொந்தமாக மனை வைத்துக்கொண்டு அவர்கள் கூட்டுறவு ஹவுசிங் சொசைட்டி ஆரம்பித்தால் அவர்களுக்கு வீடு கட்டக் கடன் கொடுப்பதைப்பற்றியும் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1978 மார்ச் 9

இங்கே பேசிய பலர் பாராட்டினார்கள். மார்க்ஸிஸ சித்தாந்தத்தை நானும் படித்திருக்கிறேன், நண்பர் கோவிந்தராசன் அவர்கள் படிப்பதற்கு முன்னால். அதிலே எங்குமே பாராட்டக் கூடாது என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) பாராட்ட நேரம் இல்லை என்று சொல்கிறார்கள். நிரம்ப செய்திருக்கிறோம். யாராக இருந்தாலும், எந்தக் கட்சி, எந்தச் சங்கம் என்று நினைக்காமல் யார் வந்து சொன்னாலும் உடனடியாக அழைத்து பேசி, சுமுகமாகத் தீர்வு கண்டு, இன்றைக்கு இந்தியாவிலேயே சர்ச்சை இல்லாமல் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய ஒரு தொழிலாளர் நல அமைச்சர் இருக்கிறார் என்றால் அது நான்தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். We have got such industrial peace. Commendable achievements we have got. அதை நான் சொல்லிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ப.உ.ச. அவர்கள் போக்குவரத்துத் துறை ஊழியர்கள் பிரச்சனையில் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்று எடுத்துச்சொல்லி நான் அந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தால் ஒருவேளை விரைவில் முடிந்துவிடும் என்று சொன்னார்களோ என்னவோ—ஏன் அதில் அக்கறை காட்டவில்லை என்று கேட்டார்கள். There is no industrial dispute there.

முதலாளியும் தொழிலாளர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அதில் நான் தலையிட முடியாது.

I can't interfere.

டிஸ்பியூட் என்றால் என்ன என்பதை இந்த நேரத்தில் படித்துக்காட்ட விரும்புகிறேன்... "Industrial dispute means any dispute or difference between employers and employees or between employers and workmen."

இதை மேலும் தொடர விரும்பவில்லை. தொழிலாளர்களுக்கும் அதை நடத்தும் முதலாளிகளுக்கும் தொழில் தகராறு ஏற்பட வேண்டும்; பேசுகின்ற பேச்சு முறிவு ஏற்பட வேண்டும்; பின்னால் தொழிற்சங்கத்தினர் சேர்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். "We raise an industrial dispute in respect of the following issues."

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, தொழில் தகராறு ரூல்ஸ் 24 ஸ்டேட்மென்ட்ஸ் அதோடு வைத்து, லேபர் ஆபீசருக்கு அனுப்பி, அதன் பிறகுதான் அவர்கள் அழைப்பார்களே தவிர அதற்கு முன்னால் நான் தலையிடத் தேவையில்லை; தலையிடவில்லை. திறமைமிக்க என் தம்பிகளிலேயே ஒருவர் திரு. பொன்னையன் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார். இந்த

நேரத்தில் நான் தலையிட்டால், it will be intrusion and unnecessary interference. எனவே இப்போது நான் தலையிடவில்லை. திறமைபடைத்த என் தம்பியே முடித்துவிடுவார். முடியவில்லையானல், தொழில் தகராறு வந்தால் 'கன்சிலியேச'னுக்கு நான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனல் வராது. என்னுடைய அருமைத் தம்பி தீர்த்து விடுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இங்கே பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் சொன்னர்கள். அதை நான் வரவேற்கிறேன். Charm of democracy—ஜனநாயகம் என்பதே சிறப்புகளையும், குறைகளையும், நிறைவுகளையும் எடுத்துச்சொல்வது தான்.

இங்கே நிறைவுகளை எடுத்துச்சொல்லவில்லை என்ருலும் இந்த அரசு செய்தது அத்தனையும் சிறப்பானது என்று எடுத்துச்சொல்லி விட்டால் இரண்டு கட்சிகள் இருக்கத் தேவையில்லை. அவர்கள் சொன்ன துறைகளில் எல்லாம் அவைகளில் சிலவற்றை மிகைப் படுத்தியிருந்தாலும் அதிலுள்ள சில உண்மைகளை இங்கே விரிவாக எடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

டி.ஐ. சைக்கிள்ஸ் ஆக இருந்தாலும் சரி அல்லது டி.வி.எஸ். நிறுவனமாக இருந்தாலும்சரி நான் ஏற்கனவே சொன்னதுபோல்—விரைவில் சில காரியங்களை முடிக்கவேண்டும் என்று சொல்கிருர்கள், That is dangerous. அப்படி வேகமாக இறங்குவீர்களானல், மிக வேகமாகச் செய்யும்போது சமரசம் ஏற்படாது. ''Cooling of period'' தேவை. இருசாராரும் நிதானமாக உட்கார்ந்து பேசினல்தான் அரசாங்கம் சொல்லக்கூடியதை கேட்கக்கூடிய நிலை உருவாகும்.

திரு. ரா. உமாநாத் : டி.வி.எஸ். விஷயத்தில் Cooling of Period வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிருர்கள். ஆனல் அவர்கள் சொல்லக்கூடிய பீரியேடிலே சஸ்பென்ஷன் ஆகி டிஸ்மிஸ் ஆகிக்கொண்டிருக்கிறது. இன்னும் அது adding up ஆகிக்கொண்டேயிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான், பொது நியதிபற்றித்தான் சொன்னேன். டி.வி.எஸ்.-க்கு இன்னும் வரவில்லை. இருசாராரையும் உடனடியாக அமைச்சர் அழைத்துப் பேசி முடிவெடுக்கவேண்டும் என்று சொன்னல், அப்போது லேபர் ஆபீஸர் தேவையில்லை, அஸிஸ்டென்ட் லேபர் கமிஷனர் தேவை இல்லை, டெப்டி லேபர் கமிஷனர் தேவை இல்லை,

ஸ்பெஷல் டெப்டி லேபர் கமிஷனர் தேவை இல்லை, கமிஷனரே தேவை இல்லை என்ற நிலை ஏற்படும். நிர்வாகத்தில் இருப்பவர்கள் அவரவர்கள் பணிகளைச் செய்யவேண்டுமே தவிர ஒரு டிஸ்ப்யூட் என்று வந்துவிட்டால் உடனே தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சென்று பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றால் நாளையதினம் முதல் அமைச்சர் என்று வரும், பின்னர் முதல் அமைச்சர் சரியில்லை பிரதமர் என்று வரும், பின்னர் பிரதமர் சரியில்லை பாராளுமன்றம்என்று வரும், பிறகு அதுவும் சாயில்லை என்று பிறகு ஜனநாயகமே தேவை இல்லை என்ற நிலை வந்துவிடும்

ஆகவே அதற்குள்ள (tier) டயர் இருக்கவேண்டும். அதன்படி பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும். ஆனால் அதிகக் காலதாமதமாகிவிட்டது என்றால், நேராக கமிஷனர் அல்லது ஸ்பெஷல் டெப்டி கமிஷனர் அல்லது அமைச்சரே கூட நடவடிக்கை எடுப்பதுண்டு : நான்காண்டு காலமாக—இருந்த ஆட்சி—என்மீது நிறைய குறைகள் சொல்கிறார்கள், ஆகவே நான் எச்சரிக்கையாக இருந்து சொல்கிறேன்.

நான்காண்டுகளாகத் தீராத எட்டு லட்சம் ரூபாய் பிரச்னை என்னிடம் வந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னால் வந்து சொன்னார்கள். திரு. உமாநாத் அவர்கள் வந்து சொன்னார்கள். திரு. ரமணி அவர்கள் வந்து சொன்னார்கள். நேற்றைய முன் தினம் அந்த எட்டு லட்சம் ரூபாய் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டியது என்று நான் உத்தரவிட்டேன். அதை பாராட்டியிருக்கக்கூடாதா?

நெல்லிக்குப்பத்தில் தொழில் தகராறு எழுந்தபோது ஸீஸன் வந்தபிறகு வேலைநிறுத்தம் நடந்தால் 1538 தொழிலாளிகள் மட்டுமல்ல, 20,000-க்கு மேற்பட்ட கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள், ஆறு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கரும்பு பாழாகிவிடும், ட்ரையாகிவிடும், ரெக்கவரி குறைந்துவிடும் என்று கருதி அரசு ஸ்பெஷல் இன்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனல் ஒன்றை ஏற்படுத்தி, ஏறத்தாழ ரூ. 7,000-ல் இருந்து ரூ. 10,000 வரை செலவாகக்கூடிய அளவிற்கு ஒரு ஜட்ஜ் போட்டு, அந்த ஜட்ஜ் இந்த ஒரு பிரச்னையை மட்டும் கவனிக்கக்கூடிய வகையில் புரட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று நியமித்து ஸீஸன் வருவதற்கு முன்னதாகவே தீர்ப்பு வழங்கும்படி ஏற்பாடு செய்யவில்லையா? அதில் திரு. கோவிந்தராஜன் அவர்கள் நடந்துகொண்ட முறை மிகவும் பாராட்டக்கூடியது. தீர்ப்பில் அதிகமாக தொழிலாளர்களுக்கு சலுகை வழங்கியிருந்தாலும் இவ்வளவு பெரிய தொகை கொடுத்தால் அந்த நிறுவனம் நடக்குமா என்று

1978 மார்ச் 9] [திரு. எஸ். இராகவானந்தம்]

கருதி ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கக்கூடிய தொகையை சற்று குறைத்துக்கொண்டு— He was able to understand the real position of the Industry—அந்தத்தொழில் நிலையை தெரிந்து கொண்டு ஒரு ஒப்பந்தம் செய்து அதை ஒட்டுகிறார்கள். அதை நான் பாராட்டினேன்.

அதேபோல் ஸ்பெஷல் இன்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனல் இந்த அரசு நியமித்ததை ஒருமுறை பாராட்டியிருக்கக் கூடாதா?

திரு. ரா. உமாநாத்: தொழிலாளர்களுக்கு பணம் கொடுக்க முடியாது என்பதல்ல அந்த சமாசாரம். சுப்ரீம் கோர்ட்டுக்கு கேஸ் கொண்டு போய் வருடக்கணக்காக லிட்டிகேஷன் ஏற்படும் என்பதால் அந்தப் பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் பாராட்டுத்தான் தெரிவித்தேன். எவற்றையெல்லாம் சிறப்பாகச் செய்து வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கையாளும் முறை, two way traffic ஆக இல்லை. நாங்கள் நல்லது செய்கிறோம் என்று அவர்கள் கருதினால் பாராட்டுகிறார்கள். அதாவது அவர்கள் கட்சி அணுகுமுறையிலிருந்து பாராட்டவேண்டியதைப் பாராட்டுகிறார்கள். அவர்கள் எது சரியில்லை என்று கருதுகிறார்களோ அதைக் கண்டிக்கிறார்கள் அது மிகவும் ருசிகரமான வரவேற்கத்தக்க அரசியல் நாகரீகமாகும்.

அதே wo way traffic—யை நாங்களும் கடைப்பிடிக்க அனுமதிக்க வேண்டும். ஆகவே எங்களது தொழிலாளர் அணுகுமுறைபற்றி நாங்கள் சொன்னால் அதைத் தவறாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறேன். சிறுசிறு தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். 50 பேர்கள், 100 பேர்களை வைத்து ஆரம்பிக்கிறார்கள். அவை, industries profit making position லாபம் வரக்கூடிய நிலை வருவதுவரை நீங்கள் ஒத்துழைக்கவேண்டாமா? அங்கே எல்லாம் வேலைநிறுத்தம். 50 நாள் வேலைநிறுத்தம், 100 நாள் வேலைநிறுத்தம் என்று சொல்கிறார்கள். கவாஸ்கரைப் போன்றவர்கள் க்ரிக்கட்டில் செஞ்சுரி அடித்தால் அது வரவேற்கக் கூடியது. ஆனால் வேலைநிறுத்தம் செய்வதில், வேலைநிறுத்தத்தில் 25 நாள் வேலைநிறுத்தம், 50 நாள் வேலைநிறுத்தம், 100 நாள் வேலைநிறுத்தம் என்று சொன்னால், அது நியாயமா?

[திரு. எஸ். இராகவானந்தம்] [1978 மார்ச் 9

(பிற்பகல் 1–20)

ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், உண்மையான கம்யூனிஸ்ட் எப்படி செயல்பட வேண்டும் என்று நான் படித்திருக்கிறேன். லெனின் கூறியிருப்பது— வேலைநிறுத்தங்கள், போராட்டங்கள் இவைகளைப்பார்த்துத்தான் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சியை, உணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று இருக்கிறது. (குறுக்கீடு)......... இதற்கான புத்தகம் என்னிடம் இருக்கிறது, யாராவது பார்க்க வேண்டுமென்றால் மாலையில் வாருங்கள், தருகிறேன். இப்படிப் பட்ட போராட்டங்கள் எழுச்சியின் விளைவு என்று சொன்னால், அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது........ There is no strike or agitation in a socialist country. சோஷயலிஸ நாட்டில் வேலைநிறுத்தங்கள் இல்லை. ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். வேலைநிறுத்தம், போராட்ட உரிமை இவைகள் எல்லாம்..... This Government will never stand in the way, will never withdraw that right, இவைகளை எல்லாம் எப்படி எப்போது உபயோகப்படுத்தவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம் என்று சொன்னால்— ஒருவர் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக லைசென்ஸ் பெற்று துப்பாக்கி வைத்திருக்கின்ற நேரத்தில்— எப்போது அதைப் பயன்படுத்தவேண்டுமோ அந்த நேரத்தில்தான் பயன்படுத்துவார்— அதுபோல் வேலைநிறுத்தம் என்கின்ற ஆயுதத்தையும் எப்போது தேவையோ அப்போதுதான் பயன்படுத்தவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய தொழிற்சாலைகள், சின்னஞ்சிறிய தொழில்கள் எங்கேயெல்லாம் வளரவேண்டும் என்று நாம் விரும்புகின்றோமோ அந்த இடங்களில் எல்லாம் இப்படிப்பட்ட வேலைநிறுத்தங்களை நடத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் வேலைநிறுத்தத்தை நாம் எப்போது நடத்தவேண்டும் என்பதையும், வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் அதை எப்படி நிறுத்திக்கொள்வது என்பதைப் பற்றியும் நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் பணிவன்போடு தோழமைக் கட்சிகளை கேட்டுக்கொள்கிறேன்

இன்றைய ஆட்சியைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் சோஷயலிஸ ஆட்சி வந்துவிட்டது.. ''நாளை உலகை ஆள வேண்டும், உழைக்கும் கரங்களே....' என்றவர் இந்த நாட்டை ஆளுகிறார். ஆளுவதற்கு உழைக்கும் கரங்கள் முன் வந்திருக்கின்றன. நாங்கள் காரல் மார்க்ஸ் சொன்னதைப்போல்....

Be with the mass
Work with the mass
Learn from the mass
Teach the mass

''மக்களோடு இரு, மக்களோடு வேலை செய் மக்களிடமிருந்து கற்றுக்கொள், மக்களுக்கு ஆசானாக இரு......

என்றிருப்பதில் 4-வது கட்டத்தில் சொல்லப்பட்டிருப்பது போல், இன்றைக்கு நாங்கள் புரட்சித் தலைவர் அணியில் பணியாற்றி வருகிறோம். ஆகவே நாங்கள் சொல்வதை சற்று காது கொடுத்துக் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற முறை நான் எக்ஸ்டம்பராக பேசினேன். இப்போது இந்த அரசு பல சலுகைகளைச் செய்திருக்கிறது. இவைகள் எல்லாம் ரிகார்டில் இல்லாமல் போய்விடக்கூடாது என்பதால் வீட்டுவசதி மூலமாகவும் தொழில் துறை மூலமாகவும் செய்திருப்பவைகளையெல்லாம் படித்துவிடுவதாக இருக்கிறேன்.

It is a voluminous document.

அவ்வளவு செய்திருக்கிறோம். இந்த அரசு செய்திருக்கின்றவைகளையெல்லாம் நான் படித்த பிறகாவது கடைசியாக செல்லும்போது நாம் தவறான கருத்தில் இருந்து விட்டோம், இப்போது இந்த அரசு செய்திருக்கின்ற நன்மைகளை எல்லாம் தெரிந்து கொண்டோம் என்ற அளவில் செல்வார்கள் என்ற திடகாத்திரமான நம்பிக்கை எனக்கிருக்கிறது என்பதைம தெரிவித்துக்கொண்டு நான் அவற்றைப் படிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், 1-7-1975 முதல் எந்தக் கடனும் பெறாமல் உறுப்பினர்கள் வேதனைக்குட்பட்டு இருந்தார்கள். ஆனால் இப்பொழுது எல்.ஐ.ஸி. யிலிருந்து ரூ. 7 கோடியும் வீட்டுவசதி சங்க மூலம் ரூபாய் 1 கோடியும் அப்பெக்ஸ் பாடி ஆக 8 கோடியும் கடனாக வழங்கப்படும். இந்தத் திட்டத்தினால் பயனடைவோர்கள் பொருளாதாரத்தில் மெலிந்த கிராம மக்கள் ஆவார்கள். இப்பொழுதே 15,000 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இதில் 25 சதவீதம் அரிசனங்களுக்கு தேவையின் அடிப்படையில் கடன் ஒதுக்கப்படும்..

(திரு. துரை முருகன் எழுந்திருந்தார்.....)

THE HON. THIRU S. RAGHAVANANDHAM : I am not yielding

THIRU DURAI MURUGAN : I am raising a point of order.

THE HON. THIRU S. RAGAVANANDHAM : I can give all these details even without referring to the notes.

MR. DEPUTY SPEAKER : The Hon. Minister can read.

THE HON. THIRU S. RAGHAVANANDHAM: Very kind of you, Sir.

(குறுக்கீடு)

படிக்கக் கூடாது என்று சொன்னால் நான் படிக்கவில்லை.....,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் படிப்பதில் ஒன்றும் தவறில்லை, படியுங்கள்..........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அரசு அலுவலர்களுக்காக வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு இரு லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்குள்ளாகவே 1,150 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன.

## தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.

இந்தத் திட்டத்தின் கீழ் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சராசரி 125 முதல் 150 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் சென்ற ஜூலை மாத வரவுசெலவு திட்டத்திலும் 1978-79 ஆம் ஆண்டு திட்டத்திலும் ரூபாய் 20 லட்சம் வீட்டுவசதி வாரியத்திற்கு ஒதுக்கப்படுகிறது.

1958-59 ஆம் ஆண்டிலிருந்து கிராம வீட்டு வசதித் திட்டமென செயல்பட்டு வந்துள்ளது. இது, 1975-76 வரை இருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் 8,000 வீடுகள்தான் கட்டப்பட்டுள்ளன. இதற்குள்ளாகவே 60 சொஸைடியிலும், 20,883 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். 10,000 பேர்களுக்கு உடனடியாகக் கடன்கள் வழங்கப்படும். இந்தச் சாதனை 18 ஆண்டுகளில் செய்ததைவிட மிகப் பெரிய சாதனையாகும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் காவலர்களுக்கு வீட்டு வசதித் திட்டம். இந்தத் திட்டத்திற்கு 1977-78-ல் 38 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு 1978-79-க்கு ரூ. 90 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மிகப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடிசைமாற்று வாரியத் திட்டம் வெளியூர்களில் அமுல்படுத்துவதைப் பற்றி..........

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய அமைச்சர் அவர்கள் படிக்கின்ற விவரங்கள் எல்லாம் இந்த அறிக்கையிலேயே இருக்கிறது. மறுபடியும் படித்து நேரத்தை வீணாக்க வேண்டாம். போலீஸ் அவுசிங் ஸ்கீம் அலாட்மெண்டு எல்லாம் இந்த அறிக்கையிலேயே இருக்கிறது. இருந்தும் அதைப்பற்றி திரும்பவும் படிக்கவேண்டிய அவசியம் என்னவென்று தெரியவில்லை. எங்களிடம் கொடுத்திருக்கிற அறிக்கையிலேயே இருப்பதால் திரும்பத் திரும்ப படித்து நேரத்தை வீணாக்க வேண்டுமா? ஏற்கனவே நேரமாகிறது. அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விஷயங்களையெல்லாம் நாங்கள் படித்துக் கொள்ளலாம், இங்கே படிக்க வேண்டிய அவசியமில்லை.

SATYAMEVA JAYATE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் படிப்பதை நீங்கள் இந்த அறிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்க வில்லை. அறிக்கையிலே ஒன்றிரண்டு இருக்கும் இருக்காது. அறிக்கையிலே இல்லாததைக்கூட அமைச்சர் அவர்கள் இனிமேல் படிக்கலாம். இதனால் இதிலே ஒழுங்குப் பிரச்னை இல்லை.

திரு. துரை முருகன் : நாங்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். அந்த வெட்டுத் தீர்மானங்களின்மீது எங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விளக்கங்கள் சொல்லலாம்: பதில் சொல்ல லாம். அதை விட்டுவிட்டு, ஏற்கனவே தயார் செய்து வைத் திருக்கிற ஸ்டேட்மெண்டை அமைச்சர் அவர்கள் படிக்கிறார். படிக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த ஸ்டேட்மெண்டை மேஜையின் மேல் வைத்துவிட்டால் நாங்கள் அதைப் படித்துக் கொள்கிறோம். இப்போது நாங்கள் எதிர் பார்ப்பது, நாங்கள் பேசிய கருத்துக்கள் பற்றி அமைச்சர் அவர் களுடைய ரிப்லெக்ஷன் என்ன என்பதுதான். ஏற்கனவே அதிகாரிகளும், நீங்களும் தயார் செய்துள்ள அறிக்கையைப் படிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்டிலே சொன்னதைச் சொல்லக் கூடாது என்று எனக்கு யாரும் இதுவரை சொல்லித் தரவில்லை. இந்த அரசின் சாதனைகளைச் சொல்லும்போது, அதை விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னால் தொழிலாளர் நலத் திட்டம் பற்றி ஒன்றிரண்டு சொன்னேன். அதேபோல், ஒர்கிங் ஜர்னலிஸ்டுகளுக்கு 19 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னேன். அது இந்தப் புத்தகத்தில் இருக்கிறதா? எப்போதுமே பிரியாணி சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கக் கூடாது. கொஞ்சம் சாம்பார் சாதமும் சாப்பிட வேண்டும்.

1972-73-க்குப் பின்னர் சென்னைக்கு அப்பாற்பட்ட ஊர் களில் குடிசை மாற்று வாரியத் திட்டம் அமல்படுத்தப்படாமல் இருந்தது. ஆனால், இந்த ஆண்டு இதற்காக 60 லட்சம் ரூபாய் ஒதுக்கி 600 வீடுகள் கட்டுவதாக உள்ளோம்.

100 உடல் ஊனமுற்றோருக்கு வீவிங்கில் (நெசவு நெய்தலில்) பயிற்சி அளித்து அவர்களை கூட்டுறவு ஆலையில் வேலைக்கு எடுத் துக் கொள்ளும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வேலைவாய்ப்பு தேடித் தர மதுரையிலும், கோவையிலும் ஜூனி யர் எம்பளாய்மெண்டு ஆபீசர்கள் இருக்கிறார்கள். இனி திருச்சி யிலும், சேலத்திலும் ஒவ்வொருவர் நியமிக்கப்படுவார்கள். நான் படிக்கின்ற ஒவ்வொரு திட்டமும், பல உறுப்பினர்கள் பேசியதற்கு பதில்தான்; வெட்டுத் தீர்மானத்தை எதிர்பார்த்து அதற்கு பதிலளிக்கும் வகையில்தான் இதைப் படிக்கிறேன்.

நீங்கள் கடைசியில் பார்த்தால், ஒவ்வொரு உறுப்பினர் பேசியதற்கும் உள்ள பதிலும், அரசின் முடிவும் அதிலே இருக்கும் என்பதை நான் மிகவும் தைரியத்துடனும், தெளிவுடனும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கரூரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் திறக்கப்படும்.

மதுரை, கோவை, திருச்சி போன்ற இடங்களில் டெப்டி டைரக்டர்கள் அலுவலகங்கள் திறக்கப்பட்டு, தொழிற் பயிற்சிக் கூடங்களை திறமையாக மேற்பார்வை பார்க்க ஏற்பாடுகள் செய்யப்படும். ஏனென்றால், இவர்களுக்கு மேற்கு ஆசிய நாடுகளான குவைத், சௌதி அரேபியா, துபாய் போன்ற இடங்களில் நல்ல வேலைவாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், இத்தகைய பயிற்சி அளிக்க இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடிசை மாற்று வாரியத்தைப் பற்றி புள்ளிவிவரங்கள் சொல்லி விட்டதாகச் சொல்கிறார்கள். நான் நேரத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். போன ஆண்டு நாங்கள் என்ன செய்தோம், இந்த ஆண்டு என்ன செய்தோம் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, அதிகமாக எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறோம் என்பதையும் சொல்லியிருக்கிறேன்.

இன்னும் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். நாட்டிலே தொழில் அமைதி இல்லையென்று சொன்னார்கள். தமிழகத்தில் 10,374 நிறுவனங்கள் இருக்கின்றன. பாக்டரீஸ், பிளான்டேஷன்ஸ், டிரான்ஸ்போர்டு போன்ற இந்த 10,374 நிறுவனங்களில், 6,61,245 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

(பிற்பகல் 1—30.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் மானியக் கோரிக்கைகள், வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவை வாக்கெடுப்புக்கு விடப்படும் வரை, பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த 6,61,245 தொழிலாளர்களில்—6 ஆம் தேதி புள்ளிவிவரப் பிரகாரம்—அதற்குப் பின்னால் 9-ஆம் தேதி வரை புள்ளிவிவரம் சேகரிப்பது என்றால் சிரமம் என்பதை அறிவீர்கள்—2,226 தொழிலாளர்கள் தான் கதவடைப்பு, வேலைநிறுத்தத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 6,61,245 தொழிலாளர்கள் என்ற அந்த எண்ணிக்கை எங்கே ? கதவடைப்பு, வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்பவர்கள் 2,226 தான் என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய சாதனை என்று பார்க்கவேண்டும்.

1978 மார்ச் 9] [திரு. எஸ். இராகவானந்தம்]

அதுபோல் 10,374 நிறுவனங்களில் பன்னிரெண்டு நிறுவனங்கள்தான் 1 to 12 தான் வேலைநிறுத்தம், லாக் அவுட் ஆகியவற்றில் இருக்கின்றன என்றால் இது புரட்சித் தலைவர் ஆட்சியின் மாபெரும் சாதனை அல்லவா? அதைநான் சொல்லிக் கொள்கிறேன். (ஆரவாரம்).

ரெபரன்ஸ் கொடுப்பது பற்றிச் சொன்னார்கள், 1974-ல் 316; 1975-ல் 214; 1976-ல் 448; 1977-ல் 690 வழக்குகள் ரெஃபர் செய்திருக்கிறோம். All t me record—இந்த ஜனவரி மாதம் பிப்ரவரி மாதம் வரை 132 வழக்குகளை தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம்.

தொழில் தகராறு சட்டப் பிரிவு 25 (தே) -ல் 300 பேருக்கு மேல் இருந்தால் க்ளோஷர், லே ஆப், ரிட்ரென்ச்மென்ட் ஆகியவற்றைச் செய்ய அனுமதி பெறவேண்டுமென்று இருக்கிறது. 50க்கு மேல் இருந்தாலே அவ்வாறு அனுமதி பெற வேண்டுமென்று சட்டத்தைத் திருத்த அரசு பரிசீலனை செய்து கொண்டிக்கிறது.

மத்திய அரசுக்கு சில திருத்தங்களைப் பரிந்துரை செய்திருக்கிறோம்—

You know, labour is a concurrent subject.

சில சட்ட திருத்தங்களைச் செய்ய மத்திய அரசின் அனுமதி தேவை.

இந்த அரசினுடைய கொள்கை-தொழிலாளர் பிரச்சனை பற்றி ஒரு சோஷலிச நாட்டில் வேலை நிறுத்தம் வராமல் இருப்பதற்கு என்ன செய்கிறார்கள்?

in built benefits—That is the policy we follow.

இந்த அரசின் கொள்கை—

In-built provisions to confer benefits on the workers The working class would get the benefits from the statutory provision itself without the need for any agitatiou (interruption). I will translate it.

சட்டத்தின் மூலமாகவே தொழிலாளர்கள் நன்மை பெற்று விடுவார்களானால் போராடுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்காது; எனவே, அந்த அடிப்படையில் இந்த அரசு இரவு பகலாக உட்கார்ந்து முடிவு எடுத்து மத்திய அரசுக்கு சில ஆலோசனைகளைத் தெரிவித்திருக்கிறோம். அங்கிருந்து கன்கரன்ஸ் வந்த உடனே இதே சட்டமன்றத்தில் சட்டத் திருத்தங்கள்—பில் கொண்டு வரத் தயாராக இருக்கிறோம்.

நான் சிலவற்றைப் பெருமையோடு கூறிக் கொள்வேன்—சட்டம், அமைதியைக் காப்பாற்ற வேண்டிய கடமை மாநில அரசுக்கு உள்ளதால் சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் போன்ற

வற்றில் சமரசப் பேச்சுவார்த்தைகளில் முழு உரிமை மாநில அரசுக்கே இருக்கவேண்டும். பேச்சுவார்த்தையின்போது இரு தரப்பினரையும் உத்திரவிட்டு அழைக்க சமரச அதிகாரிகள் சம்மன் கொடுத்தாக வேண்டும். மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இதைத்தான் சொன்னூர்கள். கன்சிலியேஷனுக்கு முதலாளிகளேயும் தொழிலாளர்களேயும் அழைப்பதற்கு, குறிப்பாக முதலாளிகளே அழைப்பதற்கு அதிகாரம் வேண்டுமென்று சொன்னூர்கள்—

Summoning power should be vested with the Conciliation Officers.

வேண்டுமென்பதை இந்த அரசு ஏற்கனவே பரிந்துரை வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தொழிற்துறை சட்டம் 10 (2)-ன் கீழ் இரு சாராரும் ஒத்துக் கொண்டு வழக்கு மன்றத்திற்கு அனுப்புவது என்ருல் பேரவையின் அனுமதி பெற்று கையெழுத்துப் போட வேண்டும். ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவது என்ருல் தலேவரோ செயலாளரோ கையெழுத்து போட்டால் போட்டவுடன் நெய்வேலி மற்ற இடத்தில் செல்லாது என்கிருர்கள். சட்டம் 12 (3) ஆக இருந்தாலும் 18 (1) செட்டில்மெண்டாக இருந்தாலும் கையெழுத்து போடக்கூடிய தொழிலாளர் தலேவர்கள் ஜெனரல் பாடி—மகாசபையை பேரவையைக் கூட்டி அனுமதி பெற்றுத்தான் இங்கே வந்து கையெழுத்துப் போட வேண்டும்.

Then only settlement will be lasting and honoured.

என்ற நம்பிக்கையோடு அதைத் திருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிருேம்.

அதே போல் பாதுகாக்கப்பட்ட தொழிலாளர்கள் யார் யார்? ‘ப்ரொடக்டட் ஒர்க்கர்ஸ்’ என்ற சட்ட விதிக்கு விளக்கமான அறிக்கை வேண்டுமென்ருர்கள். நாங்கள் பரிந்துரை வழங்கியிருப்பது—

All Office barers of a Trade Union should be treated as Protected wrokers.

எப்பேர்ப்பட்ட பரிந்துரை பார்த்தீர்களா?

ஒரு தொழிற்சங்கத்தை நடத்தக்கூடிய அத்தனே நிர்வாகிகளுமே புரொடெக்டட் ஒர்க்கர்ஸ் என்ற முறையிலே சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் சொல்லியிருக்கிருேம்.

அதைப் போல் இடைக்கால ஊதியம், வேலேப் பளு நிர்ணயம். அதிக நாட்கள் வேலேநிறுத்தம் நடக்கிறதே என்று சொன்னூர்கள். யெஸ், நடக்கிறது, அதைக் குறைக்க வேண்டுமென்பதை

1978 மார்ச் 9] [திரு. எஸ். இராகவானந்தம்]

நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனல், அப்படி அதிகமாக நடப்பதற்கு யார் காரணமாக இருக்கிருர்கள் என்பதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. ஏற்கனவே நான் சொல்லி இருக்கிறேன், வேலைநிறுத்தத்தை ஆரம்பிப்பதும், முடிப்பதும் தொழிலாளர்களுடைய உரிமை. வேலைநிறுத்தம் செய்கிறவர்கள் அரசின் துரோகிகள் என்ருே அரசை எதிர்க்கிறவர்கள் என்ருே நான் கருதமாட்டேன். ஆனல், எப்போது வேலைநிறுத்தம் ஆரம்பிப்பது, எப்போது வேலைநிறுத்தம் முடிப்பது என்பது தெரியவேண்டும். உத்திரப் பிரதேசத்தில் இருப்பதைப் போன்று வேலைநிறுத்தம் ஆரம்பித்த பின்னர் இடைக்கால உயர்வு கொடுத்து விட்டால் வேலைநிறுத்தத்தை நிறுத்தி ஊதிய உயர்வு பற்றி முடிவு எடுக்கலாம் என்ற முறையிலே சட்டத்தை திருத்தியமைக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசைக் கேட்டு இருக்கிருேம்.

அடுத்து, லே ஆப், ரெட்ரன்ச்மென்ட், க்ளோஷர் ஆகியவைகளுக்கு அனுமதி வாங்கவேண்டுமென்று ஏற்கனவே சட்டத்திலே இருக்கிறது. இப்போது இருக்கிற சட்டப்படி லாக் அவுட்டுக்கு அனுமதி பெறத் தேவையில்லை. திரு. கோவிந்தராஜன் அவர்கள் கூடச் சொன்னர்கள்.

முதலாளிகள் They are taking advantage of the lacuna in the Act. சட்டத்திலே இருக்கிற ஓட்டையில் புகுந்து கொண்டு சலுகையைப் பெற்று விடுகிருர்கள். அப்படி இருக்கக்கூடாது. லாக் அவுட்டையும் அதிலே இணைத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் கேட்டு இருக்கிருேம்.

அடுத்து நிறுவனத்தை மூடுதல் அல்லது டிரான்ஸ்பர் ஆப் மானேஜ்மெண்ட். எதுவாக இருந்தாலும் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை உத்திரவாதம் இருக்க வேண்டும். செக்யூரிட்டி ஆப் ஜாப் வேண்டும். நிறுவனத்தை மூடினல், பணத்தைக் கொடுத்து தொழிலாளரை நீ போ என்று சொல்லிவிடுகிருர்கள் அல்லது புதிதாக நிறுவனத்தை எடுத்துக் கொண்டவர்கள் நீ எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லி விடுகிருர்கள். காம்பன்சேஷன் கொடுத்துவிட்டால் அவர்களை வேலைக்கு எடுத்தாலும் எடுக்கலாம், எடுக்காமலும் போகலாம். எடுக்காவிட்டால் அந்தத் தொழிலாளர்கள் அவல நிலைமைக்கு ஆளாகிவிடுகிருர்கள். இந்த நிலைமையைத் தடுப்பதற்கு நிறுவனத்தை மூடினலும் டிரான்ஸ்பர் ஆப் மேனேஜ்மெண்ட்டாக இருந்தாலும் அங்கே உள்ள தொழிலாளர்களைக் கட்டாயமாக வேலைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய முறையிலே வேலை உத்திரவாதம் கொடுக்கும் முறையில் தொழிலாளர் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் பரிந்துரை செய்திருக்கிருேம்.

அடுத்து, சில நேரங்களிலே முதலாளிகள் அல்லது தொழிலாளர்களாக இருந்தாலும் சரி—யார் என்பதை வழக்கு மன்றம் முடிவு எடுக்கும்—ஒப்பந்தத்தை மீறுகின்ற நிலைமை ஏற்படுகிறது.

அப்படி ஒப்பந்தத்தை மீறுகிறவர்களுக்கு அபராதம் அல்லது சிறைத்தண்டனை கொடுக்கப்படவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ப்ரீச் ஆப் செட்டில்மெண்ட் என்று வருகிறபோது, ஒப்பந்தம் மீறப்படுமானால் "Fine or imprisonment or both" என்று இருப்பதை மாற்றி—ஏனென்றால் பைன்தானே என்று பணத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள்—இம்ப்ரிசன்மெண்ட் என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். எவ்வளவு புரட்சிகரமான யோசனை செய்திருக்கிறோம் என்று பார்த்தீர்களா?

அடுத்து, சங்க நிர்வாகிகள், ஆபீஸ்-பெயரர்ஸ் ஆப் தி டிரேட் யூனியன்ஸ், Office-bearers of a Trade Union should be elected only by a secret ballot என்று ஆக்கப்பட வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அடுத்து, வேலை இழந்துவிட்ட தொழிலாளர்கள் இப்போது 2 ஏ பெட்டிஷன் கொடுத்து, அதற்குப் பிறகு கன்சீலியேஷனுக்குப் போய் முடிவாக வேண்டியிருக்கிறது, இதற்கு 6, 7 மாதங்கள் ஆகிவிடுகிறது. இப்படிப்பட்ட சர்குட்டஸ் அன்ட் கம்பர்சம் ஜாப்-ஐ போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வேலை இழந்த தொழிலாளர்கள் தொழில் தகராறுச் சட்டப் பிரிவு 2 ஏ–படி தொழில் தகராறு எழுப்பாமல் 33 சி 2 பிரிவு பிரகாரம் நேரடியாக தொழில் நீதிமன்றத்திற்கு மனு செய்ய அனுமதி இருப்பதுபோல் அனுமதி வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்படவேண்டும். கோர்ட்டில் மனு தாக்கல் செய்ய வேண்டும். சாதகமாக தீர்ப்பு வந்தபின் பணம் கொடுக்கப்படவில்லையென்றால் எப்படி கலெக்டருக்கு எழுதி ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்கீழ் ரெக்கவரி செய்யப்படுகிறதோ அதைப்போன்று நேரடியாகவே டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்கள் லேபர் கோர்ட்டிற்கு போவதற்கு வசதியாக சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

தொழில் தகராறு நடக்கும்போது வேலைநீக்கம் செய்யப்படுகிறவர்களுக்கு சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் அந்த இடைக்காலத்திலே கொடுக்கவேண்டுமென்ற வகையிலே சட்டத்தைத் திருத்த வேண்டும். (குறுக்கீடு) வெய்ட். கடைசியில் பார்த்தால் எல்லாம் கவர் ஆகியிருக்கும். போனஸ் சட்டத்தில் 36-வது பிரிவுப்படி விதிவிலக்கு கொடுக்க எங்களுக்கு உரிமை உண்டு. திரு. அம்பிகாபதி அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். டி.ஐ. சைக்கிள்ஸ் தொழிலாளர்கள் 1,500 பேர்கள் ஊர்வலமாக வந்து என்னை சந்தித்து ஒவ்வொருவரும் என் கையைக் குலுக்கினார்கள், என் கைகூட வலித்துவிட்டது.

[பிற்பகல் 1–40]

அந்த அளவிற்குச் சொல்லி விதிவிலக்கு கொடுக்காதீர்கள், $8\frac{1}{3}$ தர வேண்டுமென்று சொன்னீர்களே, இந்த அரசு புரட்சித் தலைவரைக் கலந்து முடிவெடுத்தது. எந்தக் கம்பெனிக்கும்

1978 மார்ச் 9] [திரு. எஸ். இராகவானந்தம்]

36-வது செக்ஷன் பிரகாரம் (குறுக்கீடு) 34 (3) என்பது Settlement under norm different from the one enuciated under the Bonus Act—34 (3) ஸ்டிரைக் அவுட் ஆகிவிட்டது, அது இப்பொழுது இல்லை. செக்ஷன் 36-இன் கீழ் எந்த நிறுவனத்திற்கும் விதிவிலக்கு தரப்படக்கூடாது. போனஸ் கொடுத்துத்தான் தீர வேண்டும் என்று புரட்சித் தலைவரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பாராட்டு விழா கூட நடத்தினார்கள், கோபு அவர்கள் வந்து பேசினார்கள், அதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்தச் சட்டத்தில் விலக்கு யாருக்கும் தரப்படவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். 62 நிறுவனங்கள் கேட்டன, யாருக்கும் தரவில்லை. போனஸ் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யக்கோரி 10-10-1977 அன்று மத்திய அரசிற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தெரியும், செக்ஷன்கள், 13 அண்ட் 10, அதன் காரணமாக இதே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் குறைந்த போனஸ், இரண்டு தடவை குறைக்க வேண்டுமென்று அவர்கள் யோசனை செய்தபொழுது, இந்த அரசு, இன்னும் சொல்லப்போனால் கேபினட் அளவில் பரிசீலனை செய்து 8- 1/3 கொடுத்தே ஆகவேண்டும், செக்ஷன் 13-ஐ இக்னோர் செய்ய வேண்டுமென்று, 10-ஐ மனதில் வைத்துக் கொடுத்தது. அந்தப் பிரிவையே மாற்ற வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம்.

மேலும், அன்-ஆர்கனைஸ்ட் லேபரர்ஸைப்பற்றி இங்கே பேசினார்கள். அவர்களுக்கும் சட்டம் கொண்டு வரவிருக்கிறோம். தேர்தலுக்கு முன்பு புரட்சித் தலைவரவர்கள் பேசும்பொழுதெல்லாம் சொன்னார்கள். 30 ரூபாய், 40 ரூபாய், 300 ரூபாய், 400 ரூபாய் வாங்குகின்றவர்களுக்கெல்லாம் தொழிற்சங்கங்கள் இருக்கின்றன, ஆனால் தெருவிலே திரியும் செல்ஃப் எம்ப்ளாய்ட், செல்ஃப் எம்ப்ளாய்ட் ஒர்க்கர், அண்டர் எம்ப்ளாய்ட், அன்எம்ப்ளாய்ட் இப்படி வேலையில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்களே அவர்களுக்குச் சலுகை தருகின்ற அளவில் சட்டம் கொண்டுவர வேண்டாமா என்று வேதனைப்பட்டார்கள். அந்த வேதனையைத் தீர்க்கும் வாய்ப்பு அவருக்கே கிடைத்திருப்பதால், சங்க ரீதியான அமைப்புகள் இல்லாத தொழிலாளர்களுக்கு மாதத்தில் 20 நாட்களாவது வேலை கிடைக்கவும், மற்ற பாதுகாப்புகள் தரவும் சட்டம் கொண்டு வருவது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்சாலை சட்டம் பிரிவு 79-இல், துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள், அழகாகச் சொன்னார்கள், 240 நாட்கள் வேலை செய்தால்தான் பாலோயிங் இயரில், அடுத்த ஆண்டில் 20 நாட்களுக்கு ஒரு நாள் என்று உண்டு, 239½ நாட்கள் என்றாலும்

இல்லை என்று சொன்னார்கள், 239½ அல்ல, 239·99 நாட்கள் என்றாலும் அது கிடைக்காது. ஒவ்வொரு ஆண்டும் 240 நாட்கள் வேலை செய்தால்தான் உண்டு என்ற நிலையிருக்கிறது. அதை மாற்றி வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை செய்யும் தொழிற்சாலை களில் 200 நாட்களும், வாரத்தில் ஆறு நாட்கள் இருக்கும், மாதத்திற்கு 25, 26 நாட்கள் வரும் தொழிற்சாலைகளில் ஏதாவது ஒரு ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்து விட்டால் till the time of retirement on superannuation இறுதி வரையில், வேலை செய்யும்பொழுது தொடர்ந்து 20 நாட்களுக்கு ஒரு நாள் என்று லீவ் கொடுக்க வேண்டுமென்று சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று பரிந்துரை வழங்கியிருக்கிறோம் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970-ம் ஆண்டு கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் முறைபடுத் தல் மற்றும் நீக்குதல் சட்டத்தை 10-ம் அதற்கு மேலும் உள்ள தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களுக்கு அமல்படுத்தும் வகை யில் சட்டம் கொண்டு வர இந்த அரசு பரிசீலித்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

To be made applicable to establishments employing ten and more ஜேம்ஸ் அவர்கள்கூடச் சொன்னார்கள்.

The contract Labour (Regulation and abolition) Act, 1970 மத்திய அரசு கொண்டு வந்த நல்ல சட்டங்களில் அதுவும் ஒன்று. அதில் பத்தும் அதற்கு மேலும் உள்ள தொழிலாளர்கள் உள்ள நிறு வனங்களுக்கும் அமல் படுத்த பரிந்துரை வழங்கியிருக்கிறோம்.

50 தொழிலாளர்களுக்கு மேல் இருந்தாலே நிலையாணைச் சட்டத்தை, அமல்படுத்த வேண்டுமென்று நாங்கள் கொண்டுவர அறிவிப்பு கொடுத்து விட்டோம். லேபர் கமிஷனருடைய பைனல் ரிப்போர்ட் வந்த பிறகு அறிவிக்க இருக்கிறோம்.

கடைகள் நிறுவனச் சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். கடைகள் நிறுவனச் சட்டத்தைப் புதுப்பித்து புதிய சட்டம் நிறைவேற்றவும், கட்டணம் கொடுத்துப் பதிவு செய்யவும் இருக்கும் வகையில் சட்டம் செய்வதுபற்றியும் இந்த அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அபராதத் தொகை இருக்கிறதே, Work rs are fined on certain proved misconduct or alleged misconduct or something like that ஏதோ தவறு செய்துவிட்டால், பைன் செய்கிறார்களே, அந்த பைன் தொகையை தொழிலாளர் நல போர்டுக்குக் கொடுக்க வேண்டும்; தொழிலாளர் ஷேம நல நிதிக்குக் கொடுக்க வேண்டும்.

தொழிலாளர்களுக்கு பைன் போட்டு வாங்குகிற பணத்தை யார் எடுத்துக் கொள்வது? அதை அந்த பண்டில் கொடுத்து விட வேண்டுமென்ற வகையில் சட்டத் திருத்தத்தை இந்த அரசே செய்வதாக இருக்கிறது.

இங்கே, மாண்புமிகு உறுப்பினராகவுள்ள துரைமுருகன் இராணிப்பேட்டையிலுள்ள ஈ.ஐ.டி. பாரியில் தொழிற் சங்கத்தில் தலைவராக இருந்தவர். அவர் தலைவராக இருந்ததற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பாக, நான் அங்கே இருந்தேன். அந்த நிறுவனத்தில் வெகு நாளாக, ''காஷுவல் லேபரராக'' வைத் திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு முன்னேயும் இருந்தது. இப்பொழுதுதான் இருக்கிறது என்கிறார்கள். நாங்கள் வந்த பிறகும் வந்தது என்பதுதான் எனக்குக் கவலை. முன்னதாக வந்திருந்தால் இப்படி நடவடிக்கை எடுக்கும் நிலை வராது. இருந் தாலும், அவர் சொல்வதை உணர்ந்து மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று அண்ணா அவர்கள் சொன்ன தைப் போல், எதிர்க்கட்சியிலே உள்ளவர் சொன்னதில் கருத் தாழம் உள்ளதை ஏற்றுக்கொண்டு, இரண்டாண்டுக்காலம் வேலை செய்திருந்தால், பர்மனென்ட் செய்துவிட வேண்டுமென்ற நல் லெண்ணத்தில், எத்தனை பர்மனென்ட் தொழிலாளர்கள் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கும் விதத்தில் சட்டத்தைத் திருத்த வேண்டும், அதற்காக காஷுவல் தொழிலாளர்கள் 100, 150, 200 என்று இருந்தால், ஆவரேஜாகப் பார்த்து, 100, 150 என்றிருந்தால், ஆவரேஜாக 125 ஒர்க்கர்ஸ் என்ற வகையில், அந்தத் தொழிலாளர்கள் நிச்சயமாக பர்மனென்ட்டாக இருக்க வேண்டுமென்று தானே பொருள். இன்றைக்கு 10, பிறகு 20, பிறகு 30 என்றிருந்தால், ஆவரேஜ் பார்க்கலாமல்லவா? 40, 50, 60 என்றிருந்தால், 50 பேர் சராசரியாகத் தேவைப்படு கிறது என்று தானே பொருள். ஆனால், அத்தனை பேரையும் காஷுவல் லேபராக வைத்துக் கொண்டு இருக்கக்கூடாது. அவர் களை பர்மனென்டாக வைத்தால், அவர்களுக்கு பெனிபிட்ஸ் உண்டு. They don't become permanent. They are not confirmed. அவர்களை கன்பர்ம் செய்யவில்லை. அதிலிருந்து விடுதலை தரு வதற்காகச் சட்டத்தை மாற்றவிருக்கிறோம் என்பதை பெரு மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக் குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல், போக்குவரத்துத் துறையில் வேலை செய்பவர் களுக்கு, வேலை நேரத்தை வாரத்திற்கு 48 மணி நேரமெனவும், 54 மணி நேரம் வரை ஓவர் டைம் என்பது பற்றி சட்டப்பிரிவு 13, 15-ஐ மாற்ற வேண்டுமென்று மத்திய அரசுக்குப் பரிந் துரை வழங்கியிருக்கிறோம்.

அதேபோல், "மெட்டர்னிட்டி பெனிபிட்ஸ்—பெண்களுக்காக இருப்பது. இதில் "எலிஜிபிள் டேஸ்", அதாவது தகுதி பெறக் கூடிய நாட்களில் தேசிய விடுமுறை, பண்டிகை விடுமுறை நாட்களை இணைத்துக் கொள்ள வேண்டுமென்று சட்டப் பிரிவு 5 (2) மாற்றப்பட உள்ளது—அதைச் செய்வதாக இருக்கிறோம்.

ஒட்டல் தொழிலாளர்கள் மேல்முறையீடு செய்யும்போது, உங்களுக்குத் தெரியும், 5 மாதம் 27 நாளைக்கு குப்புசாமி என்று இருக்கும். 6 மாதம் என்று வந்தால் பர்மனென்ட் செய்ய வேண்டும். எனவே, இராமசாமி என்று மாறி விடுகிறார். நாங்கள் இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டுமென்று சொல்லி—நான் புள்ளி விவரத்தைத் தந்தால் நீங்கள் இங்கேயே மலர் மாலை கொண்டு வந்து விடுவீர்கள்—இன்ஸ்பெக்ஷன் போன போது, அந்த இடத்திற்குத் தொழிற்சங்கத் தலைவரே வந்து கொஞ்சம் soft pedal பண்ணுங்கள். They are coming round என்று சொல்கிறார்கள். முதலாளிகள் இணங்கி வருகிறார்கள். நீங்கள் go slow பண்ணுங்கள் என்று சொல்கிறார்கள். பீடித் தொழிற்சாலையிலே கண்ணன் செய்ததைப் பின்னால் சொல்கிறேன்.

பீடித் தொழிற்சாலையிலே, வட ஆற்காடு மாவட்டத்திலே, inspection and prosecution பண்ணும் போது go slow பண்ணுங்கள். They are coming round என்று தொழிற்சங்கத் தலைவர்கள் சொன்னார்கள்.

அதே போல், வட ஆற்காடு, சென்னை, திருச்சியில் உள்ள முதலாளிகள் வந்து அருமையான ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அதற்கு பீடித் தொழிலாளர்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடு புரட்சித் தலைவரைப் பாராட்டுகிறார்கள் CITU, AITUC, INTUC, HMS. TNTUC எல்லோரும் நீங்கள் சொன்னீர்கள், பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லை என்று. திரு. செங்காலியப்பன் அவர்களுக்கு பெரிய இடத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு அருமையான வாய்ப்பு இருக்கிறது. நான் இடைமறித்து பேசக்கூடாது என்று இருந்தேன். Learn to wait கொஞ்சம் காத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், அவசரப்பட்டு விட்டால் ஆபத்து வந்துவிடும்.

ஒட்டல் தொழிலாளர்கள் மேல்முறையீட்டை விசாரிக்கும் பொழுது சாட்சிகளைக் கட்டாயமாக வரவழைக்கவும், தேவையான ஆவணங்களைக் கொண்டுவர வலியுறுத்தும் வகையில் சட்டத்தைத் திருத்தவிருக்கிறோம்.

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக அமைச்சரவர்கள் மன்னிக்க வேண்டும். தொடர் விட்டுவிடுமென்பதற்காக நான் இவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அமைச்சரவர்கள் அறிவித்த திட்டங்களை எல்லாம் நானும் காதுகொடுத்துக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். அவருடைய பேச்சில் விளக்கம் மேலும் கொடுத்தால் மகிழ்ச்சி. பீடித் தொழிலாளர்கள் எம்பிளாயர் அன்ட் எம்பிளாயி என்ற ரிலேஷன்ஷிப்பில் இல்லை. அந்த எம்பிளாயர் அன்ட் எம்பிளாயி ரிலேஷன்ஷிப் இல்லாத நிலையில் செக்ஷன் 32 அவர்களுக்கு அப்ளிக்கபில் ஆகாது. செக்ஷன் 32 அப்ளிகபில் ஆகாதது மட்டுமல்ல, எல்லாவிதமான உரிமைகளும் அவர்களுக்குக் கிடைக்காமலிருக்கிறது. இதுகுறித்து, புரட்சிகரமான திட்டம் ஏதாவது இருந்தால் மெத்தமகிழ்ச்சியாக இருக்கும்.

(பிற்பகல் 1-50.)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, Beedi and Cigar Workers Act of 1966 பிரிவு 3, 4, 2 (ஜி) 2 (பி) இவைகளைத் திருத்தினால் கிடைத்துவிடும். இது குறித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை வழங்கப்பட்டிருக்கிறது (ஆரவாரம்). அதோடு பீடி தொழிலாளர்களுக்காக..............

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : I am not yielding. The time is up. Now the time is 1.50 p.m. பீடி தொழிலாளர்கள் வெல்பேர் என்ற வகையில் வேலூர், திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில் டிஸ்பென்சரிகள் வைக்கவும், மேலப்பாளையத்தில் ஆஸ்பிட்டல் அமைக்கவும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. Mobile van to cater to the needs of beedi workers in Vellore, Tiruchi and Tirunelveli and other neighbouring centres. நடமாடும் மருந்தகங்கள் வேலூரைச் சுற்றியுள்ள வட்டாரத்திற்கும், திருச்சியை சுற்றியுள்ள வட்டாரத்திற்கும், திருநெல்வேலியைச் சுற்றியுள்ள வட்டாரத்திற்கும் அமைக்க திட்டம் இடப்பட்டிருக்கிறது. மேலப்பாளையத்தில் பெரிய மருத்துவமனை கட்டப் படவிருக்கிறது.

இ.எஸ்.ஐ. மருத்துவமனையைப் பற்றிச் சொன்னார்கள். நான் கவலையோடு தெரிவிக்க விரும்புகிறேன். இதுவரையில் 15, 16 டாக்டர்கள் மாற்றப்பட வேண்டும் என்று பரிந்துரை வழங்கி, புரட்சித் தலைவர் அவர்கள் மாற்றியிருக்கிறார்கள், சரியாக பணி செய்யவில்லை என்று. மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. சப்ஸ்டிடுட் மருந்துகள் கொடுக்கக்கூடாது, ஸ்பெஷலிஸ்ட் மருந்துகள் தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன்.

இன்ஸ்பெக்ஷனைப் பற்றி சொன்னார்கள். நான் தனியாகக் கூட போகவில்லை. இங்கே உட்கார்ந்திருக்கிறாரே மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களையும் அழைத்துச் சென்றேன். என்னை விட ஒரு வயது குறைந்தவர். எனக்கு 62, அவருக்கு 61 வயது. அவரை அழைத்துக்கொண்டு நள்ளிரவு 12 மணிக்குச் சென்றோம். ஏ.ஐ.டி.யு.சி. நண்பர்களும் கேட்கலாம், எங்களுக்கு இல்லையா என்று. அவர்களையும் அழைத்துச் சென்று இருக்கிறேன். திரு. கே. எம். சுந்தரத்தை அழைத்துக் கொண்டு அவரும் நானும், 2, 3 மருத்துவமனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் சென்றோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பாடியைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே விசாரணை நடைபெறுகிறது என்று நேற்றோ, நேற்றைய முன்தினமோ ஒரு கேள்விக்குப் பதில் அளித்தேன் என்று கருதுகிறேன். 'Certain workers are dismissed. Certain workers are reinstated. Certain workers were discharged. அங்கே ப்ராசெஸ் நடந்த பிறகு தொழில் தகராறு எழுப்பப்பட்ட பிறகு திரும்பவும் என்னிடம்தான் வருகிறது.

(திரு. கு. ரமணி எழுந்தார்).

I am more interested என்று சொல்லுகிறேன் மிஸ்டர் ரமணி. நீங்களும் ஒரே காரியத்தில் ஈடுபட்டால் சிக்கல் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் நினைப்பதை நான் செய்வது, நான் நினைப்பதை நீங்கள் செய்வது என்று இருந்தால் இரண்டு கட்சிகள் தேவையில்லை

திரு. கு. ரமணி : பாடி சம்பந்தப்பட்ட வரையில் அமைச்சர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார். நல்லது. ஆனால் அங்கே அவர்கள் விசாரணை முடிவுக்குப் பின் டிஸ்மிஸ் பண்ணுவதும் நடவடிக்கை எடுப்பதும் அவர்களுக்கு விடாமல் அரசுக்கே விடவேண்டும். அவர்கள் ஒப்பந்தத்தை மீறுகிறார்கள். நீங்கள் அவசரப்படாதீர்கள் என்று சொல்கிறீர்கள். எனவே, அரசு இதிலே தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு ஒப்பந்தம் இல்லை.

(திரு. ரா. உமாநாத் எழுந்தார்).

Let me complete it அப்படி ஒரு ஒப்பந்தத்திற்கு புரட்சித் தலைவர் அவர்கள் முயற்சி செய்தார்கள். கடைசி நேரத்தில் வெற்றி பெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். In this case, in the interest of workers, I am not supposed to divulge certain secrets.

நான் ஒரு சில உண்மைகளை சொல்ல வந்திருக்கிறேன். மொத்தம் 3,000 பேர்களிலே 716 பேர்கள்தான் கடைசியாக வெளியே இருந்தார்கள். அது 100, 200 என்று ஆகிவிட்டது. தொழிலாளர்கள் உள்ளே போனுல்தான் நல்லது. இப்போது உள்ளே போனுல் fight and compromise என்ற தத்துவத்தின் அடிப்படையிலே இப்போது உள்ளே போய்விடட்டும் பிறகு ரீ குரூப் செய்யலாம் என்று உங்கள் தலைவர்களிலே ஒருவர் என்னிடம் கூறினர். பெயரைச் சொல்ல விரும்பவில்லை, கையெழுத்துப் போட்டுத்தான் உள்ளே போயிருக்கிறார்கள். இப்போது தயவுசெய்து சூழ்நிலையை கெடுத்துவிடாதீர்கள்.

யாராவது வேலைநீக்கம் செய்யப்பட்டு இருந்தால், பிறகு தொழில் தகராறு எழுப்பலாம். தொழில் தகராறு ஏற்பட்ட உடனே இரு சாராரையும் அழைத்துப் பேச வேண்டும். ஆகவே, இப்போது யாராவது அந்த முதலாளியைப் பற்றிக் கடுமையாகப் பேசிவிட்டால், பிறகு அவரை அழைத்துப் பேசுகிறபோது அது நல்ல சுமுகமான உறவை ஏற்படுத்த வழிகோலாது. ''கன்சிலியேஷன் பை இட்செல்ப் இஸ் ஆன் ஆர்ட்''. முள்வேலியில் போட்ட துணியை எடுக்கிற நேரத்தில், முள்வேலியும் கெடாமல், துணியும் கிழியாமல் எடுக்கவேண்டும். ஆகவே, நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அங்கே யாராவது வேலை நீக்கம் செய்யப்பட்டு இருந்தால், திரும்பவும் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளச் செய்ய முயற்சி எடுப்பது எங்கள் பொறுப்பு.

திரு. ரா. உமாநாத்: ஒரு ரிக்கார்ட் ஸ்ட்ரெய்ட்டன் பண்ணுவதற்காகச் சொல்கிறேன், ஒப்பந்தம் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அது சரியல்ல. முதலில் ஒரு ஒப்பந்தம் முதலாளிகள் சார்பாக ஒரு அக்கார்ட் கையெழுத்துப் போட்டு, அதிலே எங்கள் கட்சித் தோழர் வி. பி. சிந்தன் அவர்களும் கையெழுத்துப் போட்டு இருக்கிறார். இரண்டாவதிலும், முதலாளி கையெழுத்து வாங்கப்பட்டு இருக்கிறது. தோழர் வி. பி. சிந்தன் 'ஏற்றுக்கொள்ளுகிறேன்' என்றும் ரிக்கார்ட் செய்யப்பட்டு இருக்கிறது. இப்போது ரிக்கார்ட் சரிசெய்யப்படவில்லை என்று சொன்னல், அமைச்சர் ஒப்பந்தம் இல்லை என்று சொன்னதை வைத்துக்கொண்டு, அந்த ஸ்டேட்மென்டைப் பயன்படுத்திக் கொண்டுவிடுவார்கள். நாம் பிறகு கன்சிலியேட் செய்வதும் சிக்கலாகிவிடும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, கையெழுத்துப் போடப்பட்டது என்பதும் அது மீறப்பட்டது என்பதும் எந்தச் சூழ்நிலையில் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் நன்கு அறிவார்கள். முடிவான,

இறுதியான நிலைமைக்கு வரும்போதும், ஒப்பந்தம் செய்யும் போதும் அதை மதிக்க வேண்டும் என்ற தன்மையில் இரு சாராரும் ஏற்றுக்கொள்கிற வாய்ப்பு இருந்தாக வேண்டும். பேச்சின்போது இப்படி ஒரு வழி கண்டால் என்ன என்று முயன்று பார்க்கும் வகையில் அது ஏற்பட்டதே தவிர இறுதியான முடிவு என்ற வகையில் அது முடியும் சூழ்நிலை ஏற்படவில்லை. ஆகவே தான் அமைச்சர் அவர்கள் ஒரு ஒப்பந்தம் ஏற்படவில்லை என்று சொல்கிறார்களே தவிர, இப்படிப்பட்ட கையெழுத்து அங்கே வாங்கப்படவில்லை என்ற கருத்தில் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இன்னும் பல்வேறு திட்டங்கள் அறிவிப்பதற்கு இருந்தேன். நேரம் அதிகமாகி விட்டதால், அந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வரும் போது அவற்றைப் பற்றி உறுப்பினர்கள் தெரிந்து கொள்வார்கள் என்பதால் அறிவிக்காமல் விட்டு விடுகிறேன்.

மினிமம் வேஜஸ் ஆக்ட், குறைந்த பட்ச ஊதிய சட்டத்தை நலிந்த தொழில் நிறுவனங்களிலும் அமல் செய்ய இருக்கிறோம். இது கெஜட்டில் வரும்போது நீங்கள் படித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

குடிநீருக்காக ரூ. 21.19 லட்சம் ஒதுக்கியிருப்பது குறித்து நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். தூத்துக்குடி அதை சுற்றியுள்ள பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் 20 மில்லியன் காலன் தண்ணீர் கொடுப்பதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அது இவ்வாண்டு முடிந்துவிடும் நிலையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தூத்துக்குடி ஆர்கானிக் அண்டு கெமிகல்ஸ் இன்டஸ்டிரீஸ் தொழிற்சாலைக்கும் நீர் வழங்க குழாய்கள் அமைக்கும் பணி நிலுவையில் உள்ளது. அதற்கு 1978-79-ம் ஆண்டில் 21·18 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, அதற்கு நீர் வழங்குதல் வரும் ஆண்டில் வரலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

சென்ற கூட்டத்தின்போது சொன்னேன், தேனாம்பேட்டையில் உள்ள 7 மாடி மாளிகையில் லேபர் ஆபீஸ், ஆபீஸ் ஆப் தி அசிஸ்டென்ட் கமிஷனர், ஆபீஸ் ஆப் தி டெபுடி கமிஷனர், ஆபீஸ் ஆப் தி ஸ்பெஷல் டெபுடி கமிஷனர், ஆபீஸ் ஆப் தி கமிஷனர் ஆப் லேபர் அலுவலகங்கள் அங்கே இருக்கும்.

அந்த அலுவலகம் அங்கே இருந்தால் நாங்கள் எங்கே போவது என்று நீங்கள் கேட்கக் கூடும். உங்களை நான் மறந்துவிடவில்லை. அந்த மாளிகைக்கு ஒரு 20, 25 கெஜ தூரத்திலேயே ஒரு கட்டிடம் கட்டித் தருகிறேன். அதற்கான இடத்தை என்னுடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவரான வொர்க்ஸ் மினிஸ்டர்

நேற்றைக்கு முன் தினம் கொடுத்து விட்டார்கள், அதைவிட விரைவாக நேற்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புதல் தந்து விட்டார்கள். ஆகவே, அந்த இடத்திற்குப் பக்கத்திலேயே உங்களுக்குத் தங்குவதற்கு இடம் கொடுக்கப்படும். நீங்கள் ரயிலை விட்டு இறங்கியவுடன் நேராக டாக்சியில் அங்கே செல்ல வேண்டியது.

அந்த இடத்தில் தங்க ஒரு ரூ. 3 (மூன்று) கொடுத்தால் போதும். ஏறத்தாழ ரூ. 150 வாடகை கொடுத்தால் என்ன மாதிரி வசதிகள் இருக்குமோ, அதைப்போல் 'வெல் பர்னிஷட்' இடம் உங்களுக்குக் கட்டித் தர இருக்கிறோம். ஆகவே, நீங்கள் அங்கே சென்றவுடன் குளித்துவிட்டு, நன்றாக டிரஸ் செய்து கொண்டு (குறுக்கீடு) உங்களுக்கு வேண்டுமென்றால் ஏர்கன்டிஷன் கூட செய்து கொடுக்கிறோம். we are prepared to do that, if you only desire that (ஒரு உறுப்பினர் : வேண்டாம்) வேண்டாம் என்றால் சரி.

அங்கே எல்லா வசதிகளும் இருக்கும். அங்கேயிருந்து நீங்கள் நடந்தே அந்த அலுவலகங்களுக்குச் சென்று விடலாம். ''வித்தின் ஒன் மினிட்ஸ் வாக்கிங்'' அவ்வளவுதான். அந்த லேபர் ஆபீஸ் அலுவலகம் வைப்பதற்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. நீங்கள் தங்குவதற்கான கட்டடமும் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆகவே, நீங்கள் அலுவலரைச் சந்திக்கவும், உங்கள் பிரச்னைகளை விவாதித்து, அதன் பிறகு பணி முடிந்தவுடன் வந்து தங்குவதற்கும் பயன்பெறத் தக்க வகையில் அது அமையும் என்ற நம்பிக்கையில் நான் இருக்கிறேன்.

[பிற்பகல் 2-00]

வெளி ஊரிலிருந்து வரக்கூடிய அருமைத் தோழர்கள், பல்லாண்டு காலமாக தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்ட போராடிய அந்தத் தோழர்கள் அந்த ரூமில் இருப்பதை என் கண் குளிர பார்க்க வேண்டும். அந்தக் கட்டடத் திறப்பு விழாவிற்கு மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சர் 'என்னை அழைக்க வேண்டும்' என்று இப்போதே சொல்லி விட்டார்; அவரை அழைக்கப் போகிறோம் ; அவரை வைத்தே திறந்து வைக்கப் போகிறோம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பிப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது விவாதம் ....................

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க வேண்டும். நான் குறிப்பிட்ட ஒரு முக்கியமான பிரச்சனைக்கு அமைச்சர் பதில் சொல்லவில்லை. அதைப்பற்றிக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். இப்போது விளக்கம் கேட்க முடியாது. நேரம் இல்லை. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. தீ. சு. நல்லதம்பி: எப்படி உட்காருவது? நான் குறிப்பிட்ட முக்கியமான பிரச்னைக்கு பதில் தெரியாமல் எப்படி உட்காருவேன்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிந்து விட்டது. நேரம் இல்லை. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. தீ. சு. நல்லதம்பி: ஒரு சிறு விளக்கம்தான். நேரம் இல்லை என்று சொல்லி, விளக்கம் பெறாமல் இருக்கச் சொல்கிறீர்களா? சுமை தூக்கும் தொழிலாளர்கள் பற்றி அமைச்சர் எதுவுமே சொல்லவில்லை. அப்படிப்பட்டவர்களைப்பற்றிக் கேட்பதற்காகத்தான் நாங்கள் இருக்கிறோம். அதைப்போல சால்ட் குவார்ட்டர்ஸ் பிரச்சனை இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். புரட்சித் தலைவர் ஆட்சியில் கேட்காமலேயே கொடுப்போம். சுமை தூக்கும் தொழிலாளரிடமிருந்து தன் இச்சையாக இந்த அரசுக்கு எந்த முறையீடும் வரவில்லை. அன்று ''பாரம் சுமப்போர் சங்கம்'' என்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சங்கத்திடமிருந்து ஒரு முறையீடு வந்தது. வேறு யாரும் கேட்கவில்லை. அதை வைத்துப் பெருமை தேடிக்கொள்ள நான் விரும்பவில்லை. 15-9-77—அதுபற்றி ஒரு அறிவிப்பு செய்திருக்கிறோம். அதிலே 'அப்'ஜக்ஷன்' வந்துள்ளது, அதை 'கன்சிடர்' செய்து, அதற்குப் பின்னால்தான் கொடுக்க முடியும். அதுபற்றி இன்னும் இரண்டு மாதத்தில் அறிவிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

திரு. துரைமுருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது,

1978 மார்ச் 9]

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், வி. கே. கோதண்டராமன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றனவாக கருதப்பெற்றன.

திருவாளர்கள் எம். ஆறுமுகம், மு. அம்பிகாபதி, எம். ஏ லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,41,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் க. அரங்கசாமி, கு. ரமணி, ஜே. ஜேம்ஸ், பி. சந்திரன், எம். ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், செ. சிவசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டுவசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,79,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் கூ. சு. முருகேசன், நா. பழனிவேல், மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றதாக கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 49— பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரியதொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.08 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (7) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.
எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*109. கோரிக்கை எண். 28—சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம்).

*110. கோரிக்கை எண். 33—தமிழ்நாட்டில் வீட்டுவசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*111. சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த நிதி இணைப்பு வெளியீடு, 1978-79 (ஆங்கிலம்).

*112. கோரிக்கை எண். 29—தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

*113. கோரிக்கை எண். 49—பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குவதற்கான முதலீடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

---

*7-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

## இணைப்பு I

[667ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினு எண். 480-க்கான விடையைக் காண்க]

(அ) ஆம்.

(ஆ) பொள்ளாச்சியிலுள்ள நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம் 10 ஏக்கரா குத்தகை நிலத்தில் குறைந்த பணியாளர்களைக் கொண்டு இயங்கி வந்தது. குத்தகைப் பணத்தை அதிகரிக்கவும், நிலத்தைக் காலிசெய்து கொடுக்கும்படியும் நிலத்தின் இரு சொந்தக் காரர்கள் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர்.

இந்திய வேளாண்மை கழகத்தின் நிதி உதவியுடன் இந்நிலையம் கடலை பற்றிய பலநோக்கு ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்பட்டு, கூடுதலான பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது இந்த ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள கூடுதலான பணியாளர்கள் திறம்பட ஆராய்ச்சிகள் நடத்துவதற்குப் போதுமானதாக இந்நிலப்பரப்பு இல்லை. அதிகமான நிலங்களை தற்பொழுதுள்ள நிலங்களுடன் இணைப்பதற்கு வாய்ப்புகளும் இல்லை. ஏனெனில் நகர் விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் இவ்வாராய்ச்சி நிலையத்தின் நிலங்கள் நகர்ப்புற நிலங்களாக மாற்றப்பட்டு விட்டன. மேலும் பருவ மழை தவறுவதால் பயிர் வகைகள் அழிந்து அப் பொருட்களை இழக்கவும் நேரிடுகிறது. கூடுதலான பணியாளர்களை அமர்த்தியும் நல்ல தண்ணீர் வசதியைக் கொண்டும் பயிர் விளைச்சலை அதிகரிக்கும்படி இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் வற்புறுத்தி வருகிறது. இந்த வசதிகள் தற்போது இந்த ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடத்தில் இல்லையென்பதால் இவ்வசதிகள் நிறைந்த வேறு ஒரு இடத்திற்கு இந்த நிலையத்தை மாற்ற வேளாண்மைப் பல்கலைக் கழகம் முடிவு செய்தது.

ஆயினும் கூடிய விரைவில் பொள்ளாச்சி அல்லது அதன் சுற்றுப்புறத்தில் பொருத்தமான நிலங்களைத் தேர்ந்தெடுத்து இந்த ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ வேண்டுமென்றும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## இணைப்பு II.

[667-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நிலை.

தொழிலாளர் நலச் சட்டங்களைப் செவ்வனே நிர்வகித்தல், தொழிலாளர்களின் உண்மையான ஊதியத்தை உயர்த்துதல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் ஆகியவை தொழிலாளர் நிர்வாகக் கொள்கையின் முக்கியக் கூறுகளாகும்.

மாநிலத்தில் தொழிலாளர் நிர்வாகம் பற்றி இவ்வறிக்கையில் கீழ்க்காணும் வகைப்பாடுகளின் கீழ் ஆய்வு செய்யப்படுகிறது :—

(i) தொழில் தகராறுகள் சட்டம்.
(ii) நிறுவனங்கள் சட்டம்.
(iii) ஊதியங்கள் சட்டம்.
(iv) சமூகப் பாதுகாப்புச் சட்டம்.
(v) தொழிலாளர் நல நடவடிக்கைகள்.
(vi) எடை-அளவைகள் சட்டம்.

இவற்றோடு, வேலைவாய்ப்புப்பணி, கைவினைஞர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் பற்றிய பணி குறித்து தனித்தனி அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன—

### I. தொழில் தகராறுகள் சட்டம்.

### 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இவ்வாண்டில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும் அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1976. | 1977. |
|---|---|---|
| (a) வரப்பெற்ற புகார்கள், தகராறுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | 7,090 | 6,775 |
| (b) புலனாய்வுச் செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை. | 7,025 | 7,174 |
| (c) இணக்க முறையில் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,608 | 1,978 |
| (d) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 448 | 690 |
| (e) சமரசத்திற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 24 | 34 |

1978 மார்ச் 9]

மேற்சொன்ன (c), (d), (e) பிரிவுகளின்கீழ் வராதவை தனிப்பட்ட இணக்க முறையில் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரியவாறு முறையான ஆலோசனை வழங்கி தீர்த்து வைக்கப்பட்டவையாகும். அல்லது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டியதோ அல்லது வழக்குத் தீர்ப்புக்கு விடவேண்டியதோ அவசியமில்லை என்று கருதப்பட்டவையாகும்.

வேலையை நிறுத்திவிடுதல்—

இவ்வாண்டிலும் முந்திய ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரங்கள் வருமாறு :—

| | 1976. | 1977. |
|---|---|---|
| (a) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 207 | 298 |
| (b) இழந்த உழைப்பு நாட்கள் .. | 1,000,507 | 2,616,963 |

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த தொழில்வாரியான விவரங்கள் வருமாறு:—

| 1976 தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகளின் எண்ணிக்கை. | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | இழந்த உழைப்பு நாட்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. துணி ஆலைகள் .. | 97 | 56,172 | 589,639 |
| 2. பொறியியல் .. | 36 | 8,750 | 17,5418 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 1 | 990 | 2,205 |

[1978 மார்ச் 9

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகளின் எண்ணிக்கை. | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | இழந்த உழைப்பு நாட்கள். |
|---|---|---|---|
| 1976 | | | |
| (1) | (2) | (3) | (4) |
| 4. புகையிலை, பீடித் தொழில். | 6 | 10,76 | 14,085 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள். | 2 | 4,000 | 12,500 |
| 6. ஏனையவை .. | 65 | 9,771 | 194,537 |
| மொத்தம் .. | 207 | 80,759 | 1,000,507 |
| 1977— | | | |
| 1. துணி ஆலைகள் .. | 111 | 65,771 | 5,27,657 |
| 2. பொறியியல் .. | 61 | 19,930 | 9,25,835 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 6 | 716 | 20,783 |
| 4. புகையிலை, பீடி தொழில். | 4 | 10,774 | 2,02,293 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள். | 21 | 7,994 | 1,41,262 |
| 6. ஏனையவை .. | 95 | 76,181 | 7,99,133 |
| மொத்தம் .. | 298 | 181,366 | 2,616,963 |

1977-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள் வருமாறு:—

| | |
|---|---|
| (a) நேரடிப் பேச்சுவார்த்தை .. .. | 38 |
| (b) தாமாக முன் வந்து வேலை தொடங்கப்பட்டது. | 33 |
| (c) தொழிலாளர் நலத்துறை/அரசு அதிகாரிகள் தீர்த்து வைத்தவை. | 194 |
| (d) கால வரையறை அற்றவை .. .. .. | .. |
| (e) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை .. .. | 3 |
| (f) மூடப்பட்டவை .. .. .. .. | 9 |
| (g) ஆண்டின் இறுதியில் பேச்சுவார்த்தையில் இருந்தவை. | 21 |
| மொத்தம் .. | 298 |

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## 1976-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (திருத்த) சட்டம்.

இச் சட்டம் 5—3—1976 அன்றிலிருந்து செயலுக்கு வந்தது. இச் சட்டத்தின்படி சராசரியாக 300 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரிகின்ற நிறுவனங்களின் தொழிலதிபர்கள் வேலை முடக்கத்தின் போது ஓரளவு ஆட்களை நிறுத்தி வைக்கவோ, ஆட்குறைப்பு செய்வதற்கோ நிறுவனங்கள் மூடுவதற்கோ முன் அனுமதியைப் பெற வேண்டும். மாநில அரசு இச் சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றி, (a) வேலை முடக்கத்தின் போது ஓரளவு ஆட்கள் நிறுத்தி வைக்க (b) ஆட்குறைப்பு செய்ய, (c) நிறுவனத்தை மூடுவதற்கு முன் கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும் என்று அறிவித்துள்ளது :—

(1) 25-M பிரிவின் கீழ் வேலை முடக்கத்தின் போது ஓரளவு ஆட்களை நிறுத்தி வைக்க அனுமதி பெறுவதற்கு 60-B, விதியின் கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல இணை ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(2) 1976-ம் ஆண்டு தொழில் தகராறுகள் (திருத்த) சட்டத்தின் 25-N பிரிவின்கீழ் ஆட்குறைப்பு செய்வதற்கு அனுமதி பெறுவதற்காக, 61-A, விதியின்கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(3) நிறுவனத்தை மூடுவதற்கு அனுமதி பெறுவதற்காக 61-B பிரிவின் கீழ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மாநில அரசுக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

வரப்பெற்று முடிவு எடுக்கப்பட்ட, முடிவெடுக்கப்படாமலுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | வேலை முடக்கத்தின் போது ஓரளவு ஆட்களை நிறுத்தி வைத்தல். | ஆட் குறைப்பு. | நிறுவனத்தை மூடி விடுதல். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (a) வரப்பெற்ற விண்ணப் பங்கள். | 11 | 3 | 1 |
| (b) முடிவெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள்— | | | |
| (1) அனுமதி மறுக்கப் பட்டவை. | 3 | .. | 1 |
| (2) விண்ணப்பங்கள் திரும்பப் பெறப் பட்டமைக்காக நீக்கிவிடப்பட்டவை. | 1 | 1 | .. |

*1978 மார்ச் 9]*

| (1) | வேலை முடக்கத்தின் போது ஓரளவு ஆட்களை நிறுத்தி வைத்தல். (2) | ஆட்குறைப்பு. (3) | நிறுவனத்தை மூடி விடுதல். (4) |
|---|---|---|---|
| (3) அனுமதி வழங்கப் பட்டவை. | 2 | .. | .. |
| (4) குறைபாடுள்ளதாக திருப்பி அனுப்பப்பட்டவை. | 4 | 2 | .. |
| (c) இன்னும் முடிவெடுக்கப்படா மல் உள்ளவை. | 1 | .. | .. |

சில முக்கிய உடன் பாடுகள்.

(1) டி.யூ.சி.எஸ். நிறுவனம், சென்னை.

தொழிலாளர் நல அமைச்சர் எடுத்துக் கொண்ட முயற்சியினுல் கோரிக்கை பட்டியல் குறித்து சென்னை டி.யூ.சி.எஸ். நிறுவனத்தின் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் இடையே 2–7–1977 அன்று உடன் பாடு ஒன்று ஏற்பட்டது. இந்த உடன் பாட்டினுல் 1–7–1977-ல் இருந்து வேலைநிறுத்தம் செய்த சுமார் 1 000 தொழிலாளர்கள் 3–7–1977 லிருந்து மீண்டும் பணிக்கு திரும்பினர்.

(2) ஸ்ரீ சிவகாமி மில்ஸ் லிமிடெட், தேனூர்.

நூற்புத்துறையில் கழிவுப் பருத்தியைச் சேகரிப்பதற்கு கொள்கலன்களை ( cans ) மீண்டும் கொண்டுவருவது குறித்து 17–5–1977 லிருந்து சுமார் 600 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். 6–7–1977 அன்று சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் ஏற்பட்ட உடன்பாட்டிற்கிணங்க 9–7–1977-லிருந்து தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குச் சென்றனர்.

(3) எஸ். ஆர். பி. (S.R.P.) டூல்ஸ் லிமிடெட், இராணிப் பேட்டை, சென்னை.

இராணிப்பேட்டை பிரிவைச் சேர்ந்த சுமார் 96 தொழிலாளர்கள், சில தொழிலாளர்கள் பணியிலிருந்து விலக்கப்பட்டது உட்பட பல கோரிக்கைகள் குறித்து 9–2–1977லிருந்து வேலை

1978 மார்ச் 9]

நிறுத்தம் செய்தனர். இராணிப்பேட்டை தொழிற்சாலை தொழிலாளர்களுடன் சேர்ந்து அதே காரணத்துக்காக, சென்னை தொழிற்பிரிவு தொழிலாளர் சுமார் 270 பேர் 18-2-1977 முதற்கொண்டு வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டு முயற்சி செய்ததன் விளைவாக சுமார் 5 திங்களாக நடை பெற்ற வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு 7-7-1977-லிருந்து இவ்விரு தொழிற்பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்களும் வேலைக்கு மீண்டும் சென்றனர். சென்னை. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (I) முன்னர், இராணிப்பேட்டை தொழிற்சாலை குறித்து, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் 19—8—1977 அன்று உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்பட்டது. சென்னையிலுள்ள தொழிற்சாலையைப் பொறுத்த மட்டில், நிர்வாகத்தினர் 18 நாட்களுக்கு ஊதிய வெட்டு செய்தது தொடர்பான பிரச்னை சென்னை, தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

4. பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை.

சென்னை, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 13,000 தொழிலாளர்கள், அதிக சம்பளம், ஏனைய நலன்கள் ஆகியவற்றை வழங்குமாறு கோரி சுமார் ஒரு வார காலத்திற்கு வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு முதலமைச்சர் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக 3—9—1977 அன்று வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. 3—9—1977 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் முன்னர் உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்பட்டது. உடன்பாட்டின்படி, ஒவ்வொரு தொழிலாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 27 சம்பளம் உயர்த்த வகை செய்யப்பட்டது. இப்பயனை அரசு மற்றெல்லா போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் வழங்கியது.

5. சோழன் சாலை போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்.

மேற்சொன்ன கழகத்தைச் சேர்ந்த சுமார் 3,000 தொழிலாளர்கள், கோரிக்கை பட்டியல் அடங்கிய வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். 20—9—1977 அன்று தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின்படி தொழிலாளர்கள், திருத்தியமைக்கப்பட்ட வீதங்களின் பயணப்படி, அன்றாடப்படி, இரவு முறை மாற்றுப்பணிப்படி, ஆகியவற்றைப் பெறுவர்; மேலும் சம்பளத்தில் பிடித்த தொகை மீண்டும் அவர்களுக்கு வழங்கப்படும்.

6. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம்.

மதுரை, பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள், பல கோரிக்கைகள் தொடர்பாக

[1978 மார்ச் 9

22—8—1977-லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். போக்குவரத்து அமைச்சரது ஆலோசனையின் மேல் 27—8—1977 அன்று தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்பாட்டினால் சுமார் 3,000 தொழிலாளர்கள் பயனடைந்தனர். உயர்த்தப்பட்ட படிகள், ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஒரு மொத்தமாக ரூ. 300 (இது பின்னர் ஊதியக் கொடையில் சரிகட்டப்படும்) ஆகியவை வழங்கப்பட்டன.

7. தமிழ்நாட்டிலுள்ள பீடி தொழிற்சாலை.

தொழிலாளர் நல அமைச்சரின் ஆலோசனையின் படி, உயர்த்தப்பட்ட வீதங்களில் ஊதியங்கள், ஊதியக் கொடை, விடுப்பு வசதிகளை செயற்படுத்தல் குறித்து உடன்பாடு ஒன்று, சென்னை தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் முன்னர் ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் விளைவாக நாள் ஒன்றுக்கு 75 காசு முதல் ரூ. 1 வரை ஊதியம் உயர்த்தப்படுவதன் மூலம் சுமார் 6,000 பீடித் தொழிலாளர்கள் பயனடைவர்.

8. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி.

453 பாதுகாப்புப் பணியாளர் அணி வகுப்பு குறித்து தொழில் தகராறு ஒன்றை நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகப் பாதுகாப்புப் பணியாளர் சங்கம் எழுப்பியது. இத் தகராறு தொடர்பாக, பாதுகாப்புப் பணியாளர்கள் ஒரு நாள் ஒட்டு மொத்த தற்செயல் விடுப்புக்கு விண்ணப்பித்தனர். தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதன் பேரில், 22—9—1977 அன்று, தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னர் தரப்பினர்களுக்கிடையே உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

9. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி.

6—10—1977 அன்று சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்பு ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக சுமார் 4,000 தொழிலாளர்கள் செய்யவிருந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது. இந்த உடன்பாடு, பிடித்துக் கொள்ளப்பட்ட ஊதியக் கொடையைத் திருப்பி வழங்குதல், (ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 270) ஊதியம் நிர்ணயிக்கப்பட்டதன் விளைவாக சம்பளத்தில் பிடிக்கப்பட்ட தொகையை திருப்பி வழங்குதல், அன்றுடப் படியையும், ஏனைய படிகளையும் உயர்த்துதல், ஆகியவற்றிற்கு வகை செய்தது.

10. தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்.

ஊதிய வீதங்களை திருத்தியமைப்பது உட்பட பல கோரிக்கைகள் குறித்து 9—9—1977-லிருந்து சுமார் 600 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல

[1978 மார்ச் 9]

அமைச்சரது முயற்சியினுல் ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து 10—10—1977-லிருந்து அவர்கள் வேலை நிறுத் தத்தைக் கைவிட்டனர். சென்னை, தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் —I முன்னர் உடன்பாடு ஒன்று கையெழுத்திடப் பட்டது. திங்கள் ஒன்றுக்கு ரூ. 70 ஊதிய உயர்வு அளிப் பதற்கும் ஏனைய பயன்களுக்கும் இவ்வுடன்பாடு வகை செய் தது.

11. பெஸ்ட் அண்டு க்ராம்டன் லிமிடெட், சென்னை.

பல கோரிக்கைகள் குறித்து 1,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அச்சுறுத்தியதன் விளைவாக, 13—10—1977-ல் சென்னை, தொழிலாளர் நலத் துணை ஆணை யாளர் —I முன்னர் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் மூலம், ஏனைய பயன்களுடன், ரூ. 75 முதல் ரூ. 100 வரை ஊதிய உயர்வையும், ஏனைய பயன்களையும் தொழிலாளர்கள் பெறுவர்.

12. மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை.

1974–75, 1975–76, 1976–77 ஆம் ஆண்டுக்கு ஊதியக் கொடை வழங்குவது குறித்து தகராறு 24—10—1977-ல் தொழிலாளர் நல ஆணையாளர் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட்டது. சுமார் 16,000 தொழி லாளர்கள் 8.33 சதவீத ஊதியக் கொடை பெற்றனர். ரூ.200 ஒவ்வொருவருக்கும் முன்பணமாக வழங்கப்பட்டது. இத் தொகை 1974–75 ஆம் ஆண்டுக்கான இறுதி ஊதியக் கொடை யில் சரிகட்டப்படும்.

13. ஜோனஸ் உட்ஹெட் அண்டு சன்ஸ், சென்னை.

சுமார் 150 தொழிலாளர்களைக் கொண்ட இத்தொழிற் சாலை ஓராண்டு காலமாக மூடப்பட்டிருந்தது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரது முயற்சியினுல் 24—10—1977-ல் அது மீண்டும் திறக்கப்பட்டது. சென்னை தொழிலாளர் நல துணை ஆணையாளர்—II முன்பு ஏற்பட்ட உடன்பாட்டின் மூலம், எல்லா தொழிலாளர்களுக்கும் தொடர்ந்த வேலை வாய்ப்பு அளிக்கவும் தொழிலாளர்கள் அதிக அளவுக்கு உற் பத்தி செய்வர், தொழிற்சாலையில் அமைதியை நிலைநாட்டு வர் என்று அவர்கள் உறுதியளிப்பதன்மேல் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 15 ஊதிய உயர்வுக்கும் வகை செய்யப் பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

14. செம்ப்ளாஸ்ட், மேட்டூர் அணை.

1976–77 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடையாக 8.33 சதவீதத்திற்கும் முந்திய ஆண்டுகளுக்கான ஊதியக் கொடை கோரிக்கை குறித்து 585 ரூபாய் என்று ஒட்டு மொத்தத் தொகைக்கும் வகை செய்து உடன்பாடு ஒன்று, சென்னை, தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்னிலையில் 1977 அக்டோபரில் கையெழுத்தானது. இந்த உடன்பாட்டால் சுமார் 500 தொழிலாளர்கள் பயனடைவர்.

15. இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட், சென்னை.

1976 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை பிரச்சினை குறித்து தொழிலாளர்கள் மந்தமாகச் செயல்பட்டார்கள். ஒழுங்கீனமாக நடந்து கொண்டார்கள் என்று கூறி மேற் சொன்ன நிறுவனத்தின் நிர்வாகம் இத்தொழிற் சாலையில் 14—9—1977-லிருந்து கதவடைப்புச் செய்தது. தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் 26—10—77-ல் ஏற்பட்ட உடன்பாட்டால் இந்தக் கதவடைப்பு நீக்கப்பட்டது. இந்த உடன்பாடு, ஒவ்வொரு தொழிலாளருக்கும் 20 சதவீத ஊதியக் கொடைக்கும், 750 ரூபாய் என்ற ஒட்டு மொத்தத் தொகை அளிப்பதற்கும் வகை செய்தது.

16. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் தோட்டங்கள்.

அடிப்படை ஊதியங்கள், அகவிலைப்படி ஆகியவற்றை மாற்றியமைத்தல், பணிக்கொடைத் தொகையை உரிய முறையில் கணக்கிடுதல், முடிவுறாமல் உள்ள ஏனைய பிரச்சினைகளுக் குத் தீர்வு காணுதல் ஆகியவற்றைக் கோரி 4,000 தொழிலாளர்கள் சுமார் 40 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் ஏற்பட்ட உடன்பாட்டின் பயனாக அத்தொழிலாளர்கள் 31—10—1977-ல் வேலைக்குத் திரும்பினர். நாளொன்றுக்கு 1.75 ரூபாயிலிருந்து 2 ரூபாய் வரையில் ஊதியம் உயர்வதற்கு இந்த உடன்பாடு வகை செய்தது.

17. மலைத்தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள்.

திங்கள் ஒன்றுக்கு 70 ரூபாயிலிருந்து 120 ரூபாய் வரையில் ஊதிய உயர்வு அளிப்பதற்கான உடன்பாடு ஒன்று, கோயம் புத்தூர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் முன்னிலையில் 1977 அக்டோபரில் ஏற்பட்டது. இதன் மூலம் சுமார் 2,000 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

1978 மார்ச் 9]

18. சென்னை ரப்பர் தொழிற்சாலை, சென்னை.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் 2—11—1977-ல் ஏற்பட்ட உடன்பாட்டின் பயனாக, சென்னை ரப்பர் தொழிற்சாலையில் சுமார் 1,200 தொழிலாளர்கள் செய்த வேலை நிறுத்தம் நீக்கப்பட்டது. ஒவ்வொரு தொழிலாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு சுமார் 160 ரூபாய் அளவுக்கு ஊதிய உயர்வு அளிக்கவும், ஒட்டு மொத்தமாக சுமார் 900 ரூபாய் அளிக்கவும் இந்த உடன்பாடு வகை செய்தது.

19. கொரமாண்டல் ஸ்டீல்ஸ் லிமிடெட், சென்னை.

தங்களுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக கூறி இந்நிறுவனத்தை 3—10—1977-ல் மூடவிருப்பதாக இந்நிறுவனத்தின் நிர்வாகம் 3—8—1977-ல் அறிவித்தது. தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை எழுப்பினர். தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர் என்று குற்றம் சாட்டி இந்நிறுவனத்தை இதன் நிர்வாகம் 7—9—1977-ல் கதவடைப்பு செய்து, 3—10—1977 முதற்கொண்டு மூடி விடுவதாக அறிவித்தது. இதனால் சுமார் 250 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். சென்னை, தொழிலாளர் நல துணை ஆணையாளர்-II முன்னிலையில் ஏற்பட்ட உடன்பாட்டால் இந்நிலை தவிர்க்கப்பட்டது. தொழிற்சாலையை 2—11—1977-ல் திறப்பதாகவும், அதிகமான உற்பத்தியையொட்டி திங்கள் ஒன்றுக்கு 50 ரூபாய் ஊதிய உயர்வு அளிப்பதாகவும் நிர்வாகம் ஒப்புக்கொண்டது.

20. சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், சிறுமுகை, கோயம்புத்தூர்.

தீபாவளிக்கு முன்னர் ஒவ்வொரு தொழிலாளருக்கும் 20 சதவீதம் ஊதியக் கொடையாகவும், 11 சதவீதம் முன்பணமாகவும் அளிக்க, கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் முன்னிலையில் 4—11—1977-ல் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இதனால் 2,000 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

21. பக்கிங்காம்-கர்னாட்டிக் ஆலை லிமிடெட், சென்னை.

1976ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை பிரச்சினை குறித்து சென்னைத் தொழிலாளர் சங்கம், பக்கிங்காம்-கர்னாட்டிக் ஆலைப் பணியாளர் சங்கம் ஆகியவை முறையே 26—10—1977, 29—10—1977-ல் வேலை நிறுத்த அறிவிப்பை நிர்வாகத்தினருக்குக் கொடுத்தன.

இது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோர் முன்னிலையில் 1—11—77-ல் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இதன் பயனாக, 1976-ஆம்

ஆண்டிற்கு குறைந்தது 8.33 சதவீத ஊதியக் கொடையை நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டும், சீரமைப்பது குறித்த செயற்குறிப்புகளை 6 திங்களில் முடிவு செய்வதற்குத் தொழிலாளர்கள் நிர்வாகத்தினருக்கு உதவி புரிய வேண்டும் என்று உடன்பாடு ஏற்பட்டது. நிர்வாகம், 9—11—1977ஆம் நாளிட்ட தங்களது அறிவிப்பின்படி, தொழிலாளர்களுக்கான ஊதியக் கொடையை நிர்வாகம் வழங்கியது.

22. இ.ஐ.டி. பாரி இந்தியா லிமிடெட், இராணிப்பேட்டை

ஊதியக் கொடையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கோரி இத்தொழிற்சாலையின் சுமார் 1,000 தொழிலாளர்கள் ஒருவார காலம் வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் மூலமாக சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் உடன்பாடு ஒன்று 4—11—1977-ல் ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் படி, இச்சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் குறைந்த அளவு 8.33 சதவீதத்திற்கும் அதிகமாக ஊதியக் கொடை, அதாவது, 175 ரூபாய் பெற்றனர். இந்த உடன்பாட்டைத் தொடர்ந்து 5—11—1977-ல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றனர்.

23. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் லிமிடெட், நெய்வேலி.

நிர்வாகம் அளிப்பதாக அறிவிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியக் கொடையான 8.33 சதவீதத்திற்கு அதிகமாக 1976–77ஆம் ஆண்டிற்கு வழங்க வேண்டும் என்று கோரி இக்கழகத்தின் சுமார் 15,500 தொழிலாளர்கள் தாங்கள் 6—10—1977-ல் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக 22—9—1977-ல் அறிவிப்புக் கொடுத்தனர். இதே போன்ற அறிவிப்பு ஒன்றை இடைநிலை தொழில் நுட்ப பணியாளர் சங்கம், இளநிலை பொறியாளர்கள் சங்கம், முதலாட்கள் சங்கம் (Foremans Association) ஆகியவையும் 22—9—1977-ல் கொடுத்தன. தொழிலாளர்கள் 26—10—1977-லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதன் பேரில் சென்னை தொழிலாளர் நல துணை ஆணையாளர்-II முன்னிலையில் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன் பயனாக, தொழிலாளர்கள் 11—11—1977-ல் வேலைக்குத் திரும்பினர்.

24. தாரங்கதாரா கெமிகல் ஒர்க்ஸ் லிமிடெட், அறுமுகநேரி

ஆறுமுகநேரி, தாரங்கதாரா கெமிகல் ஒர்க்ஸ் லிமிடெட்டைச் சேர்ந்த சுமார் 950 தொழிலாளர்கள் 1975–76, 1976–77 ஆண்டுக்கான ஊதியக் கொடை குறித்த பிரச்சினைகள் காரண

1978 மார்ச் 9]

மாக 5—11—1977-ல் இருந்து வேலை நிறுத்தம் செய்தனர். மதுரை தொழிலாளர் நல துணை ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றபடியால், இது குறித்து மேற்கொண்டு பேச்சு வார்த்தைகளை சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் மேற்கொண்டார். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதின் பேரில் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்னிலையில் 23—11—1977-ல் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. தொழிலாளர்கள் 24—11—1977-ல் வேலைக்குத் திரும்பினர்.

25. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள துணி ஆலைத் தொழிலாளர்களின் பொதுவான தகராறு :

குறைந்த அளவு ஊதியக் கொடையான 8.33 சதவீதத்திற்கு அதிகமாக ஊதியக் கொடையை 1976-ம் ஆண்டிற்கு கூடுதலாக வழங்க வேண்டும் என்று கூறி கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சுமார் 36 துணி ஆலைகளில் பணி புரியும் சுமார் 20,000 தொழிலாளர்கள் 1977 நவம்பரில் பல்வேறு நாட்களில் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நலத் துறை அளித்த கருத்துரையின் அடிப்படையிலும் இரு தரப்பு பேச்சு வார்த்தைகளின் பயனாகவும் பெரும்பாலான துணி ஆலைகள் ஊதியக் கொடைத் தகராறுகளைத் தீர்த்துக் கொண்டன. 14-11-1977 வாக்கில் வழக்கமான நிலை நிலவியது. 9,429 தொழிலாளர்கள் பணிபுரியும் சுமார் 10 ஆலைகளில் வேலைநிறுத்தமும், கதவடைப்பும் நடைபெற்றன. இவை தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளரால் தீர்த்து வைக்கப்பட்டன. 1-12-1977-ல் வழக்கமான சூழ்நிலை நிலவியது.

26. மேட்டூர் பியர்ட்செல் லிமிடெட், மேட்டூர் அணை :

1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளுக்குக் கூடுதலாக ஊதியக் கொடை வழங்க வேண்டும் என்ற பிரச்னை குறித்து சுமார் 2,500 தொழிலாளர்கள் 8-11-1977-ல் இருந்து வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதன் பலனாக சென்னை தொழிலாளர் நல தனித் துணை ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் இத்தகராறு 7-12-1977-ல் தீர்க்கப்பட்டு 9-12-1977-ல் வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது.

27. இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட், நாகப்பட்டினம்:

இந் நிறுவனத்தில் சுமார் 500 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். புயலால் இந்நிறுவனம் பெருமளவில் பாதிக்கப்பட்டதால் 19-11-1977-ல் இந்நிறுவனம் மூடப்பட்டது. மாண்புமிகு

தொழிலாளர் நல அமைச்சரின் அறிவுரையின் பேரிலும் திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல துணை ஆணையாளா நல்கிய ஆலோசனையின் பேரிலும் இது குறித்து திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல துணை ஆணையாளர் பேச்சு வார்த்தை நடத்தினர். 12-12-1977-ல் இத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டது.

பாடியில் உள்ள டி.வி.எஸ். தொழிற் பிரிவுகளில் ஏற்பட்ட தகராறு :

தொழிலாளர்கள் மந்தமாக செயல்பட்டதாலும், அவர்கள் மீது நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததாலும் தொழிற் சங்கங்களுக்குக்கிடையே தகராறுகள் ஏற்பட்டதாலும் (1) சுந்தரம் கிளேட்டன் லிமிடெட், (2) பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், (3) லூகாஸ் டி.வி.எஸ். லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் நிர்வாகத்தினருக்கும், அவற்றில் பணி புரியும் தொழிலாளர்களுக்குமிடையே தொழிற் தகராறுகள் ஏற்பட்டு அதன் விளைவாக முறையே 7-6-1977, 13-7-1977, 18-7-1977 ஆகிய நாட்களில் வேலை நிறுத்தமும் ஏற்பட்டது. மாண்புமிகு முதல் அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளையொட்டி இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று உடன்பாடுகள் ஏற்பட்டன. அதன் பயனாக, முறையே 17-8-1977, 19-8-1977, 19-8-1977 ஆகிய நாட்களில் திரும்பவும் மேற்சொன்ன நிறுவனங்களில் பணி மேற்கொள்ளப்பட்டது.

பணியை மேற்கொண்ட பிறகு, தொழிலாளர்கள் ஒழுங்கீனமாக நடக்கிறார்கள், தொழிலாளர்கள் மந்தமாகப் பணிபுரிகின்றனர், மேற்பார்வையாளர்களைத் தொழிலாளர்கள் அச்சுறுத்துகின்றனர் என்று குற்றஞ்சாட்டி சுந்தரம் கிளேட்டன் லிமிடெட், லூக்காஸ் டி.வி.எஸ். லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் நிர்வாகங்கள் கதவடைப்பு செய்வதாக 29-8-1977-ல் அறிவித்தனர். இத் தகராறைத் தீர்க்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இதற்கிடையில் தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் தொழிற்சாலையை மீண்டும் திறக்குமாறும் தாங்கள் ஒழுங்காக நடந்து கொள்வதாகவும் சொல்கிறார்கள் என்று கூறி இந் நிறுவனங்களின் நிர்வாகம் 29-9-1977-ல் கதவடைப்பை நீக்கியது. தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களைத் தவிர ஏனைய தொழிலாளர்கள் ஒழுங்கைக் கடைப் பிடிப்பதாகவும், உற்பத்தி அளவை குறைக்க மாட்டோம் என்றும் கூறி உறுதி மொழி ஒன்றை ஒவ்வொரு தொழிலாளரும் எழுதி கொடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டனர். 28-10-1977 ஆம் நாள் நிலவரப்படி ஒவ்வொரு தொழிலாளரும் உறுதி மொழி ஒன்றை எழுதிக் கொடுத்த பிறகு, சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் நிறுவனத்திற்கு 909 தொழிலாளர்களும், லூக்காஸ் டி.வி.எஸ். நிறுவனத்திற்கு 1,664 தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பினர். உறுதி மொழி எழுதிக் கொடுக்க மறுத்த எஞ்சியுள்ள தொழி

1978 மார்ச் 9]

லாளர்களைப் பொறுத்தமட்டில் முதலமைச்சரின் மூலம் தீர்வு காணப்பட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இறுதியாக, உறுதிமொழி எந்த அடிப்படையில் எழுதிக் கொடுக்க வேண்டும் என்பது குறித்து உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இதற்கிடையில், 27-10-1977, 30-10-1977-ல் வன்முறைச் சம்பவங்கள் நடை பெற்றதாகக் குற்றஞ்சாட்டி, நிர்வாகம் தாங்கள் முன்னர் அளித்த ஒப்புதலை திரும்பப் பெற்றுக் கொண்டனர். மிகவும் ப்தட்டமான சூழ்நிலை நிலவுவதாகக் கூறி 31-10-1977-லிருந்து 4-11-1977 வரை ஊதியத்தோடு கூடிய விடுமுறையாக அறிவித் தனர். (5-11-1977, 6-11-1977 ஆகிய நாட்கள் வார விடுமுறை நாட்களாகும்). இந்த இரு நிறுவனங்கள் 7-11-1977ல் மீண்டும் திறக்கப்பட்டன. அதன் பிறகு தற்காலிகமாகப் பணி யிலிருந்து நீக்கி வைக்கப்பட்ட தொழிலாளர்களைத் தவிர ஏனைய தொழிலாளர்கள் நிர்வாகத்தினர் கோரிய உறுதி மொழியை, எழுதிக் கொடுத்துவிட்டு பணிக்குத் திரும்பினர். இந்த இரு நிறுவனங்கள் தற்போது சுமூகமாகச் செயல்படுகின்றன.

<u>பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை.</u>

19-9-1977-ல் பணி திரும்பத் தொடரப்பட்ட பிறகு உற்பத்தி குறைவாக உள்ளது, தொழிலாளர்களிடையே ஒழுங்கீன நடவடிக்கைகள் நிலவுகின்றன என்று நிர்வாகம் குற்றம் சாட்டி யது. குறிப்பிட்ட சில தலைவர்களைக் கைது செய்ததால் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை 13-10-1977-ல் எழுந்தது. இயந்திரங்கள், தளவாடங்கள் ஆகியவற்றிற்கும், பணியாளர்களுக்கும் அபாயம் ஏற்படும் என்று உணர்ந்து, நிர்வாகம் 13-10-1977-லிருந்து, கதவடைப்புச் செய்தது. சென்னை தொழிலாளர் நலத்துறை ஆணையாளர்-II இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இதற் கிடையில் 22-12-1977 ஆம் நாளிட்ட தங்களது பத்திரிகைச் செய்தியினையொட்டி கதவடைப்பு 30-12-1977-ல் நீக்கப்படும் என்று நிர்வாகத்தினர் சுட்டிக் காட்டினர். ஒவ்வொரு தொழி லாளரும் ஒழுங்கைக் கடைப்பிடிப்பதாகவும், சாதாரணமாக எவ்வளவு உற்பத்தி செய்யப்படுமோ அந்த அளவுக்குக் குறை யாமல் உற்பத்தி செய்வதற்கும் உறுதி கூறி உறுதிமொழிப் பத்தி ரம் ஒன்றை எழுதிக் கொடுத்துவிட்டு பணிக்கு வர பெரும்பாலான தொழிலாளர்கள் சம்மதித்தனர். அதற்கிணங்க, நிர்வாகம் 30-12-1977-ல் கதவடைப்பை நீக்கியது. தொழிலாளர்கள், தொகுதி தொகுதியாகப் பணிக்குத் திரும்பினர். இந்நிறுவனம் தற்போது சுமூகமாக இயங்கி வருகிறது.

<u>கோயம்புத்தூர் லெட்சுமி மெசின் ஒர்க்ஸ் லிமிடெட்டில் ஏற்பட்ட தகராறு.</u>

கோயம்புத்தூர் லெட்சுமி மெஷின் ஒர்க்ஸ் லிமிடெட்டில் சுமார் 2,200 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இந் நிறுவனத் திலுள்ள 10 சங்கங்களில் 7 சங்கங்கள், வேலை நிறுத்த

அறிவிப்பை 1-6-1977-ல் கொடுத்தன. தற்செயல் விடுப்பு, வீட்டு வாடகைப்படி ஆகியவை அளிப்பது, ஊக்கச் சலுகைத் திட்டத்தை (Incentive Scheme) திருத்தியமைப்பது, தொழிலாளர்களை வேலைக்கமர்த்தாமல் இருத்தல் முதலிய கோரிக்கைகளுக்காக 16-6-1977-லிருந்து வேலை நிறுத்தம் செய்யப் போவதாகக் கூறி வேலை நிறுத்த அறிவிப்புக் கொடுத்தனர். இப்பிரச்சினைகள் குறித்து இணக்கப் பேச்சு வார்த்தைகள் கோயம்புத்தூர் தொழிலாளர் நல அதிகாரி-II முன்னிலையில் நடைபெற்ற போதிலும், தற்செயல் விடுப்பு குறித்த பிரச்சினையை நிர்வாகம் ஏனைய மூன்று சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தி முடித்ததை எதிர்த்துத் தொழிலாளர்கள் 2-6-1977-லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். கோயம்புத்தூர் தொழிலாளர் நல அதிகாரி-II முன்னிலையில் உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. இருப்பினும், சென்னை, தொழிலாளர் நல துணை ஆணையாளர் (ஆய்வு), கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் ஆகியோர் முன்னிலையிலும் தொழிலாளர் நல அமைச்சர் மூலமாகவும் நடைபெற்ற, தொடர்ந்த பேச்சு வார்த்தைகளின் பயனாகவும் கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் முன்னிலையில் 4-9-1977-ல் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின்படி கதவடைப்பு 5-9-1977-ல் நீக்கப்பட்டது. இருப்பினும், இச்சங்கங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட சில தொழிலாளர்கள், மேற்சொன்ன 4-9-1977 ஆம் நாளிட்ட இந்த உடன்பாட்டிற்குத் தரப்பினராக இல்லாத தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தை 26-9-1977 வரை தொடர்ந்தனர். ஏனைய தொழிலாளர்களை வேலைக்கு வர விடாமல் தடுக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டி சுமார் 1,267 தொழிலாளர்களுக்கு தற்காலிக வேலை நீக்க ஆணைகளை நிர்வாகம் பிறப்பித்தது. 1977 செப்டம்பரிலிருந்து பணிபுரிந்து வருவோருக்கு அட்டைகளை வழங்கியது. அதன் பிறகு, தொழிலாளர்கள் வருகை படிப்படியாக முன்னேறியது. 4-9-1977 ஆம் நாளிட்ட உடன்பாட்டை எதிர்த்து, வேலை நிறுத்தம் செய்த ஆறு சங்கங்களைச் சேர்ந்தோர் தொழிலாளர் நல அமைச்சரை 23-10-1977-ல் சந்தித்து, தாங்கள் எப்பிரச்சினைகள் குறித்து வேலை நிறுத்தம் செய்து வருகிறார்களோ அப்பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் எடுக்கின்ற முடிவுக்கிணங்க நடந்து கொள்ள ஒப்புக் கொண்டனர். அதன் பிறகு நிர்வாகத்திற்கும் 6 தொழிற்சங்கங்களுக்கும் 11-11-1977ல் தெரிவிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சரின் முடிவை ஏற்றுக் கொண்டு, வேலை நிறுத்தம் செய்துவந்த தொழிலாளர்கள் 14-11-1977-ல் வேலைக்கு வந்தனர். இந்நிறுவனத்தில் சுமூக நிலை நிலவியது.

4-9-1977-ல் ஏற்பட்ட உடன்பாட்டிற்கெதிராக, கோயம்புத்தூர் பொதுப் பொறியாளர்கள்-இயந்திரத் தொழிலாளர்கள் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு திரும்பப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

1978 மார்ச் 9]

## மூடப்பட்டிருந்த நிறுவனங்களைத் திறத்தல்.

1976-ல் மூடப்பட்டிருந்த கீழ்க்கண்ட நிறுவனங்கள், தொழிலாளர் நல, தொழிற்துறைகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக மீண்டும் திறக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகின்றன.

| தொடர் எண்ணும், தொழில் நிறுவனத்தின் பெயரும். | | பணி நிறுத்தப்பட்ட நாள். | மீண்டும் திறக்கப்பட்ட நாள். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1 இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை. | | 13-8-1974 | 8-12-1977 |
| 2 ஜனார்த்தனு மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | (a) | 12-1-1976 | 3-10-1976 |
| | (b) | 16-1-1977 | 14-2-1977 |
| 3 காவேரி ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ், காவேரி நகர். | | 1-12 1975 | 5 ·3 ·1977 |
| 4 ரவீந்திரா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | | 1 ·12 ·1976 | 2 -2 -1977 |
| 5 மது ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர். | | 7-2-1976 | 17-2-1977 |
| 6 வசந்தா மில்ஸ், கோயம்புத்தூர். | | 12-7-1976 | 20-8-1976 |
| 7 ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், பொள்ளாச்சி. | | 12-7-1976 | 3-6 -1977 |
| 8 சோமசுந்தரா சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல். | | 30-7-1976 | 6-12-1977 |
| 9 நாகம்மாள் மில்ஸ் லிமிடெட், நாகர்கோவில். | | 23-11-1976 | 2-3-1977 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 9

| தொடர் எண்ணும் தொழில் நிறுவனத்தின் பெயரும். | பணி நிறுத்தப்பட்ட நாள். | மீண்டும் திறக்கப்பட்ட நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 10 பவானி மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 27-1-1977 | 10-2-1977 |
| 11 தி கோயம்புத்தூர் கமலா மில்ஸ், கோயம்புத்தூர். | 28-12-1976 | 27-3-1977 |
| 12 பக்கிங்ஹாம் அண்ட் கர்னடிக் மில்ஸ் லிமிடெட், சென்னை. | 25-11-1976 | 20-2-1977 |
| 13 சிவகுமார் மில்ஸ் லிமிடெட், திருநெல்வேலி. | 18-2-1977 | 14-10-1977-ல் தீர்வு ஏற்பட்டுள்ளது. திறக்கப்படும் நாள் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 14 பிரகாஷ் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், கோயம்புத்தூர். | 13-5-1977 | 28-12-1977 |
| 15 லோட்டஸ் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 22-7-1976 | 2-2-1978-ல் சுத்தம்செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது. |

கதவடைப்பு.

**(1) பத்மா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் :**

சுமார் 110 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 10—4—1976லிருந்து செயல்படவில்லை. ஆலையினை மீண்டும் திறக்கப்படுவது தொடர்பாக கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார். இந்த பேச்சு வார்த்தையின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆலைக்கு உத்தரவாத உதவி அளிக்க சாத்தியமாக இல்லை என்று அரசு தீர்மானித்துள்ளது. 1976-ல் தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு ரூ. 100 கொடுக்கப்பட்டதைத் தவிர முதலமைச்சரது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூபாய் 200 நிவாரணம் அளிக்க அரசு அனுமதித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 9]

(2) தமிழ் நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர் :

சுமார் 101 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 25—11—1976லிருந்து செயல்படவில்லை. இந்த ஆலையினை மீண்டும் திறப்பது தொடர்பாக கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறார். இந்த பேச்சு வார்த்தையின் முடிவு எதிர்பார்க்கப் படுகிறது.

(3) ராஜா மில்ஸ், மதுரை.

சுமார் 125 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 20—11—1976லிருந்து செயல்படவில்லை. மதுரை தொழிலாளர் நல அதிகாரி-I, தொழில் தகராறு சட்டத்தின் கீழ் 25 F.F.A. ஆவது பிரிவை மீறியதற்காக (கதவடைப்புக்கு 60 நாட்கள் முன்னதாக முன்னறிவிப்பு கொடுக்கத் தவறியமை) நிர்வாகத்தினர் மீது வழக்குத் தொடர்வதற்கான செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார். மதுரை துணை ஆணையாளர் இதுகுறித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

துணி ஆலைத் தொழிலில் சீரமைப்பு.

1977ஆம் ஆண்டில் துணி ஆலைகளில் சீரமைப்புக் குறித்து எழுந்த 48 தகராறுகள் இத்துறையின் உதவியுடன் தீர்க்கப் பட்டன. மற்றும் 18 தகராறுகள் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கப்பட்டன.

சமரச ஏற்பாடு.

வேலையிலிருந்து நீக்குதல், தள்ளிவிடுதல், ஆட்குறைப்பு மற்றும் இதே போன்ற பிரச்சினைகள் குறித்த தகராறுகளில் முறையின் மரபிலான சமரச ஏற்பாட்டிற்கு இணங்குமாறு பொதுவாக தகராறுக்குட்பட்ட தரப்பினர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது. 1977ஆம் ஆண்டில் 34 தகராறுகள் முறையின் மரபிலான சமரச ஏற்பாட்டிற்கு அனுப்பப் பட்டன.

தகராறுகளைத் தாமாகவே தீர்த்துக்கொள்ளும் முறையை பிரபலமாக்குவதற்காக மாநில அளவில் சமரச ஏற்பாட்டுக் குழு ஒன்றை (Arbitration Promotion Board) அரசு அமைத்துள்ளது. ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர் இக்குழுவுக்கு தலைவராக உள்ளார். மேலும், இக்குழுவில் இரண்டு தனிப்பட்ட உறுப்பினர்களும் பணியாளர் தரப்பில் நால்வரும், தொழில் அதிபர்கள் தரப்பில் நால்வரும் உறுப்பினர்களாக இருப்பர். தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் இக்குழுவுக்கு செயலாளராவார்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 9

நடுவர் மன்றத் தீர்ப்பு:—1976, 1977ஆம் ஆண்டுகளில் சென்னை தொழில் நடுவர் மன்றம், சென்னை, மதுரை, கோயம் புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதி மன்றங் கள், சென்னையிலுள்ள கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்ட வழக்குகள், அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் வருமாறு :—

| | நடுவர் மன்றத் தீர்ப்புக்காக அனுப் பப்பட்ட தகராறு களின் எண்ணிக்கை. | | தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண் ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1976. | 1977. | 1976. | 1977. |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை. | 65 | 73 | 40 | 47 |
| தொழிலாளர் நீதி மன்றங்கள். | 383 | 617 | 478 | 552 |

மேற்சொன்ன வழக்குகளைத் தவிர தொழிலாளர் நீதி மன்றங்கள் 1977-ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33சி(2)-பிரிவின் கீழ் தாக்கல் செய்த 1,110 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்புக் கூறின.

தொழில்களை பொதுப்பயன்பாட்டு பணிகளாக அறிவித்தல்:— கீழ்க்காணும் தொழில்கள் பொதுப் பயன்பாட்டுப் பணிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவை நடப்பாண்டிலும் அவ்வாறே தொடர்ந்து செயல்பட்டு வரும் :—

1. சிறு துறைமுகங்களில் உள்ள எல்லா பணியாளர்களும்.
2. இரும்பு-எஃகுத் தொழில்.
3. மருத்துவமனை-மருந்தகப் பணி.
4. தீயணைப்புப் பணி.
5. பருப்பு ஆலைகளும் உணவுப் பொருளாக பயன்படுத்தப் படும் மாவினைத் தயாரிக்கும் ஆலைகளும்.
6. அரிசி ஆலைகளும், உணவுப் பொருளாக எண்ணெய் தயாரிக்கும் ஆலைகளும்.
7. பால், பால் பொருள்கள்.
8. தோல், பிராணவாயு, அஸிடெலீன் தொழில்கள்.
9. பிஸ்கோத்துகள், ரொட்டி பொருள்கள்.
10. பெட்ரோலியம் பொருள்கள் தயாரிப்பு, விற்பனை, விநியோகம்.

1978 மார்ச் 9]

11. உரத் தயாரிப்புத் தொழில்.
12. சிமிட்டி தொழில்.
13. பருத்தி துணி ஆலை.
14. மோட்டார் போக்குவரத்துத் தொழில்.
15. சர்க்கரை ஆலை.
16. ரயான், நைலான் ஏனைய செயற்கை இழைகள் தயாரிப்புத் தொழில்.
17. கனரக, இரசாயனத் தொழில்.
18. அலுமினியம் தயாரிப்புத் தொழில்.
19. நீராவி உற்பத்தி சாதனம், உயர் அழுத்த கொதிகலங்கள், பாக்கேஜ் பாய்லர்கள், வால்வ் பிட்டிங்குகள், பிரஸ்ஷர் வெஸல்கள் முதலியவை தயாரிப்புத் தொழில்.

வசூல்.—1977 ஆம் ஆண்டில், 97 தகராறுகளின் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33சி (1) பிரிவின்கீழ் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய மொத்தம் ரூ. 3,58,732.89 வசூல் செய்யுமாறு அரசு ஆணையிட்டது.

வழக்குகள்.—தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் 1977 ஆம் ஆண்டில் நான்கு வழக்குகள் தொடங்க அரசு அனுமதி வழங்கியது. 1976 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (திருத்த) சட்டத்தின்படி, பணியாளர்களுக்கு வேலையில்லையென அறிவிப்பதற்கு முன்னால் அனுமதி பெற மனு செய்ய தவறியதற்காக வேடப்பட்டியிலுள்ள தி பயோனியர் டெக்ஸ்டயில்ஸ் நிறுவனம் மீது வழக்கு தொடர அனுமதி வழங்கியது.

தொழிற் சங்கங்கள்.—1977 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதி நிலவரப்படி, 2,429 பதிவு பெற்ற தொழிற் சங்கங்கள் இருந்தன. இவ்வாண்டில் 311 தொழிற் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 188 தொழிற் சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. இரண்டு ரத்து செய்யப்பட்ட பதிவுகள் மீண்டும் கொடுக்கப்பட்டன. இரண்டு தொழிற் சங்கங்கள் கலைக்கப்பட்டன. இணைக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் இரண்டு. இவ்வாண்டு இறுதி நிலவரப்படி உள்ள பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 2,550 ஆகும்.

தொழிற்சாலையில் ஒழுங்குமுறை.—தொழிற்சாலையில் ஒழுங்குமுறை விதியைச் செயற்படுத்தும் பணி மாநில மதிப்பீட்டு செயல்பாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவ்வித, மத்திய அமைப்பையும் சேராத தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்கொண்டு தொழிற்சாலை ஒழுங்குமுறை விதிகளைப் பின்பற் ஆலோசனைகள் கூறுமாறு தொழிலாளர் நல அதிகாரிகளுக்கு

[1978 மார்ச் 9

தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் மேற் கொண்ட முயற்சிகளின் பயனாக தொழிற்சாலை ஒழுங்குமுறை விதியைப் பின்பற்றுவதாக 1977ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாள் வரை 2,550 தொழிற் சங்கங்கள், 326 நிர்வாகங்கள், 24 உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவை எழுத்து மூலமாக ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டுள்ளன.

ஊதியக் கொடை வழங்கல் சட்டம்.—1977ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் அவசரச் சட்டம் வெளியிடப்பட்ட தன் விளைவாக, பெறப்படும் வருமானத்தில் 8.33 சதவீதம் குறைந்தபட்ச ஊதியக்கொடை வழங்கல், 1976–77ஆம் கணக்காண்டிலிருந்து மீண்டும் கொண்டுவரப்பட்டது.

சிறு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் இச் சட்டத்தின் பயனை விரிவுபடுத்துதல்.—10 முதல் 19 பணி யாளர்கள் பணிபுரியும் சிறு நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கும் 1965ஆம் ஆண்டு ஊதியக்கொடை வழங்கல் சட்டத்தின் விதித்துறைகளின் பயன்களை விரிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு ஒரு வரைவு அறிவிப்பினை வெளியிட் டுள்ளது.

இச்சட்டத்தின் 19-வது பிரிவின்படி ஊதியக் கொடை வழங்குவதற்கான கால அளவை நீட்டிக்க தொழிலாளர் நல ஆணையாளருக்கு அரசினால் அதிகாரமளிக்கப்படுள்ளது. 1977ஆம் ஆண்டில் 75 நிறுவனங்களுக்கு இத்தகைய கால நீட்டிப்பு ஆணையாளரால் வழங்கப்பட்டது.

சிறந்த தொழில் உறவுகளுக்கு பரிசளிக்கும் திட்டம்.—சிறப் பான தொழில் உறவு நிலைகளை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், நிர்வாகத்திற்கும், தொழிற் சங்கங்களுக்கு மாக சிறந்த தொழில் உறவு நிலைகளுக்கான பரிசளிப்பு திட்டத்தை அரசு உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின்படி ஒரு தேர்வுக் குழுவை அரசு நியமித்துள்ளது. அதில் ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற நீதிபதி தலைவராகவும், ஏழு தொழி லதிபர்கள், ஏழு தொழிலாளர் பிரதிநிதிகள் இருப்பார்கள். இக்குழு இப்பரிசுகளைப் பெறுவதற்கானவர்களைத் தேர்ந்தெடுக் கும் இத்திட்டம் 1978-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்களுக்காக கருத்துரை வழங்க முத்தரப்புக் குழு.—தற்போது செயலிலுள்ள தொழி லாளர் நலச் சட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் முதலியவற்றிற்கு கருத்துரைகளை வழங்க ஒரு முத்தரப்பு குழுவை அமைப்பது பற்றி அரசு ஆய்வு செய்து வருகிறது.

1978 மார்ச் 9]

## II. நிறுவனங்கள் சட்டம்.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.—1977 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 8,196 பதிவு செய்யப்பட்ட தொழிற் சாலைகள் இருந்தன. அந்த ஆண்டு இறுதியில், 883 தொழிற் சாலைகள் சேர்க்கப்பட்டும். 571 தொழிற்சாலைகள் அகற்றப் பட்டும் ஆக இறுதியில் 8,508 தொழிற்சாலைகள் இருந்தன. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | பதிவேட்டிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | 1976. | 1977. |
| பிரிவு 2 (m) (i)-ன் படி .. .. | 7,667 | 7,969 |
| பிரிவு 2 (m) (ii)-ன் படி .. .. | 529 | 539 |
| | 8,196 | 8,508 |
| பணியாளர்களின் எண்ணிக்கை .. | 5,04,899 | 5,23,233 |

1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 1977ஆம் ஆண்டில் உரிமக் கட்டணமாக ரூ. 46,76,210.15 வசூல் செய்யப் பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, நலன்கள் ஆகியவை குறித்து விதித்துறைகள் சரிவர செயல் படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ள, தொழிலாளர் நலத்துறையின் தொழிற்சாலைகள் பிரிவு முறை யாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. அதற்காக, 1977ஆம் ஆண்டில் 1,384 தொழிற்சாலைகள் ஒருமுறையும், 6,616 தொழிற்சாலைகள் இருமுறையும், 261 தொழிற்சாலைகள் மூன்று முறையும் தொழிற்சாலை ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டன. தொழிற்சாலை கண்காணிப்பு ஆய்வாளர் களால் 4,191 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற் சொன்னவற்றுடன் 769 ஞாயிறு ஆய்வுகளும் 1,105 சிறப்பு ஆய்வுகளும், 610 திடீர் ஆய்வுகளும், 424 இரவு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

1977ஆம் ஆண்டில், தொழிற்சாலைகள் சட்டத்தின் விதித் துறைகளை மீறியதற்காக, தொழிற்சாலை நிர்வாகத்திற்கு எதிராக 4,105 வழக்குகள் தொடுக்கப்பட்டன. அந்த ஆண் டில் 3,924 வழக்குகள் முடிக்கப்பட்டன. ரூ. 1,64,220 அப ராதத் தொகையாக பெறப்பட்டது. 1976ஆம் ஆண்டில் இத் தொகையின் அளவு ரூ. 1,02,750 ஆகும்.

197677-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட விபத்துக்களின் விபரம் பின்வருமாறு:—

| ஆண்டு. | இறப்பு ஏற்படாத விபத்துக்கள். | இறப்பு ஏற்பட்ட விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1976 .. .. .. | 26,181 | 32 |
| 1977 .. .. .. | 27,965 | 28 |

தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், அதில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்ததன் விளைவாக இந்த அறிக்கை ஆண்டில் விபத்துக்களின் எண்ணிக்கை ஓரளவு உயர்ந்துள்ளது.

விபத்து நிகழ்ச்சிகளைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், இறப்பு ஏற்பட்ட விபத்துக்கள் 21 நாள், அதற்கு மேலும் பணிபுரிவதற்கு இயலாத வகையில் பணியாளர்களுக்கு ஏற்படும் கொடிய விபத்துக்கள் முதலியவற்றை தொழிற்சாலை ஆய்வாளர்கள், புலனாய்வு செய்தும், அம்மாதிரி விபத்துக்கள் மீண்டும் ஏற்படாத வகையில் தடுக்க மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி நிர்வாகத்தினருக்கு எடுத்துக் கூறியும், அதனை செயல்படுத்துகின்றனரா என்பதைக் கவனிக்க தொடர் நடவடிக்கை மேற்கொண்டும் வருகின்றனர். அனைத்து பெரிய தொழிற்சாலைகளும் நிர்வாகத்தின் பிரதிநிதிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டு பாதுகாப்புக் குழுக்கள் அந்தந்த நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 50 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் தொழிற்சாலைகளிலும் ஓராண்டிற்கு 10 அல்லது அதற்குமேல் விபத்துக்கள் ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகளும் ஒரு பாதுகாப்புக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டன. இதுவரை 340 தொழிற்சாலைகள் பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளன. அவைகள் விபத்துக்களைக் குறைப்பதிலும், பாதுகாப்பு சூழ்நிலையை உருவாக்குவதிலும் சிறப்பாகப் பணி புரிந்து வருகின்றன.

''அதிக அளவு விபத்துக்களை'' அறிவித்துள்ள தொழிற்சாலைகளில் விபத்துக்கள் வீதம் குறைவதற்காக பாதுகாப்புப் பொறியாளர்களை நியமிக்குமாறு அவற்றின் நிர்வாகத்தினர் அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

1978 மார்ச் 9]

சிரம வீர் பரிசுகளும் பாதுகாப்பு குறித்த அரசு பரிசுகளும்:

சிரம வீர் பரிசுகளை அளிக்கும் திட்டத்தின் நோக்கம் என்னவெனில், பொதுவாகத் தொழில் திறமையை மேம்படுத்துவதில் தனித்தனித் தொழிலாளர் ஆற்றக்கூடிய பணிக்கும், தொழிலாளர் பாதுகாப்பு, உயர் உற்பத்தி, தரம் உயர்த்துதல், உற்பத்தி செலவைக் குறைத்தல், இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவை குறித்துப் தொழிலாளர் நல்கிய சிறந்த கருத்துக்களுக்கும் அல்லது ஆலோசனைகளுக்கும் உரிய மதிப்பளித்து மாநில அளவில் பரிசளிப்பதும் ஆகும். விபத்துக்களைக் குறைப்பதில் நிர்வாகங்களுக்கிடையே யார் முன்னவர் என்பதில் போட்டி உணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் விபத்துகுறைப்பு பணியில் சிறந்த ஆற்றலைக் காட்டும் தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்புக் குறித்த அரசுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

1976 மற்றும் 1977 ஆண்டுகளுக்கான மேற்சொன்ன திட்டங்களின்கீழ் விண்ணப்பங்கள் கேட்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள்:

1977-ல் பாதுகாப்பு குறித்த 11 வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் 268 பேர் கலந்து கொண்டனர்.

உற்பத்தித் திறன்:

தமிழ் நாட்டில் சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் உள்ளூர் உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன.

இந்த உற்பத்தித்திறன் குழுக்கள் நியமித்த தொழிற்சாலைப் பொறியாளர்கள் குறித்த செலவில் பாதியைத் தொழிற்சாலைப் பொறியாளர் மானியம் அளிப்பதன் மூலம் இக் குழுக்களுக்கு ஒவ்வோராண்டும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இவ்வாறுக 1975–76 ஆம் ஆண்டுக்கான தொழிற்சாலைப் பொறியாளர் மானியம் 1977–78-ல் அரசால் அனுமதிக்கப்பட்டு, கீழே குறிப்பிட்டவாறு உற்பத்தித்திறன் குழுக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | ரூ. |
|---|---|---|
| கோயம்புத்தூர் உற்பத்தித் திறன் குழு | .. | 6,734.00 |
| மதுரை உற்பத்தித் திறன் குழு | .. .. .. | 4,857·50 |
| திருச்சிராப்பள்ளி உற்பத்தித் திறன் குழு | .. | 10,390.00 |
| சேலம் உற்பத்தித் திறன் குழு | .. .. | 7,425.00 |

கடந்த ஆண்டில் இக் குழுக்கள் வசூலித்த தொகைகளின் 50 சதவீதம் சமமாக ஒவ்வோராண்டும் இக் குழுக்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5,000 என்ற உயரளவிற்கு உட்பட்டு பொது மானியம் மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன நிதியுதவி தவிர, உற்பத்தித் திறன் கொள்கையை வளர்க்க 'தரம் நம்பிக்கை' என்ற பொருள் பற்றி, ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டு 1970-ல் துறை தயாரித்த திரைப் படமும் உள்ளது.

திரைப்படங்கள்:

பாதுகாப்பு, சுகாதாரம் உற்பத்தித் திறன் பற்றிய திரைப் படங்களைக் கொண்ட திரைப்படத் தொகுதி ஒன்றும் உள்ளது. தொழிற்சாலைப் பாதுகாப்பு, சுகாதாரம், உற்பத்தித் திறன் பற்றிய 27 திரைப்படங்கள் தற்போது உள்ளன. பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளில் இத்தகையத் திரைப்படங்கள் காட்டப் படுகின்றன. தொழிலாளர் நலனுக்காக இவற்றைத் திரையிடுவதற்கு கோருகின்ற தொழிற்சாலைகளுக்கும் உற்பத்தித் திறன் குழுக்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு, சுகாதாரம் உற்பத்தித் திறன் பற்றிய திரைப்படங்கள் இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரம்:

ஈயத்தைக் கையாளுவதால் உண்டாகும் நச்சுத் தன்மை, 'ஸிலிகாஸிஸ்' சருமநோய் தொழில் செய்வதால் உண்டாகும் ஏனைய வகை நோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிந்து, அனல், ஒலிச் சூழ்நிலைகளில் வசதியாக வேலை செய்வது பற்றி கருத்துக் கூற, சென்னை, தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர் பொறுப்பின்கீழ் மாநிலத் தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் தொழில் சுகாதார உடல்நலப் பிரிவு ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆய்வுக்கூடம் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக தொழில் நுட்ப உதவியாளர் ஒருவரும், ஏவலாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆய்வுக்கூடப் பணிக்கு உள்நாட்டிலேயே கிடைக்கக்கூடிய சாதனங்கள் யாவும் வாங்கப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப் படவேண்டிய கருவிகள், அனுமதி பெறுவது குறித்த நடைமுறைகள் முடிவடைந்த பின்னர் வாங்கப்படவிருக்கின்றன.

தொழிற்சாலைகளில் அபாயகரமான வேலைகளில் வரும் தொழிலாளர்களை மருத்துவ ஆய்வாளர் விரிவாக மருத்துவப் பரிசோதனை செய்கிறார். தொழில் முறையில் உண்டாகும் நோய்களைப்

1978 மார்ச் 9]

பற்றி அவர் ஆய்வு செய்கிருர். அச்சகங்களில் தொழிலாளர்களுக்கு ஈயங்களை கையாளுவதால் ஏற்படும் நோய்ப்பற்றி இந்த ஆய்வுக் கூடத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம், 1947.

1977 ஆம் ஆண்டு, 1978 ஆம் ஆண்டு தொடக்கத்தில், இச் சட்டத்தின்கீழ் வரும் கடைகள் நிறுவனங்கள் இவற்றின் எண்ணிக்கை, அவற்றில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை இவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு தொடக்கத்தில். | இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் எண்ணிக்கை. | வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1977 .. .. | 217,685 | 221,860 |
| 1978 .. .. | 221,642 | 328,644 |

இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் 279,317 முறையான சோதனைகள், 7,875 திடீர்ச் சோதனைகள், 15,537 விடுமுறைச் சோதனைகள், 5,461 சிறப்புச் சோதனைகள் மற்றும் 2,694 இரவுச் சோதனைகள் நடத்தினர்.

1977 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 1964 வழக்குகள் முடிவுரு நிலையில் இருந்தன. 7,334 வழக்குகள் இவ்வாண்டில் அனுமதி பெற்றன. 9,298 வழக்குகளில் 6,676 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. 25 வழக்குகள் விடுதலையில் முடிந்தன, ஏழு வழக்கு கள் திரும்பப் பெறப்பட்டன. 1977 ஆம் ஆண்டில் அபராதத் தொகையாக ரூ. 218,892 வசூலிக்கப்பட்டது.

இச்சட்டத்தின் 41-வது பிரிவின்படி மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டிருப்பதை கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.—

| | |
|---|---|
| ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுரு நிலையில் உள்ள மேல் முறையீடுளின் எண்ணிக்கை. | 206 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கை. | 334 |
| மேல் முறையீடுகளின் மொத்த எண்ணிக்கை .. | 540 |

[1978 மார்ச் 9

| | |
|---|---|
| இவ்வாண்டில் முடிவு பெற்ற மேல் முறையியீடுகளின் எண்ணிக்கை. | 272 |
| இவ்வாண்டு முடிவில் முடிவுரு நிலையில் உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 268 |

1977-ஆம் ஆண்டில், நிலையான விதிவிலக்குகள் எதுவும் அரசு வழங்கவில்லை. எனினும், (பொருட்காட்சிகள் திருவிழாக்கள் நீங்கலாக) தற்காலிக விலக்குகளை அரசு வழங்கியது. (பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நீங்கலாக) 22 தற்காலிக விலக்குகளையும், நான்கு இனங்களில் பொருட்காட்சிகள் திருவிழாக்களுக்கு தற்காலிக விலக்குகளையும் தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் வழங்கியுள்ளார். துணை ஆணையாளர் 131 இனங்களில் தற்காலிக விலக்குகளை அளித்துள்ளார். எட்டு இனங்களில் இச் சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக தள்ளி வைக்க அனுமதித்துள்ளார்.

தொழிலதிபர் படிவம் 'J' அறிவிப்பில் கேட்கப்பட்ட விபரங்களுடன் அதை தனது தொழிற்சாலையில் ஒட்டிவைக்குமாறும், தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் வேலையைத் தொடங்குமுன் சம்பந்தப்பட்ட தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்களுக்கு மேற்சொன்ன படிவத்தின் நகல் ஒன்றை அனுப்புமாறும் கேட்கும் வகையில் தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தை அரசு அண்மையில் திருத்தியுள்ளது.

பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதி வைக்குமாறு தொழிலதிபர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளும் வகையில் தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறையின் 6-8-1977 நாளிட்ட 575ஆம் எண் ஆணையில் தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் விதிகளைச் சேர்ந்த 15 ஆவது விதியையும் அரசு திருத்தியுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

## தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்;

1977 சனவரி 1 ஆம் நாளன்றுள்ளபடி 66,313 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 20,497 உணவகங்கள் இருந்தன. 1978 சனவரி 1 ஆம் நாளன்றுள்ளபடி 68,356 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 21,731 உணவகங்கள் இருந்தன. இவைகளில் 10,281 நிறுவனங்கள் தொழிலாளர்களைக் கொண்டிருந்தன. 11,450 நிறுவனங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் இருந்தன.

1977 ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக ரூ. 2.47,553 பெறப்பட்டது.

*1978 மார்ச் 9]*

இந்த ஆண்டில், ஆய்வாளர்கள், இச் சட்டத்தின்கீழ், 25,327 முறையான ஆய்வுகளையும், 748 திடீர் ஆய்வுகளையும், 572 விடுமுறைநாள் ஆய்வுகளையும், 475 தனி ஆய்வுகளையும் 445 இரவு நேர ஆய்வுகளையும் செய்தனர்.

1977 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இச் சட்டத்தின் விதித்துறைகளையும், விதிகளையும் மீறியது குறித்த 616 குற்றவழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. 2,819 குற்றவழக்குகள் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டன. அவற்றில் 2,153 வழக்குகளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. எட்டு வழக்குகள் விடுதலையில் முடிந்தன; ஒரு வழக்கு திரும்பப் பெறப்பட்டது. 1977 ஆம் ஆண்டில், ரூ. 90,771 அபராதத் தொகையாகப் பெறப்பட்டது.

ஆண்டு தொடக்கத்தில், உணவகங்களின் தொழிலாளர்களைப் பதவியிலிருந்து நீக்கியது அல்லது அகற்றப்பட்டதை எதிர்த்து இச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின்கீழ் செய்யப்பட்ட 53 மேல் முறையீடுகள், மேல் முறையீட்டு அதிகாரிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல அதிகாரிகளிடம் முடிவு செய்யப்படாமலிருந்தன. இந்த ஆண்டில் 126 மேல் முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த ஆண்டில், 113 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன. ஆண்டின் இறுதியில், 66 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்படாமலிருந்தன.

சென்னை, கோயம்புத்தூர் தொழிலாளர் நல உதவி ஆணையாளர்களை (இணக்க) அவரவர்களுடைய அதிகார வரம்பிற்குள் மேற்படி சட்டத்தின் 19 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் மேல் முறையீடுகளை விசாரிப்பதற்காக மேல்முறையீட்டு அதிகாரிகளாக நியமித்து, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவகங்கள் விதிகளைச் சேர்ந்த 37 ஆவது விதியில் 1 ஆவது துணை விதியை திருத்தி (அறிவிப்பு) ஒன்றை தொழிலாளர் மற்றும் வேலை வேலைவாய்ப்புத் துறையின் 12—5—1977 நாளிட்ட 372 ஆம் எண் அரசாணையில் அரசு வெளியிட்டுள்ளது.

உணவகங்களின் உரிமையாளர்கள் பெயர்ப்பலகைகளைத் தமிழில் எழுதி வைக்குமாறு கேட்டுக் கொண்டு, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவகங்கள் விதிகளைச் சேர்ந்த 42 ஆவது விதியில் திருத்தம் ஒன்றையும் அரசு வெளியிட்டுள்ளது.

*1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்.*

1977 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 88,767 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக் கொண்ட 404 மலைத்தோட்டங்கள் இருந்தன. 3,560 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய 22 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன; 186 தொழிலாளர்களை

வேலைக்கமர்த்தியிருந்த 14 மலைத் தோட்டங்கள் இந்த ஆண்டில் பதிவிலிருந்து நீக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 412 மலைத் தோட்டங்கள் இருந்தன. 31—12—1977 அன்றுள்ளவாறு தோராயமாக 92,141 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் 45 குற்றச் சாட்டுகள் நீதி மன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 123 குற்ற வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. 125 குற்ற வழக்குகளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. ரூ. 8,460 அபராதம் விதிக்கப்பட்டது. 5 குற்ற வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 1977 ஆம் ஆண்டு இறுதியில் 38 குற்ற வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

மலைத்தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் ஏற்பளிப்பை பெற்றபின்னர், மலைத்தோட்ட அதிபர்கள், மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டும் விரிப்புக் கம்பளிகளும் கம்பளங்களும் வழங்கினர்.

மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் இலவசமாக மருத்துவ வசதிகளுக்கு வகை செய்யவேண்டியது மலைத்தோட்ட அதிபர்களின் கடமைகளில் ஒன்றாக, 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10 ஆவது பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

மலைத்தோட்டங்களிலுள்ள தோட்ட மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் சட்டம், விதிகளின் கீழ் சுகாதாரம் குறித்த விதித்துறைகளைச் செயல்படுத்துவதற்கு மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ், இரண்டு மருத்துவ அதிகாரிகள் உதகமண்டலம், நாகர்கோயிலைத் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். மலைத் தோட்டங்களில், மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக அறிக்கை ஆண்டில் இவர்கள் 238 எஸ்டேட்டுகளை ஆய்வு செய்தனர்.

உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏர்க்காடு திண்டுக்கல், நாகர்கோயில் ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்ட ஏழு ஆய்வாளர்களும் மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகின்றனர். அவர்கள், சட்டத்தையும் விதிகளையும் செயல்படுத்தி வருகின்றனர். அவர்கள் 1,028 முறையான ஆய்வுகளையும் 192 தனி ஆய்வுகளையும் 85 திடீர் ஆய்வுகளையும், 43 ஞாயிற்றுக்கிழமை ஆய்வுகளையும் நடத்தினர்.

*1978 மார்ச் 9]*

மலைத்தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு

தொழிலாளர் நல ஆணையாளர் தலைவராக உள்ள மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு 25—4—1977 அன்று உதகமண்டலத்தில் கூடி ஏனையவற்றுடன் கீழ்க்கண்ட பொருள்களைக் குறித்து விவாதித்தது.

1. மலைத்தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களின் பணிப்பாதுகாப்பு.

2. மலைத்தோட்டங்களில் தொழிலாளர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் விதித்துறைகள், இம் மாநிலத்தில் 1968 ஜூலை திங்கள் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன. பல மாநிலங்களிலுள்ள தொழிலாளர்கள் 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் செல்திறன் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். ஆனால், அதன் செல்திறனை தலைமை நீதிமன்றம் ஆதரித்தது. இதனால், இச்சட்டம், விதிகளை நிறைவேற்றுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வுகள்) இச் சட்டத்தின் 6(2) பிரிவின் கீழ் தலைமை ஆய்வாளராக நியமிக்கப் பட்டுள்ளார். தொழிலாளர் நல ஆய்வாளர்களும், துணை ஆய் வாளர்களும், மேற்சொன்ன சட்டத்தின் கீழ், அவர்களின் ஆய்வாளர்களின் அதிகார வரம்பிற்குள் உள்ள பகுதிகளில், ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள், எடை அளவைகள் செயல்படுத்துதல் சட்டத்தின்கீழ் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு மேற்சொன்ன சட்டத்தின்கீழ் தகுதி வாய்ந்த அதிகாரிகளின் பணிகளைச் செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர். தொழி லாளர் நலத்துணை ஆணையாளர்கள், இச் சட்டத்தின் 5-ஆவது பிரிவின்கீழ், மேல் முறையீடுகளை விசாரணை செய்வதற்கு அதி காரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 1975 தொழில் இடங்களைக் கொண்ட 601 வணிகக்குறி *(Trade Mark)* உரிமையாளர்கள் உள்ளனர். 1977-ல் இந்தத் தொழில் இடங்களில் சுமார் 15,631 தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர். பீடி

சுற்றும் தொழிலில், வீட்டுத் தொழிலாளர்களாக (வீட்டில் பீடி சுருட்டுபவர்கள்) ஒரு இலட்சம் பேர் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளனர்.

1,775 தொழிலிடங்களில், 1,401 தொழிலிடங்கள், 1977 ஆம் ஆண்டில், உரிமத்திற்காக விண்ணப்பித்துக்கொண்டுள்ளன. 374 தொழிலிடங்கள் இன்னும் உரிமத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறியவர்களுக்கு எதிராகத் தண்டனை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1977-ல் உரிமக் கட்டணமாக, ரூ. 18,548 வசூலிக்கப் பட்டுள்ளது.

1977-ஆம் ஆண்டில் ஆய்வாளர்களால் 1,813 முறையான ஆய்வுகளும், 11 விடுமுறை ஆய்வுகளும், 18 திடீர் ஆய்வுகளும், 43 தனி ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

ஆண்டின் தொடக்கத்தில், 78 குற்ற வழக்குகள் முடிவடையாமல் இருந்தன. 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் விதித் துறைகளுக்குப் புறம்பாக நடந்தது குறித்து 321 குற்ற வழக்குகள் 1977-ல் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 307 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 10 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 2 வழக்குகள் திரும்பப் பெறப் பட்டன. 80 குற்ற வழக்குகள் 1977 ஆம் ஆண்டு இறுதியில் நீதிமன்றத்தில் முடிவுறாமல் இருந்தன. ரூ.38,180 அபராதத் தொகையாகப் பெறப்பட்டுள்ளது.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) விதித்துறைகளும் அதன்கீழ் செய்யப் பட்ட விதிகளும், பீடி-சுருட்டு நிறுவனங்களிலும் இச்சட்டம் பொருந்துகிற தொழிலிடங்களிலும் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் அனைவருக்கும் பொருந்துமாறு செய்யப் பட்டுள்ளன.

1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய, அரசு முத்தரப்புக்குழு ஒன்றை அமைத்துள்ளது. பீடி நிறுவனங்களின் தலைமை ஆய்வாளர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் (ஆய்வுகள்) இக்குழுவின் தலைவராக உள்ளார். தொழிலாளர்கள்) தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாய், உள்ளனர். எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் தொழில் நுட்பம் சாராத நேர்முக உதவியாளர், இக்குழுவின் செயலாளராவார். இவ்வாண்டில் 7—4—1977, 28—10—1977 ஆகிய நாட்களில் இக்குழு இருமுறை கூடியது. குழுவினால் கீழ்க் கண்ட முக்கிய கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன;—

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 9]

1. பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்க வகைவ செய்தல்.

2. பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின்படி சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க வகை செய்தல்.

3. பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் சட்டத்தின்கீழ் உரிமங்களை எடுத்துக் கொள்ளுமாறு ''டிரேடு மார்க்'' சொந்தக்காரர்களைக் கேட்டுக் கொள்ளுதல்.

4. பீடி-சுருட்டு தயாரிப்பில் உள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்குதல்.

பீடி-சுருட்டுப் பணியாளர்களுக்குப் பணிப்புத்தகம் வழங்குதல்.

பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு பயன்களை பயன் படுத்திக் கொள்ளும் பொருட்டுத் தங்களுடைய வேலையைப் பற்றிய செல்திறனுள்ள அத்தாட்சியை பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் பெற்றிராததால் தொழிலதிபர்கள் பீடி-சுருட்டுத் தொழிலாளர் அனைவருக்கும் பணிப் புத்தகங்கள் கொடுக்க வேண்டும் என்று கருதப்பட்டுள்ளது. அது தொழிலாளர்களின் முழுச் சொத்தாகும். அதில் பதிவுகளை செய்வதற்காக மட்டுமே தொழிலதிபர்கள் வாங்கிப் பதிவு செய்த பின்னர் தொழிலாளரிடம் திருப்பிக்கொடுக்கவேண்டும். தமிழ் நாடு 1968-ம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகளின் 36 (2) ஆவது விதிக்கு வரைவுத் திருத்தத்தை வெளியிட்டும், செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தத்திற்கு கருத்துரைகளும் மறுப்புரைகளும் கேட்டும், தொழிலாளர் நல வேலைவாய்ப்புத்துறையின் 2—1—1978 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் அறிவிப்பு ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது. பணியாளர்களுக்குப் பணிப் புத்தகம் வழங்குவதற்காகவும், தொழிலதிபர்கள் பணிப்புத்தகம் ஒன்றினை வைத்து வருவதற்காகவும், 36 (2) ஆவது விதிக்குப் பிறகு 2A (i) மற்றும் 2A (ii) ஆகிய துணை விதிகளை சேர்ப்பதற்கு வரைவு திருத்தம் விழைகிறது. பணிப்புத்தகம் ஏனையவற்றிற்கு இடையே, தொழிலாளி வேலையில் சேர்ந்த நாளைத் தெரிவிக்கும்.

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.

சென்னை, தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வுகள்), தமிழ்நாட்டில் ஆய்வு ஆண்டிலும், 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் தொடர்ந்து தலைமை ஆய்வாளராக இருந்தார்.

[1978 மார்ச் 9

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித்துறைகளும், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும், 11 தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், 28 தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களாலும் நிறைவேற்றப்படுகின்றன. மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் மூல ஆய்வுகளைத் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் செய்கின்றனர். தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் 5 சதவீத நிறுவனங்களைச் சரி பார்க்கும் ஆய்வுகளைச் செய்கின்றனர்.

1977 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 1,358 பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. 131 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டன. இதனால் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 1,489 ஆக உயர்ந்தது. இந்த 1,489 நிறுவனங்களில் 35 நிறுவனங்கள், இந்த ஆண்டில் பதிவிலிருந்து நீக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 1,454 ஆக இருந்தது. ஆண்டின் இறுதியில் பணியில் அமர்த்தப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 45,871 ஆக இருந்தது.

1977 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 82 வழக்குகள், முடிவுறுமல் இருந்தன. இந்த ஆண்டில் 337 வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. இதனால் வழக்குகளின் எண்ணிக்கை 419 ஆக உயர்ந்தது. இந்த 419 வழக்குகளில் 274 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 1 வழக்கு விடுதலையில் முடிந்தது. 4 வழக்குகள் எச்சரித்து விடப்பட்டன. ஒரு வழக்கு ரத்து செய்யப்பட்டது. 1 வழக்கு திரும்பப்பெறப்பட்டது. எஞ்சியுள்ள 138 வழக்குகள் ஆண்டின் இறுதியில் முடிவுறுமல் இருந்தன. ரூ. 37,617 அபராதத் தொகை கிட்டியது.

1977 ஆம் ஆண்டில், பதிவிற்கான புதுப்பிக்கும் கட்டணம் மூலமாக ரூ. 2,600 வசூலிக்கப்பட்டது.

1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிக்கையாளர் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம் :

பத்திரிகை நிறுவனங்களின் ஆய்வாளர்கள் என்ற தகுதியில், தொழிலாளர் நல ஆய்வாளர்களால், ஆய்வு ஆண்டில் இச் சட்டத்தின் விதித்துறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தன. 1977 ஆம் ஆண்டின் இறுதியில், 6,086 தொழிலாளர்களைப் பணிக்கமர்த்திய 79 நிறுவனங்கள் இருந்தன.

1946 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்:

1977 ஆம் ஆண்டில் 22 தொழில் நிறுவனங்களில் நிலை ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டன. 12 இனங்களைப் பொருத்த மட்டில், இந்த நிலை ஆணைகளில் திருத்தங்களும், இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன.

இச் சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ், மேல் முறையீட்டு அதிகாரிகளாகத் தொழிலாளர் நல நீதி மன்றங்கள், இந்த ஆண்டில் 3 மேல் முறையீடுகளை முடிவு செய்துள்ளன.

திருத்தம் :

1. 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு சட்டத்தை நீட்டித்தல்.

தற்போது 100 அல்லது 100-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்துகின்ற 1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டத்தின் விதித்துறைகளை 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு நீட்டிக்க தற்போது இவ்வரசு கருதுகின்றது. சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து கருத்துரைகளையும் மறுப்புரைகளையும் கேட்டு தமிழ்நாடு அரசிதழில் வரைவு அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

2. 7(2), 7(3) ஆம் எண் மாதிரி நிலையாணைகளை நீக்குதல்.

''தொழிலாளர் ஒருவர் தொடர்ச்சியாக 8 நாட்களுக்கு மேல் வேலைக்கு வராதிருந்தால் அவரை வேலையிலிருந்து நீக்கிவிடுவதற்கான மாதிரி நிலையாணைகளில் அல்லது சான்றிட்ட நிலையாணைகளில் உள்ள விதித்துறை நீக்கப்படவேண்டும் என்றும், அவர் வேலைக்கு வராதிருந்த நாட்கள் தவறான நடத்தை என்று மட்டுமே கருதப்பட்டு தன்னிலை விளக்கம் அளிக்க அவருக்குப் போதிய வாய்ப்பு அளித்த பிறகு விசாரிக்கப்படவேண்டும்''.

இக்கருத்துக்கு செயல் வடிவம் அளிக்கும் வகையில் அரசு மாதிரி நிலையாணைகளை திருத்தி, வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசியப் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம்.

இந்தச் சட்டம் தொழிற்சாலைகள் சட்டத்தின் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த (m) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள 'தொழிற்சாலைகள்' அனைத்திற்கும் பொருந்துகின்றது;

[1978 மார்ச் ]

அல்லது அந்தச் சட்டத்தின் 85-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் ஒரு தொழிற்சாலையாக கருதப்படுகின்ற எந்த இடத்திற்கும் பொருந்துகிறது. மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள மலைத் தோட்டங்களுக்குப் பொருந்துகிறது. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் 2 ஆவது பிரிவைச் சேர்ந்த (6) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளவாறு கடைகள் நிறுவனங்கள் அனைத்திற்கும் பொருந்துகிறது. மேலும் 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் (h)-வது பிரிவின் கீழ் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அனைத்திற்கும் கூட இச்சட்டத்தின் விதித்துறைகளை அரசு நீட்டித்துள்ளது.

இச் சட்டத்தின் விதித்துறைகளை மீறியமைக்காக ஆய்வாண்டில் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கெதிராக 4,049 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் 3,348 வழக்குகள் தண்டனையில் முடிந்தன ; 48 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 4 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 649 வழக்குகள் இன்னும் முடிவடையாமல் உள்ளன. இந்த ஆண்டில் ரூ. 89,497 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

இச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் இவ்வாண்டில் 1,01,722 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டம்.

இச் சட்டத்தின் கீழ் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்கள் அலுவலகங்களுடன் இணைந்துள்ள, தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் பதிவு அதிகாரிகளாகவும், தொழிலாளர் நல ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாகவும், அறிவிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் 15 (1) ஆவது பிரிவின் கீழ், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள், மேல் முறையீட்டு அதிகாரிகளாக நியமிக்கப் பெற்றுள்ளனர். ஆய்வு செய்யும் அதிகாரிகள் அதாவது, தொழிற்சாலை ஆய்வாளர்கள், மலைத் தோட்ட ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள், அனைவரும் இந்தச் சட்டத்தின்கீழ், ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர். தவிரவும், மண்டலங்களில் உள்ள தொழிலாளர் நல துணை ஆணையாளர்களும், தொழிலாளர் நல உதவி ஆணையாளர்களும், தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர்களும் தலைமையிடத்தில் தொழிலாளர் நல ஆணையாளரும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்களும், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களும், தொழிலாளர் நலத் துணை ஆணையாளரும் (ஆய்வுகள்) இச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1978 மார்ச் 9]

ஒப்பந்த அடிப்படையில் எந்த தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலையிலமர்த்தப்பட்டுள்ளனரோ அந்தத் தொழிற்சாலைகள் இச்சட்டத்தைச் செயற்படுத்துமாறு தொழிற்சாலை ஆய்வாளர்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டிராத நிறுவனங்களில் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் இந்தச் சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றனர். தொழிற்சாலைகள் உட்பட எல்லா வகைப்பட்ட நிறுவனங்களிலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களைப் பொறுத்தவரை தொழிலாளர் நல ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1977 ஆம் ஆண்டில், சட்டத்தின் 7(1) பிரிவின் கீழ், 91 முக்கிய தொழிலதிபர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 73 ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தை நிர்வகிப்பதற்கு அரசுக்கு ஆலோசனை நல்கும் பொருட்டு, தொழிலாளர் நலன்—வேலைவாய்ப்புத்துறை அரசுச் செயலாளர் தலைமையின்கீழ், மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் ஒன்று இச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தில், சென்னை தொழிலாளர் நல ஆணையாளரும், பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளரும் (கட்டிடங்கள்) ஆகியவர்களைத் தவிர தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் நால்வரும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் நால்வரும் உறுப்பினர்களாக உள்ளனர். தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (ஒப்பந்தத் தொழிலாளர்) வாரியத்தின் செயலாளர் ஆவார். இவ்வாரியம் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் நாளில் ஒருமுறை கூடியது. வாரியம் எடுத்த முக்கியமான முடிவுகள் பின்வருமாறு :—

"பொறியியல் தொழிலுக்காக ஒன்றும், சிமிட்டி காகிதத் தொழிலுக்காக மற்றொன்றும் ஆக இரண்டு துணை தொழிற்குழுக்களை அமைக்க வாரியம் முடிவு செய்தது. இத்தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர் அமைப்பு முறையை ஆய்வு செய்து அந்த அமைப்பு முறை எந்த அளவுக்கு நீக்கப்படலாம் அல்லது முறையாக்கப்படலாம் என்று இக்குழுக்கள் ஆலோசனை நல்கும்".

இந்த இரண்டு துணைக்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன; அவற்றின் அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தத் துணைக்குழுக்கள் தங்களது அறிக்கைகளை அனுப்புவதற்கு 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 9

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டம் சம்பந்தப்பட்ட பணியினை கவனிக்க சென்னை, தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்தில், தொழிலாளர் நல உதவி ஆணையர் பதவி ஒன்று ஏற்படுத்த அரசு அண்மையில் அனுமதித்துள்ளது.

1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாடுப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

மருந்து தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம் 1976 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (ஆய்வுகள்), தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் இந்தச் சட்டத்தின் 8-வது பிரிவின்கீழ் ''ஆய்வாளர்களாக'' அறிவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய சில தொழிற்சாலைகளுக்கும் இச் சட்டத்தினை விரிவுபடுத்துவது, இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

III. ஊதியங்கள் குறித்து சட்டம் இயற்றுதல்.

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டம்.

கீழ்க்காணும் வேலை நியமனங்களுக்காக குறைந்தளவு ஊதிய வீதங்களை 1977–78 ஆம் ஆண்டில் அரசு வரையறுத்துள்ளது/திருத்தியமைத்துள்ளது.

1. திரைப்பட அரங்குகளில் வேலை.
2. உள்ளாட்சி அதிகார மன்றத்தில் வேலை.
3. செங்கல் ஓடுகள் தயாரிப்புத் தொழிலில் வேலை.
4. தீப்பெட்டி-பட்டாசுத் தயாரிப்புத் தொழிலில் வேலை.
5. சவ்வரிசி தொழிலில் வேலை.
6. உப்பளங்களில் வேலை.

வேளாண்மை, வேளாண்மைத் துணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் குறைந்தளவு ஊதியங்கள் தொடர்பாகச் சட்ட விதித் துறைகளை வருவாய்த் துறை ஆய்வாளர்கள், துணைத் தாசில்தார்கள், வட்டத் தாசில்தார்கள், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் செயற்படுத்தும் அதிகாரிகளாவர். அறிவிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களைக் கொடுக்கத் தவறுகின்ற நிலச் சொந்தக்காரர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு அனுமதி வழங்கக் கோட்டாட்சியருக்கு அரசு அதிகாரமளித்துள்ளது. பின் வரும் வேலைகளுக்

1978 மார்ச் 9]

குக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயம் செய்யும் அல்லது திருத்தியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது :—

1. அரசு மோட்டார் போக்குவரத்தில் வேலை வாய்ப்பு.
2. ஆட்டோமொபைல் பணிக்களரிகளில் வேலைவாய்ப்பு.
3. தோல் பதனிடும் தொழிலிலும், தோல் தயாரிப்புத் தொழிலிலும் வேலை வாய்ப்பு.
4. அச்சகங்களில் வேலை.

ஏற்கனவே அமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக்குழு, பருத்தி அறைவை, பட்டை தயாரிப்பு ஆலை, கழிவுப் பஞ்சு ஆலை ஆகியவற்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களைப் பொறுத்தவரையில் குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிப்பது பற்றி அல்லது திருத்தியமைப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கீழ்க்காணும் வேலைகள் குறித்துக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயம் செய்ய அல்லது திருத்தியமைக்கக் குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக் குழுக்களை அமைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன;

1. எண்ணெய் ஆலை ஒன்றில் வேலை.
2. பஞ்சாலை சலவை நிலையங்களிலும், பட்டாடை (உல்லன், பட்டுத் துணிகள் உட்பட) வெளுப்பகங்களிலும் வேலை.
3. கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை.
4. திரைப்படத் தொழிலில் தயாரிப்பு, விநியோகம், விளம்பரம் உட்பட வேலை.
5. செயற்கை வைரம் பட்டை தீட்டுதலில் வேலை.
6. தேயிலை வாங்கி, தேயிலைத்தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை.
7. மரத் தொழிலில் வேலை.

கீழ்க்காணும் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயம் செய்ய அரசுக்கு இயலும் வகையில் 1977–78 ஆம் ஆண்டில் மேற்படி வேலைகள், குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன :—

1. அங்காடிகள், சந்தைகள் இவை போன்ற பிற இடங்களில் சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல் வேலை.

2. தேயிலை வாங்கி, தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை.

அங்காடிகள், சந்தைகள் (விழாக்காலக் கடைகள், அங்காடி இடங்கள்) ஆகிய இடங்களிலும் இதைப் போன்ற பிற இடங்களிலும் சரக்கு ஏற்றுதல், இறக்குதல் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்கள் நிர்ணயிப்பதற்கு வரைவு அறிவிப்பு ஒன்றை அரசு பிறப்பித்துள்ளது. இந்த வரைவு அறிவிப்பை முடிவு செய்வது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இச்சட்டத்தின்கீழ், இவ்வாண்டில் தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், மலைத்தோட்ட ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் 24,350 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக வழக்குகள் தொடரப்படுகின்றன. இந்த வகையில், 274 வழக்குகள் இவ்வாண்டுத் தொடக்கத்தில் நீதிமன்றத்தின் முன்பு விசாரணையில் இருந்தன. ஆய்வு ஆண்டில் 604 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் 463 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டன. 6 வழக்குகள் விடுவிக்கப்பட்டன. எஞ்சிய 409 வழக்குகள் இவ்வாண்டின் முடிவில் விசாரணையில் இருந்தன. 16,495 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டது. குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20-வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப்படாதது குறித்து 2 மனுக்கள் தொழிலாளர் நீதி மன்றங்களின் தலைமை அதிகாரிகளால் தீர்த்து வைக்கப்பட்டன.

## 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகமும், பிற தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் இச்சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன.

சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 1,704 வழக்குகளில் தொழில் அதிபர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்கப்பட்டது. இவ்வழக்குகளில், 1,207 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டன. இரண்டு வழக்குகள் விடுவிக்கப்பட்டன. இரண்டு வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 493 வழக்குகள் விசாரணையில் உள்ளன. ரூ. 37,739 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

ஊதியங்கள் கொடுப்பது குறித்த 408 கோரிக்கைகள் 1977 ஆம் ஆண்டு தொடக்கத்தில் விசாரணையில் இருந்தன. ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ்த் தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கு

1978 மார்ச் 9]

வதற்காக உதவி ஆணையாளர் முன்பாக 394 உரிமைக் கோரிக்கைகள் இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்டன. (1976 ஆம் ஆண்டில் 579 கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன.) இவற்றில் இவ்வாண்டு 451 கோரிக்கைகள் குறித்து தீர்ப்பளிக்கப்பட்டன. 1977 ஆம் ஆண்டு இறுதியில் 351 கோரிக்கைகள் விசாரணையில் இருந்தன.

இச்சட்டத்தின் கீழுள்ள தொழில் நிறுவனங்களில் ஆய்வாளர்கள் 36,433 ஆய்வுகளை மேற்கொண்டனர். ஊதியம் வழங்கல் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்பெற்ற அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள சில நிபந்தனைகளுக்குட்பட்டு இரயில் நிலையங்கள் விமானத்தளங்கள், சுரங்கங்கள் முதலிய இடங்களில் தொழிலதிபர் ஒருவர் சிற்றுண்டி விடுதி வசதி செய்து கொடுப்பதைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் ஊதியத்தில் இருந்து தொகை பிடித்துக் கொள்ளுவதற்கு அனுமதியளிக்கும் அதிகாரியாக மத்திய தொழிலாளர் நலத் தலைமை ஆணையாளரை மத்திய அரசு நியமித்துள்ளது.

மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கத்திற்காக, (2) பத்தியில் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வகைத் தொழில் நிறுவனங்களுக்கு, 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் பிரிவு 14 (3)-ன் படி, மத்திய அரசைச் சேர்ந்த கீழ்க்காணும் அதிகாரிகளை 'ஆய்வாளர்களாக' தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. மேற் சொன்ன ஆய்வாளர்கள் இந்த தொழில் நிறுவனங்கள் குறித்து தங்கள் பணியைச் செய்து வரவேண்டும்:—

| அதிகாரிகள். | தொழில் நிறுவனங்களின் வகை. |
|---|---|
| 1. (மத்திய) தொழிலாளர் நல வட்டார ஆணையாளர், சென்னை. | சென்னை துறைமுகத்திலுள்ள (கப்பல்) துறை, தோணித் துறை. |
| 2. (மத்திய) தொழிலாளர் நல உதவி ஆணையாளர், சென்னையிலுள்ள தலைமையிடம். | ,, |
| 3. (மத்திய) தொழிலாளர் நல சட்டங்களைச் செயற்படுத்தும் அதிகாரி, சென்னையிலுள்ள தலைமையிடம். | ,, |

1976 ஆம் ஆண்டு சம ஊதிய சட்டம்.

இச்சட்டம் ஆண், பெண் இருபாலருக்கும் ஒரே விதத்தில் சம்பளம் வழங்குவதற்கும், வேலைவாய்ப்பில், பால் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கவும் வகைசெய்கிறது. இச் சட்டம், இதுவரையில் மலைத் தோட்டத் தொழில் உட்பட 48 தொழில்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

அரசு, இச்சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் ஆய்வாளர்களையும் மேற்படிச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் அதிகார மன்றங்களையும் நியமித்துள்ளது.

இச்சட்டத்தின் பிரிவு 7 (ஏ)-ன் கீழ், இந்த ஆண்டு தொழிலாளர் நல அதிகாரிகளுக்கு 12 கோரிக்கைகள் வந்துள்ளன. இவை தவிர இவ்வாண்டு தொடக்கத்தில் 12 கோரிக்கைகள் முடிவுறாமல் இருந்தன. இந்த ஆண்டில் 24 கோரிக்கைகளும் முடிவு செய்யப்பட்டன.

இச்சட்டத்தின் பிரிவு 7 (பி)-ன் கீழ் கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளருக்கு 4 மேல் முறையீடுகள் வரப் பெற்றன. அவை ஆண்டு இறுதி வரை தீர்க்கப்படாமல் இருந்தன.

## IV. சமூகப் பாதுகாப்பு.

### தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும்

### 1952 ஆம் ஆண்டு பலவகை விதித்துறைகள் சட்டம்.

தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்புநிதி வடிவில் ஓய்வு கால நன்மைகளும், அவர்கள் கடமையாற்றும் போது இறந்து விட்டால் அவர்களைச் சார்ந்துள்ள நெருங்கிய உறவினர்களுக்கு நிதியுதவியும், மாதந்தோறும் குடும்ப ஓய்வூதிய தொகையும் கிடைக்க 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள்-பல்வகை விதித்துறைகள் சட்டமும் அதன் மூன்று திட்டங்களும் வகை செய்கின்றன. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய நிதித் திட்டம், தொழிலாளர் வைப்பு தொகை இணைந்த காப்புறுதித் திட்டம் முதலிய திட்டங்கள் இந்நாட்டிலுள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பெரிதும் தேவைப்படும் சமூகப் பாதுகாப்பை அளிக்கின்றன. சில நிபந்தனைகளுக்குட்பட்டு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்கள் பணியில் இருக்கும்போது மரணமடையும் சமயங்களில் அவர்களது கணக்கில் கடைசி 36 மாதங்களில் இருந்த சராசரித் தொகைக்குச் சமமானதொரு தொகை (10,000 ரூபாய்க்கு மேற்படாமல்) வழங்குவதன் மூலம், அண்மையில் கொண்டு வரப்பட்ட தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் (வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்படுவது) அவர்களுக்கு காப்புறுதி அளிக்கிறது.

1978 மார்ச் 9]

இந்த ஆய்வாண்டில் மேலும் ஒரு தொழிற்சாலைக்கு அதாவது ''பீடி தயாரிப்பில் ஈடுபட்ட தொழிற்சாலைகளுக்கு'' இச்சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, 1976–77-ல் மொத்தம் 153 ஆக இருந்த தொழிற்சாலைகள்/நிறுவன வகைகள் தற்போது 5ஈ ஆஉ உயர்ந்துள்ளன.

<u>சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள் :</u>

1976–77 ஆம் ஆண்டுகளில் 983 நிறுவனங்கள் சட்ட ஆய்வு வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டிருக்க, 1–4–77 முதல் 30–9–77 வரையிலான கால அளவில் 423 நிறுவனங்களுக்கு இச்சட்ட ஆய்வு வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன ; 30–9–1977 வரை 10,376 நிறுவனங்களில் ரூ. 10.19 இலட்சம் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்துவோர் இருந்தனர்.

சம்பளத்தில் $6\frac{1}{4}$ சதவீதம் சட்டப்படி செலுத்தவேண்டிய பங்குத் தொகையாகும். உயர்த்தப்பட்ட அளவான 8 சத வீதப் பங்குத் தொகை செலுத்துவது 1976–77 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் 94 தொழில்களுக்கு நிறுவன வகைகளுக்கு மட்டுமே பொருந்தும். பங்குத் தொகை வீதத்தை உயர்த்துவது குறித்து புதிய தொழில் நிறுவன வகை எதனையும் இந்திய அரசு அறிவிக்கவில்லை. தற்போதைய பங்குத் தொகை வீதங்களை $6\frac{1}{4}$ சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும் 8 சதவீதத்திலிருந்து 10 சத வீதமாகவும் உயர்த்துவது இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் தேதியுடன் முடிவடையும் கால அளவுக்கான கேட்பு/வசூல்/நிலுவை குறித்த விவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (அடைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள கணக்குகள் 1977 ஆம் ஆண்டு மார்ச் 31-ந் தேதி நிலவரப்படியான கணக்குகளாகும்.)

| நிலுவையின் தன்மை. | 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதி நிலவரப்படி நிலுவைகள் உட்பட கேட்புத் தொகை. | 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ந் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் தேதி வரை வசூல். | 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதி நிலவரப்படி இருப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 சேர்ந்து வந்த பழைய தொகைகள். | 18.64 | 11.23 | 7.41 (6·87) |

TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2 தொழிலாளர் வருங் கால வைப்பு நிதிப் பங்குத் தொகை கள். | 1494.36 | 1374.62 | 119.74 (101.69) |
| 3 நிர்வாகச் செலவுகள் | 34.67 | 34.62 | 2.45 (2.39) |
| 4 ஆய்வுச் செலவுகள். | 7.43 | 6.62 | 0.81 (0·82) |
| 5 குடும்ப நல ஓய்வூதிய பங்குத் தொகை கள். | 155.04 | 154·35 | 0·69 (0·43) |
| 6 தொழிலாளர்களின் வைப்புத் தொகை யுடன் கூடிய காப் புறவுப் பங்குத் தொகைகள். | 72·23 | 61·92 | 10·31 |
| 7 தொழிலாளர்களின் வைப்புத் தொகை யுடன் கூடிய நிர் வாகச் செலவுகள். | 14·43 | 12·52 | 1·91 |
| 8 பங்குத் தொகையின் மீதான இழப்பு. | 186·87 | 3·41 | 183·46 (159·73) |
| 9 நிர்வாகச் செலவுகள் மீதான இழப்பு. | 4·17 | 0·08 | 4·09 (3·61) |

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தவறுதலுக்காக அபராதம் விதிப்பது குறித்து 1973 ஆம் ஆண்டில் சட்டத்தில் சேர்க்கப்பட்ட கடுமையான விதித்துறை கள் நல்ல பயனை ஏற்படுத்தியது. அதிகாரபூர்வமான கலைப்பதி காரிகள், நொடித்தவர் சொத்தாட்சியர் ஆகியோரின் கட்டுப் பாட்டிலுள்ள 14 நாட்டுடைமையாக்கப்பட்ட பஞ்சாலைகளிட மிருந்தும், 5 நிறுவனங்களிடம் இருந்தும் ரூ. 75·30 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. 1952 ஆம் ஆண்டு தொழி லாளர் வருங்கால வைப்பு நிதி, பல்வகை விதித்துறைகள் சட்டம் ஆகியவற்றின் கீழ் தொகைகளை வசூலிப்பதற்குத் தனிப்பட்ட பணியாளர் அமைப்பு ஏதுமில்லையாதலால் மாவட்ட ஆட்சியர் களின் உதவியுடன் வரிவசூல் நடவடிக்கைகள் மூலமாக பாக்கித்

1978 மார்ச் 9]

சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள்—தொடர்ச்சி.

தொகைகளை வசூலிக்க மாநில அரசையே இந்த நிறுவனம் நம்பியுள்ளது. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதியன்றுள்ளவாறு ரூ. 49·54 இலட்சம் அளவிற்கான 511 வரிவசூல் வழக்குகள் முடிவடையாமல் உள்ளன.

இந்த ஆய்வு ஆண்டில் நீதி மன்றத்தில் 98 குற்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிவரையில் தாக்கல் செய்யப்பட்ட, முடிவு செய்யப்பட்ட, முடிவுறுமல் உள்ள, குற்ற வழக்குகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறுமல் உள்ள வழக்குகள். | *607 | வழக்குகள் |
| 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ந் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள். | 98 | வழக்குகள் |
| மொத்தம் .. | 705 | வழக்குகள் |

(*முந்திய ஆண்டு வழக்குகளையும் சேர்த்து).

| | | |
|---|---|---|
| 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ந் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை நீதி மன்றத்தால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள். | 87 | வழக்குகள் |
| 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை முடிவுறுமல் உள்ள வழக்குகள். | 618 | வழக்குகள் |

இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்ட தொகை ரூ. 39·46 இலட்சம்.

வட்டி வீதம் :

1977-78 ஆம் நிதி ஆண்டிற்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில், பணம் செலுத்துபவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட வட்டி வீதம் 8 சதவீதமாகும். 1976-77 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட வட்டி வீதம் 7 அரை சதவீதமாகும்.

[1978 மார்ச் 9

## திருப்பி செலுத்த வேண்டியிராத முன்பணங்கள் :

திருப்பி செலுத்த வேண்டியிராத முன்பணமாக சந்தாதாரர்களுக்குத் தொகை வழங்கப்பட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது :—

| | நோக்கம். | சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | ஆயுள் ஈட்டுறுதித் தவணைக் கட்டணம். | 12,662 | 12.67 |
| 2 | குடியிருப்பு வீடு, வீட்டு மனைகள் வாங்குதல் வீடுகளைக் கட்டுதல். | 1,186 | 97.16 |
| 3 | நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் காலத்தில். | 3,978 | 14.61 |
| 4 | உறுப்பினர்களுக்கு அவர்களது குடும்பத்தினருக்கு ஏற்படுகின்ற நோய்க்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்காக. | 339 | 2.16 |
| 5 | உறுப்பினர்களின் பெண் மக்கள் திருமணம் அல்லது குழந்தைகள் கல்வி. | 3,842 | 46,85 |
| 6 | அசாதாரணமான இயற்கை இன்னல் காரணமாக உறுப்பினரின் இயங்கும், இயங்காச் சொத்துகளுக்கு ஏற்படும் சேதம். | 1,699 | 4.26 |

## வருங்கால வைப்புநிதிக் கணக்குகளை இறுதியாக முடித்துக் கொண்டது :

1977-78 ஆம் ஆண்டில் (1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் தேதி வரையில்) 17,692 கோரிக்கைகள் தொடர்பாக வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள் இறுதியாக முடிக்கப்பட்டு, அவற்றுக்காக ரூ. 5.45 கோடி வழங்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 9]

ஆண்டுக் கணக்குகள் விவர அறிக்கையை வெளியிடுதல் :

1975-76-ஆம் ஆண்டு வரைக்கும் உரிய ஆண்டுக் கணக்குகள் முழுமையாக வெளியிடப்பட்டுள்ளன. 1976-77-ஆம் ஆண்டிற்கு மொத்தம் 9,249 நிறுவனங்கள் தொடர்பாக வெளியிடப்பட வேண்டிய ஆண்டு கணக்குகளின் எண்ணிக்கை 7,25,486 ஆகும். இவற்றில் ஏறத்தாழ 65 சத வீதம் அதாவது 4,570 நிறுவனங்கள் தொடர்பாக மொத்தம் 4,59,547 கணக்குக் குறிப்பு சீட்டுகள் ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டன. இன்னும் எஞ்சியுள்ள 2,65,939 கணக்கு விவரங்களுக்கு குறிப்புச் சீட்டுகளை வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வட்டாரக்குழு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி :

1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மாநில அரசு ஆகிய மூன்று தரப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய வட்டாரக் குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுக்கள் அந்தந்த வட்டாரங்களில் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி, குடும்ப ஓய்வூதிய நிதி, தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்பட்ட காப்புறுதித் திட்டங்கள் ஆகியவற்றை நிர்வகிப்பது தொடர்பான விஷயங்களில் ஆலோசனைகூறி மத்திய அறங்காவலர் வாரியத்திற்கு ( Central Board of Trustees ) உதவி புரிகிறது. தொழிலாளர் நலன் வேலை வாய்ப்புத் துறையின் அரசுச் செயலாளர் இந்த வட்டாரக் குழுவின் தலைவராவார். இக்குழு 8—7—1977, 18—10—1977 ஆகிய நாட்களில் இருமுறை கூடிற்று. மீண்டும் மூன்றாவது முறையாக பாண்டிச்சேரியில் 31—1—1978 நாளில் கூடியது. இக்குழு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி—பல்வகை விதித்துறைகள் சட்டம் மற்றும் அதன் திட்டங்கள் இந்த வட்டாரத்தில் செயல்படுவது தொடர்பான பல்வேறு முக்கியம் வாய்ந்த அவசரத் தன்மையுடைய பொருள்கள் குறித்து விரிவாக விவாதித்தது. இக்குழுவின் பரிவுரைகள் பரிசீலனையின் பொருட்டு அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

குடும்ப ஓய்வூதியம் - ஆயுள் காப்பீட்டுத் திட்டம் - தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம் - ஆயுள் காப்பீட்டு நலன்கள் :

உறுப்பினர் ஒருவர் (குடும்ப ஓய்வூதிய நிதியில் இரண்டு ஆண்டுக் காலத்திற்குக் குறையாத அளவு உறுப்பினராக இருந்தவர்) 60 வயதை அடைவதற்கு முன்னதாகக் கணக்கிடப்படக் கூடிய பணிக்கால அளவில் இறந்து விடுவாரெனில் அவ்வுறுப்பினரது குடும்பம் திட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு வரையறுக்கப்பட்ட வீதங்களில் குடும்ப ஓய்வூதிய, ஆயுள் காப்பீட்டு நலன்களைப் பெறுவதற்கு உரிமையுடையதாகும்.

[1978 மார்ச் 9

மேற்சொன்ன நலன்களைப் பெறுவதற்காக, இந்நிதியில் உறுப்பினராக இருந்து இறந்துவிட்டவர்களின் குடும்பங்களிலிருந்து 688 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இவற்றுள் 29 விண்ணப்பங்கள் தொடர்பாக ஓய்வூதிய காப்பீட்டு நலன்கள் குறித்த தொகை கணக்குத் தீர்க்கப்பெற்று வழங்கப் பெற்றுள்ளது. இவ்வாறு 30—9—1977 ஆம் நாள் அன்றுள்ளபடி இந்த 29 விண்ணப்பங்கள் தொடர்பாக குடும்ப ஓய்வூதியமாக ரூ. 8,154·50 ஆயுள் காப்பீட்டு நலன்களாக ரூ. 12,480.00 வழங்கப்பெற்றுள்ளது.

ஓய்வுக்காலம் தொகை பெறுதல், தொகையைத் திரும்பப் பெறுதல் ஆகிய வழியிலான அனுகூலங்கள்.

குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் தமது 25 வயதிலோ அல்லது அதற்கு முன்னரோ உறுப்பினராகச் சேர்ந்த ஒருவர் அத்திட்ட விதித் துறைகளுக்குட்பட்டு அவர் 60 வயதை எட்டுவதன் மேல் ஒரு மொத்த தொகையாக ரூ. 4,000 வரை பெறுவதற்குரியவராவார்.

ஆய்வாண்டில் மேற்சொன்ன அனுகூலங்களைப் பெறும் பொருட்டு 15,144 விண்ணப்பங்கள் வந்தன. இவற்றில் கோரிக்கைப் படிவங்களில் தவறுகள் இருந்த காரணத்தால் அல்லது அவர்களுடைய தொழிலதிபர்களிடமிருந்து அவர்கள் கோரிக்கைக்கு ஆதரவான ஆவணங்கள் அல்லது விவரங்கள் வராத காரணத்தால் 7,509 பேரின் விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டன. விண்ணப்பம் செய்து கொண்ட 6,367 பேருக்கு கணக்குகள் முடிக்கப்பெற்று ரூ. 8·96 இலட்சம் வழங்கப்பட்டது.

தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்பட்ட ஆயுள் காப்பீட்டுத் திட்டம் 1976.

இந்நிதியில் உறுப்பினராக உள்ள ஒருவர் இறந்துவிடுவதன் மேல் அவரது நியமனதாரருக்கு அல்லது குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு அவர் பேரில் நிதியில் முந்திய மூன்றுண்டுகளில் கணக்கிலிருந்து சராசரி நிலுவைக்குச் சமமான ஒரு தொகை வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் தொகை 10,000 ரூபாய்க்கு மேற்படாதிருக்கும். ஆனல், அவ்வாறு வழங்கப்படுவோருக்கு அவ்வுறுப்பினரது கணக்கில் முந்திய மூன்றுண்டுகளில் எப்போதேனும் ஆண்டுச் சராசரி நிலுவை ரூ. 1,000-க்குக் குறைந்திருக்கக்கூடாது.

நிதியில் உறுப்பினரது கணக்கில் இருந்த சராசரி நிலுவையைக் கணக்கிடுகையில் அந்தகால அளவில் தொழிலாளர் வருங்கால வைப்புநிதியில் தொழிலாளரும் தொழிலதிபரும் செலுத்தியிருக்க வேண்டிய மொத்தப் பங்குத் தொகைகளும் அவற்றுடன் அவற்றிற்குரிய வட்டித் தொகையும்கணக்கில் கொள்ளப்பட

1978 மார்ச் 9]

வேண்டும். இந்த குடும்பநல நிதி அனுகூலத்தைப் பெறுகின்றவர்களுக்கு வழங்கப்படும் தொகை அந்த நியமனதாரர் அல்லது கோரிக்கைதாரரின் பேரில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் ஒன்றில் சேமிப்புக் கணக்கில் வைப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும்.

ஆய்வுக்குரிய ஆண்டில் தொழிலதிபர்களிடமிருந்து அவர்களுடைய தொழிலாளர்களுக்கு காப்புறுதி தொகைக்குரிய பங்குத் தொகையாக ரூ. 62.92 இலட்சம் வசூலிக்கப்பட்டது. மேலும் விதிவிலக்கு அளிக்கப்பட்ட, விதிவிலக்கு அளிக்கப்படாத இரு வகை நிறுவனங்களிலிருந்தும் இந்நிதியின் நிர்வாகச் செலவுகளுக்காக ரூ. 12.52 இலட்சம் தொகையும் வசூலிக்கப்பட்டது. இதுவரை 447 பேர்களிடமிருந்து இந்நிதியின் அனுகூலங்களைப் பெறும் விண்ணப்பங்கள் வரப் பெற்றன. அவற்றில் 43 விண்ணப்பங்கள் தொடர்பாக கணக்கு முடிக்கப்பெற்று ரூ. 2.81 இலட்சம் தொகை வழங்கப்பட்டது. வந்த விண்ணப்பங்களில் 286 விண்ணப்பங்கள் தொடர்பாக அவற்றில் காணப்பட்டுள்ள குறைபாடுகளைச் சரி செய்து அனுப்புமாறு அக்கோரிக்கைகள் திருப்பி அனுப்பப்பட்டன. எஞ்சியுள்ள கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

### தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.

1948 ஆம் ஆண்டு தொழிலாளர் நல காப்புறுதி சட்ட விதித் துறைகளையொட்டி தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் ஏற்படுத்தப் பட்டது. இத் திட்டம் தற்போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மாநிலத்தின் மற்றெல்லா மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இது 44 பகுதிகளில் மொத்தம் 4,50,000 தொழிலாளர்களுக்கு செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மின்விசையைப் பயன்படுத்தி 20 பேர்களையும் அதற்கதிகமாகவும் வேலைக்கு நியமித்து திங்களுக்கு ரூ. 1,000 மேற்படாமல் ஊதியம் வழங்குகின்ற தொழிற்சாலைகளனைத்திற்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் நலன்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளது :—

1. மருத்துவ நலன்கள் .(பொருள்களாக வழங்கப்படும்).
2, நோய்ச் சிகிச்சை நலன்கள்.
3. பேறுகால் நலன்கள் (ரொக்கமாக வழங்கப்படும்).
4. இயலாமை நிலை நலன்கள்.
5. சார்ந்துள்ளோர் நலன்கள்.
6. ஈமச் சடங்கு குறித்த அனுகூலங்கள்.

]1978 மார்ச் 9

ஆய்வுக்குரிய ஆண்டில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மூன்று இடங்களிலும் தொழிலாளர் நல காப்புறுதி மருத்துவமனைகள் மூன்றும், தொழிலாளர் நல காப்புறுதி மருந்தகங்கள் 104-ம் இயல் ஊர்தி மருந்தகங்கள் 9-ம் பயன்பாட்டு மருந்தகங்கள் மூன்றும் பகுதி நேர மருந்தகங்கள் இரண்டும் செயல்பட்டன. சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் 13—4—1977 ஆம் நாளிலிருந்து தொடக்க நிலையில் 206 படுக்கை வசதிகளுடன் தொழிலாளர் நல காப்புறுதி மருத்துவ மனை ஒன்று செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் பங்குத் தொகைகள் அளித்து செயல்படுத்தப்படும் ஒன்றாகும். இதற்காகும் செலவு முன்னரே ஒப்புக் கொள்ளப்பட்ட வீதத்தில் மாநில அரசுக்கும், புதுதில்லியிலுள்ள தொழிலாளர் நல காப்புறுதி கழகத்திற்குமிடையே பகிர்ந்துக் கொள்ளப்படும். மருத்துவ நலன்களுக்காக மாநில அரசுக்கும் தொழிலாளர் நல காப்புறுதி கழகத்திற்குமிடையே பகிர்ந்து கொள்ளப்படக்கூடிய தற்போதைய செலவுப் பங்கு வீதாச்சாரம் 1:7 ஆகும். எனினும், இவ்வாறு பகிர்ந்து கொள்ளப்படக் கூடிய செலவின் மொத்தம் கழகத்தால் வரையறுக்கப்பட்ட உச்ச வரம்பிற்குள் இருக்க வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து செயலில் உள்ள உச்ச வரம்பின் விவரம் பின்வருமாறு:—

1. விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ வசதி :—ஒரு தொழிலாளர் குடும்பத்திற்கு ஓராண்டிற்கு ரூ. 80.

2. முழு மருத்துவ வசதி :—ஒரு தொழிலாளர் குடும்பத்திற்கு ஓராண்டிற்கு ரூ. 105.

இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் அனைத்திலும் காப்புறுதி செய்துக் கொண்ட அனைவரும் முழு மருத்துவ வசதியைப் பெறுகின்றனர். முழு மருத்துவ வசதி செயல்படுகின்ற பகுதிகளில் காப்புறுதி செய்துக் கொண்டவர்களின் குடும்பங்கள் முழு மருத்துவ வசதியைப் பெறுகின்றன. மற்ற பகுதிகளில், விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் மட்டுமே அக்குடும்பங்களுக்கு அளிக்கப்படுகின்றன. அதாவது, மருத்துவ மனையிற் சேர்ந்து அளிக்கப்படும் வசதிகள் தவிர மற்ற எல்லா வசதிகளும் அவர்கட்கு அளிக்கப்படுகின்றன. முழு மருத்துவ வசதிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் அளிக்கப்படுகின்றன. இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ள மற்றெல்லாப் பகுதிகளிலும் விரிவு படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

மேற்சொன்னவை தவிர, உச்சவரம்பிற்குமேல் (ஒரு தொழிலாளருக்கு ஓராண்டிற்கு) ரூ. 25-க்கு மேற்படுகின்ற ஆனால், ரூ. 45-க்கு மேற்படாத அளவுக்கு மருந்துகள், மருந்து பொருள

1978 மார்ச் 9]

கள் மீதாகும் செலவு அனுமதிக்கப்படும் ; ஆனுல், இச்செலவும் கூட, மாநில அரசுக்கும் தொழிலாளர் நலக் காப்புறுதிக்கழகத் திற்கும் இடையே வழக்கமானபடி 1:7 என்ற வீதாச்சாரத்தில் பங்கீட்டு ஏற்கப்படுவதற்குரியதாகும்.

கலைஞர் கருணுநிதி நகரில் உள்ள தொழிலாளர் நலக்காப்பு றுதி மருத்துவ மனையில் உள்ள மொத்தப் படுக்கைகளின் எண் ணிக்கை 500 ஆக உயர்த்தும் வகையில், கூடுதல் தளங்களை ரூ. 52.70 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இம்மாநிலத்தில் தொழிலாளர் நலக்காப்புறுதி மருத்துவ மனைகள் 4-ம், நிலையான தொழிலாளர் நலக்காப்புறுதி மருந் தகங்கள் 104-ம் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 43 மருந்தகங்கள் அரசுக்கு/தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் அமைந்துள்ளன. எஞ்சியுள்ள 61 மருந்தகங்கள் தனியார் வாடகைக் கட்டிடங் களில் அமைந்துள்ளன.

கீழ்க்காணும் இடங்கள் தொடர்பாக நிலங்கள் தெரிந்தெடுக் கப்பட்டு கட்டிடப் பணிகள் நடைபெற்றுவருகின்றன :—

1. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், பெரம்பூர்.
2. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், தாம்பரம்.
3. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், மணப்பாறை.
4. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், தல்லா குளம்.
5. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், திண்டுக்கல்.
6. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், வேலூர்.
7. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், இராணிப் பேட்டை.

கீழ்க்காணும் இடங்களில் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகங்களை நிறுவ நிலங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கையகப்படுத்தும் பணி பல்வேறு அளவில் உள்ளது.

1. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், மயிலாப்பூர்.
2. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், கோடம் பாக்கம்.
3. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், வடலூர்.
4. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், காட்டூர்.
5. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், சேலம்.
6. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், துடியலூர்.
7. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், மணி நகரம்.
8. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், விருதுநகர்.
9. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், கரூர்.
10. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், கோணூர்.

[1978 மார்ச் 9

11. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், பழனி.
12. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், பொள்ளாச்சி.

1977–78 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் தொழிலாளர் காப்புறுதி மருந்தகங்களைக் கட்டவும், பணியாளர் இல்லங்கள் கட்டவும் உரிய நிலங்களை தெரிந்தெடுத்துக் கையகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது :—

1. சென்னை தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், நந்தம்பாக்கம்.
2. வட ஆர்க்காடு தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், ஆம்பூர்.
3. வட ஆர்க்காடு தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம் வாணியம்பாடி.
4. கோயம்புத்தூர் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், போத்தனூர்.
5. கோயம்புத்தூர் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், இருகூர்.
6. கோயம்புத்தூர் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், பல்லடம்.
7. கோயம்புத்தூர் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், மதுக்கரை.
8. கோயம்புத்தூர் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், மேட்டுப்பாளையம்-1.
9. கோயம்புத்தூர் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், திருப்பூர்-II.
10. கோயம்புத்தூர் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், ஈரோடு.
11. திருநெல்வேலி தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், தாழையூத்து.
12. தஞ்சாவூர் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், நாகப்பட்டினம்.

எஞ்சியுள்ள 30 தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகங்களும், கட்டிடங்களும், பணியாளர் இல்லங்களும் கட்டுவதற்காக நிலங்களைக் கையகப்படுத்தும் பணிக்கு அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 1977–78, 1978–79 ஆம் ஆண்டில் வளர்ச்சித் திட்டம்.

தொழிலாளர் நலக் காப்புறுதி திட்டம் இம்மாநிலத்தில் ரூ. 500 முதல் ரூ. 1,000 வரையிலான வருவாய்த் தொகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் உட்பட, செயற்படுத்தப்படும் பகுதிகள் அனைத்திலும் தொடர்ந்து செயல்பட்டது. முதல் கட்டமாக

1978 மார்ச் 9]

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகரங்களிலும்/ மாநகர்ப்புறப் பகுதிகளிலும் உள்ள கீழ்க்காணும் புதிய பிரிவு களைச் சேர்ந்த நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் 16-1-1977 ஆம் நாளிலிருந்து தொழிலாளர் நலக்காப்புறுதி திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர் :—

1. மின் விசையை பயன்படுத்தி 10 முதல் 19 தொழி லாளர் வரையில் வேலைக்கமர்த்தியுள்ள தொழிற்சாலைகள்.

2. 20 தொழிலாளர்களையும் அதற்கு அதிகமான பேர் களையும் வேலைக்கமர்த்தியுள்ள மின்விசையினைப் பயன்படுத்தாத தொழிற்சாலைகள்.

3. ஓட்டல்கள்.

4. சிற்றுண்டிச்சாலைகள்.

5. கடைகள்.

6. திரைப்பட அரங்குகள்.

7. செய்திப்பத்திரிகை நிறுவனங்கள்.

இரண்டாவது கட்டமாக கோயம்புத்தூர், சேலம், வட ஆர்க்காடு மாவட்டப் பகுதிகளில் மேற்சொன்ன பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் 12-2-1978 ஆம் நாளிலிருந்து இத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

மேலும், இராணிப்பேட்டை பகுதியில் வனப்பாடி, நர சிங்கபுரம், மணியம்பட்டு, முகுந்தராயபுரம், லாலாபேட்டை ஆகிய ஐந்து கிராமங்களில் உள்ள தொழிலாளர்களின் நலனுக் காக தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம் ஒன்றைத் திறந்து, அதன்மூலம் இத்திட்டத்தை அப்பகுதிக்கும் அரசு நீட்டித்துள்ளது.

வில்லிவாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வசிக்கின்ற காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் நலனுக்காகத் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம் ஒன்று அங்கு செயல்பட்டு வந்துள்ளது.

கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நலக்காப்புறுதி மருந் துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை 300-லிருந்து 500 ஆக உயர்த்தி அரசு ஆ ன பிறப்பித்துள்ளது. அம்மருத்துவ மனை 1977 ஜூனிலிருந்து கூடுதலாக்கப்பட்ட படுக்கைகளுடன் (500 படுக்கைகள்) செயல்பட்டு வருகின்றது.

மூன்றாவது கட்டமாக, 1978-79-ல் மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, ராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டப் பகுதிகளில், திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் புதிய பிரிவுத் தொழில்களைச் சேர்ந்த தொழிலாளர் களையும் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 9

திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளைச் சேர்ந்த கீழ்க்காணுமிடங்களுக்கும் தொழிலாளர் நலக்காப்புறுதித் திட்டத்தை நீட்டிக்கும் செயற்குறிப்புகளை அரசு மும்முரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது.

1. அரக்கோணம்.
2. சங்ககிரி.
3. கன்னியாகுமரி புறநகர்ப்பகுதிகள்.
4. குமாரபாளையம்.
5. சேலம் புறநகர்ப்பகுதிகள்.
6. தஞ்சாவூர்.
7. ஆறுமுகனேரி.

தொழிலைச் சார்ந்துவரும் நோய்களைக் குறித்து ஆராய்ச்சி.

சென்னையிலுள்ள தொழிலாளர் நலக்காப்புறுதி மருத்துவ மனையில் தொழில் துறை மருந்துகள், சுகாதாரம், தொழிலைச் சார்ந்து வரும் நோய்கள் ஆகியன குறித்து ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தேவைப்படும் புத்தகங்களையும் இன்றி யமையாத பிற கருவிகளையும் வாங்கும் பொருட்டு ரூ. 6,370 வழங்க அரசு அனுமதித்துள்ளது.

பங்குத் தொகைகள்.

தொழிலதிபர்களின் சிறப்புப்பங்குத் தொகையாகவும் தொழி லாளர்களின் பங்குத் தொகைகளாகவும் மொத்தம் ரூ. 9,40,39,516.94 தொகையை தொழிலாளர் நலக்காப்புறுதிக் கழகம் வசூலித்துள்ளது.

1977 ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து டிசம்பர் 31 ஆம் நாள் வரையில் காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்ட இனங்களில் ரொக்கமாக அனுகூலங்கள் வழங்கப் பட்டன.

| | |
|---|---|
| நோய்ச் சிகிச்சை நலன் .. .. | 2,02,49,433.60 |
| விரிவுபடுத்தப்பட்ட நோய்ச் சிகிச்சை நலன். | 10,81,571.60 |
| பேறுகால நலன் .. .. .. | 8,28,580.70 |
| தற்காலிக இயலாமை நலன் .. .. | 22,98,512.45 |
| நிலையான இயலாமை நலன் (மொத்த தொகையாக்கிப் பெறுதல் உட்பட) .. | 11,04,976.90 |
| சார்ந்துள்ளவர்களின் நலன் .. .. | 3,39,371.90 |
| ஈமச் சடங்குக்கு வழங்கும் அனுகூலம் .. | 60,600.00 |
| உயர்த்தப்பட்ட அளவு நோய்ச்சிகிச்சை நலன் (குடும்ப நலத்திட்டம்) .. .. | 24,606.70 |

*1978 மார்ச் 9]*

<u>தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகங்களையும் மருத்துவமனைகளையும் பார்வையிடுதல்.</u>

தொழிலாளர் நல அமைச்சர் 10-2-1978 வரை கீழ்க்காணும் தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகங்கட்கும் மருத்துவ மனைகட்கும் நேரில் சென்று பார்வையிட்டார் :—

1. தொழிலாளர் நலக்காப்புறுதி மருத்துவமனை, அயனாவரம், சென்னை-23.

2. தொழிலாளர் நலக்காப்புறுதி மருத்துவமனை, கலைஞர் கருணாநிதிநகர், சென்னை-83.

3. தொழிலாளர் நலக்காப்புறுதி மருத்துவமனை, மதுரை.

4. தொழிலாளர் நலக்காப்புறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர்.

5. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், புதுக்கோட்டை.

6. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், கும்பகோணம்.

7. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், நாகப்பட்டினம்.

8. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், ராம்ஜி நகர்.

9. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், புதூர்.

10. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், மணிநகரம்.

11. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், ஈரோடு.

12. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், சேலம்.

13. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், சைதாப்பேட்டை-I மற்றும் II.

14. தொழிலாளர் நலக்காப்புறுதிமருந்தகம், அடையாறு.

15. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், செம்பியம்.

16. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், அம்பத்தூர்.

17. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், கொண்டித்தோப்பு.

18. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், மயிலாப்பூர்.

19. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், கோடம்பாக்கம்.

20. தொழிளாலர் நலக்காப்புறுதி மருந்தகம், அண்ணாசாலை.

[1978 மார்ச் 9

21. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், தண்டையார்ப் பேட்டை I மற்றும் II.

22. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், தாம்பரம்.

23. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், கீழ்ப்பாக்கம் I மற்றும் II.

24. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், ஆவடி.

25. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், பல்லாவரம்.

26. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், பெரம்பூர் I, II மற்றும் III.

27. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், திருவல்லிக்கேணி.

28. தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகம், எழும்பூர்.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.

பின் வரும் சந்தர்ப்பங்களில் இழப்பீடு வழங்குவதற்கு வகை செய்யும் பொருட்டு 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது. (a) தொழிலாளர் வேலையில் இருக்கின்ற பொழுது அவ்வேலை காரணமாக ஏற்படக்கூடிய தொழில் விபத்துக்கள் ; (b) சில வகைத் தொழிலைச் சார்ந்து வரும் நோய் காரணமாக ஏற்படும் மரணம் அல்லது இயலாமை. இச்சட்டம் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து, கட்டுமானப் பணிகள், ரயில்வேக்கள் ஆகியவற்றிலும் வேறு சில குறிப்பிட்ட கடுமையான தொழில்களிலும் வேலைக்கு நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்துவதாகும். (ஆனல் தொழிலதிபர்களின் தொழில் அல்லது வாணிபத்துக்கான காரியம் நீங்கலாக வேறு காரியத்திற்கு அமர்த்தப்பட்ட தற்காலிகத் தொழிலாளர்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.)

இந்த வகையில் இழப்பீடு பெறுவதற்காக 1977 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளில் உள்ளவாறு 631 விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படாமலுள்ளன. நடப்பாண்டில் மேலும், 1,020 விண்ணப்பங்கள் வந்தன. இவ்வாறு மொத்தம் உள்ள 1,651 விண்ணப்பங்களில் 993 விண்ணப்பங்கள் முடிவு செய்யப்பட்டன. ஆண்டிறுதியில் 658 விண்ணப்பங்கள் முவுடி செய்யப்படாமல் இருந்தன.

தொழில் விபத்துக்கள் துயர் தணிப்பு நிதி.

ஆண்டுதோறும் தொடர் மானியமாக ரூ. 15,000 தொகையை வழங்கி அரசு இந் நிதியை ஏற்படுத்தியுள்ளது. கல் உடைத்தல், வெடி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டு

1978 மார்ச் 9]

தல் அல்லது ஏனைய தொழில்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளபோது கடுமையான காயம் ஏற்பட்டு அதனால் நிலையாக இயலாமையுற்று விடுகின்ற தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்து விடுகின்ற தொழிலாளர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு இந் நிதியிலிருந்து நிவாரணமளிக்கப்படும்; ஆனால், 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட இழப்பீட்டை வழங்குவதற்கு அத் தொழிலதிபருக்கு நிதி வசதி இல்லை என்றாலும், அல்லது அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டபடி இழப்பீட்டுத் தொகையைத் தொழிலதிபரிடமிருந்து பெறுவதற்கு அத்தொழிலாளருக்கோ அவரைச் சார்ந்தவர்களுக்கோ எக்காரணம் பற்றியாவது முடியாமற் போனது என்றாலும் மட்டுமே இவ்வாறு இந்நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படும்.

பணிபுரிகையில் ஏற்படும் விபத்துக்களால் மரணமடைந்த தொழிலாளர்கள், காயமடையும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் இதனால் பயனடைவர். இந்நிதியிலிருந்து ரூ. 500 துயர் துடைப்பு நிதியாக ஒருவருக்கு 1977 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

பணிக் கொடை வழங்குதல் சட்டம்.

இச் சட்டத்தின் கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் அவரவர்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக இருப்பர் என்றும், தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள் அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளில் மேல் முறையீட்டு அதிகாரிகளாக இருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டில் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இச்சட்டத்தின் கீழ் 796 வழக்குகளை முடித்துத் தீர்ப்பளித்தனர். ஆய்விலுள்ள இந்த ஆண்டில் மேல் முறையீட்டு அதிகாரிகள் 107 மேல் முறையீடுகளை முடித்துத் தீர்ப்பளித்தனர்.

தொழிலாளர் நலத் திட்டங்கள் அரசு உதவி பெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்—தனிப்பட்ட முறையில் சொந்தமாகத் தொழில் நடத்தும் தொழிலதிபர் திட்டங்கள்.

சமூக நலக் கொள்கையை கருத்தில் கொண்டு பெருகி வரும் தொழிலாளர்களுக்குப் பாங்குடைய வசதியான குடியிருப்புகள் ஒதுக்குவது தவிர்க்க முடியாத ஒரு முக்கியப் பணியாகும்; ஏனெனில், அவர்களில் பெரும்பாலோர் தங்களுக்கென சொந்த வீடுகள் கட்டிக் கொள்ள இயலாது அல்லது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அவர்கள் பணியாற்றும் இடத்திலிருந்து வெகு தொலைவில் வசிப்பவர்களாக இருப்பர். சில தொழிலதிபர்கள் தங்களுடைய தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித் கொடுத்துள்ளனர். ஆனல், இது இட வசதி பிரச்சனையைச் சிறிது கூடத் தீர்ப்பதாக இல்லை. எனவே, அரசு உதவி பெறும், தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் பணியாற்றும் இடங்களுக்கு அருகில் பாங்குடைய இடங்களில் தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க இயலும்.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் நலனுக்காக வீடுகள் கட்டப் பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகியவற்றுக்கு இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 5,350 ரூபாயும் இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்ச வரம்பாக 6,050 ரூபாயும், வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடிக்கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 7,600 ரூபாயும் வழக்கமான இரண்டு அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக்கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 7,600 ரூபாயும் நிதியுதவியளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ‘‘ கடன் ’’ என்பதன் கீழ் ரூபாய் 7·50 இலட்சமும் ‘‘ உதவித் தொகை ’’ என்பதன் கீழ் ரூ.2·50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. உதவித் தொகை வகையில் இந்நாள் வரை 79,800 ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. கடன் தொகை. உதவித் தொகை முழுவதும் 1978 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில், ‘‘ கடன் ’’ என்பதன் கீழ் ரூ.7·50 இலட்சமும், ‘‘ உதவித் தொகை ’’ என்பதன் கீழ் ரூ. 2·50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

1976—77 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட 4 வீட்டு வசதித் திட்டங்களில் , (1) தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, பாலக்கோடு (2) ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, வட புதுப்பேட்டை. (3) தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மேட்டுப்பட்டி ஆகியவற்றின் நிர்வாகத்தினர் பணியாளர்களுக்கான வீடுகளை அனைத்து வகையிலும் கட்டி முடித்துள்ளனர். மேட்டுப்பட்டி இராமலிங்க ஆலை நிர்வாகத்தினர் வீடுகளை இன்னும் கட்டி முடிக்கவில்லை.

அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்ற தொழிற்சாலைகளின் வீட்டுவசதித் திட்டங்கள் வருமாறு :—

| தொழிற்சாலையின் பெயர். | வீடுகளின் எண்ணிக்கை. | மதிப்பிடப்பட்ட செலவு. | பெறத் தகுதியுடைய நிதியுதவி அளவு. — கடன். | பெறத் தகுதியுடைய நிதியுதவி அளவு. — உதவித் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 சுந்தரம் டெக்ஸ் டைல்ஸ், நம்பி நகர். | இரு சிறிய அறைகள் கொண்ட இரண்டடுக்குக் கட்டிட குடியிருப்புகள் 12. | 94,200 | 32,100 | 16,050 |
| 2 மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாளம். | இரு அறைகள் கொண்ட இரண்டடுக்குக் குடியிருப்புகள் 104. | 16,00,000 | 3,95,200 | 1,97,600 |
| 3 சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர், (கட்டம் II). | இரு அறைகள் கொண்ட இரண்டடுக்குக் குடியிருப்புகள் 72. | 10,80,000 | 2,73,600 | 1,36,800 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 9

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டம் :

மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு ஓர் அறை கொண்ட குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ரூ. 4,000 உச்ச வரம்புச் செலவில் கட்டித்தர அவர்களுக்கு நிதியுதவி செய்ய இத் திட்டம் வகை செய்கிறது. இவ்வாறு அளிக்கப்படும் நிதியுதவி 50 சதவீதம் கடனாகவும், 37·5 சதவீதம் உதவித் தொகையாகவும் இருக்கும். இம் மாநிலத்தில் மலைத் தோட்டங்களிலேயே இருந்து கொண்டு பணிபுரியும் தொழிலாளர்களில் சுமார் 94 சதவீதத்தினருக்கு வீட்டு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | குடும்பமில்லாது தனியாக இருக்கின்ற தொழிலாளர்கள் உட்பட வீடுகள் தேவைப்படுகின்ற குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை. | 35,997 |
| 2 | கட்டித்தரப்பட்ட தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. .. | 33,700 |
| 3 | இன்னும் கட்டி முடிக்கப்பட வேண்டியுள்ள தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை .. | 2,297 |
| 4 | இருக்கக்கூடிய பிற வகை வீடுகளின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. .. | 3,496 |

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வீடுகள் கட்டுவதற்காக கீழ்க்காணப்பெறும் எஸ்டேட்டுகளுக்கு கடன் உதவித் தொகை வழங்க அரசு 1977 ஆம் ஆண்டு மே திங்களில் அனுமதி வழங்கியது :—

| எஸ்டேட்டின் பெயர். | கடன். | உதவித் தொகை. | கட்டப்படும் வீடுகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (3) |
| | ரூ. | ரூ. | |
| 1 குன்னூர் தேயிலை எஸ்டேட் லிமிடெட், குன்னூர். | 64,000 | 48,000 | 32 |
| 2 மணம் போலி எஸ்டேட், வால்பாறை .. | 80,000 | 60,000 | 40 |
| 3 மேல் நீர் வீழ்ச்சி எஸ்டேட், வால்பாறை .. | 1,00,000 | 75,000 | 50 |
| 4 மணலாறு எஸ்டேட், நெடுஞ்சாலை அஞ்சல் .. | 1,20,000 | 90,000 | 60 |
| 5 வெண்ணியாறு எஸ்டேட், நெடுஞ்சாலை அஞ்சல் | 24,000 | 18,000 | 12 |
| 6 நெடுஞ்சாலை எஸ்டேட், நெடுஞ்சாலை அஞ்சல் .. | 42,000 | 31,500 | 21 |
| 7 கிளென்வான்ஸ் எஸ்டேட், நெடுஞ்சாலை அஞ்சல். | 96,000 | 72,000 | 48 |
| 8 சோலையாறு, கல்லையாறு எஸ்டேட், சோலையாறு அஞ்சல். | 2,00,000 | 1,50,000 | 100 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 9

## மலைத்தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனைக் குழு.

இந்த ஆசோசனைக் குழுவில், தொழிலதிபர்கள் தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் உள்ளனர். சென்னை அரசு தொழிலாளர் நலத் துறைச் செயலாளர் இக்குழுவின் தலைவராவார். இக் குழுவின் கூட்டம் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதியில் உதகமண்டலத்தில் நடைபெற்றது. வீடுகள் தொடர்பான விஷயங்கள் குறித்து விவாதிப்பதும், வீட்டுவசதி தொடர்பாக மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளை உரிய முறையில் செயல்படுத்துவதற்கான வழிவகைகளைத் தெரிவிப்பதும் இக் குழுவின் தலையாயப் பணிகளாகும். மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன :—

1. கதவுகள், சன்னல்கள் முதலியவற்றைச் செய்ய வைரம் பாய்ந்த மரங்களைப் பயன்படுத்துதல்.

2. குடியிருப்புகளுக்குச் சிமிட்டித் தரை போடுதல்.

3. பணியாளர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளித்தல்.

4. கண்காணிப்பாளர்களுக்கு வீட்டு வசதி (சுற்றிலும் அடைக்கப்பட்ட வராந்தாக்கள் கட்டுதல்).

இதைத்தவிர, பணியாளர்களின் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளிப்பது குறித்தும் இக் குழு கவனம் செலுத்தி வருகிறது. இது தொடர்பான பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்யும் பொருட்டு, சம்பந்தப்பட்ட மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆய்வாளரைச் செயலாளராகவும், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

தொழிலாளர் கல்வி.—இந்திய அரசு வகுத்துள்ள தொழிலாளர் கல்வித் திட்டம் இம் மாநிலத்தில் மூன்று இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் அடைந்த முன்னேற்றம் வருமாறு -

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள வட்டார இயக்குநர்கள், தொழிலாளர்களுக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பயிற்சி வகுப்புகளை நடத்திவந்துள்ளனர். அதன் விவரம் வருமாறு:—

| | சென்னை. | மதுரை. | கோயம்புத்தூர். |
|---|---|---|---|
| பயிற்சி பெற்ற தொழிலாளர் ஆசிரியர்களது எண்ணிக்கை. | 129 | 101 | 176 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 7,152 | 6,925 | 4,890 |

தொழிலாளர் நல ஆணையாளர், இந்த மூன்று வட்டார உள்ளூர் குழுக்களுக்குத் தலைவராவார்.

**1978 மார்ச் 9]**

**தொழிலாளர்கள் கல்வி நிலையம், சென்னை.**

''தொழிலாளர் நலன்-தொழில் வளர்ச்சி'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று 1977-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் தேதியில் நடைபெற்றது. சென்னை, தொழிலாளர் நல ஆணையாளர் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். தொழிலாளர் நலமாக இருந்தால்தான் தொழில் நன்கு வளர்ச்சி பெற முடியும் என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகளை அவர் கூறினார்.

பெண் தொழிலாளர்களுக்கென ஒரு கருத்தரங்கு 1977-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் தேதியில் இந்நிலையத்தால் நடத்தப்பட்டது. சமூக ஆராய்ச்சி நிலைய இயக்குநர், முக்கியக் கொள்கைகள் பற்றி உரையாற்றினார். பணிபுரியும் பெண்கள் 40 பேர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

வட்டார நிலையம் சென்னையில் உள்ள தேசிய உற்பத்தி மன்றம் ஆகியவற்றின் கூட்டு ஆதரவின் கீழ் ''தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர்கள் கலந்துகொள்ளுதல்'' என்னும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு, 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ம் தேதியில் நடத்தப்பட்டது. பல்வேறு துறையைச் சேர்ந்த 100 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

பணியாளர் ஆசிரியர் பயிற்சி பெறுபவர்களுக்காகத் துணை வட்டார நிலையம் ஒன்று விழுப்புரத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கப் பெற்று நடைபெற்று வருகின்றது.

பணியாளர் நிர்வாக இந்திய நிறுவனத்தில் (சென்னைப் பிரிவு) உடனுழைப்புடன், ''தொழில் பண்பாட்டை மாற்றியமைப்பதில் பணியாளர் பங்கு'' என்ற பொருள் குறித்து கருத்தரங்கு ஒன்று 1977-ம் ஆண்டு மே திங்களில் 13-ம் தேதியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 74 பேர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், 'குடும்பநலம்' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை சென்னையில் 1977-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5-ம் தேதியில் நடத்தினர். அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்ட எந்த சரித்திரக் காலத்திலும் குடும்பம், சமுதாயத்தில் மிகவும் ஒரு முக்கிய அமைப்பாக இருந்து வந்தது என்றும், நகரங்கள் உருவாகியும், நவீன வசதிகள் பெருகியும் தொழில்கள் வளர்ந்து வரும் இக்காலத்தில் சமூக விஞ்ஞான அறிஞர்கள், திட்டமிடுபவர்கள், கொள்கை வகுப்பவர்கள் ஆகியோர் குடும்ப நலத்தைக் கவனிக்க வேண்டும் என்று கூறினர். தனியார் துறை பொதுத் துறையைச் சேர்ந்த 154 பேர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இந்த வட்டார நிலையம், மாநிலக்கல்வி ஆராய்ச்சி பயிற்சி மன்றத்தின் உடனுழைப்புடன் கிராமப்புற பணியாளர்களுக்கென்று சிட்லம்பாக்க ம்கிராமத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ம் தேதி. 21-ம் தேதி, ஆகிய இரண்டு நாட்களில் கருத்தரங்கு நடத்தியது. கிராமப்புற பணியாளர்கள் 40 பேர் இதில் கலந்து கொண்டனர். கூட்டுறவு மூலமாக அமைப்பை ஏற்படுத்துதல், தமக்குத் தாமே உதவி செய்து கொள்ளுதல், கிராமப்புற வளர்ச்சி போன்றவற்றின் அவசியம் பற்றி அந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

''பாரதியும் தொழிலாளர்களும்'' என்ற தலைப்பில், கருத்தரங்கு ஒன்று, 1977-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24-ம் தேதியில் நடைபெற்றது. சென்னை மாநகராட்சி ஆணையாளர், இந்திய அரசு தகவல்-விளம்பரத் துறையைச் சேர்ந்த தலைமை அதிகாரி ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு, உரையாற்றினர். ''பாரதியும் தொழிலாளர்களும்'' என்ற தலைப்புக் கொண்ட கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற தொழிலாளர்-ஆசிரியர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

''கார்திபடிகளும் தொழிலாளர்களும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை வட்டார நிலையம் 1977-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7-ம் தேதியில் நடத்தியது. தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். தொழிலாளர் கல்வி மத்திய வாரியத்தின் தலைவர் இக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார். தொழிலாளர் குறித்து கார்தியடிகள் தெரிவித்த, தெரிந்தெடுக்கப்பட்ட கருத்துக்கள் அடங்கிய அச்சடிக்கப்பட்ட வெளியீடு ஒன்று அக்கருத்தரங்கில் கொடுக்கப்பட்டது. இதில் 210 பேர் கலந்து கொண்டனர்.

<u>தொழிலாளர் கல்வி நிலையம், மதுரை.</u>

தொழிலாளர் பணிக்குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மூன்று நாள் சிறப்புப் பயிற்சித் திட்டம் ஸ்ரீசண்முகர் ஆலையில் நடத்தப்பட்டது. இதில் 15 பேர் கலந்து கொண்டனர்.

பல்வேறு நிறுவனங்களிலும் நாற்பத்தெட்டு ஒரு நாள் பள்ளிகள் நடத்தப்பட்டன. குறிப்பிட்ட பாடங்கள் குறித்து வகுப்புகள் நடத்தப்பட்டன. 1,872 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

சொற்ப ஆதாயம் பெறும் சிறு உழவர்கள், நிலமற்ற தொழிலாளர்கள் வேளாண்மைத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், கல்வி கற்றும் வேலையில்லாமலிருக்கும் இளை

1978 மார்ச் 9]

ஞர்கள், ஆகியோரின் நலனுக்காக, இரண்டு நாள் பயிற்சி வகுப்பு இராமநாதபுரம் மாவட்டத்தில் இராஜபாளையத்திற்கு அருகிலுள்ள புத்தூர் என்னும் கிராமத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் 29, 30-ல் நடைபெற்றது.

தொழிலாளர் கல்வி நிலையம், கோயம்புத்தூர்.

''தொழில் நல்லுறவு—சட்ட அணுகுமுறை மனிதாபிமான அணுகுமுறை'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று உதகமண்டலத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25, 26-ல் நடைபெற்றது. தொழிலதிபர்கள், தொழிற் சங்கங்கள், அரசு தொழிலாளர் துறை சார்பில் 300-க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இதில் நிர்வாகத்தினருக்கும் பணியாளர் ஆசிரியர்களுக்கும் வட்டார தகுதி விருதுகள் வழங்கப்பட்டன.

1977-ம் ஆண்டு உதகமண்டலத்தில் மே திங்கள் 25-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. மாநிலத்திலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து நிர்வாகிகள், பணியாளர்களின் பிரதிநிதிகள் 30 பேருக்கும் மேல் இதில் கலந்து கொண்டனர். ''ஜன நாயகம், கட்டுப்பாடு-தொழில் நல்லுறவு'' என்னும் கருத்து பற்றி விவாதிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டவர்கள் உரிய இடங்களை நேரில் சென்று பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தொழிலாளர்கள் கல்வி வட்டார இயக்குநர் அலுவலகம், தொழிற்சாலை, தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக ''தொழில் வழிகாட்டித் திட்டம்'' ஒன்றை கோயம்புத்தூர் அரசினர் மகளிர் பல் தொழில் பயிற்சிப் பள்ளியில் 1977-ம் ஆண்டு மே திங்கள் 16-ம் நாளில் நடத்தியது. இவ்வகுப்பில் கோயம்புத்தூர் மாநகரத்திலுள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களின் மக்கள் 120 பேர் கலந்து கொண்டனர்.

''தொழில் நல்லுறவில் புதிய கண்ணோட்டம்'' என்பது பற்றிக் கருத்தரங்கு ஒன்று உதகமண்டலத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம் நாளில் நடைபெற்றது. அரசு தொழிலாளர்-வேலை. வாய்ப்புத் துறை செயலாளர் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். தொழிலாளர் நல ஆணையாளர் இக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார். இக் கருத்தரங்கில் ஏறக் குறைய 200 பேர் கலந்து கொண்டனர்.

''மக்கட் தொகை புள்ளிவிவரக் கல்வி'' என்பது பற்றி மூன்று நாள் கருத்தரங்கு ஒன்று பெண் தொழிலாளர்களுக்கென்று நடைபெற்றது. ''அளவாகப் பெற்று வளமாக வாழ வேண்டும்.'' என்ற எண்ணத்தை பெண்களின் மனத்தில் உரு

வாக்கும் நோக்குடன் இக்கருத்தரங்கு நடைபெற்றது. மாவட்ட குடும்ப நலக் கழகமும், கோயம்புத்தூர் வட்டாரத் தொழிலாளர்கள் கல்வி இயக்குநர் அலுவலகமும் ஒருங்கிணைந்து நடத்திய இக்கருத்தரங்கில், கோயம்புத்தூரிலுள்ள பல்வேறு துணி ஆலைகளிலிருந்து 25 பெண் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

''தொழிலாளர்களிடையே அமைதி காத்தல்'' தொழிலதிபர்கள், தொழிற்சங்கங்கள் அரசு ஆகியோரின் பங்கு என்பது பற்றி ஒருநாள் கருத்தரங்கு ஒன்று 30-9-1977-ல் நடைபெற்றது. இதில் தொழிலதிபர்கள், தொழிற்சங்கங்கள், அரசுத்துறைகள் சார்பில் சுமார் 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு தொழிலாளர் சஞ்சிகை.

தொழில் தகராறுகள், வேலை முடக்கம், தொழிற்சங்கங்கள், முக்கியமான ஒப்பந்தங்கள், தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னை தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள், உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம், ஆகியவற்றின் தீர்ப்புகள், தொழிலாளர்களுக்கான நுகர்வோர் பொருள் விலைக் குறியீட்டெண் முதலியவை பற்றிய பயனுள்ள தகவல்களையும், புள்ளிவிவரங்களையும் இந்தத் திங்கள் வெளியீடு தருகிறது. அத்துடன் தொழிலாளர்கள் பிரச்சினைகள், தொழில் நிர்வாகம் பற்றிய கட்டுரைகளையும், அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவன அறிக்கைகள், முக்கூட்டு அமைப்புகளென இந்தியத் தொழிலாளர் மாநாடு, தொழிலாளர் நிலைக்குழு, மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக்குழு முதலியவற்றின் தீர்மானங்கள், பரிவுரைகள் ஆகியவற்றையும் இது வெளியிடுகிறது. இச்சஞ்சிகையின் முக்கியப் பகுதியாகிய புள்ளிவிவரப் பகுதி இப்போது தமிழில் அச்சிடப்பட்டு வருகிறது.

## முத்தரப்பு ஆலோசனைக்குழு.

மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு முதன்மையான ஆலோசனைக் குழுவாகும். இதனிடம் தொழிலாளர் தொடர்பான கொள்கைகள் பற்றிய பொருள்கள் அனைத்துக்கும் அறிவுரைகள் கேட்கப்படுகின்றன. 23—2—1978 தேதியிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அரசாணை எண். 136-ல் மாநில தொழிலாளர்கள் நல அமைச்சர் அவர்களின் தலைமையில் இக்குழு மாற்றி அமைக்கப்பட்டது. தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், அவர்களுடைய பிரதி நிதிகள், மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

1978 மார்ச் 9]

பல்துறை அதிகாரிகள் மாநாடு.—தொழிலாளர் நிர்வாகத்தைச் சேர்ந்த பல்வேறு பொருட்கள் குறித்தும், எடைக் கல்-அளவுகள் சட்டத்தையும் தொழிலாளர் தொழிற்சாலைகள் சட்டத்தையும் தீவிரப்படுத்துவது குறித்தும், பரிசீலனை செய்ய தொழிலாளர்துறை அமைச்சரின் தலைமையில் 1977-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் சென்னையில், தொழிலாளர் துறை அதிகாரிகள் 15-வது ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.—இவ்வாரியம் தொழிலாளர் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வருகின்றது.

தற்போது இவ்வாரியம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 10 தொழிலாளர் நல நிலையங்களை நடத்தி வருகிறது:—

| | |
|---|---|
| 1. அம்பத்தூர் (சென்னை). | 6. கோவில்பட்டி. |
| 2. செம்பியம் (சென்னை). | 7. திருப்பூர். |
| 3. கோயம்புத்தூர் | 8. குடியாத்தம். |
| 4. மதுரை. | 9. வாணியம்பாடி. |
| 5. திண்டுக்கல். | 10. சிவகாசி. |

மேற்கூறிய இடங்களில் உள்ள தொழிலாளர் நல நிலையங்களில் கிண்டர் கார்டன் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அப் பள்ளிகளில் பணியாளர்களது குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அக்குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது. அக்குழந்தைகளுக்கு வகுப்பு நடத்துவதற்கென்று பாலசேவிகா பயிற்சி பெற்ற ஒருவர் நியமிக்கப்படுகிறார். குழந்தைகள் விளையாடுவதற்கென்று பொம்மைகள் கொடுக்கப்படுகின்றன. 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் இவ்வாரியம் குழந்தைகளுக்கு பாற்பண்டங்களையும் சத்துணவுகளையும் வழங்கி வருகின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் நாளொன்றுக்கு 150 மி.லி. பால் வழங்கப்படுகிறது.

இந்நிலையங்களில் பணியாளர்களின் மனைவியருக்கும் பணியாளர்களின் ஆதரவில் இருப்பவர்களுக்கும் தையல் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ. 30 கொடுக்கப்படுகிறது. இப்பயிற்சி காலம் ஓராண்டாகும். ஒவ்வொரு நிலையத்திலும், தகுதி பெற்ற தையல் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படுகிறார்.

இவ்வாரியம் டி.வி. செட் ஒன்று வாங்கியுள்ளது; அது, அம்பத்தூர் தொழிலாளர் நல நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது; அப்பகுதியில் வாழும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மகிழ்வூட்டும் வகையில் அது அமைந்துள்ளது.

[1978 மார்ச் 9

சென்னையிலுள்ள திரு.வி.க. நகரில் மகளிர் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டது ; இம்மன்றம், தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்களால் நடத்தப்படும் பதிவு பெற்ற ஒரு சங்கமாகும். 5 வயதுக்கும் குறைவாக உள்ள குழந்தைக்குப் பாலும் ரொட்டியும் கொடுக்கப்படுகிறது ; கிண்டர் கார்டன் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. வாரியம் வழங்கிய ரூ. 8,000 ஆண்டு மானிய உதவியுடன் இம்மகளிர் மன்றம் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு படிப்பகங்கள், தொழிலாளர்களின் நலன் கருதித் திறக்கப்பட்டுள்ளன. இப்படிப்பகங்களில் மாத, வார வெளியீடுகளும், செய்தித்தாள்களும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு தொழிலாளர்நல வாரியத்திற்கான, பல அடுக்குக் கட்டிடம் ஒன்று ரூ. 38 இலட்சம் செலவில் பொதுப்பணித்துறையினால் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தில் தமிழ்நாடு தொழிலாளர்நல அலுவலகங்களும், தொழிலாளர் நலத்துறை அலுவலகங்களும் அமைக்கப்படும். இக்கட்டிடத்திற்கென வசூலிக்கப்படும் வாடகை வாரியத்தின் நிதி வசதியைப் பெருக்கத் துணை புரியும்.

தாம்பரத்திலுள்ள உடல் உருக்கிநோய் மருத்துவ நிலையத்தில், தொழிலாளர்களுக்கென்றே ரூ. 3.64 இலட்சம் செலவில் 26 படுக்கைகளுடன் கூடிய உடல் உருக்கி நோய் வார்டு (இணைப்பு) ஒன்று கட்டப்பட்டுள்ளது ; தற்போது நோயாளிகள் சென்று தங்குவதற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

விடுமுறை இல்லம் ஒன்று ஏற்காட்டில் வாடகை கட்டிடத்தில் நடைபெற்று வருகின்றது. தொழிலாளர்கள் குழுக்களாகவோ குடும்பத்துடனே வந்து, இந்த விடுமுறை இல்லங்களில் சில காலம் தங்கலாம். அவ்வாறு வந்து தங்கும் தொழிலாளர்களிடமிருந்து நாளொன்றுக்கு ஒருவருக்கு ரூ. 1.50 வீதம் மிகக் குறைந்த வாடகை வசூலிக்கப்படுகிறது.

பின்வரும் திட்டங்கள் வாரியத்தின் தீவிரப் பரிசீலனையில் உள்ளன :—

1. தொழிலாளர்களின் நலனுக்கென்று, கல்விப்பயனுடைய படங்களைக் காண்பிக்கும் பொருட்டு திரைப்படக் கருவி ஒன்றை விலைக்கு வாங்குதல்.

2. தொழிலாளர்களுக்கென்று, மாமல்லபுரம், குற்றாலம், கொடைக்கானல், உதகமண்டலம், ஆகிய இடங்களில் விடுமுறை இல்லங்கள் அமைத்தல். மாமல்லபுரத்தில் விடுமுறை இல்லம் கூடிய விரைவில் அமைக்கப்படும்.

1978 மார்ச் 9]

3. கிண்டியில், தொழிலாளர்நல மனமகிழ் நிலையம் ஒன்று திறந்து வைத்தல்.

4. திருமணங்கள், காதணி விழாக்கள், பிற சமூக விழாக்கள் போன்றவைகளைத் தொழிலாளர்கள் குறைந்த அளவு வாடகையில் நடத்துவதற்கேற்ற சமூக நிலையங்கள் திறத்தல்.

5. தேனாம்பேட்டையில், அலுவலகக் கட்டிடத்தில் நூலகம் ஒன்று அமைக்கப்படும். அங்கு கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படிக்கின்ற தொழிலாளர்களின் புதல்வருக்கும் புதல்வியருக்கும் பயன்தரத்தக்க புத்தகங்கள் இருக்கும். இந்நூலகத்திற்கு ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்படும்.

6. மாநிலம் முழுவதிலும் குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள் 9 அமைத்தல். இந்நிலையங்கள், தொழிலாளர்களின் மனைவியர், புதல்வியரால் அமைக்கப்பட்ட மகளிர் மன்றத்தால் நடத்தப்படும். இவற்றை நடத்துவதற்காகும் மொத்தச் செலவையும் வாரியம் ஏற்கும்.

தொழிலாளர் பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்காகச் சென்னைக்கு வரும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், தொழிலாளர் தம் பிரதிநிதிகளுக்கும், குறைந்த செலவில், வசதியான கட்டிடமொன்று தொழிலாளர் நல வாரியம் கட்டிக் கொள்வதற்கு உதவி செய்யக் கருதியுள்ளதாக அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. தங்கும் இல்லம் கட்டுவதற்கான ஏற்ற இடம் தெரிந்தெடுக்கப்படும், கட்டிடம் கட்டும் பணி கூடிய விரைவில் தொடங்கவிருக்கின்றது.

<u>தையல் பயிற்சி நிலையம், கூடலூர்</u> :— கூடலூரில் மலைத் தோட்டத் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட தையற் பயிற்சி நிலையம், இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றது. தையல் ஆசிரியர் ஒருவர் இந்நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கின்றார். மலைத் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உடைகள் தைப்பதில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித் தொகையாக, மாதமொன்றுக்கு 30 ரூபாய் வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலம் 18 மாதங்களாகும். தற்போது, 10 பேர் பயிற்சி பெறுகின்றனர்.

<u>சட்ட உதவி</u> :— தொழிற் சங்கங்கள் உயர்நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு அல்லது ரிட் முறையீடு தாக்கல் செய்வது தொடர்பாக ஏற்படும் சட்டம் சம்பந்தமான செலவுகளுக்காகக் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ. 150 என்ற வீதத்தில் நிதி உதவி வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சட்ட உதவிக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. 1977–78ஆம் ஆண்டில் 4 வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக இத்திட்டத்தின் கீழ் ரூ. 600-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (31—1—1978 ஆம் நாள் வரை.)

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்படி, இழப்பீட்டு நிதி கோரும் தொழிலாளர்களில் உதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக ஓராண்டிற்கு ரூ. 1,000-ஐ அரசு ஒதுக்கியுள்ளது. தொழிலாளர் இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளரின் ஆணைகளை எதிர்த்து நிர்வாகத்தினர் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது, காயம் அடைந்த தொழிலாளர்களும் உயர்நீதிமன்றத்தில் தங்கள் தரப்பில் வாதாட சட்ட உதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர் ஆவார். ஆனால் தொழிலாளர் இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளரின் முன்பு உள்ள நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு இந்த சட்ட உதவி அளிக்கப்பட்டது.

நடப்பாண்டில் சட்ட உதவி அளிப்பதற்காக ரூ. 50.க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

<u>தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள்</u> :—தொழிலாளர்களுக்குச் சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகச் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று குழுக்கள் செயலாற்றி வருகின்றன. அவை ஒவ்வொன்றும ஓய்வு பெற்ற நீதித்துறை அதிகாரியாலும், ஓய்வு பெற்ற ஓர் தொழிலாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. வசதி குறைந்த மக்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவது குறித்துத் திட்டம் ஒன்றினை உருவாக்குவதில் ஏற்படும் பிரச்சினை பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவால் செய்யப்பட்ட பரிவுரைகளை ஒட்டி, அரசால் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் தொழிலாளர்களின் முறையீடுகளை பரிவுடன் கேட்டறிந்து அவர்கள் தம் குறைகளைக் களைவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து கருத்துரை நல்கி தொழிலாளர்களுக்கென்று இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்கள் அவை சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆகியவற்றின் கீழ் நிவாரணம் பெறுவதற்குரிய முறைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறது.

<u>தொழிலாளர்களின் மனுக்களுக்கு நீதிமன்றக் கட்டண முத்திரைத்தாள் ஒட்டுவது தள்ளிவிடப்பட்டது</u> :—1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சட்டமன்ற பேரவையில் தொழிலாளர் நல அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க தொழில் துறை அலு

1978 மார்ச் 9]

வலர்கள் தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தொழில் நடுவர் நீதிமன்றங்கள் முன்னிலையில் தொழிலாளரால் அல்லது தொழிலாளர் சார்பாக தொழிலாளர் சட்டங்கள்படி தாக்கல் செய்து கொள்ளப்படும் மனுக்களில் நீதிமன்ற கட்டண முத்திரைத்தாள் ஒட்ட வேண்டியதில்லை என்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம் :— இம்மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் குடும்பங்களின் நலன்களுக்காக, கேர் (CARE) நிறுவனத்தின் உதவியுடன் (தமிழ்நாட்டில்) சென்னையில் இச் சத்துணவுத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கின்றது. தொழிலாளர்களின் குடும்பங்களிலுள்ள பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளும் கருவுற்ற பெண்டிரும் பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர்.

இத்திட்டத்திற்குட்பட்ட (தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நல நிலையங்கள் உட்பட) 58 நிலையங்களின் மூலம் தற்போது 21,103 பேர் பயன் அடைகின்றனர். தற்போதுள்ள தொழிலாளர் சத்துணவுத் திட்டத்துடன் ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி ஏற்கனவே வழங்கப்படும் சத்துணவுடன், மருத்துவ பாதுகாப்பும் பெற்று இத்தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

நிறுவன அமைப்பு இல்லாத பீடி சுற்றுபவர்கள், கைத்தறி நெசவாளர்கள் முதலிய தொழிலாளர்களுக்கான சுகாதார பாதுகாப்புத் திட்டம் :— தொழிலாளர் நல காப்புறுதி திட்டத்தை பீடி சுற்றுபவர், கைத்தறி நெசவாளர்கள் போன்ற நிறுவன அமைப்பில்லாத தொழிலாளர் பிரிவினருக்கும் விரிவுபடுத்துவது ஒரு கடினமான திட்டமாக இருப்பதால் இப்பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அவர்கள் செய்யும் தொழில்களால் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மருத்துவ இயல் ஊர்திகளை வைத்திருப்பதற்கான செயற் குறிப்புகளை அரசு பரிசீலித்து வருகிறது. இந் நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு 1978–79-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 9

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் :—1977-78 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் பின்வரும் பயிற்சிகளை நடத்தியது:—

| பயிற்சி வகுப்பின் பெயர். | பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை. | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பொதுத்துறை, தனியார்துறை நிறுவனங்களிலுள்ள தொழிலாளர் நல அதிகாரிகளுக்கான மறு பயிற்சி .. .. | 2 | 28 |
| 2. விம்கோ தொழிற்சாலையில் நடத்தப்பட்ட பாதுகாப்புப் பயிற்சி .. | 1 | 21 |
| 3. சாலை போக்குவரத்து பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிகள் .. .. .. | 3 | 96 |
| 4. தொழிலாளர் நலத்துறை கண்காணிப்பாளர்கள். தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் இவர்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி .. .. | 3 | 74 |
| 5. கூட்டுறவு சங்கங்களின் உள்ளாட்சி நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு மறுபயிற்சி .. | 7 | 92 |
| 6. சாலைப் போக்குவரத்து பயிற்சி நிலையத்தில் தொழில் நுட்ப மேற்பார்வையாளர்களுக்குப் பயிற்சி .. .. .. | 1 | 14 |
| 7. சாலைப் போக்குவரத்துப் பயிற்சி நிலையங்களில் பணியாளரின் அலுவலர்களுக்குப் பயிற்சி .. | 1 | 6 |

1978 மார்ச் 9]

| பயிற்சி வகுப்பின் பெயர். | பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை. | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 8. சாலைப் போக்குவரத்துப் பயிற்சி நிலையங்களில் பல்வேறு போக்குவரத்து கழகங்களின் கிளை மேலாளர்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி .. .. | 1 | 7 |
| மொத்தம் .. | 19 | 338 |

## VI. எடைகள் அளவைகள் சட்டம்.

எடைகள், அளவைகள் :—தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள், அளவைகள் (நடைமுறைப்படுத்துதல்) சட்டத்தின் விதித்துறைகளின்படி தமிழ் நாடு மாநிலத்தில் எடைகள், அளவைகள் தரத்தினைச் செயல்படுத்தும் பணி தொழிலாளர் நலத்துறையின் துணை ஆணையாளராக உள்ள எடைகள் அளவைகள் கட்டுப்பாடு அதிகாரியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக்கூடிய (தொழிலாளர் துறை ஆய்வாளர்கள்) தொழிலாளர் துணை ஆய்வாளர் உதவி ஆய்வாளர்கள் ஆகியோரால் செய்யப்பட்டு வருகிறது.

எடைகள், அளவைகள் முதலியவற்றைப் பயன்படுத்தும் போது செய்யப்படும் முறைகேடுகளை ஒழிக்க, முறையான மேற்பார்வைகள் திடீர் சோதனைகள் கூட்டாக சேர்த்து திடீர் சோதனைகள் செய்தல் ஆகிய நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

1977 ஆம் ஆண்டில், எடைகள், அளவைகள் சட்டம் விதிகள் இவற்றின் விதித்துறைகளை மீறியதற்காக 15,920 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. தாக்கல் செய்யப்பட்ட 15,920 வழக்குகளில் 14,249 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ரூ. 6,19,301.05 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டில் முத்திரைக் கட்டண வகையில் ரூ. 26,21,602 வசூல் செய்யப்பட்டது. (இதில் மீண்டும் சரிபார்ப்பதற்கான கட்டணங்களும் அடங்கும்). 1977 ஆம் ஆண்டு எடைகள், அளவைகள் கட்டுப்பாடு அதிகாரியால், விற்பனையாளர்கள் பழுதுபார்ப்பவர்கள் உற்பத்தியாளர்கள்

[1978 மார்ச் 9

ஆகியோருக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை, கடந்த இரண்டாண்டுகளில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை இவற்றின் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு | பழுது பார்ப்போர். | விற்பனை யாளர். | உற்பத்தி யாளர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1975 .. .. .. | 277 | 541 | 80 |
| 1976 .. .. .. | 347 | 622 | 98 |
| 1977 .. .. .. | 281 | 596 | 80 |

விற்பனையாளர், பழுதுபார்ப்போர், உற்பத்தியாளர் ஆகியோரிடமிருந்து உரிமக்கட்டணத்தின் மூலம் பெறப்பட்ட தொகை ரூ. 39,810 ஆகும்.

இச்சட்டத்தின் விதித்துறைகள் முனைப்புடன் செயல்படுத்தப் படுவதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு எடைகள் அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி மாவட்ட தலைமையிடங்களிலிருக்கும் தனக்குக்கீழுள்ள அதிகாரிகளுடன் முறையான கூட்டங்களை நடத்தி வருகிறார். அவ்வப்போது கூட்டுத் திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்படுகிறது. 1977 ஆம் ஆண்டில் 1,356 கூட்டுத் திடீர் சோதனைகள் இம்மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப் பட்டு 4,360 விற்பனையாளர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

கிராமங்களில் எடைகள் அளவைகள் சட்டம் விதி இவைகளை மும்மரமாகச் செயற்படுத்த கிராமங்களுக்கு முறையாகச் சென்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக 9,869 கிராமங்களுக்கு அதிகாரிகள் சென்று, 54,194 விற்பனையாளர்களை சோதனை செய்தனர்.

கூட்டுத் திடீர் சோதனைகள், மும்முரமான பரிசோதனைகள் ஆகியவற்றின் விளைவாக பல்வேறு உலோகங்களால் செய்யப்பட்ட பல்வேறு எடைக்கற்கள் 18,948-ம், பல்வேறு கொள்ளளவுள்ள அளவைகள் 19,030-ம், பல வகைகளிலான எடை பார்க்கும் கருவிகள் 4,026-ம் அளவைக்கருவிகள் 823-ம் தவறானது குறைபாடுடையது. அல்லது மறுபரிசிலனை செய்யப்படாதது ஆகியன பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் நீதிமன்ற வழக்குகளுக்காக வைத்திருக்கப்பட்டு அவை நீதிமன்றத்தின் ஆணைப்படி திருப்பிக் கொடுக்கப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட ஏனைய பொருட்களைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு எடைகள் அளவைகள் (செயற்படுத்துதல்) சட்டத்தின் விதித் துறைகள் அதன்கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளை ஒட்டி அவற்றை அரசிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

1978 மார்ச் 9]

தொழிலாளர் சட்டங்களின் கீழுள்ள நிறுவனங்கள் தொழிலாளர்களின் எண்ணிக்கை.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலையிலிருப்போர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I. 1948-ம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம்— | | |
| 1976 .. .. .. | 8,196 | 5,04,899 |
| 1977 .. .. .. | 8,508 | 5,23,233 |
| II. 1947 ஆம் ஆண்டு தமிழ் நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம்— | | |
| 1977 .. .. .. | 2,17,685 | 2,21,860 |
| 1978 .. .. .. | 2,21,642 | 3,28,644 |
| III. 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு உணவகங்கள் சட்டம்— | | |
| 1977 .. .. .. | 20,497 | 66,313 |
| 1978 .. .. .. | 21,731 | 68,356 |
| IV. 1951 ஆம் ஆண்டின் மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம்— | | |
| 1976 .. .. .. | 404 | 88,767 |
| 1977 .. .. .. | 412 | 92,141 |
| V. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்— .. | | |
| 1976 .. .. | 1,358 | 48,770 |
| 1977 .. .. | 1,454 | 45,871 |
| VI. 1926 ஆம் ஆண்டு தொழிற் சங்கங்கள் சட்டம்— | | |
| 1977 .. .. | 2,429 | .. |
| 1978 .. .. | 2,550 | .. |

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 9

## தேசீய வேலைவாய்ப்புப் பணி

1, வேலைவாய்ப்புகள்: — தமிழ்நாட்டில் தூத்துக்குடி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், அம்பத்தூர், நாகப்பட்டினம், மண்டபம், சங்கராபுரம், ஆலங்காயம் ஆகிய ஊர்களில் உள்ள 9 துணைவேலைவாய்ப்பகங்களும் சென்னையிலுள்ள இரு தனி வேலை வாய்ப்பகங்கள் உள்பட மொத்தம் 31 வேலைவாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. சென்னையில் இயங்கும் உடல் ஊனமுற்றோருக்கான தனி வேலைவாய்ப்பகமும். தொழில் மற்றும் நிருவாகத் தகுதி பெற்றவர்களுக்கான இயங்கும் தனி அலுவலகமும் சென்னை மதுரை அண்ணாமலை நகர் ஆகிய பல்கலைக்கழகங்களில் இயங்கும் பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழி காட்டும் நிலையங்களும் இதனுள் அடங்கும்.

1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ந் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரையிலான கால அளவில் இயங்கிய வேலைவாய்ப்பகங்கள் ஆற்றிய பணிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.—

| வரிசை எண்ணும் விவரமும். | 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ந் தேதி முதல் 1976 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. வேலைக்காக பதிவு செய்தவர்கள் | 3,22,905 |
| 2. வேலையில் அமர்த்தப்பட்டவர்கள் | 18,566 |
| 3. தெரிவிக்கப்பட்ட காலி இடங்கள் | 30.270 |
| 4. வேலை வாய்ப்பகங்களை உபயோகப் படுத்தி வேலையில் அமர்ந்தவர்களின் சராசரி எண்ணிக்கை— | |
| (அ) அரசு .. .. .. .. .. | 779 |
| (ஆ) தனியார் துறை .. .. .. | 236 |
| 5. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31—ம் நாளன்றுள்ளவாறு வேலைக்காக பதிவு செய்து கொண்ட பதிவேட்டில் உள்ள விண்ணப்பதாரர்கள். | 9,25,842 |

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 9]

2. உடல் ஊனமுற்ரேருக்காக தனி வேலை வாய்ப்பு அலுவலம்.

இவ் வேலைவாய்ப்பகம் தமிழ் நாட்டிலுள்ள (கோவை, மதுரை ஆகிய மாவட்டங்கள் தவிர) உடல் ஊனமுற்றவர்களின் (பார்வை யற்றவர், காது கேளாதவர், முடவர்கள்) விண்ணப்பங்களை வேலைக்காக பதிவு செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கு வதில் உதவி நல்குகிறது. வேலை வாய்ப்பு உள்ள இடங்களைக் கண்டறிய தனி முயற்சிகள் எடுத்து வருகிறது அதற்காக அரசு டனும் தனியார் துறை நிறுவனங்களுடனும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறது.

மதுரையிலும், கோவையிலும் உள்ள மாவட்ட வேலை வாய்ப் பகங்களில் ஊனமுற்ரேர்களுக்கான ஒரு தனி வேலை வாய்ப்பகம் இயங்கி வருகின்றது. இம்மாவட்டங்களில் உள்ள ஊன முற்ரேர்களை சம்பந்தப்பட்ட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவல கத்தின் உதவி இயக்குநரது நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் அந்தந்த மாவட்டங்களில் வேலைக்காகப் பதிவு செய்தல் அவர்களை வேலை யில் அமர்த்த முயற்சிகள் எடுத்தல். அவர்கள் மறுவாழ்வினை மேற்கொள்ள உதவுதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கென்று தனியே ஒரு இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் கவனித்து வருகிருர்.

சென்னை, உடல் ஊனமுற்ரேர்க்கான வேலை வாய்ப்பகம் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான கால அளவில் உடல் ஊனமுற்ற 961 பேர்களை (164 பார்வையற்ரேர் 107 காது கேளாதோர் மற்றும் 690 இதர முடவர்கள்) பதிவு செய்து உள்ளது. அத்துடன் 145 ஊனமுற்ரேர்களை (15 பார்வை யற்ரேர், 18 காது கேளாதோர் மற்றும் 112 முடவர்) வேலையில் அமர்த்தி உள்ளது. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் 32 ஆம் நாள் நிலவரப்படி உடல் ஊனமுற்ற 3,524 விண்ணப்பதாரர்கள் (499 பார்வையற்ரேர், 393 காது கேளாதோர், 2,632 முடவர்) சென்னை, உடல் ஊனமுற்ரேருக்கான தனி வேலை வாய்ப்பு அலுவ லகத்தில் வேலைக்காக பதிவு ஏட்டில் பதிவு செய்துக் கொண்டிருந் தனர்.

3. தொழில்-நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம்.—இவ்வேலை வாய்ப்பகம் தமிழ் நாட்டிலுள்ள தொழில் நுட்பம், விஞ்ஞானம், பொறியியல் நிர்வாகம் போன்றவற்றில் உயர் தகுதி பெற்றவர் களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தருகிறது. அவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்புகளைக் கண்டறிந்து அவர்களைப் பணியில் அமர்த்தும் பொருட்டு இவ்வலுவலகம் பொதுத்துறையிலும். தனி யார் துறையிலும் உள்ள பெரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்கிறது. ஆய்வுக் காலத்தில் இவ்வேலைவாய்ப்பகத்தில் 5,466 பேர் நிர்வாகம் மற்றும் செயல் தரம் தகுதி பெற்ற விண்ணப்ப தாரர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

[1978 மார்ச் 9

697 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் நாள் நிலவரப்படி 13,507 பேர் இவ் வேலை வாய்ப்பகத்தில் வேலைக்காக பதிவேட்டில் பதிவு செய்து கொண்டிருந்தனர்.

4. பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—ஆலோசனை நிலையங்கள்.

தமிழ் நாட்டில் அண்ணாமலை நகர், சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்-ஆலோசனை நிலையங்கள் செயல்படுகின்றன. இவை பல்கலைக் கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கும், படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் வேலை விவரங்களும் ஆலோசனைகளும் அளித்து உதவும் பணியினைத் தொடர்ந்து செய்கின்றன. இவற்றுடன் வேலை வாய்ப்பு நாடி வருபவர்களையும் பதிவு செய்கின்றன. இக்கால அளவில் இந்த நிலையங்கள் 1,258 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களில் 77 பேர்களை வேலையில் அமர்த்தியது. 1977ஆம் ஆண் மார்ச்சுத் திங்கள் இறுதியில் 2,817 விண்ணப்பதாரர்கள் இந்த நிலையங்களில் வேலை வாய்ப்புக்காக பதிவேடுகளில் விண்ணப்பித்துக் கொண்டிருந்தனர்.

5. தொழில் வழிகாட்டுதலும், வேலை வாய்ப்பு ஆலோசனையும்.

தமிழ்நாட்டில், நீலகிரி, தருமபுரி, புதுக்கோட்டை மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் தொழில் வழி காட்டும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. தொழில் வழி காட்டும் பிரிவுகள், தொடர்ந்து தொழில் பற்றிய செய்திகள், பயிற்சி பற்றிய செய்திகள், வாழ்க்கைத் தொழில் பற்றிய செய்திகள், வேலை வாய்ப்புகள் பற்றிய செய்திகள், பணியில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான வசதிகள் ஆகிய தகவல்களைப் பரப்பி வருகின்றன. இளைஞர்கள் மற்றும் விண்ணப்பதாரர்களின் நன்மைக்காக தனித்தனியாகவும் தொகுதி தொகுதியாகவும் இளைஞர்களுக்கு அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டண. இளைஞர்களின் பயனுக்காக, காலாண்டிற்கு ஒரு முறை தகவல் வெளியீட்டிதழ்களும் தயாரிக்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

1977 ஏப்ரல் திங்கள் முதல் 1977 நவம்பர் திங்கள் வரையிலான கால அளவில் தொழில் வழி காட்டும் பிரிவுகளால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 9]

அட்டவணை.

| வரிசை எண். | விவரங்கள். | 1977 ஏப்ரல் திங்கள் முதல் 1977 நவம்பர் திங்கள் வரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தொகுதி தொகுதியாக இளைஞர்களுக்கு அறிவுரை, ஆலோசனை வழங்குவதற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் .. | 2,206 |
| 2. | ஆலோசனை பெற்றவர்களின் எண்ணிக்கை. | 14,133 |
| 3. | பதிவின்போது ஆலோசனை பெற்றோர் எண்ணிக்கை .. .. .. | 16,405 |
| 4. | தற்போதைய பதவியில் மறுபதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை .. .. .. .. | 2,717 |
| 5. | கலந்துரையாடல்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை .. .. | 69,743 |
| 6. | வேலைகள், பயிற்சி வேலை பயிலும் பயிற்சியில் வழிகாட்டப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை .. | 59 |
| 7. | பயிற்சி/வேலை பயிலும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டோரின் எண்ணிக்கை .. .. | 490 |
| 8. | பயிற்சி/வேலை பயிலும் பயிற்சி நிலையை அடைவதில் உதவி பெற்றுள்ளோரின் எண்ணிக்கை. | 5,749 |
| 9. | உதவித் தொகை/மேற்படிப்பிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை .. .. .. .. | 63 |
| 10. | வாழ்க்கைத் தொழில் பற்றி ஆலோசனை அளிக்கும் வகையில் தொகுதி தொகுதியாக இளைஞர்களுக்கு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நடத்தப்பட்ட சொற்பொழிவுகளின் எண்ணிக்கை .. .. | 125 |

[1978 மார்ச் 9

வேலை வாய்ப்பு, பயிற்சித்துறை இயக்கத்திலுள்ள தொழில் வழிகாட்டிப் பிரிவு மாவட்டங்களிலுள்ள தொழில் வழிகாட்டும் பிரிவுகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஒருங்கிணைத்து கண்காணித்து வருகிறது.

"வேலை வாய்ப்பகங்களும் நீங்களும்" என்ற கையேட்டின் 2,00,000 பிரதிகள் அரசு அச்சகத்தின் மூலம் அச்சடிக்கப்பட்டு எல்லா வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டன. "பள்ளிப் படிப்பிற்குப் பின்" என்ற கையேட்டின் 2,09,500 பிரதிகள் அரசு அச்சகத்தின் மூலம் அச்சடிக்கப்பட்டு அவைகளை எஸ்.எஸ்.எல்.சி. புத்தகங்களுடன் பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன. "இனிமேல்" என்ற தலைப்பின் கீழ் தகவல் அறிவிப்புகளில் 10,00,000 பிரதிகள் அரசு அச்சகத்தின் மூலம் அச்சிட்டு அவைகளை பள்ளி மாணவர்களின் எஸ்.எஸ்.எல்.சி. சான்றிதழுடன் இணைத்து வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப் பட்டது.

ஆவடியிலுள்ள கன வாகனங்கள் தொழிற்சாலையில் (ஹெவி வெஹக்கில்ஸ் பாக்டரியில்) தொழில் பழகுவோர் திட்டத்தின் கீழ் பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுக்க திறனாய்வுத் தேர்வுகள் உதவி இயக்குநர் (தொழில்முறை வழிகாட்டி) அவர்களால் நடத்தப்பட்டது. மாநில தொழில் வழிகாட்டும் பிரிவு தங்களது வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிடும் அலுவலர்களின உபயோகத்திற்காக "இராணுவ நிறுவனங்களிலுள்ள வேலை வாய்ப்பு களுக்கான தொகுப்புப் புத்தகம்" ஒன்றினைத் தயாரித்துள்ளது.

"அரிசன, பழங்குடி மாணவ மாணவியர்களே அரிசன நலத் துறை இயக்குநர் உங்களுக்கு எந்தப் பாட முறைகளுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குகிறார் என்பது தெரியுமா?" என்ற புத்தகம் ஒன்றினை மாநில தொழில் வழிகாட்டுப் பிரிவிலுள்ள அரிசன பழங்குடி மக்களுக்கான சிறப்புப் பிரிவு மூலம் வெளியிடப் பட்டது. இப்புத்தகத்தின் 5,000 பிரதிகள் எல்லா வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டன.

மாணவர்கள், பொது மக்களின் பயனுக்காக பல்கலைக் கழக மாணவர்களின் தகவல் நிலையத்தால் நடத்தப்பட்ட "தகவல் கூடத்தில்" இத்துறையைச் சார்ந்த சென்னை பல்கலைக் கழக வேலை வாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையம் பங் கேற்றது.

"மனை மாட்சி" என்ற தலைப்பின் கீழ் 17-11-1977 அன்று தொலைக் காட்சியில் நடைபெற்ற "அரிசன பழங்குடியினர் களுக்கான வேலை வாய்ப்புகளும், வழிகளும் அதில் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் நிலையும்" என்ற பொருள் பற்றிய விவாதத்தில் உதவி இயக்குநர் (தொழில் முறை வழிகாட்டி) பங்கேற்றார்.

*1978 மார்ச் 9]*

6. வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் வேலை நிலவரத் தகவல் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி மூன்று மாதங்கட்கு ஒரு முறை பொதுத் துறையில் எல்லா நிறுவனங்களிலிருந்தும் தனியார் துறையில் (விவசாயம் தவிர) பத்தும் அதற்கு மேற்பட்ட பேர்கள் வேலையில் அமர்த்திக் கொண்டுள்ள நிறுவனங்களில் இருந்தும் இவ்வேலை நிலவரத் தகவல் முறையாக அமைந்துள்ள நிறுவனங்களில் இருந்து மட்டுமே சேகரிக்கப்படுகிறது. இவ்வறிக்கை காலத்தில் மூன்று முறை காலாண்டுத் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவை மார்ச் 1977, ஜூன் 1977, செப்டம்பர் 1977 முடிந்த காலாண்டு களுக்கான தகவல்கள் ஆகும். கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தகவல்கள் கேட்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, தகவல் கள் அளித்த நிறுவனங்களின் எண்ணிக்கை இதன் விழுக்காடு (சதவீத) வேலையில் இருப்பவர்களின எண்ணிக்கை ஆகிய விவரங் களை அறியலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

## அட்டவணை.

| காலாண்டு முடிய. | தகவல் கேட்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | தகவல் அளித்த நிறுவனங்களின் எண்ணிக்கை. | விழுக்காடு. | வேலையில் இருப்பவர்களின். எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பொதுத் துறை.— | | | | |
| 31-3-1977 .. .. | 6,904 | 6,352 | 92.0 | 10,82,406 |
| 30-6-1977 .. .. | 6,972 | 6,491 | 93.1 | 10.91,865 |
| 30-9-1977 .. .. | 7,039 | 6,452 | 91.6 | 10,97,561 |
| தனியார் துறை.— | | | | |
| 31-3-1977 .. .. | 9,512 | 8,646 | 90.8 | 5,97,883 |
| 30-6-1977 .. .. | 9,572 | 8,801 | 91.9 | 5,87,805 |
| 30-9-1977 .. .. | 9,454 | 8,307 | 87.8 | 5,89,991 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 9]

கீழ்க்கண்ட அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1. மாதாந்திர அறிக்கை மார்ச் 1977 முதல் நவம்பர் 1977 வரை.

2. மாநில வேலை நிலவரத் தகவல் அறிக்கை மார்ச் 1977, ஜூன் 1977, செப்டம்பர் 1977 முடிந்த காலாண்டுகளுக்கு.

7. புள்ளி விவரக் கணிப்புப் பிரிவு:

கடந்த 1977 ஏப்ரல் முதல் டிசம்பர் முடிய புள்ளி விவரத் தொகுப்புப் பிரிவில் தயார் செய்யப்பட்ட அட்டவணைப் பட்டியல்களின் (Tabulations) மொத்த எண்ணிக்கை 88 அவற்றில் மிகவும் முக்கியமான சில பட்டியல்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. மாநில அளவில் பொதுத்துறையில் (Public Sector) 30—9—1974-ன் நிலவரப்படி வேலை நிலவரத் தகவல்கள் அடங்கிய அட்டவணைப் பட்டியல்கள்—தொழில், கல்வித் தகுதி, தொழில்துறை மற்றும் பிரிவுகள் முதலிய விவரங்களடங்கிய 6 தனிப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு புது டில்லியிலுள்ள வேலைவாய்ப்பு பயிற்சித்துறை தலைமை இயக்கத்திற்கு அகில இந்திய அட்டவணை தயாரிப்பதற்காக அனுப்பப்பட்டன.

2. மார்ச் 1977, ஜூன் 1977 மற்றும் செப்டம்பர் 1977 ஆகிய மாதங்களில் முடிவடைந்த காலாண்டுகளுக்குகான வேலை நிலவரத் தகவல்களும் அவைகளின் முந்தைய காலாண்டுப் பட்டியல்களின் வேலை நிலவர அறிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த அறிக்கைகளும் (மொத்தம் 46 பட்டியல்கள்) தயாரிக்கப்பட்டு புது டில்லியிலுள்ள வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை தலைமை இயக்ககத்திற்கு அகில இந்திய அட்டவணைப் பட்டியல் தயாரிப்பதற்காக அனுப்பப்பட்டன.

3. மார்ச் 1977, ஜூன் 1977 ஆகிய மாதங்களில் முடிவடைந்த காலாண்டுகளுக்கான மாநில வேலைவாய்ப்பு நிலவர அறிக்கைகளின் இணைப்புப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன.

மேலும் தனியார் துறையில் செப்டம்பர் 1975 அன்றைய நிலவரப்படியான தொழில் நிலவர அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு அட்டவணைப் பட்டியல்கள் தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கீழ்க்காணும் தொழில் நிலவர அறிக்கைகளும் தயாரிக்கப் பட்டன.

(1) மாநில அளவில் தனியார் துறையில் தொழிலாளர் களின் தொழில் அமைப்புகளின்படி பட்டியல்கள்—செப்டம்பர் 1973-ன் நிலவரப்படி அறிக்கை.

(2) மாநில அளவில் பொதுத் துறையில் தொழிலாளர் களின் தொழில் அமைப்புகளின்படி பட்டியல்கள்—செப்டம்பர் 1974-ன் நிலவரப்படி அறிக்கை.

8. வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் கம்யூட்டர் மூலம் செய்வது :

வேலை வாய்ப்பகப் பணிகளைக் கணக்கிடும் கருவி (கம்ப் யூட்டர்) மூலம் செய்வதற்கு முதற்படியாக, வேலை வேண்டு வோரைப் பதிவு செய்யும் படிவங்கள் தக்கவாறு மாற்றியமைக்கப்பட்டன. இப்பதிவுப் படிவங்களைப் பயன் படுத்தத் தேவையான குறியீட்டு எண்களைக் கொண்ட அட்ட வணை (Code Tables) தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டு விட்டது. வேலைவாய்ப்பகப் பணிகளைக் கணக்கிடும் கருவி (கம்ப்யூட்டர்) மூலம் செய்யத் தேவையான மற்ற படிவங்களைத் தேவையான படி மாற்றியமைக்கும் பணியும் தொடர்ந்து செய்யப்பட்டு வரு கிறது. தற்சமயம் கணக்கிடும் கருவி (கம்ப்யூட்டர்) மூலம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ள ஒன்பது வேலை வாய்ப்பகங்களின் செயல் பதிவேட்டில் உள்ள நபர்களின் விவரங்களை பதியும் படிவங்களில் எழுதுவதற்கான வேலை விரைவில் தொடங்கப் படும்.

வேலை வாய்ப்பகங்களின் பணிகளைக் கணக்கிடும் கருவி (கம்ப் யூட்டர்) மூலம் செய்வதால் பணியாளர்கள் குறைப்பு எதுவும் ஏற்படாது. மாறாக ஒன்பது வேலை வாய்ப்பகங்களின் பதிவேட் டில் வேலை தேடி தங்கள் பெயரைப் பதிவு செய்துள்ளவர்கள் குறித்த எல்லா விவரங்களும் மிகுந்த கவனத்துடன் வைத்து வரப்படும் நிலை உருவாகும்.

9. ஆழ்ந்த ஆய்வுக் குழு :

கீழ்க்காணும் ஆய்வுகள் இந்தக் கால அளவில் முடிக்கப் பட்டன :—

(1) வேலை வாய்ப்பகங்கள் காலியிடங்களை அறிவித்த பிறகு எவ்வாறு அந்தக் காலியிடங்களை வேலையளிப்போர் நிரப்புகின்றனர் என்பது பற்றிய ஆய்வு.

(2) இ. ஆர். II படிவங்கள் இயக்கத்திற்கு அனுப்பு வதில் ஏற்படும் காலதாமதம் பற்றியும், வேலைவாய்ப்பகங்கள் இ. ஆர். II படிவங்கள் பெற்ற சதவீதத்தினைப் பற்றியும் ஆய்வு.

*1978 மார்ச் 9]*

(3) (ஆங்கில முறை) மருத்துவப் பட்டம் பெற்றவர் கட்கு தமிழ்நாடு வேலைவாய்ப்பகங்கள் மூலம் அறிவிக்கப் பட்ட நிரப்பப்பட்ட காலியிடங்களுக்கான விவரங்களை அறியும் ஓர் விரைவு ஆய்வு.

(4) பொறியல் பட்டதாரிகள் பட்டமேற்படிப்பு பட்ட தாரிகட்கு, தமிழ்நாட்டு வேலைவாய்ப்பகங்கள் மூலம் அறிவிக்கப் பட்ட நிரப்பப்பட்ட காலியிடங்கள் பற்றிய ஓர் ஆய்வு.

வேலை வாய்ப்பு—பயிற்சி தலைமை இயக்குநர் அலுவலகத் கத்தால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் ஆய்வுகளின் களப் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டன :—

(1) தனியார் துறையில் உள்ள பல நிறுவனங்கள் ஏன் வேலை வாய்ப்பகங்களின் பணியை நாடவில்லை என்பதற்கான காரணங்களையும் அவை எம்முறையில் பணியாளரை அமர்த்திக் கொள்ளுகின்றன என்பதையும் அறியும் ஆய்வு.

(2) பிளாஸ்டிக் தொழில் பற்றிய ஆய்வு.

(3) உணவு விடுதியில் தொழில் பற்றிய ஆய்வு.

வேலை வாய்ப்புப் பணிகளின் ஆராய்ச்சி, பயிற்சிக்கான மத்திய நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் ஆய்வு களின் களப்பணியும் ஒருங்கிணைக்கப்பட்டது :—

நீண்ட நாட்களாக நிலுவையிலுள்ள காலியிடங்களுக்கான காரணங்களும் அவைகளைத் தீர்வு காண்பதற்கான வழிவகை களும் ;

கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநிலக் குழுவின் கீழ்க்காணும் ஆய்வின் களப்பணிகளும் ஒருங்கிணைக்கப் பட்டன ;

தருமபுரி மற்றும் வட ஆற்காடு மாவட்ட வேலை வாய்ப் பகங்களில் 1974, 1975, 1976 ஆம் ஆண்டுகளில் பள்ளியிறுதி வகுப்பு தேறி பதிவு செய்துள்ள அரிசனங்கள், பழங்குடி வகுப் பினரின் வேலை நிலைமை பற்றிய ஆய்வு.

## 10. மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் பிரிவு.

வாழ்க்கைத் தொழில் தகவல் பிரிவு, தன் பணியான வாழ்க்கைத் தொழில் முறை ஆராய்ச்சி, பகுப்பாய்வு, வாழ்க்கை தொழில் குறித்த சிற்றேடுகளைத் தயாரித்தல், திருத்தியமைத்தல், புதுடில்லி வேலைவாய்ப்புப் பயிற்சி தலைமை

இயக்குநர் அலுவலகத்திடமிருந்து வரப்பெற்ற வாழ்க்கை தொழில் வழிகாட்டி கையேடுகளின் வெளியீடுகளையும் வெளியிடப்பட்ட சிற்றேடுகளையும் பொது நூலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் போன்றவைகளுக்கு அனுப்பி வைப்பதற்காகவும், கேட்பவர்களுக்கு விற்பனை செய்வதற்காகவும் வேண்டி சார் நிலை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தல் போன்ற நடவடிக்கை களில் ஈடுபட்டது. தமிழாக்கம் செய்யப்பட்ட வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி கையேடுகள் அச்சடிக்க அனுப்பப் பட்டன. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தலைமை இயக்குநர், புதுடில்லி அவர்கள் விரும்பியபடி சில வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி சிற்கேடுகளைத் திருத்தி அமைப்பதற்காக ''மில்லர் (மெட்டல்)'', ''ஆர்மெச்சர் ஒயின்டர்'' மற்றும் ''மெட்டலர்ஜிஸ்ட்'' முதலிய தொழில் சம்பந்தப்பட்ட சிற்றேடுகள் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டன. ''பாறை-துளையிடுபவர்'' மற்றும் ''அம்மை குத்துபவர்'' போன்ற தொழில்களுக்கான தகவல்களைத் திருத்தி அமைக்கும் வேலை முடிவுறும் நிலையில் இருந்தது. ''மில்லர்'' தொழில பற்றிய சிற்றேடு தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. பேருந்து போக்குவரத்துத் துறையில் தொழில் தகவல் சேக ரிப்பது குறித்த சிறப்பு ஆய்வுத் திட்டம் மேற் கொள்ளப் பட்டது. 1978—79 ஆண்டுக்கான வருங்கால திட்டங்களைப் பொறுத்தவரை மேற்சொன்ன நடவடிக்கைகளுடன் மாநிலம் முழுவதற்குமான தொழில் கல்வி பயிற்சி வசதிகள் பற்றி இன்றுள்ள விவரங்களை சேகரிக்கக் கருதப்பட்டுள்ளது.

## 11. இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர் பயிற்சிப்பிரிவு.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அலு வலகத்தின் வேலைவாய்ப்புப் பிரிவுடன் இணைந்துள்ள பணி யாளர் பயிற்சிப் பிரிவு, வேலைவாய்ப்புத் துறைப் பணியாளர் களுக்கு வேலைவாய்ப்பகக் கொள்கைகள் நடைமுறைகள் மற்றும் பொது அலுவலக நடைமுறைகளில் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை ஆற்றி வருகிறது. பணியாளர் பயிற்சி வகுப் புகள் நடத்தப்பட்டு அப்பயிற்சியில் தேர்ச்சி பெற்ற மேல் அலுவலர்களால் தேசிய வேலை வாய்ப்புப் பணி சம்பந்தப் பட்ட பொருள்கள் பற்றி எல்லாப் பாடங்களிலும் விரிவுரைகள் நடத்துவதன் மூலம் பணியாளர் பயிற்சி வகுப்புகள் நடத்தப் படுகின்றன. பணியாளர் பயிற்சிப் பிரிவால் 1—4—1977 முதல் 31—12—1977 முடிய ஐந்து பணியாளர் பயிற்சி வகுப் புகள் (இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மூன்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இரண்டும்) நடத்தப்பட்டன. இப்பயிற்சியின் மூலம் 36 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கும், 41 சார் நிலைப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

12. சென்னையிலுள்ள வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் பணிகள் :

இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு, பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வு அளிப்பதற்காக செயல்பட்டு வருகிறது. ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வுக்காக மண்டபத்தில் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றும் இராமநாதபுரத்தில் வழிகாட்டிக் குழு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

ஆய்வுக்காலத்தில் வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு தொடர்பான புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| விவரங்கள். | பர்மா அகதிகள். | ஸ்ரீலங்கா அகதிகள். |
|---|---|---|
| 1. அந்தக் காலத்தில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை. | 876 | 3,892 |
| 2. வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 140 | 185 |
| 3. 1977 மார்ச் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி வேலை வாய்ப்பிற்காக வேலை வாய்ப்பு அலுவலகங்களின் செயற் பதிவேட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை. | 2,385 | 10,951 |

இந்தப் பிரிவின் முயற்சியின் மூலமாக 327 அகதிகள், கைவினைஞர் பயிற்சிக்கான தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டனர். 20 அகதிகள் ரெய்ப்பூர் (மத்திய பிரதேசம்) மானு கேம்ப் தொழில் நுட்ப பயிற்சி நிலையத்தில் 1977 ஆகஸ்டிலிருந்து தொடங்கப்பட்ட வகுப்பில் கைவினைஞர் பயிற்சி பெற சேர்க்கப்பட்டனர். மீனவர் பயிற்சி நிலையங்களில் அகதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஐந்து இடங்களில் முறையே கடலூர் (5), தூத்துக்குடி (2), மண்டபம் (5) மற்றும் குளச்சல் (4) ஆகிய இடங்களில் உள்ள மீன்வளப் பயிற்சி நிலையங்களில் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு 16 அகதிகளைச் சேர்க்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்கத்தாவிலுள்ள பயிற்சிக் கப்பல் ''பத்ரா'' விலும் விசாகப்பட்டினத்திலுள்ள பயிற்சிக் கப்பல் ''மேகலா'' விலும் சேர்ந்து கப்பல் பயிற்சி பெறுவதற்காக 10 பர்மா அகதிகளிடமிருந்தும் 46 ஸ்ரீலங்கா அகதிகளிடமிருந்தும் பெறப்பட்ட

விண்ணப்பங்கள் கேப்டன்-சூப்பிரண்டிற்கு கடல் பயிற்சிக்கு முந்தைய பாடத்தில் மாலுமி பயிற்சி பெற பரிசீலிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இரண்டு அகதிகள் புனலூர் (கேரள மாநிலம்) அகதிகள் மறுவாழ்வு மலைத் தோட்ட நிறுவனத்தில் சுருக்கெழுத்து தட்டச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். கல்பாக்கத்தி லுள்ள சென்னை அணுசக்தி நிலையத்தில் 6 அகதிகள் தேர்ந் தெடுக்கப்பட்டு உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட் டுள்ளனர்.

## 13. உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியமும், உடல் ஊன முற்றோருக்கான திட்டங்களும்.

உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் கீழ்க்கண்ட பணிகளை ஆற்றுகிறது :—

தமிழ்நாட்டிலுள்ள ஊனமுற்றோர்களில் குறிப்பாக, கண் பார்வையற்றோர், காது கேளாதோர், முட நீக்கியல் சார்ந்த ஊனமுற்றோர், மனநோய்வாய்ப்பட்டோர், தொழுநோயி லிருந்து குணமாக்கப்பட்டோர் ஆகியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பிரச்சினையின் தன்மையையும், அளவையும் மதிப் பிட்டு அறிவது; ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளிக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துதல், ஊன முற்றோரை வேலைவாய்ப்பில் அமர்த்தும் முயற்சியில் வேலை வாய்ப்புத்துறைக்கு உதவுதல், ஊனமுற்றோர்க்கான தொண்டு நிலையங்கள் ஊனமுற்ற தனிப்பட்ட நபர்களும், அரசிடமிருந்து மான்யம், கடன் பெறுவதற்கு உதவிபுரிவது ; ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிலையங்களின் நிறுவனங்களின் செயல் முறைகளை ஒருங்கிணைப்பது.

1977 ஏப்ரல் மாதம் முதல் 1977 டிசம்பர் முடிய உடல் ஊனமுற்றோர்க்கான மாநில வாரியத்தின் நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| (அ) | தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்யப்பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை .. | 2,189 |
| (ஆ) | தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகங் களுக்கு அறிவிக்கப்பட்ட காலியிடங்களை நிரப்புவதற்காக பரிந்துரை செய்யப்பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை .. | 3,936 |

1978 மார்ச் 9]

(இ) சொந்தமாக தொழில் தொடங்குவதற்காக, நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிடம் மிருந்து கடன் உதவி பெற, உதவி பெற்ற ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை .. 67

(ஈ) வேலையில் அமர்த்தப்பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை .. .. .. .. .. 418

(உ) 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு தமிழ் நாட்டிலுள்ள வேலைவாய்ப்பகத்தின் செல்லுப் பதிவேட்டில் உள்ள வேலைக்காகப் பதிவு செய்துகொண்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை .. .. 9,820

(ஊ) தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழில்களில் பயிற்சி பெறுவதற்காக அனுமதிக்கப்பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை .. .. .. 139

(எ) புத்தகம் பைண்டிங் செய்யும் அரசுப் பிரிவில் புத்தகம் பைண்டிங் செய்யும் பயிற்சி பிரிவில் பயிற்சி பெற்ற ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை .. .. .. .. 32

(ஏ) தொழில் பழகுவோர் பயிற்சியில் அமர்த்தப் பட்ட ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை .. 21

(ஐ) சென்னை, மதுரை, கோவை மற்றும் தஞ்சை ஆகிய அரசு மருத்துவ மனைகளில் மேற் பார்வையாளர்களின் மூலம் செயற்கை உறுப்புகளையும் சாதனங்களையும் வழங்கு வதற்காக நிதியுதவி வழங்கப்பெற்ற ஊன முற்றோர்களின் எண்ணிக்கை .. .. 44

1977 ஆம் ஆண்டில், ஊனமுற்றோர்க்கு அதிகமான அளவில் வேலை அளித்ததற்காக விருது ஒன்றையும் உடல் ஊனமுற்ற திறமையான பணியாளர்களுக்கான 5 விருதுகளையும் தமிழக அரசு பெற முடிந்தது. இவ்விருதுகள் ஊனமுற்றோர் உலக நாள் விழாவின் போது இந்தியக் குடியரசுத் தலைவரால் தொழிலதிபர் களுக்கு—தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. மாநிலத்தில் உள்ள முக்கிய தொழிலதிபர்களுக்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்திற்கிணங்க, 21 கண்பார்வையற்றோர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். ஊனமுற்றோர் உலக நாள் விழாவை முன்னிட்டு எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளின் பயனாக 136 ஊனமுற்றவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

[1978 மார்ச் 9

## 14. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்து வதற்குத் தனிக் குழுவும் அதன் வளர்ச்சியும்.

இப்பிரிவு 1961 ஆம் ஆண்டு பயிற்சியாளர் சட்டத்தின் கீழ் உள்ள தொழில் பழகுவோர் திட்டத்தையும் விரிவாக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டு சட்டத்தின் தொழில் பழகுவோர் திட்டத்தையும் கவனிக்கிறது. பயிற்சியாளர் காலியிடங்களை பயிற்சிப் பிரிவு வகுத்து கிடைக்கப்பெற்ற விவரங்களை எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கும், பயிற்சித் தொழிலில் அமர்த்து வதற்காக அனுப்புகிறது. இதனால் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்களுக்கும் தொழில் பழகுவோர் ஆலோசகர்களுக்கு மிடையே ஒருங்கிணைப்பு உண்டாகிறது.

1977ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் அன்றுள்ளவாறும், 1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் அன்றுள்ளவாறும் தொழில் பழகுவோரை தொழிலில் அமர்த்திய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| கால அளவு. | அமைந்துள்ள பயிற்சி இடங்கள் | | | பயன்படுத்தப்பட்ட பயிற்சி இடங்கள். | | | எய்திய சதவீதம். |
|---|---|---|---|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1-4-1977 .. | 2,372 | 6,794 | 9,166 | 2,324 | 7,157 | 9,481 | 103% |
| 31-12-1977 .. .. | 2,460 | 7,027 | 9,487 | 2,330 | 7,351 | 9,681 | 103% |

[1978 மார்ச் 9

## 15. மாநில இயக்குநரகத்தில் உள்ள பொதுமக்கள் தொடர்பும் விளம்பரப் பிரிவுகளும்.

இந்த இயக்குநரகத்துடன் இணைக்கப்பட்ட விளம்பரப் பிரிவு இத்துறைக்கு தொடர்புடைய பல்வேறு விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. தொலைக்காட்சியில் ''பள்ளிப்படிப்பிற்குப் பின்'' என்பது பற்றிய கலந்துரையாடலில் விளம்பர அலுவலர்கள் பங்கேற்றனர். தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் டாக்குமெண்டரி படம் தயாரிப்பதற்கு ''விளக்கேற்றிய பாதை'' என்னும் சுருக்கம் தயாரிக்கப்பட்டது. ''வேலை தேடும் இளைஞர்களே! ''வேலை வாய்ப்பகங்களில் உங்கள் பொறுப்புகள் என்ன? '' என்னும் வெளியீட்டின் பிரதிகள் வேலைவாய்ப்பகங்களுக்கு வழங்கப்பட்டன. திருச்சி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் ''எல்லோர்க்கும் வேலை வாய்ப்பு'' மற்றும் ''அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்பு வசதிகள்'' என்பது பற்றி அகில இந்திய வானொலியில் பேசினார். சில்க் ஸ்கீரின் பிரிண்டிங் யூனிட் தயாரித்த ''உமது குற்றச்சாட்டு, சஞ்சலத்தைப்பற்றி இருப்பின் நேராக உள்ளே வரவும்'' என்ற சுவரொட்டி நகல்கள் வேலை வாய்ப்பகங்களுக்கு விளம்பரத்திற்காக அனுப்பப்பட்டன. தருமபுரி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் அகில இந்திய வானொலி இளைஞர்கள் நிகழ்ச்சியில் ''Jobs for the Millions'' என்னும் உரையில் நடுநிலையாளராக கலந்து கொண்டார்.

## 16. வேலை வாய்ப்பகச் சட்டத்தைச் செயல்படுத்துதல் (வேலை காலியாக உள்ள இடங்களைக் கட்டாயமாகத் தெரிவிக்கும்) சட்டம்., 1959.

1959ஆம் ஆண்டு வேலை வாய்ப்பகச் (வேலை காலியாக உள்ள இடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டமும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும், 1960ஆம் ஆண்டின் மத்தியில் செயலுக்கு வந்தன. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாள் அன்றுள்ளவாறு இச்சட்டத்தின் ஆய்வு வரம்பின்கீழ் மொத்தம் 10,450 நிறுவனங்கள் இருந்தன. இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் முடிந்த காலாண்டிலும், செப்டம்பரில் முடிந்த காலாண்டிலும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களிலும் அறிவித்து நிரப்பிய காலியிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| காலாண்டு முடிவு. | தெரிவிக்கப் பட்ட காலி இடங்கள். | நிரப்பப் பட்ட இடங்கள். |
|---|---|---|
| 30—6—1977 .. .. .. | 10,162 | 6,362 |
| 30—9—1977 .. .. .. | 9,160 | 5,570 |
| அக்டோபர் 1977 மற்றும் நவம்பர் 1977. | 5,448 | 3,894 |

1978 மார்ச் 9]

சட்டத்தின் விதித் துறைகளை மீறியதற்காக இதுவரை இந்த அறிக்கை ஆண்டில் எந்த நிறுவனத்தின் மீதும் வேலை வாய்ப்பகச் சட்டத்தின் (வேலை காலியாக உள்ள இடங்களை கட்டாயமாக அறிவித்தல்) விதித்துறைகளின் கீழ் வழக்கு ஏதும் தொடரப் படவில்லை.

17. திட்டத்தின் கீழ் உள்ள வேலைவாய்ப்புப் பணித் திட்டங்கள்.

1977–78ஆம் ஆண்டு வரை உள்ள திட்ட காலத்தில் கீழ் காணும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன :—

(1) மாவட்டங்களில் 1959-ம் ஆண்டு வேலை வாய்ப்பகச் (வேலை காலியாக உள்ள இடங்களை கட்டாயமாக அறிவித்தல்) சட்டத்தை செயற்படுத்துவதற்கான பணியாளர் அமைப்பு.

(2) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களை வலுப்படுத்து தலும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்பவர் களை நியமித்தலும்.

(3) மாவட்டங்களில் துணை வேலை வாய்ப்பு அலுவலகங் களில் பணியாளர்களை அதிகப்படுத்துதல்.

(4) முக்கிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரிகள் பதவிகள் ஆறினை உதவி இயக்குநர்கள் பதவிகளாக உயர்த்துதல்.

(5) மாநில இயக்குநரகத்தில் பொதுமக்கள் தொடர்பு, விளம்பரப் பிரிவு ஆகியவற்றை ஏற்படுத்தல்.

(6) தொழில் நுட்ப வகை அலுவல்களைக் கவனிப்பதற் காகவென்றே சென்னை மாநகரில் ஒரு வேலை வாய்ப்பு அலுவல கத்தை ஏற்படுத்தல்.

(7) வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ள 32 இளநிலை உதவியாளர்கள் பதவிகளை உதவியாளர்கள் பதவிகளாக உயர்த்து தல்.

(8) மாவட்டங்களில் தற்போதுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகளில் கூடுதல் பணியாளர்களை நியமித்தல்.

(9) சங்கராபுரம் மற்றும் ஆலங்காயம் ஆகிய இடங்களில் பழங்குடியினருக்காக துணை வேலை வாய்ப்பகங்கள், ஆய்வுப் பிரிவுகள் ஏற்படுத்தல்.

(10) மாநில இயக்குநரகத்தில் ஆட்படை ஊற்ற ஆராய்ச்சி சிப் பிரிவு ஏற்படுத்தல்.

(11) வேலைவாய்ப்பு துணை இயக்குநர் பதவியுடன், மாநில இயக்ககத்தில் கூடுதல் பணியாளர்களை ஏற்படுத்தல்.

[1978 மார்ச் 9

18. இத்துறையின் வருங்காலத் திட்டங்கள்.

கிராமப்புற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு திருச்சி மாவட்டத்திலுள்ள கரூர் நகரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் 1978-79-ம் ஆண்டில் நிறுவப்படும்.

ஊனமுற்றோர்களை வேலையில் அமர்த்துவதை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கான தகுந்த வேலைகளைச் குறிப்பிட்டு உதவுவதன் பொருட்டு திருச்சி, சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் பதவி ஏற்படுத்தப்படும்.

1978-79-ம் ஆண்டில் பார்வையற்றோருக்கு ''பணிப் பட்டறை—நெசவுக் கூட்டுறவுச் சங்கம்'' ஒன்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இச்செயற் குறிப்பின்கீழ் ஆண்டுக்கு 60 விழியிழந்தோர்கள் வீதம் 120 பேருக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளிக்க வகை செய்யப்படும். இப்பயிற்சிக்கு பிறகு, பயிற்சி பெற்ற 120 விழியிழந்தோர்களை உறுப்பினராகக் கொண்டு ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படும். ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்தின் நிதியிலிருந்து இலவச மானியமாக 120 விழியிழந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். மொத்தத் தொகையாகிய ரூ. 12,000-ஐ மூலதனமாகக் கொண்டு இக் கூட்டுறவுச் சங்கம் செயல்படும்.

1978-ம் ஆண்டில் ஊனமுற்றோர் உலக நாள் விழா சென்னையில் கொண்டாடப்பட்டது. 1978-ம் ஆண்டில் ஊனமுற்றவர்களை வேலையில் அமர்த்த சிறப்பு முயற்சிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் இயன்ற அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் ஊனமுற்றவர்கள் வேலையில் அமர்த்தப்படுவர். உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்திற்கு அரசு அனுமதித்த தொகையாகிய ரூ. 50,000-ஐ உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக்கான பல்வேறு திட்டங்களுக்காகச் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

தொழில் வளர்ச்சியடைவதற்கு தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றனர். இத் தேவைகளைப் பூர்த்தி செய்ய. இந்தியாவின் பல பகுதிகளிலும் முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டன. பயிற்சியைச் செம்மையாக அளிப்பதற்கு இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணிமனைச் சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. நாட்டில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்திற்கு இந்த தொழிற் பயிற்சி நிலையங்கள் முதுகெலும்

1978 மார்ச் 9]

பாக உள்ளன. ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையமும் முதல்வரின் பொறுப்பில் இயங்குகின்றன. மாநில அளவில், எல்லாத் தொழிற் பயிற்சி நிலையங்களும் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன.

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ், கீழ்க்கண்டவகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :—

(1) தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் கல்விப் பயிற்சி.

(2) 1961-ம் ஆண்டு வேலை பயில்லுவோர் சட்டத்தின் கீழ் வேலைபயிலும் பயிற்சி.

(3) தொழிற்சாலை ஊழியர்களுக்காக மாலை நேர வகுப்புகள்.

(4) தொழிற் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதிக்கோவையின்கீழ் மானிய உதவி பெறும் தனியார் தொழிற் பள்ளிகளில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(5) வேலையிழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்கு தொழிற் பயிற்சி நிலையங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட தொழில்களில் (குறுகிய நேரத்) தனிப் பயிற்சித் திட்டம்.

## தொழிற் பயிற்சி நிலையங்கள்.

இப்போது ஆண், பெண் இருபாலாரும் பயிலத்தக்க தொழிற் பயிற்சி நிறுவனம் முப்பதும் பெண்களுக்கு எனத் தனியாக ஒரு பயிற்சி நிலையமும் இயங்கி வருகின்றன. இந் நிலையங்களில் 12,200 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 29 பொறியியல் பிரிவுகளிலும் 6 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதில் 16 தொழிற் பயிற்சியின் கால அளவு ஒரு ஆண்டாகவும், 19 தொழிற் பயிற்சியின் கால அளவு இரண்டு ஆண்டுகளாகவும் உள்ளன. நிலையப் பயிற்சியின் இறுதியில் மாணவர்கள் அகில இந்திய தொழில் தேர்வினை எழுதுகின்றனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு தேசியத் தொழில் சான்றிதழ் வழங்கப்படுகிறது. தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒவ்வொரு ஆண்டும் கண்டிப்பான முறையில் ஒதுக்கீட்டு விதியின் கீழ் மாணவர்கள் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய விழுக்காடு விவரங்களும் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அனு

மதிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் விழுக்காடு விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.—

| | | ஒதுக்கீடு (சதவீதத்தில்). | பயிற்சியில் சேர்க்கப் பட்டவர்கள். |
|---|---|---|---|
| தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர். | .. | 18 | 21.15 |
| பிற்பட்ட வகுப்பினர் | .. | 31 | 68.82 |
| அகதிகள் | .. | 5 | 5.82 |

உடல் ஊனமுற்றோருக்கென தனியாக ஒதுக்கீடுமுறை இல்லையெனினும் பயிற்சி பெறத் தகுதியுடைய 139 மாணவர்கள் (உடல் ஊனமுற்றோர்) பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டனர்.

கம்மியர் (பொது மின்னணுவியல்) துறையில் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் பெருகிவரும் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய, 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் 16 பயிற்சியாளர்களை கொண்ட தொழிற் பயிற்சிப் பிரிவு ஒன்று அடையாறு மின் அணு தொகுதி வளாகத்தில் தனியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறந்த முறையில் மேற்பார்வையிட்டு கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்துவதன் மூலம் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியின் திறனை செம்மையாக்க 1978–79ஆம் ஆண்டில் திருச்சி, மதுரை, கோயம்புத்தூரில் மூன்று வட்டார துணை இயக்குநர் அலுவலகங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. தொழில்களை பல திறப்படுத்துதல் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் கம்மியர் (குளிர்பதனம்—தட்ப, வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) பயிற்சிப் பிரிவு ஒன்று தொடங்கப்படக் கருதப்பட்டுள்ளது. பெரும்பான்மை தேவையும் வேலைவாய்ப்பும் கொண்ட தொழிலில் பயிற்சி அளிப்பதே இதன் உட்கருத்தாகும். 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1-ம் நாளிலிருந்து பொருத்துபவர், மின்கம்பியாள் பற்ற வைப்பவர், முதலிய பயிற்சிப் பிரிவுகளில் ஏற்கனவே குறைக்கப்பட்ட இடங்களில் 500 இடங்களை மீண்டும் கொண்டு வர கருதப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் மிகச் சிறப்பானதொன்றாகுமென்பது, இதுவரை நடைபெற்ற 13 அனைத்திந்திய ஆண்டுத் திறனாய்வுப் போட்டிகளில் இம் மாநிலம் 6 தடவை முதன்மை இடத்தைப் பெற்றுள்ளதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பதின்மூன்றாவது அனைத்திந்திய ஆண்டுத் திறனாய்வுப் போட்டி டிசம்பர் திங்களில் நடைபெற்றது. இப் போட்டியில் 7 தொழிற் பிரிவுகளில் நமது மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இத்திறனாய்வுப் போட்டியின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

1978 மார்ச் 9]

நுண்ணிய கருவிகளை அதிகமாகப் பயன்படுத்துவதையும் தொழிலியலில் அடைந்து வரும் மாற்றத்தையும் கருத்தில் கொண்டு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்/ அனைத்து நாடுகள் தொழிலாளர் ஸ்தாபனம் ஆகியவற்றின் உதவியுடன் அம்பத்தூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் உயர்நிலை தொழில் பழகுவோர் பயிற்சிப் பாடப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ், இந்தியத் தர நிர்ணயம், பொறியியல் வரை படங்கள் படித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து இப்பயிற்சிக்கென அனுப்பப்பட்ட 82 தொழிலாளர்கள் (முதற் கட்டத்தில் 31 பேரும் இரண்டாம் கட்டத்தில் 51 பேரும்) இங்கு இத் தொழிற் பயிற்சிப் பிரிவில் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் பற்ற வைப்பது, மின்சார சாதனங்கள் பராமரிப்பு கருவி, அச்சுவார்ப்பது போன்ற மூன்று தொழிற் பிரிவுகளில் உயர் நிலை பயிற்சித் திட்டம் மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

## 2. வேலை பயில்வோர் சட்டம்.

தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்ய கைவினைத் தொழிலில் போதிய அளவுக்குப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தேசிய நிலையில் அவர்களது மொத்தத் திறமையை வளர்ப்பதும் இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வசதியை முறைப்படுத்தி செயல்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளுமாகும். தொழில் பயில்வோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக புதிய நபர்களையோ அல்லது தொழிற் பயிற்சி நிறுவனத்தில் தேறிய பயிற்சியாளர்களையோ தெரிந்தெடுக்க தொழிலதிபர்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது. தொழில் பயிற்சி நிலையங்களில் தொழில் பழகுவோர் பயிற்சியின்போது பாட போதனையும் அளிக்கப்படுகிறது. இதைப் போலவே, இத்தகைய வசதிகள் இல்லாத சிறு நிறுவனங்களில் பயிற்சி பெற நேரடியாகச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு அடிப்படை பயிற்சியையும் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அளித்து வருகிறது.

தற்சமயம், 216 தொழிற்சாலைகள் இச் சட்டத்திற்குட்பட்டவையாகும். தொழில் பயில்வோருக்காக 103 தொழில்கள் பயிற்சிக்கென குறிப்பிடப்பட்டுள்ளன. 1,304 தொழில் நிறுவனங்கள், 1961ஆம் ஆண்டு வேலை பயில்வோர் சட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. 1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளன்றுள்ளபடி 9,681 வேலைபயில்வோர் தனியார் நிறுவனங்களிலும் மாநில அரசுத் துறை நிறுவனங்களிலும் பயிற்சி பெற்று வருகின்றனர். எல்லா வேலை பயில்வோருக்கும் பயிற்சிக்கால அளவைப் பொறுத்து தலா 130 முதல் 200 வரை மாத பயிற்சி உதவித் தொகையாக அந்தந்த நிறுவனத் தொழிலதிபர்கள் அளித்து வருகின்றனர்.

[1978 மார்ச் 9

3. தொழிற்சாலைகளில் பணி புரியும் பணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்.

தொழிற்சாலைகளில் பணி புரியும் பணியாளர்களுக்குத் தொழில் துறை அறிவினை மேம்படுத்தி அதன் மூலம் அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது இத் திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். ஆகையால், தொழிற்சாலைகள் அதிமாகயிருக்கக்கூடிய இடங்களில் இத் திட்டம் தொழிற் பயிற்சி நிலையங்களின் வாயிலாகச் செயல் படுத்தப்படுகிறது. அதன்படி, கிண்டி, வடசென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட மொத்த பயிற்சி இடங்கள் 1,050 ஆகும்.

4. உதவி பெறும் தொழிற் பள்ளிகள்.

தற்சமயம், வேலைவாய்ப்பு பயிற்சித் துறையினால் பிறப்பிக்கப்பட்ட தொழிற் பள்ளிகள் ஒழுங்குமுறை விதிகள் கோவையின் கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 65 தொழிற் பள்ளிகள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்தப் பள்ளிகள் தச்சுத்தொழில், கருமார் தொழில், பொருத்துபவர், பற்றவைப்பவர், பூவேலை, பின்னல் வேலை, துணி வெட்டுதல்—தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றன. இந்தப் பள்ளிகளில் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகை, 4,500. தற்போது 4,200 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயிற்சி பெறுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்த, எல்லாத் தொழில்களுக்கும் பொதுவான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு, எல்லா தொழில் நிலையங்களுக்கும் அறிமுகப்படுத்தப் பட்டது. 1975ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் பொதுவான இறுதி ஆண்டுத் தேர்வும் நடத்தப் பட்டு வருகிறது. தொழிற் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதிக் கோவையின் விதித்துறைகளின்படி மானியம் பெற இப்பள்ளிகள் தகுதி பெறுகின்றன.

5. சிறப்புத் திட்டங்கள்.

வேலையிழந்த பொற்கொல்லர்கள், மாதிரி அமைப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் ஆகியவர்களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழிநுட்பப் பயிற்சிகளை அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளுமாகும். சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு கருமார் தொழில், பொருத்துநர், செம்பு வேலைப்பாடு, தகர வேலைப்பாடு ஆகிய இரட்டை தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

1978 மார்ச் 9]

ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூபாய் 10 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 160 ஆகும்.

''கோரிக்கை 57—பல்வகை மூலதனச் செலவு 495-A இதர சமூக சமுதாயப் பணிகள் மீதான மூலதன செலவு-ab வேலை வாய்ப்பு''. கைவினைஞர் பயிற்சித் திட்டம் தொடர்பான மூலதனச் செலவு குறித்து மானியக் கோரிக்கை ''மானியக் கோரிக்கை 57—பல்வகை மூலதனச் செலவு'' என்ற தலைப் பின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் கீழ்க்காணும் துணைத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 22.82 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(i) <u>சிறப்புத் திட்டத்தின்கீழ் (பகுதி நேரம்) கருவி மற்றும் தளவாடங்கள் வாங்குதல்.</u>— வேலை இழந்த பொற் கொல்லர்களுக்கும், மாதிரி அமைப்புச் செய்பவர்களுக்கும், கைத் தறி நெசவாளர்களுக்கும் உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சேலம், திருச்சி, பேட்டை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தும் நோக்குடன் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக இந்த நிதி ஆண்டில் ரூ. 1,000 அடையாள நிதியாக ஒதுக்கப் பட்டுள்ளது. இச்செலவினம் திட்டத்தில் சேராத டணிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

(ii) <u>தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் விடுதிக் கட்டிடம் கட்டுதல்.</u>— இம்மாநிலத்தில் உள்ள 24 தொழிற்பயிற்சி நிலையங் களில் நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. இம் மாணவர் விடுதிகளின் பராமரிப்புக் கென்று நடப்பு நிதியாண்டில் ரூபாய் 2,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) <u>தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.</u>— தொழில் பழகுவோர் ஒரு சிலருக்குப் பயிற்சியளிப்பது 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்கீழ் தொழில் நிறுவனத்தின் கடமையாகும். தற்போது பொறியியல் தொழில் நிறுவனங்கள், உணவுக் காப்பக நிறுவனங்கள், அச்சுத்தொழில் நிறுவனங்கள்

போன்ற 216 தொழில்கள், இச்சட்டத்தின்கீழ் வருகின்றன. பொருத்துநர், பற்றவைப்போர் மற்றும் வரை பட வரைவாளர் போன்ற 103 தொழில் பிரிவுகளில் தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதிலுமாக 1,304 தொழில் நிறுவனங்கள் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவைகள், தனியார், பொது மற்றும் கூட்டுப் பகுதி நிறுவனங்கள் ஆகும். மேற்கூறிய தொழில் நிறுவனங்களில் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் கணக்குப்படி பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 9,681 ஆகும். இத்தொழில் நிறுவனங்கள் இந்த பழகுநர்களுக்கு செய்முறை பயிற்சியை அளித்து வருகின்றன. இருந்தபோதிலும் இந்நிறுவனங்களில் இந்தப் பயிற்சியாளர்களுக்கு அடிப்படை நூலறிவு மற்றும் செய் முறைப் பயிற்சி அளிக்கப் போதிய வசதிகள் இல்லை. எனவே, கிண்டி மற்றும் மதுரையில் உள்ள இருதொழிற்பயிற்சி நிலையங்களில் அடிப்படைப் பயிற்சி இத்தொழில் பழகுநர்களுக்கு அளிக்கப்படுகின்றது. கிண்டி தொழில் பயிற்சி நிலையத்திலுள்ள அடிப்படை பயிற்சி நிலையத்திற்குக் கருவிகள் வாங்குவதற்காக 1978-79 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) தொழில்களை பல திறப்படுத்துதல்.— இத்திட்டத்தின் கீழ் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களாகக் கருதப்படுகின்ற நடைமுறையிலுள்ள தச்சர், அச்சுவார்ப்போர் மற்றும் கருமார் போன்ற தொழில் பிரிவுகள் முற்றிலுமாக நீக்கப்பட்டும் அல்லது இத்தொழில் பிரிவுகளிலுள்ள இருக்கைகள் குறைக்கப்பட்டும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களாகக் கருதப்படும் கம்மியர் (பொது மின்னணுவியல்) இயந்திரப்பட வரைவாளர் மற்றும் கம்மியர் (குளிர்ப்பதனம், தட்ப-வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) போன்ற புதிய தொழில் பிரிவுகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்காக ரூ. 5·00 இலட்சமும் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 7,000-மும் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விரு இனங்கள் சேர்த்து ரூ. 5·07 இலட்சம் ஆகும்.

(v) புதிய சாதனங்கள் வாங்குதல். — (அ) மத்திய அரசினால் பல்வேறுபட்ட தொழில் பிரிவுகளுக்கான கருவிகள் மற்றும் தளவாடங்கள் தரப்பட்டியலில் செய்யப்பட்டுள்ள திருத்தத்தின் விளைவாக கம்மியர் (மோட்டார் வாகனங்கள்), கம்மியர் (குளிர்ப்பதனம், தட்ப-வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) மற்றும் கம்மியர் (கருவிகள்) போன்ற தொழில்களுக்கு கூடுதலாக கருவிகளும், தளவாடங்களும் வாங்கப்பட இருக்கின்றன. கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்காக இந்நடப்பு நிதியாண்டில் ரூபாய் 5·61 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 9]

(ஆ) கம்மியர் (பொது மின்னணுவியல்) தொழிலில் பயிற்சி அளிப்பதற்காக தொழிற் பயிற்சி நிலையத்தின் ஒரு பிரிவு அடையாறு மின்னணுவியல் காம்ப்ளெக்ஸில் 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் துவக்கப்பட்டது. சுற்றுப்புற வசதிகளைப் பயிற்சியாளர்கள் பயன்படுத்த வசதி செய்யும் நோக்குடன் இப்பயிற்சிக் கூடம் அடையாறு மின்னணுவியல் காம்ப்ளெக்ஸில் அமைக்கப் பட்டுள்ளது. இதற்கான கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கென நடப்பு நிதியாண்டில் ரூபாய் 1·5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) மேற்கூறப்பட்ட இரு கணக்கு உட்தலைப்புகளையும் ஒருங்கிணைத்து (ஜே. கே. கைவினைஞர் பயிற்சி) என்னும் ஒரே உட்தலைப்பின் கீழ் ரூபாய் 7·11 இலட்சம் நடப்பு நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(vi) <u>தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்துதல்.</u>— உயர் மின் அழுத்தம், தொழிற்சாலைகளின் கட்டுமானம், பராமரிப்பு தொழிற்கூட வகுப்பறைகள் கட்டுமானம், சிற்றுண்டிச்சாலை மற்றும் இதர பல்வகை பராமரிப்புப் பணிக்கென 31 தொழில் பயிற்சி நிலையங்களின் தேவைகளின் அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் ரூபாய் 4·56 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்காக ரூபாய் 2·80 இலட்சம் J.G. எனும் உட்தலைப்பின் கீழ் 1978-79-ம் நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

(vi) <u>தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களைக் காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்.</u>— 1977ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து, ஏற்கெனவே தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தேவைக்கு ஏற்ப மேலும் நுணுக்கமும் புதுமையும் வாய்ந்த தொழிற் கல்வி வகுப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு முதல் படியாக அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் " இந்தியதர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைபட " ஆய்வு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த வகுப்பின் பயிற்சிக் காலம் மூன்று முதல் நான்கு வாரங்கள் ஆகும். 1977ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முடிய பல்வேறு தொழில் நிறுவனங்களிலிருந்து 82 பயிற்சியாளர்கள் (முதற் கட்டத்தில் 31 பேரும், இரண்டாம் கட்டத்தில் 51 பேரும்) பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கென நடப்பு நிதியாண்டில் ரூபாய் 2·25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 9

## இணைப்பு III.

[677-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

## தமிழ் நாட்டில் வீட்டு வசதி—1978-79.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

வீட்டு வசதிப் பற்றுக்குறையை தீர்த்துவைக்க மும்முரமான முயற்சி செய்வது தமிழ்நாடு அரசின் வளர்ச்சிப் பணிகளில் ஒன்றாக இருந்து வருகிறது. தமிழ் நாடு அரசு முதன் முதலில் முக்கியமாக கூட்டுறவு நிறுவனங்களுக்கே வீடுகள் கட்டுவதற்காக நிதி உதவி அளித்தது. 1945 ஆம் ஆண்டில் மாநகர வளர்ச்சிப் பொறுப்புக் கழகம் அமைக்கப்பட்டது. இந்தக் கழகம், அரசு தந்த நிதி உதவியுடன் நிலம் மேம்படுத்துதல், வீடுகள் கட்டுதல் ஆகிய பணிகளை நிறைவேற்றியது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் ஆகியவைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்பணித் திட்டங்கள் இரண்டாவது, மூன்றாவது திட்ட காலங்களிலேதான் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டன. இக்கால அளவுகளில் குடிசைப்பகுதி வளர்ச்சி—குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம், மலைத் தோட்டத் தொழிலாளர் திட்டம், கிராம வீட்டு வசதித் திட்டம் போன்ற பல வீட்டு வசதித் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. வீட்டு வசதித் திட்டம் சென்னை மாநகரில் மட்டுமின்றி, மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென கருதப்பட்டதால் சென்னையில் ஒரு பிரிவும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டு வசதிப் பிரிவாக மூன்று வீட்டு வசதிப் பிரிவுகளுடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்டது. தற்போது வேலூர், சேலம், ஈரோடு ஆகிய இடங்களிலும் வீட்டு வசதிப் பிரிவுகள் உள்ளன. இவ்வாரியம் சட்டப்படி இணைந்த பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் பங்கேற்கும் கழகமாகும். இது மாநிலத்தில் வீட்டு வசதி நடவடிக்கைகளைக் குறித்து திட்டமிட்டு அவற்றை ஒருங்கிணைத்து, வீட்டு வசதித் திட்டங்களை மிக விரைந்து திறமையுடன் செயல்படுத்தப்படுவதற்கு உறுதி செய்கிறது. முன்னர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கூட்டுறவு வீட்டு வசதிப் பிரிவு 1972 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியத் தலைவர் கட்டுப்பாட்டின்கீழ் அமைக்கப்பட்டு, வீட்டு வசதி வாரியத்தின் தலைவரே, அலுவலால், கூட்டுறவுச் சங்கப் பதிவாளராகவும் உள்ளார். மேற் கூறிய திட்டங்களைத் தவிர, நடுத்தர வருமானம் உள்ளோர் வீட்டு வசதித் திட்டம், நிலத்தைக் கையகப் படுத்தி வீட்டு மனை மேம்படுத்தும் திட்டம், தமிழ்நாடு அரசு அலுவலர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டம் போன்ற பல

1978 மார்ச் 9]

திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இந்தத் திட்டங்களுக்கான நிதியுதவி இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. 1970ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுல் சென்னை மாநகரில் குடிசை மாற்றும் பணி நடைபெறுகிறது.

2. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாயத்தில், பொருளாதார வகையில் நலிந்த பிரிவினருக்கு வீட்டு வசதி அளிக்கும் பணியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு, குறைந்த செலவிலான வீட்டு வசதி சிறப்புத் திட்டம், குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம், குடிசைப்பகுதி சுற்றுப்புற மேம்பாடு திட்டம் ஆகியவைகளுக்குத் தனி சிறப்பு அளிக்கப்பட்டன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் தரும் கடனைப்பெற்று மிகச் சிறந்த அளவில் பயன்படுத்திக் கொண்டுள்ளது. அரசு அளிக்கும் கடன் தொகைகளைத் தவிர, வாரியம் பொதுக் கடன்கள் மூலமாகவும், பொது மக்களிடமிருந்து குறித்த கால வைப்புத் தொகை மூலமாகவும் நிதி ஆதாரங்களைத் திரட்டுகிறது. சமுதாயத்தில் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்கு வீட்டு வசதி அளிப்பது வலியுறுத்தப்படுகிறது.

3. 1978-79 ஆம் ஆண்டுக்காக உருவாக்கப்பட்டுள்ள வீட்டு வசதித் திட்டம் ஒவ்வொன்றையும் குறித்து அடுத்து வரும் பத்திகளில் விவரிக்கப்படுகிறது.

ஊரக வீட்டு வசதித் திட்டம்.

4. ஊரக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 50 சங்கங்கள் அமைக்கப்படும் எனவும், அதற்காக ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து வீட்டு வசதித் திட்டங்களுக்காக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் பெறும் ரூ. 400 இலட்சம் கடனிலிருந்து, ரூ. 200 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து கடன்கள் வழங்கப்படுமெனவும், 1977ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25ஆம் நாள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் அரசு அறிவித்தது. இந்தப் பணி மிக விரைவாக ஆரம்பிக்கப்பட்டு, 1976-77 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பத்து சங்கங்களைத் தவிர, இது வரை 50 ஊரக வீட்டு வசதிச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு பணி செய்யத் தொடங்கியுள்ளன. இந்தச் சங்கங்களில் சிறப்பு அதிகாரிகளாக பணி புரிய 60 கூட்டுறவுச் சங்க முதுநிலை ஆய்வாளர்களை, அரசின் செலவில் இரண்டாண்டுகளுக்கு பணியமர்த்த ஒப்புதல் அளித்து அரசாணை இடப்பட்டுள்ளது. (வட்ட அளவில் 10 ஊரக வீட்டு வசதிச் சங்கங்கள், கோட்ட அளவில் 50 ஊரக வீட்டு வசதிச் சங்கங்கள்.)

5. இந்தத் திட்டத்தினுல் பயனடைவோர்கள் பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினரான கிராம மக்கள் ஆவர். ஏற்கனவே, இச்சங்கங்களில் 15,000 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு

உள்ளனர். இத்திட்டத்தின் கீழ் வழங்கும் கடன் தொகையில் 25 சதவீதம் அரிசனங்களுக்காக, தேவையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசன உறுப்பினர்கள் தரவேண்டிய முழு வட்டித் தொகையினையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. நடப்பு கூட்டுறவு ஆண்டு முடிவதற்குள் (30—6—1978) 60 ஊரக வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக, ரூ. 400 இலட்சம் அளவிற்கு பத்தாயிரம் உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் நிதியிலிருந்து ரூ. 300 இலட்சம் ஒதுக்கீடு செய்து, 15,000 உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கலாம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்றும் பணி.

6. 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினை அரசு அமைத்து, அதனிடம் சென்னை மாநகரில் உள்ள குடிசைப்பகுதிகளை மாற்றி அமைக்கும் பணியை ஒப்படைத்தது. இப்பணி இதுவரையிலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வந்தது. "தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு/நீக்கம்) சட்டம், 1971" என்ற சட்டத்தினை இயற்றி, குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சட்ட பூர்வமான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. வெளியூர்களில் இக்குடிசை மாற்றும் மற்றும் மேம்படுத்தும் திட்டங்களை வீட்டு வசதி வாரியமே தொடர்ந்து செயல்படுத்தும்.

7. குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டதும், உடனடியாக குடிசைவாழ் மக்களின் பிரச்சினைகளின் அளவினை கணக்கிடும் பொருட்டு, சமூகப் பொருளாதார ஆய்வுப் பணி ஒன்று நடத்தப்பட்டது. சென்னை மாநகரில் (7,37,531 பேர் மக்கட் தொகை), 1,63,804 குடும்பங் கொண்ட 1,202 குடிசைப் பகுதிகள் உள்ளதாக ஆய்வுப்பணி புலப்படுத்தியது. ஆக, நடைமுறையில், சென்னை மாநகரத்தின் மக்கட் தொகையில், ஏறக்குறைய, மூன்றில் ஒரு பங்கு குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றனர். முன்னணி ஆய்வின் அடிப்படையில், மிகவும் மோசமான குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் குறுகிய காலத் திட்டம் ஒன்றை வாரியம் வகுத்து குடிசைப்பகுதிகளில் வேலையைத் தொடங்கியது.

8. குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கும் முன்பு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 7,384 குடியிருப்புக்களை கட்டி முடித்திருந்தது. இக்குடியிருப்புக்கள் குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவைகளில் முடிவடையாமலிருந்த மீதிப் பணிகளை குடிசைப்பகுதி மாற்று

1978 மார்ச் 9]

வாரியம் செய்து முடித்தது. குடிசைப்பகுதி மாற்று வாரியம் துவக்கப்பட்ட 1970-ம் ஆண்டிலிருந்து, 1978 மார்ச் திங்கள் 31-ந் தேதி முடிய இவ்வாரியம் ரூ. 2,480 லட்சம் செலவில் 23,360 குடியிருப்புகளை கட்டியிருக்கும். இதில் 1977-78-ம் ஆண்டில் ரூ. 322 லட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் 2,422 குடியிருப்புகளும் அடங்கும்.

9. குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் 1978-79-ம் ஆண்டின் செயல் திட்டம் குடியிருப்புகளின் எண்ணிக்கையிலும் மற்றும் அப்பணிக்கான செலவினத்திலும் ஏற்றம் கண்டிருக்கிறது. இச் செயல் திட்டத்தின் நோக்கம் சுமார் 3,500 குடியிருப்புகளை கட்டி முடிக்க வேண்டும் என்பது. இதற்கான செலவினம் ரூ. 375 லட்சமாக இருக்கும். இச்செலவினம், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறும் ரூ. 220 லட்சத்தையும் அரசால் மானியமாக, 1978-79ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளபடி, தரப்படும் ரூ. 155 லட்சத்தையும் கொண்டது.

10 1978-79ஆம் ஆண்டிற்கான குடிசைப்பகுதி மாற்று திட்டத்திற்கான மொத்த செலவினத்தில், பெரும்பகுதி (ரூ 220 லட்சம்) வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்படும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. மொத்தமாக, வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், 4 380 குடியிருப்புகளைக் கட்டுவதற்கான 16 குடிசைப்பகுதி மாற்றுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இக்கழகத்தின் மேற்கண்ட திட்டங்களுக்கான நிதியுதவி 5 சதவீதம் வட்டியுடன் 10 ஆண்டு காலங்களில் திருப்பிச் செலுத்தப்படும் கடனுதவியாக இருக்கும்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

## சென்னை மாநகரில் விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாடு திட்டம்.

11. 1976-77ஆம் ஆண்டில் இருந்து குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடிப்படை வசதிகள் அறவேயில்லாத அல்லது போதிய அளவுக்கு இல்லாத சென்னை மாநகர குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடி நீர், தெரு விளக்குகள், பொதுக் கழிப்பிடங்கள் முதலியன செய்து கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். அரசு, அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்களிலுள்ள 125 குடிசைப் பகுதிகளில் (இப்பகுதிகளில் முந்தைய குடிசைப்பகுதி சுற்றுப்புற

மேம்பாடு திட்டத்தின் கீழ் சில வசதிகள் செய்து தரப்பட்டன) உள்ள 33,248 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் இந்தத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்தின் அளவுக்கு வசதிகள் செய்து தரப்படும். இத்திட்டத்திற்காக 1977-78ஆம் நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 100 லட்சம்.

12. 1978-79-ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 100 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் அரசுக்கும், அதனைச் சார்ந்த நிறுவனங்களுக்கும் சொந்தமான நிலங்களிலுள்ள குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து தரும் பணியினை தொடர்வதோடு, சென்னை மாநகரில் தனியார் நிலங்களிலுள்ள 319 குடிசைப் பகுதிகளிலும் இத் திட்டம் இவ்வாண்டு செயல் படுத்தப்படும்.

## உலக வங்கி திட்டத்தின்கீழ் உதவி பெறும் சென்னை மாநகர குடிசைப் பகுதி மேம்பாடு திட்டம்.

13. உலக வங்கியின் உதவி பெற்ற ''சென்னைப் பெரு நகர வளர்ச்சித் திட்டத்தில்'' ஒரு முக்கியமான பகுதி குடிசைப்பகுதி மேம்பாடாகும். இத்திட்டத்தின்கீழ் கீழே குறிக்கப்பட்டுள்ள வசதிகள் செய்து தரப்படுகின்றன :

(அ) புதிய மேம்பாடு செய்யப்பட்ட சாலைகள், நடைபாதைகள், பாதாள சாக்கடை (வெள்ள நீர் மற்றும் கழிவு நீர் வடிகால்கள்);

(ஆ) பத்து குடும்பங்களுக்கு ஒரு பொதுக் குடிநீர்க்குழாய்கள் வீதம் குடிநீர் வழங்குதல் ;

(இ) பத்துக் குடும்பங்களுக்கு ஒரு பொதுக் கழிவிட அறை, ஒரு பொதுக் குளியலறை என்ற விகிதத்தில் வசதிகள் ;

(ஈ) சமுதாயக் கல்வி வசதிகள் ;

(உ) குடிசைத் தொழில் கேந்திரங்கள்.

14. (அ) முதல் (இ) வரை குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு, சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும், ரூ. 1,300 செலவாகும். குடிசைப்பகுதி மேம்பாட்டிற்கு ஆகும் செலவு, அந்தப் பகுதிகளிலிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டுமின்றி, அக்குடிசைப் பகுதியின் குடி தண்ணீர் மற்றும் பாதாளச் சாக்கடை குழாய்களின் அண்மையை பொறுத்திருக்கும்.

1978 மார்ச் 9]

15. இத்திட்டத்திற்கான நிதி, மாநிலத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ளது.

16. இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் முதலாவது ஆண்டில் (1977-78) ரூ. 54 லட்சம் செலவில் 26 குடிசைப் பகுதிகளில் உள்ள 6,562 குடும்பங்களுக்குத் தேவையான அடிப் படை வசதிகள் செய்து தரப்படும்.

17. இந்தத் திட்டத்தினால் 10,000 குடிசைவாழ் குடும்பங் கள் பயனடையும் வண்ணம், 1978-79ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 150 லட்சம் ஒதுக்கீடு செய்யப் டுள்ளது.

## வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டங்கள்.

18. வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தினை நிறைவேற்றி வரும் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரை கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், தஞ்சை, திருநெல் வேலி போன்ற மாவட்ட தலைநகரங்களிலுள்ள குடிசைப்பகுதி களில் 6,690 குடியிருப்புகளை கட்டியிருக்கிறது. இத்திட்டத்திற் காக 1978-79-ம் ஆண்டு வரவு-செலவுப் பட்டியலில் ஒதுக்கப் பட்டுள்ள தொகை ரூ. 60 லட்சம். இத்தொகையினைக் கொண்டு சுமார் 600 குடியிருப்புகளைக் கட்டலாம். இந்த ஒதுக்கீட்டுத் தொகையினைக் கொண்டு மாவட்டத் தலைநகரங்கள் மட்டுமல்லா மல் தொழில் வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிசைப் பகுதிகளிலுள்ள தொழிற் கேந்திர நகரங்களிலும் இத்திட்டம் செயல் படுத்தப்படும்.

## வெளியூர்களில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள்.

19. வரவு-செலவுத் திட்டத்திலுள்ள ஒதுக்கீட்டினைக் கொண்டு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் மேற்பார்வையில், அத் துறையின் கீழ் உள்ள நகராட்சிகள் மூலமாக வெளியூர்களில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்படு கின்றன.

## தொழிலாளருக்கான மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம் (தனியார் துறை).

20. இத்திட்டத்தின் கீழ் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழி லாளர்களுக்கு இக்குடியிருப்புகள் குறைந்த வாடகையில் அளிக்கப் படுகின்றன. இக் குடியிருப்புகள் ஒரு தொழிலாளரின் மாத வருவாய் ரூ. 350-க்கு மேற்படவில்லையென்றால் மலிவான

வாடகையிலும், மாத வருவாய் ரூ. 350-க்கு மேற்பட்டு ஆனால், ரூ. 500-க்கு உட்பட்டிருந்தால் நியாய வாடகையிலும் விடப்படுகின்றன. அரசு, தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கு இக்குடியிருப்புகள் கட்டுவதற்காகும் செலவு உச்ச வரம்பில் 50 சதவீதம் கடனாகவும், 25 சதவீதம் மானிய உதவியாகவும் நிதி உதவி வழங்குகிறது. இந்தச் செலவு உச்சவரம்பில் எஞ்சிய 25 சதவீதமும் அதற்கு மேற்பட்டு வரும் செலவும் அந்தந்த தனிப்பட்ட நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வாறான நிதி உதவி பெறுவதற்காக பின்வரும் செலவு உச்ச வரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன. இரட்டை மாடிக் கட்டிடங்களில் இரண்டு சிறிய அறைகள் கொண்ட குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 5,350 ; பல மாடிக் கட்டிடங்களில் இரண்டு அறை கொண்ட சிறிய குடியிருப்புக்கு ரூ. 6,050 ; இரட்டை மாடிக் கட்டிடங்களில் உள்ள முறையான அளவில் அமைந்த இரண்டு அறைகள் கொண்ட வீட்டிற்கு ரூ. 7,600 ; பல மாடிக் கட்டிடத்தில் முறையான அளவிலான இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு ரூ. 8,500. 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத் திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை ரூ. 10 லட்சம். 422 குடியிருப்புகள் கட்டுவதற்கான மூன்று திட்டங்கள் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1977-78-ம் ஆண்டில் கட்டி முடியும் என எதிர்பார்க்கப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 168.

21. 1978-79-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலும் ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978-79-ம் ஆண்டில் 200 குடியிருப்புகள் கட்ட உத்தேசித்திக்கப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி வாரியத்தின் தொழிலாளர்களுக்கான மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம்.

22. அரசு சார்பாக நிறைவேற்றி வந்த தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்திற்கு கடந்த சில ஆண்டுகளாக ஒதுக்கீடு ஒன்றும் செய்யப்படவில்லை. 1978-79-ம் ஆண்டில் அரசு இத்திட்டத்தை மீண்டும் துவக்க முடிவு எடுத்துள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டங்கள்.

23. வீட்டு வசதி வாரியம், மாத வருமானம் ரூ. 350-க்கு மேற்படாத பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டத்தின்கீழ், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவியிலிருந்தும் தனது சொந்த நிதியாதாரங்களிலிருந்தும் வீடுகளைக் கட்டித் தருகிறது. இவ்வீடுகளுக்கு செலவு உச்ச வரம்பு வீடு ஒன்றுக்கு ரூ. 8,000. இவ்வீடுகள் ஒதுக்கப் பெற்றவர்கள் வீட்டின் செலவில் 10 சதவீதம் முன் பணமாக

1978 மார்ச் 9]

அளிக்க வேண்டும். மீதமுள்ள தொகை 240 மாதத் தவணைகளில் வசூலிக்கப்படும். இதற்கான வட்டி வீதம் 5 சதவீதம். 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 84.55 லட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 2,353. 1978-79 ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் இத் திட்டத்திற்காக ரூ. 98 லட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.

குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

24. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஆண்டு வருவாய் ரூ. 4,200-க்கும் ரூ. 7,200-க்கும் இடைப்பட்ட வருவாயினரின் நலனுக்காக இத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற வீட்டின் உச்ச வரம்புச் செலவு ரூ. 18,000 என கணக்கிடப்பட்டுள்ளது. வீட்டின் செலவினத்தில் 25 சதவீதத்தை முன்பணமாக செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகை 20 ஆண்டு காலத்தில் மாதத் தவணைகளாக வசூலிக்கப்படும். இதுகாறும் வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தின் கீழ் 8,594 வீடுகளை கட்டி முடித்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 232.30 லட்ச மதிப்பில் கட்டப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை 1,227. 1978-79 ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் ரூ. 445 லட்சம் செலவு செய்ய உத்தேசித்துள்ளது. அரசின் அனுமதியுடன் வீட்டு வசதி வாரியம் 1978-79 ஆம் ஆண்டில் வாணிகக்கல கடனுதவி மூலம் (Market borrowings) பெறவிருக்கும் ரூ. 121 லட்சங்களும் அவ்வாண்டில் இத்திட்டத்திற்காக வாரியம் ஒதுக்கும் தொகையான ரூ. 445 லட்சங்களில் அடங்கியுள்ளது. மீதித் தொகை வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடம் பெறும் கடன் தொகையிலிருந்தும், வீட்டு வசதி வாரியத்தின் சொந்த நிதி ஆதாரத்திலிருந்தும் பெறப்படும்.

நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதி திட்டம்.

25. இத் திட்டம் ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கும் ரூ. 18,000-க்கும் இடைப்பட்ட வருமானம் உள்ள நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கானதாகும். நடுத்தர வருவாய்த் தொகுதியினரில் பயனடைவோரின் பண வசதியைக் கருத்தில் கொண்டு இத்திட்ட வீடுகளுக்கான விலை உச்ச வரம்பு ரூ. 42,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்த செலவினத்தில் 25 சதவீதம் முன்பணமாகவும், எஞ்சிய தொகை மாதத் தவணையாக 15 ஆண்டுகளிலும் வசூலிக்கப்படுகிறது. இதுவரை, 5,333 வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1977–78 ஆம் ஆண்டில் 488 லட்சம் செலவில் கட்டப்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1978 மார்ச் 9

படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை 1,119. 1978—79ஆம் ஆண்டில், வீட்டு வசதி வாரியம் இத் திட்டத்தின் கீழ் தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும் அரசு கடனுதவியுடனும் மற்றும் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் உதவியுடனும் ரூ. 463 லட்சம் செலவிட உத்தேசித்துள்ளது.

## வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகக் கடனுதவியுடன் வீட்டு வசதி வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்

26. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் அதிக பட்ச உதவிபெறும் நிறுவனம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். மொத்தம் ரூ. 4,081 லட்சம் மதிப்புள்ள இம் மாநிலத்தின் 104 வீட்டு வசதித் திட்டங்களை இக்கழகம் அங்கீகரித்துள்ளது. இத் திட்டங்களுக்கென ரூ. 3,150 லட்சம் கடனாக அளிக்க இக்கழகம் இசைந்துள்ளது. மீதமுள்ள தொகை இத் திட்டங்களின்கீழ் வீடுகள் ஒதுக்கப் பெற்றவர்களிடமிருந்து வீட்டு வசதி வாரியம் பெறும் முன் பணத்தால் சரிசெய்யப்படும். இது வரை வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 1,727 லட்சம் கடனாகப் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் அதிகமாக பயனடைந்த மாநிலம் தமிழ் நாடாகும்.

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்.

27. வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், மாநிலத்திலுள்ள எல்லா வீட்டு வசதிச் சங்கங்களுக்கும் தலைமைச் சங்கமாகும். தலைமைச் சங்கம், இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து கடன் தொகை பெற்று தன்னுடைய இணைப்புச் சங்கங்களுக்கு பண உதவி வழங்குகிறது. இதுகாறும் இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து, அரசு உத்தரவாதத்தின் பேரில் மொத்தம் ரூ. 3,592 லட்சம் கொண்ட 20 கடன்களைப் பெற்றுள்ளது. இச்சங்கம் முதல்நிலை (primary) வீட்டு வசதிச் சங்கங்களுக்கு ரூ. 4,014 லட்சம் கடனாகக் கொடுத்துள்ளது. இக் கடன் உதவியைக் கொண்டு 30,083 வீடுகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன. 1978ஆம் வருடம் ஜனவரி மாதம் 3-ஆம் தேதியிலிருந்து வேறுபட்ட வட்டி வீதங்கள்

1978 மார்ச் 9]

தலைமைச் சங்கத்தால் உதவி பெறும் முதல்நிலை வீட்டு வசதிச் சங்கங்களிடமிருந்து பல்வேறு வகையான வருமானமுள்ளவர்கள் நலன் கருதி கீழ்க்கண்டவாறு வசூலிக்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது :—

| பிரிவு. | கடன் தொகை. | வட்டி வீதம். | திருப்பிச் செலுத்தும் காலம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | சத விகிதம் | ஆண்டுகள் |
| **ஊரக வீட்டு வசதிச் சங்கம்—** | | | |
| வட்டம்/கோட்டம் அளவில் .. | 5,000 | $9\frac{1}{4}$ | 20 |
| பிற சங்கங்கள் .. | 10.000 | $9\frac{1}{4}$ | 20 |
| **நகர்ப்புற சங்கங்கள்—** | | | |
| (அ) பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினர் .. | 10,000 | $9\frac{1}{4}$ | 15 |
| (ஆ) குறைந்த வருவாய்த் தொகுதியினர் .. .. | 18,000 | $10\frac{3}{4}$ | 15 |
| (இ) நடுத்தர வருவாய்த் தொகுதியினர் .. .. | 30,000 | $12\frac{3}{4}$ | 15 |
| (ஈ) உயர்ந்த வருவாய்த் தொகுதியினர் .. .. | 30,000 | $14\frac{3}{4}$ | 15 |

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் நிலையான வைப்புத் தொகைத் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு ஏற்ற வகையில் பொது மக்களை ஊக்குவிக்க அரசு ரூ. 100 லட்சம் வரை வைப்புத் தொகைகளுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் கடன்பெறும் திறனை பலப் படுத்தும் வகையில், மாநில அரசு தன்னுடைய பங்கு மூலதனமாக ரூ. 85 லட்சத்தை முதலீடு செய்துள்ளது.

## நிலம் கையகப்படுத்தல்—வீட்டுமனை மேம்பாட்டுத் திட்டம்.

28. நிலத்தின் விலைகளில் ஊரக வாணிகத்தைத் தடுக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்து வரும் நகரங்களில் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், நிலங்களைப் பெருமளவில் முன்னதாகக் கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். வீட்டு வசதி வாரியம் நகரங்களிலும், வெளியூர்களிலும் பெருமளவு நிலங்களைக் கையகப்படுத்துகிறது. அவற்றைத் தன்னிறைவுள்ள சிறிய ஊர் வட்டாரங்களாக அல்லது நகர அணிமைப் பகுதிகளாக மேம்படுத்துகிறது..

அப்பகுதியில் நல்ல சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், கழிவுநீர்க் கால்வாய்கள், விளையாடும் இடங்கள், பூங்காக்கள், மற்றும் பள்ளிகள், மருத்துவமனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள் போன்ற ஏனைய பொது வசதிகளையும் அமைத்துத் தருகின்றது. இதுகாறும் 1,856 ஹெக்டேர் பரப்புள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 1977–78ஆம் ஆண்டில் ரூ. 327 லட்ச செலவில் 150 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம் கையகப் படுத்தப்படும். 1978–79 ஆம் ஆண்டின் குறியிலக்குப்படி 400 ஹெக்டேர் பரப்பு நிலம் கையகப்படுத்தப்படும்.

29. இத்திட்டத்திற்கான 1977–78ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 50 லட்சம். 1978–79ஆம் ஆண்டிற்கும் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 50 லட்சம் கடனுதவியாக அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்திற்கென ஒதுக்கியுள்ள நிதிக்கு துணையாக அமையும். வீட்டு வசதி வாரியம் 1978–79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், மற்றும் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடனும் ரூ. 505 லட்சம் செலவிட உத்தேசித்துள்ளது.

## உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட இருக்கும் முழு வசதிகளடங்கிய மனைகள் திட்டம்.

30. வீட்டு வசதி வாரியம் உலக வங்கி நிதியுதவியுடன் முழு வசதிகளடங்கிய மனைகள் திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரை ஒட்டியுள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய மூன்று இடங்களில் 13,467 மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன. இதற்காக ரூ. 932.88 லட்சம் செலவில் மொத்தம் 168 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்படும். இத்திட்டத்தில் வீட்டு மனைகளைத் தவிர வாணிபத்திற்காகவும், சிறு கைத்தொழிலுக்காகவும் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

31. இத்திட்டத்தில், சுகாதார வசதிகளுடன் கூடிய, ஒவ்வொன்றும் 40 சதுர மீட்டர் பரப்பளவிலான பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான 6,228 மனைகளும் 47 சதுர மீட்டர் பரப்பளவிலான சுகாதார வசதி மற்றும் கூரையுடன் கூடிய பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான 2,742 மனைகளும், 47 சதுர மீட்டர் அளவிலான சுகாதார வசதி மற்றும் குடியிருப்புடன் கூடிய பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான 792 மனைகளும் வழங்கப்படும். மேலும் 74 முதல் 140 சதுர மீட்டர் பரப்பளவுடைய 3,284 மனைகளும், 223 சதுர மீட்டர் பரப்பளவிலான 421 மனைகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு வழங்கப்படும்.

1978 மார்ச் 9]

32. இத்திட்டத்தின் கீழ் ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பொதுஜன வசதிகள், வாணிப உபயோகம் சமுதாயக் கூடங்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவைகளின் தேவைகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

33. ரூ. 932.88 லட்சம் மதிப்பீட்டுள்ள இத்திட்டம் மூன்று ஆண்டுகளில் முடிக்கப்பட உள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் கழகம், தனது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உருவாக்கியிருக்கும் இத்திட்டத்தை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்துகிறது. 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 175.00 லட்சம் மதிப்பில் 100 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்படும். 1978–79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 275.00 லட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## காவலர் வீட்டு வசதித் திட்டம்.

34. காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் நோக்கமே காவல் துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சதவீதத்தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதாகும். இத்திட்டத்தின்கீழ், பொதுப் பணித்துறையும், வீட்டு வசதி வாரியமும் 1976–77 ஆம் ஆண்டு வரையிலும் ரூ. 87.26 லட்சம் செலவில் 9,596 குடியிருப்புகளைக் கட்டி காவல் துறையிடம் கொடுத்துள்ளன. 1977–78ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 17.58 லட்சம் பொதுப் பணித்துறையினால் 55 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டு வசதி வாரியம், சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் 288 குடியிருப்புகளை கட்டுவதற்கு 1977–78ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20.69 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1977–78ஆம் ஆண்டிற்கான இத்திட்டச் செலவினம் மொத்தம் ரூ. 38 லட்சம் ஆக அமையும். 1978–79 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 90 லட்சம் என்ற அளவில் இருக்கும். இதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனது அதிக பட்ச வருவாயிலிருந்து ஒதுக்கும் ரூ. 25 லட்சமும் உள்ளடங்கும். நிதிநிலை மொத்த ஒதுக்கீட்டின் அடிப்படையில் இத்திட்டத்தின் புதிய பணிகள் அனைத்தையும் வீட்டுவசதி வாரியமே நிறைவேற்றும்.

## தமிழ்நாடு அரசு அலுவலருக்கான வாடகை வீட்டு வசதி திட்டம்.

35. இந்தத் திட்டம் மாவட்ட, வட்டத் தலைமையகங்களில் ரூ. 200 முதல் 750 வரை அடிப்படைச் சம்பளம் பெறும் அரசு அலுவலர்களுக்கு, தங்களது சம்பளத்தில், வீட்டு வாடகைப் படியைப் பெறுமல், பத்து சதவீதத்தில் அமைந்துள்ள சலுகை

வாடகையில் வீடுகள் வழங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசு சார்பாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துவதுடன், கட்டிய வீடுகளைப் பராமரிக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் கட்டிடங்கள் அரசு உடைமைகளாகும். பொதுவாக இத்திட்ட வீடுகள் அரசாங்க நிலங்களில் கட்டப்படுகின்றன.

36. வீட்டு வசதி வாரியத்தால் இதுவரை 8,504 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1977–78 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூ. 150 லட்சம் 1977 ஜூலை மாத வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 200 லட்சமாக உயர்த்தப்பட்டது. இவ்வாறு உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு இவ்வாண்டில் 1,300 வீடுகள் கட்டிமுடிக்க இயலும். 1978–79ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 200 லட்சம் வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

37. இவ்வாடகைக் குடியிருப்புகள், விண்ணப்பங்களின் முன்னுரிமைப்படி முறையாக ஒதுக்கப்படுகின்றன. ஐந்து காலி இடங்களில் முதல் மூன்று காலி இடங்கள் பணியிடம் மாற்றப்படும் அலுவலர்களுக்கும், புதிதாகத் திருமணம் ஆன அலுவலர்களுக்கும் தரப்படுகின்றன. மீதி இரண்டு இடங்கள் உள்ளூர் வாசியான அரசு அலுவலருக்குத்தரப்படுகின்றன. விண்ணப்பத் தேதி வாரிசை முறைப்படி, விண்ணப்பப் பட்டியல்கள் தயார் செய்து சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளிலும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

38. பீட்டர்ஸ் சாலை குடியிருப்புப் பகுதியில் 29 குடியிருப்புக்களும், மந்தைவெள்ப்பாக்கத்தில் 2 குடியிருப்புகளும், பத்திரிகை எழுத்தாளர்களுக்கு வாடகைக்கு அளிப்பதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சமீபத்தில் ரூ. 200 முதல் ரூ. 424 வரை குறைந்த ஊதியம் பெறும் பத்திரிகை எழுத்தாளருக்கென கலைஞர் கருணாநிதி நகரில் மேலும் 6 குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன். பத்திரிகை எழுத்தாளருக்கான, மேற்கண்ட குடியிருப்புகளின் ஒதுக்கீடுகளைச் செய்யும் பணி ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் சென்னை நிருபர்கள் இணையத் தலைவரும், சென்னை பத்திரிகை எழுத்தாளர் சங்கத் தலைவரும் உறுப்பினர்களாக உள்ளனர். இதுபோல் கோவையிலும் அரசு வாடகை குடியிருப்பு பகுதியில் 7 குடியிருப்புகள் பத்திரிகை எழுத்தாளர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இதனை முறைப்படி வழங்கும் பணி மாவட்ட ஆட்சித் தலைவரால் செய்யப்படுகிறது.

1978 மார்ச் 9]

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கல்.

39. அரசு அலுவலர்களுக்கு, வீட்டு மனைகள் வாங்குவது உட்பட வீடுகள் கட்டுதல், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்குதல் ஆகியவைகளுக்காக முன்பணம் வழங்கப்படுகிறது. 6 ஆண்டுகள் தொடர்ந்து அரசின் கீழ் பணியாற்றிய அலுவலர்கள் இக்கடன் உதவி பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். அரசு அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் அகவிலைப் படியுடன் கூடிய அடிப்படைச் சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 70,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை முன்பணமாக வழங்கப்படுகிறது. கடன் தொகை, அலுவலர்கள் தங்கள் அலுவல் காலத்திற்குள், அவர்களது சம்பளத் தொகையில் 1/3 பங்கு வீதம் மாதாமாதம் திருப்பிச் செலுத்துவதற்கு உள்ள திறன் மற்றும் அவர்களின் இறப்பு மற்றும் ஓய்வுக் காலப் பணிக்கொடையின் அடிப்படையில் நிச்சயிக்கப் படுகிறது.

40. 1977-78 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 125 லட்சத்திலிருந்து ரூ. 150 லட்சமாக உயர்த்தப் பட்டது. இத்திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்படும் நிலைகளின் அடிப்படையில் படிப்படியாக கடன் தொகை தரப் படுகின்ற காரணத்தினால், ஒரு வருடத்தில் ஒப்புதல் அளிக் கப்படும் மொத்தக் கடன் தொகை வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டை விட 50 சதவீதம் அதிகமாக இருக்கும். இம் முறைப்படி 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 225 லட்சம் தொகைக்கு கடன்தொகை ஒப்புதல் அளிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் சுமார் 1,200 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் கிடைக்கும்.

41. 1978-79 ஆம் ஆண்டிற்கான இத்திட்டச் செலவும் ரூ. 150 லட்சமாகவே வரவு-செலவுத் திட்டத்தில் நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 5 லட்சம் அனைத்து இந்தியப் பணி அதிகாரிகளுக்கென நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

சென்னையிலும் பிற முக்கிய நகரங்களிலும் அரசு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்.

42. தனியாருக்குச் சொந்தமான கட்டிடங்களில் அதிக மான அரசு அலுவலகங்கள் அமைந்துள்ளன. இதுபோன்ற அலுவலகங்களை வீட்டுவசதி வாரியம், நிதியுதவி தரும்

நிறுவனங்களிடமிருந்து பண உதவி பெற்று புதிதாகக் கட்ட உத்தேசித்திருக்கும் கட்டிடங்களில் மாற்றுவது பற்றிய திட்டத்தினை அரசு ஆராய்ந்து வருகிறது.

பொதுமக்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.

43. கடந்த சில ஆண்டுகளாக, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னையிலும், பிற நகரங்களிலும் அதற்குச் சொந்தமாக உள்ளதும், மற்றும் அதனால் நிருவகிக்கப்படுவதுமான பொதுமக்களுக்கான வாடகை வீடுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவில்லை. பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினரும், குறைந்த வருமானப் பிரிவினரும், வசதிகளற்ற வீடுகளுக்கு அதிகபட்ச வாடகையினைத் தரும் நிலையில் உள்ளனர். இந்த நிலையை மாற்றி அமைக்க, வீட்டு வசதி வாரியத்தினால் பொது மக்களுக்கான வாடகை வீடுகளைத் தொடர்ந்து சென்னையிலும், வெளியூர்களிலும் கட்டுவது பற்றிய திட்டங்களை அரசு ஆராய்ந்து வருகிறது.

## இணைப்பு IV.

[51-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை

கோரிக்கை எண் 49.

பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கலுக்கான முதலீடு 1978–79 ரூ. 21·19 இலட்சங்கள்

அதிக அளவில் தண்ணீர் தேவைப்படும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அவைகளாகவே அதற்கு ஒரு ஏற்பாடு செய்து கொள்ளமுடியாத நிலையில் அரசாங்கமே தண்ணீர் வழங்கும் திட்டங்களை நிறைவேற்றிப் பராமரித்துத் தண்ணீர் வழங்குகின்றது. இப்பணிகளை ஏப்ரல் 1971-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட குடிநீர் வடிகால் வாரியம் கவனித்துக் கொள்கின்றது. இந்த முதலீட்டை முறையான விகிதத்தில் ஈடு செய்யும் வகையில் பயனுறும் நிறுவனங்களிடமிருந்து தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. தற்போதைக்கு பின்வரும் திட்டங்கள் இந்த வகையில் அடங்கும் :—

| வரிசை எண். | திட்டங்களின் பெயர். |
|---|---|
| 1. | பாதுகாப்புத் தொழிற்சாலை, ஆவடி, நீர் வழங்கும் திட்டம். |

| வரிசை எண். | திட்டங்களின் பெயர். |
|---|---|
| 2. | தூத்துக்குடி மூன்று மில்லியன் காலன்கள் நீர் வழங்கும் திட்டம். |
| 3. | திருச்சிராப்பள்ளி சிறிய போர்க்கருவி திட்டத்திற்கான நீர் வழங்கும் திட்டம். |
| 4. | தூத்துக்குடி 20 மில்லியன் காலன்கள் நீர் வழங்கும் திட்டம். |
| 5. | திருச்சிராப்பள்ளி வட்டார பொறியியற் கல்லூரிக்கான நீர் வழங்கும் திட்டம். |

தூத்துக்குடி 20 மில்லியன் காலன்கள் திட்டத்தின் பெரும் பகுதி முடிந்துவிட்டது. இவ்வாண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் தூத்துக்குடி ஆல்காலி கெமிகல்ஸ், மற்றும் பிளாஸ்டிக் ரேசின் கெமிகல் இல்லுமினேட் தொழிற்சாலே ஆகியவற்றிற்கு நீர் வழங்க துணைக் குழாய்கள் அமைக்கும் பணிக்காக 1978-79-ம் ஆண்டில் ரூ. 21.18 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் ஆவடியிலுள்ள பாதுகாப்புத் தொழிற்சாலேக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு நிர்வாகச் செலவிற்கு ரூபாய் 1,000 அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS